வெளியீடு : 8-3-2007 Issued : 8-3-2007

767
04/07/07
6
2041026

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஆகஸ்ட் 28, 2006—தொகுதி 15—எண் 1

Monday the 28th August, 2006—Volume 15—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V24, 31/8/06
Pob. 15-1.
227433

[Price Rs. 3.00

**28-8-2006**

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


ஆளுநரும் அமைச்சரவையும் v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xix

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-37

**2. தகவல் கோரல்—**

(அ) புதிய குடும்ப அட்டைகள்-நாடாளுமன்ற/ சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரை 38-45

(ஆ) கடலூர் மாவட்டம், இடி தாக்கி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் இடிதாங்கிகள் அமைத்தல் 45-46

(இ) பொள்ளாச்சி தொகுதி, சாலை விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிவாரணம் 58-60

**3. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல்-தனித் தொகுதிகளாகவே தொடர முடிவு-பாராட்டும், நன்றியும்** 46-58

**4. அறிவிப்பு—**

கட்சித் தலைவர்கள் தவறான தகவல்களைப் பேட்டியாக அளிப்பதைத் தவிர்த்தல் - பேரவைத் தலைவர் ஆணை 61-62

பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 29 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா<br>(ஆ) கோரிக்கை எண் 28 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்<br>(இ) கோரிக்கை எண் 30 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு | 62-190 |
| மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் | 62,95, 103,104, 113, 159-170 |
| மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி | 89, 95,102, 143-159, 171,172, 173,175, 187 |
| திருமதி பதர் சயீத் | 96-102 |
| * திரு. பி.என். பெரியண்ணன் | 104-109 |
| * திரு. போ. கோபாலன் | 109-120 |
| திரு. பெ. கண்ணன் | 120-124 |
| * திருமதி ரா. லீமா றோஸ் | 124-129 |
| திரு. எஸ். இராசசேகரன் | 130-133 |
| * திரு. அருள் அன்பரசு | 134-137 |
| திரு. செ. சின்னச்சாமி | 138-143 |

பக்கங்கள்

**6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**

| | |
|---|---|
| தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 190-193 |
| மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 190,191,192 |

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 193,194

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநி**

*பொது, பொது நிருவாகம், இந்தி ஆட்சிப் பணி, இந்தியக் காவ பணி, ஏனைய அனைத்திந்தி பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட் வருவாய் அலுவலர்கள், உள் து காவல், தொழில்கள், தகவல் தொழ நுட்பவியல், சுரங்கங்கள் மற்ற கனிமங்கள், மதுவிலக்கு மற்ற ஆயத்தீர்வை, கரும்பஞ்சாற்றுக் கசண் சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட் மொழி & தமிழ்ப் பண்பாடு மற்ற கடவுச் சீட்டுகள்.*

**நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழக**

*நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்ற தேர்தல்கள்.*

**மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

*மின்சாரம், மரபுசாரா எரிசக் மேம்பாடு, குடிசைத் தொழில்க உட்பட ஊரகத் தொழில்கள் மற்ற சிறு தொழில்கள்.*

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்.

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

தமிழ்நாடு ... நூலகம் 227433 சென்னை-600 ...



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்.

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்.

11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

12. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

13. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

14. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ. வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு.

15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு.

16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு.



18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

19. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்.

21. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்.

22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு).

23. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா.

24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

25. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு.

26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு.

27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்.

28. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.

29. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

30. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.



# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports.

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections.

3. **Minister for Electricity and Rural Industries** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries.

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**

Co-operation and Statistics.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen.

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K. N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act.

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act.



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies.

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation.

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority.

14. **Minister for Food** .. **The Hon. Thiru E. V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control.

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste land Development.

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare.

17. **Minister for Labour** .. **The Hon. Thiru T. M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment.

18. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K. R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments.

19. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles.

20. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology.

21. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes.

22. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs.

23. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona.



24. **Minister for Highways** .. **The Hon. Thiru M. P. Saminathan:**

Highways and Ports.

25. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes.

26. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry.

27. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

28. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation.

29. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development.

30. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan.

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன்,<br>எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு,<br>எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன்,<br>எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி,<br>எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்
## (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆ.வ |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்

வாளார் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ்... கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே. ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
106. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். - முசிறி
108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி. கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்
131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)



133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே. என். - திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)

156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
168. போளூர் வரதன், திரு. ம. .. செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)
177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை



179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்-1
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமசந்திரன், திரு. கா. .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்
200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்

| | | |
|---|---|---|
| 201. | ராஜா, திரு. என்கேகே.பெ. | .. ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | .. திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | .. குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | .. திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | .. நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | .. விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | .. காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | .. விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | .. கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | .. போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. சேலம்-2 |
| 216. | வேதாத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | .. தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | .. பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | .. சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | .. குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | .. இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | .. மதுரை மத்தி |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | .. நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. இரா. விடுதலை | .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### ஆவணி 12, விய–திருவள்ளுவர் ஆண்டு 2037
### 2006 ஆகஸ்ட் 28, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம்."*

*காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசைத்தான் உலகம் புகழும்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா எண் 101, திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**101—**

### வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**•649—திரு. கி. ஆறுமுகம்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு தொகுதியிலுள்ள வெங்கம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மீண்டும் தொடங்க அரசு முன்வருமா?*

[2006 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியிலுள்ள வெங்கம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் செயல் எல்லையில், தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் மீண்டும் சங்கம் தொடங்குவது குறித்து விரிவாகப் பரிசீலித்து, சாத்தியக்கூறுகள் இருப்பின், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, வெங்கம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டுள்ள வங்கியாகும். அங்கே, சுற்றியுள்ள ஏராளமான கிராமங்களுக்கு இந்த வங்கி மிக உதவிகரமாக இருந்தது. பயிர்க் கடனிலேயிருந்து ஏனைய கடன்கள் வாங்குவதற்கும், தாங்கள் வைத்திருக்கிற பணத்தை அந்த வங்கியிலே போடுவதற்கும் வாய்ப்பாக இருந்தது. தற்போது அதைத் திறப்பதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு, திறக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகத் திறக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். இப்பொழுது அங்கே சுற்றியுள்ள கிராம மக்கள், ஏறக்குறைய 15 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள திருக்கழுக்குன்றத்திலுள்ள வங்கிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, விவசாயிகளின் நலன் கருதியும், கிராமப்புறங்களிலே வாழ்பவர்களின் நலன் கருதியும் உடனடியாகத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு சரகத்தில், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் செயல்பட்டு வந்த ஜி.2209 வெங்கம்பாக்கம் தொடக்கக் கூட்டுறவு வங்கி, நிதி நிலைமையில் நொடிப்புத் தன்மை ஏற்பட்ட காரணத்தினாலும், சங்கத்தின் முக்கிய ஆவணங்கள் இல்லாததாலும், ஆவணங்களுக்குப் பொறுப்பான திரு. ராஜப்பா என்ற செயலாளர் இறந்துவிட்டதாலும், 1988–89–க்குப் பிறகு தணிக்கை நடைபெறாததாலும், கடன் வழங்கும் தகுதியை இழந்து, சங்கம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறாமல், கடைசியாக, கலைக்கப்பட்ட தேதிக்கு முந்தைய 4 ஆண்டுகளில் இவ்வங்கியின்மூலம் குறுகிய காலக் கடன் எதுவும் வழங்கப்படவில்லை. கடைசியாக நடைபெற்ற 1987–88 தணிக்கை அறிக்கையின்படி ரூ.1.95 இலட்சம்



2006 ஆகஸ்ட் 28]

நட்டத்தில் இருந்தது. இந்நிலையையொட்டி, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற ஓர் அறிவிப்பின்படி, கூடுமானவரையில், எந்தச் சங்கங்களையும் செயல்பாட்டை இழக்கவிடாமல், அவற்றுக்கு உயிர் கொடுக்கும் நிலையில் ஒரு பணியைத் தொடங்கி நடத்த வேண்டுமென்ற ஒரு கொள்கையை வைத்திருப்பதால், அதனடிப்படையில் ஏதாவது செய்து பார்க்கலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற இந்த அரசாங்கம், கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகளின் நலன் கருதியும், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள மக்கள் நலன் கருதியும், இதுபோன்ற வங்கிகளைத் திறப்பதற்கான முயற்சியை எடுப்பேன் என்று சொல்லியிருக்கிற நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சமயத்திலே நன்றி கூறி, மீண்டும் திறப்பதற்கான பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வகையிலும் கடன் கொடுக்கின்ற பிரச்சினையிலே அது தவிர்க்கப்படாது. கண்டிப்பாக அந்த உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கப்படும். அண்மையில் இருக்கிற சங்கமாகிய திருக்கழுக்குன்றம், இசட்பாண்டூர், குழிப்பாந்தண்டலம் ஆகிய அந்தச் சங்கங்களில் அடங்கி இருக்கின்ற ஊர்களான மெய்யூர், வெங்கம்பாக்கம், பூந்தண்டலம், நெய்குப்பி, சோலைக்குப்பம், ஆலப்பாக்கம்; நசங்குப்பம், நத்தம் கரியச்சேரி, ஆரம்பாக்கம், நல்லூர் ஆகிய கிராமங்கள் அதைச் சுற்றியிருக்கின்றன. அனைத்துக் கிராமங்களுக்கும், எந்த வகையிலும் கட்டுப்பாடில்லாமல் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, இப்பொழுது சரியாக இருக்கின்ற வங்கிகளில் கொடுத்து உதவப்படும்.

முற்பகல் 9–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வெங்கம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஏன் மூடப்பட்டது என்ற காரணத்தையெல்லாம் சொன்னார்கள். பொதுவாக, இதுபோன்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இருக்கக்கூடிய செயலாளர்கள் பல ஆண்டு காலம் ஒரே ஊரில் இருந்துகொண்டு அவர்கள் செய்யக்கூடிய சில முறைகேடுகளின் காரணமாகத்தான்--ஆவணங்களை மறைக்கிறார்கள், சில நேரங்களிலே கடனைக் கொடுக்காமல், கொடுத்ததாகக் கணக்கு எழுதுகிறார்கள். ஆகவே, இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய இந்தச் செயலாளர்களை மாற்றுவதற்கு ஏற்கெனவே அரசாணை எல்லாம் பிறப்பிக்கப்பட்டு, அப்படியே நின்றுவிட்டது. நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிமன்ற வழக்கும் முடிந்துவிட்டது. இப்போது அவர்களை எல்லாம் மாற்றுகிற எண்ணம் அரசுக்கு உண்டா; அவர்கள் மாற்றப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அந்தச் சங்கத்தில் இருந்து பணியாற்றுகிற அதிகாரிகளை அரசாங்கம் நியமிக்கவில்லை. அவர்களாகவே, சங்கத்தில் இருந்தவர்கள், ஏற்கெனவே மத்திய கூட்டுறவு வங்கியின்மூலம் நிறைவேற்றியதை மாற்றி, அந்தந்தச் சங்கத்தில் இருக்கிற தலைவர்கள்--ஏற்கெனவே தலைவர்கள் இருந்த காலத்தில் அவர்களுக்கே அந்தப் பொறுப்பைக் கொடுத்து, அவர்களாகவே இஷ்டத்திற்கு மாற்றிக்கொண்டிருந்தார்கள். அந்த நிலைகளை எல்லாம் தவிர்த்து, அவர்களை மாற்றுவதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் போதுமான காரணங்கள் இருந்தால், அவர்களை வேலையிலிருந்து தற்காலிகப் பணி நீக்கம் செய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு, இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு தலைவர் முதலமைச்சர் அவர்களைக் கலந்து ஆலோசித்து, உரிய நடவடிக்கை எடுத்து, உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அது நிறைவேற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரமாக எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் முடீஸ் கூட்டுறவு வங்கியும், சோலையாறு அணை கூட்டுறவு வங்கியும் மூடிக் கிடக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5 இலட்சம்



ரூபாய் கொடுத்து உதவி செய்தார்கள். அதற்கு நன்றி. மீண்டும் 20 இலட்சம் ரூபாயைக் கொடுத்து அந்தக் கூட்டுறவு வங்கிகளை உடனடியாகத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி செய்ய முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த விவகாரம் பூராவும் தெரியும். நான் கோவைக்கு வந்து அவர்களை வைத்துக்கொண்டே அந்த நகர வங்கியைப் பரிசீலித்து, அதில் எப்படி நஷ்டம் ஏற்பட்டது, யாரால் நஷ்டம் ஏற்பட்டது என்ற விவரங்களைச் சேகரித்து அனுப்புங்கள், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி வந்தேன். அதன்படி நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், வால்பாறையில் மேல் பகுதியில் அங்கே தேயிலைத் தோட்டங்களில் இருக்கிற தொழிலாளர்களுக்கு முதலாளிகள், அவர்கள் கொடுத்த கடனைப் பிடித்தம் செய்து கட்டிக்கொண்டு வந்தார்கள். அந்த நிலையை அவர்கள் மாற்றிவிட்டார்கள். எனவே, அந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் அந்தத் தகுதியை இழந்த நிலையில் இப்போது இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு, ஏற்கெனவே அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 20 இலட்சம் ரூபாயாவது கொடுத்து உதவிட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் வேறு ஏதேனும் நிதியிலிருந்து அதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அரசாங்கத்தில் நிதியில்லை என்று சொல்கிறார்கள். எப்படியும் கூடுமானவரையில் அவருடைய கோரிக்கையை சில நாள் கழித்தாவது நான் நிறைவேற்றித் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா மாவட்டங்களான திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சை மாவட்டங்களில் சம்பா சாகுபடிப் பணிகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற வேளையில், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகள்மூலமாகக் கடன் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், புதிய கடன்தாரர்களுக்கு வழங்குவதில்லை என்று கூட்டுறவு வங்கிகளிலே சொல்லப்படுவதாக ஏராளமான கிராமங்களிலிருந்து அந்தச் செய்தியைச் சொல்கிறார்கள் விவசாயப் பெருமக்கள். ஆகவே, புதிய கடன்தாரர்களுக்கு

விவசாயத்திற்கான கடன் வழங்கச் செய்வதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் விரைவாக மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நம்மைவிடக் கெட்டிக்காரத்தனமாக ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். ஒன்றாம் தேதிக்குப் பிறகு கடன் வாங்கினால் insurance cover ஆகும் என்று கருதி, தற்போது வாங்காமல் இருக்கிறார்கள். அது எனக்கும் தெரியும். அப்படி இருந்தாலும்கூட, முக்கியமாக அந்த இரண்டு மாவட்டங்களைப் பொறுத்தவரையில், பெரிய டெல்டா மாவட்டம் என்பது, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், இவற்றை அடக்கியது. கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் கூடுமானவரை 20, 28 கோடி ரூபாய்க்கு மேல் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. பயிர்க் கடனும், இதர commercial crops—ம் சேர்ந்து, தஞ்சாவூர் மாவட்டத்திலும், தஞ்சாவூர் மத்திய வங்கியிலும், இதையொட்டி ரூ.25 கோடிக்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டையும், இந்த ஆண்டையும் கணக்குப் பார்த்தால் 8 பங்குக்கு மேல் நாம் இப்போது கடன் கொடுத்திருக்கிறோம். கடன் கொடுத்திருப்பது மட்டுமல்ல, நிச்சயமாகக் கடன் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையையும் விவசாயிகளுக்கு ஊட்டி இருக்கிறோம். அந்த நம்பிக்கை வீண் போகாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையொட்டி நிச்சயமாக அவர்கள் அனைவருக்கும் கடன் வழங்கப்படும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கைக்குப் பதிலுரைக்கும்போது, சென்ற கால ஆட்சியில் கலைக்கப்பட்ட 126 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உடனடியாகச் செயல்படுவதற்குரிய உத்தரவுகள் வழங்கப்படும் என்று கூறினார்கள். அவர்களுடைய பதிலுரைக்கேற்ப எப்போது முதல் அந்தக் கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குவதற்குரிய



பணியினைத் தொடங்கும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மை. ஆனால், ஒரே ஒரு வார்த்தையை மட்டும் அவர் தேவைக்கேற்ப இணைத்திருக்கிறார். 'உடனடியாக' என்பதை அவராக இணைத்திருக்கிறார். 'உடனடியாக' என்று குறிப்பிடப்படவில்லை. நிச்சயமாகச் சொல்கிறேன், உடனடியாக இல்லாவிட்டாலும், கூடுமானவரையில், அவர்கள் தேவையை நிவர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு, நிச்சயமாக இந்தத் துறை அவர்களுக்குப் பாடுபடும், அதை நிறைவேற்றும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும், உட்காருங்கள்.

வினா எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**102—**

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

**•1085—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் விவசாய விளைபொருட்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கிருஷ்ணராயபுரத்தில் வாழை மற்றும் வெற்றிலை விவசாயம் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இருக்கின்றது. அவற்றின் வருட வர்த்தகம் சுமார் 5 கோடி ரூபாய் அளவில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விவசாயிகள் மேற்படி வாழை, வெற்றிலையை அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா,

ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கும் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வருகின்றார்கள். இந்த வர்த்தகம் அனைத்துமே சாலையோரத்தில் நடைபெறுகின்றது. இல்லையென்றால், கரூர் அல்லது திருச்சிக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, விவசாயிகள், கிருஷ்ணராயபுரம் அல்லது லாலாப்பேட்டையில் வர்த்தகம் செய்வதற்கு வசதியாகவும், விவசாயிகளின் இடர்ப்பாடுகளைக் களையவும் அரசு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தர ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் அருகில் 12 கிலோ மீட்டர் தொலைவில், 1976 முதல் குளித்தலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று, கிருஷ்ணராயபுரத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் 1982 ஆம் ஆண்டு முதல் இரும்பூதிப்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, கிருஷ்ணராயபுரத்தில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை, அருகிலுள்ள இந்த இரண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டு சென்று பயன் பெறலாம். மேலும், கிருஷ்ணராயபுரம் பகுதியில் வாழை மற்றும் வெற்றிலை மட்டுமே பயிரிடப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் மேற்படி விளைபொருட்களைத் தவிர, கூடுதலாக விளைபொருட்கள் விவசாயிகளால் கொண்டு வரப்படும்போது பெருமளவு வணிகர்கள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அப்போது கிருஷ்ணராயபுரம் பகுதியில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தொடங்குவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் கேட்கிறீர்களா? மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில்—என்னுடைய தொகுதி கிருஷ்ணராயபுரத்திலுள்ள இரும்பூதிப்பட்டிக்கும், கிருஷ்ணராயபுரத்திற்கும் சுமார் 25 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இரும்பூதிப்பட்டியானது, குளித்தலை – மணப்பாறை ரோட்டில் உள்ளது. கிருஷ்ணராயபுரத்திலிருந்து அந்தப் பகுதிக்குச் செல்வதற்குப் பேருந்து வசதிகளோ, சாலை வசதிகளோ போதுமான அளவில் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, வரவிருக்கின்ற காலக்கட்டங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தர வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் பதிலிலே குறிப்பிட்டேன். தற்போது இல்லை, வேண்டுமானால் அதைப் பரிசீலிக்கலாம் என்று பதில் அளித்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி.

முற்பகல் 9–45

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றிப் பதில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நெல், மணிலா கொள்முதல் செய்த வியாபாரிகள் பணம் தராத காலங்களில், பல்வேறு விவசாயிகளிடம் அங்கே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நெல், மணிலா கொள்முதல் செய்தால், அவர்கள் உடனடியாகப் பணம் வழங்குவதற்கான உறுதியை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் கொண்டு வருகின்ற பொருட்களை வணிகர்கள் வாங்கினால், உடனடியாக விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான், 1996–லே நான்காவது முறையாகத் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற திராவிட முன்னேற்றக் கழகம், வணிகர்கள் கொள்முதல் செய்த அந்தப் பொருட்களுக்கு, விவசாயிகளுக்குப் பணம் தர வேண்டும் என்று, வணிகர்களுக்கு

1 இலட்சம் ரூபாய் வரை பொருளீட்டுக் கடன் கொடுத்து, விவசாயிகளுக்கு அவர்கள் பணம் கொடுத்துவிட்டு, அவர்களுடைய பொருட்களை எடுத்துச் செல்லலாம் என்றும். அதேபோல, விவசாயிகள் கொண்டு வருகின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காவிட்டால், அவர்கள் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே வைத்துவிட்டு, அதிலே ஒரு தொகையை அவர்கள் பெற்றுச் சென்று, விவசாயத்தையும் தொடர்ந்து செய்யலாம் என்ற அந்த வாய்ப்பும் கடந்த காலத்திலே வழங்கப்பட்டது. அது இப்போதும் தொடர்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மணலூர்பேட்டையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இயங்கி வருகிறது. ஆனால், கட்டடம் இல்லாமல் கிட்டத்தட்ட 20 ஆண்டு காலமாக அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் அந்த விளைபொருட்களை வெளியிலே வைத்து விற்பனை செய்யக்கூடிய நிலைமை இருக்கின்றது. எனவே, அங்கே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன் வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த அடிப்படையிலே, அங்கு பொருட்கள் வைப்பதற்குரிய கட்டட வசதி இல்லாமல் இருக்குமானால், அது பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103, டாக்டர் க. நெடுஞ்செழியன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**103—**

## ஆராய்ச்சி நிலையம்

***1291—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதியிலிருந்து இடம் மாற்றப்பட்ட வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தை மீண்டும் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை**
**மைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) இல்லை.
ஆ) வினா எழவில்லை.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
புவர்களே, இந்த வெற்றிலை வாடல் நோய் ஆராய்ச்சி மையம்
64 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு,
93–1994 வரை மிகச் சிறப்பாக, விவசாயம் நிறைந்த பகுதியான
பிலர்மலை தொகுதியில், பரமத்திவேலூரில் செயல்பட்டு வந்தது.
பின்னர், அங்கு விவசாயப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான
லமும், கட்டடமும் இல்லாததால், அதை சிறுகமணிக்கு மாற்றி,
அங்கே செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். கடந்த 9–3–2006
அன்று வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே நடந்த இயக்குநர்
கூட்டத்திலேகூட, இந்த விவசாய வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை
வேலூருக்குக் கொண்டு வருவதனுடைய அவசியத்தை உணர்ந்து,
அந்தக் குழுக் கூட்டத்திலே, அந்தக் குழுவிலே கலந்துகொண்ட ஒரு
இயக்குநரை, வேலூரில் ஆராய்ச்சி மையம் அமைக்கத் தேவையான
இடங்களைப் பற்றிப் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.
மேலும், 28–6–2006 அன்று நடந்த இயக்குநர் குழுக் கூட்டத்தில்கூட,
சொந்தமாக நிலம் வாங்க முடியாவிட்டாலும்கூட, வாடகைக்கு நிலம்
பெற்று, அந்த ஆராய்ச்சி நிலையத்தை வேலூரில் அமைக்கலாம் என்று
பரிந்துரை செய்து இருக்கிறார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கிட்டத்தட்ட 2,000
ஏக்கரிலே பயிர் செய்கின்ற வேளாண் விவசாயக் கூலித்
தொழிலாளர்கள் உதவி பெறும் வகையிலே, அந்த ஆராய்ச்சி
மையத்தைப் பரமத்திவேலூரில் அமைப்பதற்கு நிதியுதவி செய்ய ஆவன
செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிந்துகொள்ள
ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 9–50

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல வேளாண்மைப்
பல்கலைக்கழகத்தின்மூலம் முதலிலே வாடகைக் கட்டடத்திலே
பரமத்திவேலூரிலே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், ஓர் ஆராய்ச்சி
மையம் செயல்பட வேண்டுமானால், குறைந்தது 10 ஏக்கர் நிலமாவது

தேவைப்படுகிறது. அப்படி அங்கு 10 ஏக்கர் நிலம் கிடைக்காத காரணத்தினாலேதான், திருச்சி மாவட்டத்திலுள்ள சிறுகமணியில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றதோடு, வெற்றிலைக் கொடிக்கால் ஆராய்ச்சிப் பயிற்சியையும் அங்கே இணைத்து, இப்பொழுது அங்கே அந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தொகுதியிலே இந்த ஆராய்ச்சி நிலையம் மீண்டும் வர வேண்டுமானால், உரிய 10 ஏக்கர் நிலத்தை அவர் வாங்கித் தருவாரேயானால், அந்த சிறுகமணியிலே இருந்து இந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தையும் மாற்றலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வெற்றிலை விவசாயத்திற்குப் பெயர் போன ஊர்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார், கொஞ்சம் உட்காருங்கள். அவர் துணைக் கேள்வி கேட்கிறார். டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு, அதற்கு நிலம் வாங்கித் தர முயற்சி செய்வோம். அப்படியில்லையென்றாலும்கூட குத்தகைக்கு, அங்கே பயிர் செய்கின்ற நிலங்களை, வருடத்திற்கு ஏக்கருக்கு, 20,000 ரூபாய்க்கு 10 ஏக்கர் நிலம் வாங்குவது ஒரு பெரிய பொருளாதாரச் சுமையாக இருக்காது என்ற நிலையில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை, இந்தக் கொடிக்கால் விவசாயிகள் நிறைந்த பகுதியிலே இந்த ஆராய்ச்சி மையத்தை அமைக்க முன் வர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, அது பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கு வெற்றிலைக் கொடிக்கால் ஆராய்ச்சி நிலையம் அமைத்தபோதே, குத்தகைக்கு நிலத்தைப் பெற்றுத்தான் அந்த ஆராய்ச்சி நடைபெற்று வந்தது. பிறகு குத்தகைக் காலம் முடிந்ததும், நில உடைமையாளர்கள், நாங்கள் குத்தகைக்கு விடவில்லை, நிலம் எங்களுக்கு மீண்டும் தேவை என்று அவர்கள் கேட்டுக்கொண்ட காரணத்தினாலே, அங்கு இந்த ஆராய்ச்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்ட



காரணத்தினாலே, தொடர்ந்து அங்கு இந்தப் பணி நடைபெற இயலவில்லை. இப்பொழுதும் அதே நிலைதான் நீடிக்கிறது. ஏனென்றால், குத்தகை என்று சொன்னால், அந்தப் பக்கம் நல்ல நன்செய் நிலங்கள், காவிரித் தண்ணீர் பாயக்கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே அவர்கள் கேட்கின்ற அளவுக்குக் குத்தகை கொடுத்து ஒரு ஆராய்ச்சிப் பயிற்சியைப் பல்கலைக்கழகம் தொடங்குவது சிரமம். பல்கலைக்கழகத்திற்கு என 10 ஏக்கர் நிலத்தைத் தனியாரிடத்திலே நாம் விலை கொடுத்து வாங்கியோ, அல்லது அரசுப் புறம்போக்கு நிலம் கிடைத்தாலும், அதைப் பயன்படுத்தி, நிலத்தைப் பக்குவப்படுத்தி, இந்த ஆராய்ச்சி நிலையத்தைக் கொண்டு வருவதுதான் சாத்தியக்கூறே தவிர, குத்தகைக்கு நிலத்தை மீண்டும் பெற்று, அதிலே ஆராய்ச்சி நடத்துவது அவ்வளவு சாத்தியமில்லை என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே வெற்றிலை விவசாயத்திற்குப் பெயர் போன ஊர்களிலே லால்பேட்டையும் ஒன்று. காட்டுமன்னார்கோயிலுக்கு அருகிலே வீராணம் ஏரிப் பாசனத்தில் அமைந்திருக்கின்ற அந்த ஊர். அங்கேயிருக்கின்ற இஸ்லாமியப் பெருமக்களில் பெரும் பகுதியினர் வெற்றிலை விவசாயத்திலேதான் ஈடுபட்டிருக்கின்றார்கள். அங்கே பல ஏக்கர் நிலத்திலே வெற்றிலை சாகுபடி நடந்துகொண்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடிக்கால் தொழிலிலே பயிற்சி அளிக்கின்ற ஒரு பயிற்சி நிலையத்தை, பயிற்சி மையத்தை அங்கே ஏற்பாடு செய்வதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அதற்கான நிலத்தைக்கூட அங்கே நான் பெற்றுத் தர முடியும். அதை உங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9–55)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, தற்போது சிறுகமணியிலே கரும்பு ஆராய்ச்சி நிலையமும், அந்த நிலையத்திலே வெற்றிலைக் கொடிக்கால் ஆராய்ச்சி நிலையமும் இப்போது செயல்பட்டு வருகின்றன. ஓர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட வேண்டுமானால், குறைந்தது 10 ஏக்கர் நிலமும், 3 கோடி ரூபாயும் தேவைப்படுகின்றன. ஆகவே, இதை மாண்புமிகு உறுப்பினர் ஏற்பாடு செய்வதாக இருந்தால், பல்கலைக்கழகம் உடனடியாக அந்த முயற்சியில்

[2006 ஆகஸ்ட் 28

ஈடுபடும். ஆகவே, தற்போது அங்கே கொடிக்கால் பயிற்சி நிலையம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லை. எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியில் அதிக விவசாயிகள் தென்னை, வாழை, காய்கறி போன்றவற்றை விவசாயத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். இதை அங்குள்ள வியாபாரிகள் தோட்டத்திலேயே போய் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, குமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியில் ஓர் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி ஆராய்ச்சி நிலையம் சம்பந்தப்பட்டது. நீங்கள் உழவர் சந்தை கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இங்கு கேள்வி கேட்டிருப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் பதிலுரையை நிகழ்த்துகின்ற நேரத்தில், வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தைத் திருச்சி மாவட்டம், சிறுகமணியிலேயிருந்து மாற்றுவதாக அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே சொல்லியிருக்கின்றார்கள். ஒரு திட்டத்தை ஓர் ஊருக்குக் கொண்டு வருகின்ற நேரத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. மு. பரஞ்ஜோதி:** அதுதான் கேட்கிறேன். ஒரு திட்டத்தை ஓர் இடத்திலே கொடுத்துவிட்டு, மீண்டும் அதை வேறோர் ஊருக்கு மாற்றுவது என்பது பல இடங்களிலே பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, திருச்சி மாவட்டத்தில் இருக்கக்கூடிய...



2006 ஆகஸ்ட் 28]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாற்றுவதாகவே பதில் சொல்லவில்லை. அவராக அதைச் சொல்லக்கூடாது. ஏற்கெனவே பரமத்திவேலூரிலே இருந்தது. இப்பொழுது, திருச்சி மாவட்டம், சிறுகமணியிலே கரும்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்றுதான் பதில் சொன்னேனே தவிர, இப்பொழுது இங்கே பரமத்திவேலூருக்கு அதை நான் மாற்றித் தருகிறேன் என்று பதிலே சொல்லவில்லை. (குறுக்கீடு)

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள் அல்லவா? (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்திற்குச் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் அளிப்பார்களா என்று உங்கள்மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் மதுராந்தகம் தொகுதியில் Jatropha bio-diesel plant cultivate செய்ய வேண்டுமென்று சொன்னால், இதற்கு நாங்கள் யாரை அணுக வேண்டும் என்று உங்கள்மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை இயக்குநரை அணுகினால் அதற்கான ஆலோசனை கிடைக்கும். இல்லாவிட்டால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற வேளாண்மை இணை இயக்குநர்களையே அணுகலாம். அவர்கள் அதற்கான ஆலோசனையை வழங்குவார்கள். வேளாண்மைப் பல்கலைக்கழகமும் அதற்கான ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆக, ஜெட்ரோபா வளர்ப்பது இப்போது வேகமாக, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும், 20,000 ஹெக்டேர் அளவில் பயிர் செய்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், என்றைக்கு அதிகாரிகள் உங்களை வந்து பார்க்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அன்றைக்கு வேளாண்மைத் துறை அதிகாரிகளை உங்களுடைய இல்லத்திற்கே வரச் சொல்கிறேன். அவர்களோடு கலந்து பேசி, அந்த முயற்சியிலே நீங்கள் ஈடுபடலாம்.

[2006 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 104 மற்றும் வினா எண் 105. பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

*வினா எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.*

**106—**

## வீட்டுமனைப் பட்டா

**•62—திரு. என். நன்மாறன்:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை, காமராஜபுரம், அனுப்பானடி, கரைத்துறை ஆகிய பகுதிகளிலும் மற்றும் உள்நகர்ப் பகுதிகளிலும் நீண்ட காலமாகக் குடியிருந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள் வரவில்லையா? (குறுக்கீடு) மாண்புமிகு செல்வி கே. பாலபாரதி.*

*முற்பகல் 10-00*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராஜபுரம், அனுப்பானடி, கரைத்துறை ஆகிய பகுதிகளிலும், மற்றும் உள்நகர்ப் பகுதிகளிலும் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாகக் குடியிருந்து வரக்கூடிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா என்பதைக் கடந்த காலத்தில் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் தோழர் நன்மாறன் அவர்கள் இந்த அவையிலே அரசிடம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சென்ற அரசும், 'இல்லை' என்ற பதிலைத்தான் கூறினார்கள். அதற்குக் காரணம், நகர்ப் பகுதிகளில் 16 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிகளுக்குப் பட்டா வழங்குவதற்குத் தடையாணை இருக்கிறது என்று தெரிவித்தார்கள். பிற்பாடு 8 கிலோ மீட்டராகக் குறைத்திருக்கிறோம் என்று தெரிவித்தார்கள்.. இதன்*



2006 ஆகஸ்ட் 28]

*காரணமாக, நகர்ப் பகுதிகளில் இருக்கக்கூடிய அந்த மக்களுடைய வீடுகளுக்குப் பட்டா என்பது கிடைக்கவேயில்லை. ஆகவே, அரசு, இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எதிர்காலத்திலாவது தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய நகர்ப் பகுதியில் 50 ஆண்டு காலத்திற்கு மேல் குடியிருக்கக்கூடிய மக்களுடைய வீடுகளுக்குப் பட்டா வழங்க முன் வருவதற்குப் பரிசீலிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சேபனைகளுட்பட்ட நிலங்களில் பட்டா வழங்குவது. அது மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியிலே அமைந்திருக்கின்ற காரணத்தால், இயலாது என்பதை ஏற்கெனவே இதே அவையிலே பதிலாகத் தந்திருக்கின்றேன். குறிப்பாக, ஆட்சேபனையற்ற நிலங்களாக இருந்தால், அதை நம்முடைய வீட்டு வசதி வாரியத்திலே அனுமதியைப் பெற்று, வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதே சமயத்திலே, ஆட்சேபனைக்குரிய நிலங்களை வழங்குவதற்குத் தற்சமயம் தடையாணை இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.*

**திரு. சி. கோவிந்தசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தடையாணைகளை விலக்கிக்கொள்வதற்குச் சட்டரீதியாக உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் சாதாரண, ஏழை, எளிய மக்கள் 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்று இதுபோன்ற அரசு அல்லது பல்வேறு பெயர்களால் இருக்கின்ற நிலங்களில் குடியிருந்து வருகிறார்கள். ஓடைப் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, வண்டிப் புறம்போக்கு, மந்தைப் புறம்போக்கு என்று பல்வேறு பெயர்களில் மக்கள் குடியிருந்து வருகிறார்கள். ஆகவே, நத்தமாக இருந்தாலொழிய, பட்டா வழங்க இயலாது என்றுதான் தொடர்ந்து 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளாகப் பதில் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கு ஏதாவது புதிய வழிமுறைகளை உருவாக்கி, அந்த இடம் அரசுக்கு உபயோகமில்லை என்று சொன்னால், அதை ஆய்வு செய்து, ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க அரசு உரிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, பட்டா வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

[2006 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, ஏற்கெனவே நீர்வரத்துப் புறம்போக்குகள் மற்றும் மேய்க்கால் புறம்போக்குகள், இப்படி வரிசையாகச் சில புறம்போக்குகள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. இதிலே வீடு கட்டிக் குடியிருக்கின்றவர்களுக்கு, 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருக்கின்றவர்களுக்குப் பட்டா வழங்குவதற்குக் கடந்த 2000 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் 4–வது முறையாக முதலமைச்சராக இருந்தபோது ஓர் அரசாணை வழங்கப்பட்டு, அதிலே ஓர் ஆண்டு காலத்திற்குள்ளாக அவர்கள் குடியிருக்கின்ற வீடுகளுக்குப் பட்டா பெற்றுக்கொள்ளலாம் என்று இருந்தது. குறிப்பாக, நகர்ப்புறங்களாக இருந்தால், ரூ.24 ஆயிரம் வருமானத்திற்குக்கீழ் உள்ளவர்களுக்கும், கிராமப்புறங்களில் ரூ.16 ஆயிரத்திற்குக்கீழ் வருமானம் உள்ளவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு அரசு ஆணையிட்டு, அதன்மூலமாகத் தமிழகத்திலே பல இலட்சம் பேர், தாங்கள் குடியிருக்கின்ற மனைகளுக்கு நிரந்தரமாக வீட்டுமனைப் பட்டா பெற்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, ஏற்கெனவே குடியிருந்து வருகின்றவர்களுக்கு, நம்முடைய இதே அவையிலே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் அன்றைக்கே கேட்டார்கள். ஒரே இடத்திலே குடியிருக்கின்றவர்களுக்குப் பாதிப் பேருக்குப் பட்டா கிடைத்திருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டிக் குடியிருக்கின்றவர்களுக்குப் பாதிப் பேருக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அதையே அரசு பரிசீலிக்கும் என்று நான் சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்து — 10 ஆண்டுகளுக்கு மேல் ஏற்கெனவே வீடு கட்டிக் குடியிருக்கின்றவர்களுக்கு இந்த அரசு பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு முதல்வர் அவர்களோடு கலந்து, அரசு முடிவு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்காராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகரிலே ஆனைவிளைந்தான் குளம் எனற இடத்திலே புறம்போக்கிலே பலர் வீடு கட்டிக்கொண்டு இருந்தார்கள். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2000–லே



2006 ஆகஸ்ட் 28]

கொடுத்த ஆணைக்கிணங்க, 2001–லே அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்மூலமாக 1½ சென்ட் நிலம் அவர்கள் இருக்கக்கூடிய இடத்தில் வைத்துக்கொள்ளலாம்; அதற்கு மேல் அவர்கள் ஆக்கிரமித்திருந்தால், ரூ. 137.80 பைசா ஒரு சதுர அடிக்குக் கொடுத்துவிட்டு, அவர்கள் கட்டி விட்டால், அந்த இடத்திற்குப் பட்டா கொடுக்கிறேன் என்று அப்போது சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், அங்கே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் மிக ஏழ்மையானவர்கள், கூலித் தொழிலாளிகள், அவர்கள் யாராலும் கட்ட இயலாமல் விட்டுவிட்டார்கள். எனவே, இன்று வரை பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, இந்த 137 ரூபாய் கட்ட வேண்டும் என்பதற்கு விதிவிலக்குக் கொடுத்து, அவர்களுக்கு மீண்டும் பட்டா கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, முதலிலே, பட்டா வழங்குவதற்குத் தற்சமயம் தடையாணை இருக்கின்றது. கடந்த 5 ஆண்டு காலத்திலே முழுமையாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றங்களிலேகூட நீதியரசர்கள் எல்லாம், இந்தத் தடை செய்யப்பட்ட புறம்போக்கு நிலங்களில் கண்டிப்பாகப் பட்டா வழங்கக்கூடாது என்று தீர்ப்பு வழங்கி, அதிலே பல இடங்களிலே அகற்றப்பட்டிருக்கின்றன. நீர்நிலைப் புறம்போக்குகளில் எல்லாம் பெரும்பாலான அளவில் பெரிய மாநகராட்சி, மதுரை மாநகராட்சி, இன்னும் பல இடங்களிலே, ஆற்றோரங்களில் இருக்கின்ற கட்டடங்கள் எல்லாம் இடிக்கப்பட்டு, அவை அகற்றப்பட்டிருக்கின்றன. காரணம், நீதிமன்றத்திலே மிகக் கடுமையாக எச்சரித்திருக்கிறார்கள். இதற்குப் பட்டாவே வழங்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது அரசுக்கு. அரசு ஏற்கெனவே குடியிருக்கின்றவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று முடிவு செய்தால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் முடிவு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை 168–ஐத் திரும்பப் பெற்றாலே, தமிழகம் முழுமையிலும்

இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்குப் பட்டா கொடுக்கலாம். அந்த அரசாணை 168–ஐ அரசாங்கம் திரும்பப் பெறுமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே அவர்களுடைய உரையிலே, இங்கே நடந்த விவாதத்திலே பல முறை கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அது சம்பந்தமாக, நிச்சயமாக அரசு விரைவிலே முதல்வரோடு கலந்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில், வீராணம் விரிவாக்கத் திட்டத்தை அமல்படுத்துகிறபோது, சாலையோரங்களில் இருந்த ஏழை எளிய மக்களை, அந்தத் திட்டத்திற்கான பைப்லைன் புதைக்கப்பட வேண்டும் என்பதற்காக அப்புறப்படுத்தினார்கள். அப்புறப்படுத்தி, தற்போது வேறு இடங்களில் கொண்டு போய் அமர்த்தியிருக்கின்றார்கள். அந்த இடங்களிலேயாவது தாங்கள் நிரந்தரமாக வாழ வேண்டுமென்று பட்டா கேட்டு, அந்த மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அவர்களுக்கு நம்முடைய தமிழக அரசு பட்டா வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று சில இடங்களில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது; அங்கு கூரை வீடு வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சில கூலி விவசாயிகள், தங்களுடைய கூரை வீட்டை, தீப்பற்றாத வீடுகளாக மாற்றி, ஓடுகளோ, அல்லது மேலே ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளோ அமைக்கின்றபோது, வசதி வாய்ப்புகள் இவர்களுக்கு வந்துவிட்டன. ஆதலால் இவர்களுக்கு நாங்கள் பட்டா தர மறுக்கிறோம் என்று, அதிகாரிகளால் மறுக்கப்படுகிறது. அதையும் பரிசீலித்து, அவர்ளுக்கும் பட்டா வழங்குவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, நிச்சயமாக வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு இடம் வழங்குவது, குடியிருப்பு மனை வழங்குவது என்பது அரசினுடைய கொள்கை. அந்த வகையிலே, கண்டிப்பாக அவர்களுக்கு ஏற்கெனவே வீடு இல்லாமல் இருந்தது என்றால், பட்டா வழங்குவதற்கு அரசு



நடவடிக்கை எடுக்கும். அவர்கள் வீடு கட்டி, கூரை போட்டுக் குடியிருக்கிறார்கள் என்று சொன்னால்கூட, அதை நிச்சயம் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரத்தில், கோட்டை அகழிக்கரையில் சுமார் 30 ஆண்டு காலமாக வீடுகளைக் கட்டிக் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு அனைத்தும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பட்டா கேட்டால், அதை மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்றுத் தர வேண்டும் என்று சொல்கிறார்கள். மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று, அவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இது மத்திய அரசிற்கு உரிமையான இடம் என்று இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அது சம்பந்தமாகத் தனிக் கேள்வி எழுப்பவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107. திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**107—**

### கூலி உயர்வு

**•1436—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட நெசவாளர்களின் கூலியை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், தனியார் அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும் நெசவுக் கூலியினை உயர்த்தி வழங்கிடக் கோரிக்கை ஏதும் இல்லாமையினால், தற்சமயம் நெசவுக் கூலியை உயர்த்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆ) இவ்வினா எழவில்லை.

*முற்பகல் 10–10*

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னதைத்தான் திரும்பச் சொல்லப் போகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சர் முன்னிலையில் போடப்பட்ட 30 சதவீதக் கூலி உயர்வும் நிறைவேற்றப்படவில்லை. எனவே, இந்த ஆட்சியிலாவது இந்தக் கூலி உயர்வு நிறைவேற்றப்பட வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் வறுமையால் வாடிய நெசவாளர்களுக்குக் கஞ்சித் தொட்டியைத் திறந்து பசியைப் போக்கிய அரசு, இந்த ஆட்சியில் அந்த நிலை தொடராவண்ணம் இந்தப் பசியால் வாடும் நெசவாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வணக்கம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன கேட்டார்கள் அவர்கள்? (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 16–9–2005 அன்று (கூச்சல்—குழப்பம்) நெசவாளர் தொழிற்சங்கத்தினுடைய பிரதிநிதிகளும்... (கூச்சல்—குழப்பம்)



)6 ஆகஸ்ட் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அப்படியே நக்கையில் அமருங்கள். (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள். (கூச்சல்—ழப்பம்)

**திரு. டி. ஜெயக்குமார்:** Speaker Sir....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடிக்கட்டும். (கூச்சல்—ழப்பம்) உட்காருங்கள், அமைச்சர் சொல்லட்டும். (கூச்சல்—குழப்பம்) ன் திரும்பச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** நெசவாளர் தாழிற்சங்கத்தினுடைய பிரதிநிதிகளும், தனியார் பட்டுச் சேலை ற்பத்தியாளர்களுடைய பிரதிநிதிகளும் ஆகிய இரு தரப்பினரும் ந்தக் கூலி உயர்வு ஒப்பந்தத்தில்—அன்று அந்த ஒப்பந்தம் பாடப்பட்டது. அதுவும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ன்னிலையிலே அந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் டிப்படையிலே அன்றையதினத்தன்று 40, 45 சதவீதம் டைமுறைப்படுத்தப்படுகிறது என்பதையும், பாக்கி அந்த ஒப்பந்தத்தின் டைமுறைப்படுத்தாத இனங்களில் இந்த அரசு தலையிட்டு, அதைக் ண்காணித்து, இந்த வருடம் நடைமுறைப்படுத்த ஆவன செய்யும் ன்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிப்பட்ட முறையில் கேள்வி நரத்திலே ஒருவரின் குற்றச்சாட்டு இருக்கக்கூடாது. அது எல்லாம் வறு. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கேள்வியைத் தாங்கள் குற்றச்சாட்டு என்று டுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ாலத்திலே அப்படி நெசவாளிகள் பாதிக்கப்பட்டார்கள். (கூச்சல்—ழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்—ழப்பம்) நான் சொல்கிறேன், இந்தக் கேள்வி என்று இல்லை. பொதுவாகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது பாதிக்காமல் இந்த அரசு காப்பாற்றுமா என்ற கேள்வி, அதற்கு அவர் சொன்னது கஞ்சித் தொட்டி திறந்தார்கள் என்று. (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) திரு. பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். (கூச்சல்—குழப்பம்) முதலில் திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கஞ்சித் தொட்டி திறந்தார்கள் என்று சொல்வது, ஆளுங்கட்சி சார்பாகக் கஞ்சித் தொட்டி திறக்கவில்லை. அது அவர்கள் சொன்னது தவறு என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள் திரு. வேல்முருகன். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை எழுந்தபோது, சட்டமன்ற விதியின்படி அவையினுடைய முன்னவர் எழுந்து பதில் தருகிறார். அவர் எழுந்து பதில் தருகிறபோது, மற்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அமர்ந்து அவருடைய பதிலைக் கேட்க வேண்டும் அல்லது அதிலே ஒரு விளக்கம் வேண்டுமானால் தங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பிறகு கேட்கலாமே தவிர, அங்கே மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்களும், திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களும்—சட்டப் பேரவையின் இரண்டு உறுப்பினர்களும் எழுந்து, அவர் நின்று கொண்டிருக்கிறபோதே நிற்பது எல்லாம் இந்த அவையினுடைய மரபு அல்ல. இதை எல்லாம் நீங்கள் சீர்தூக்கிப் பார்த்து ஓர் உரிய ஆலோசனையை இந்த மாமன்றத்திற்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் சொல்வது உண்மைதானே? அமைச்சர் அவர்கள் எழுந்து நிற்கிறார்கள், அவை முன்னவர் அவர்கள் எழுந்து நின்று பேசிக்கொண்டிருக்கும்போது உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு சத்தம் போட்டால் முறையாகாது அது முறையல்ல; அதை அனுமதிக்க முடியாது. (கூச்சல்—குழப்பம் Right மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. பொள்ளாச்சி ஜெயராமன்.



**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினரின் கேள்வியைச் சரியாக அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) கடந்த கால ஆட்சியில் கஞ்சித் தொட்டி திறந்ததுபோல, இப்போதும் நெசவாளர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதுதான் அவர்களுடைய கேள்வியே தவிர, கடந்த கால ஆட்சியைப் பற்றி— அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். அவர் ஒரு புதிய உறுப்பினர், என்ன பேசுகிறார் என்பதை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். இருக்கையில் இருந்துகொண்டு சத்தம் போடுவது முறையல்ல. அவர் என்ன சொன்னார்? கடந்த கால ஆட்சியில் நெசவாளர்களைக் காப்பாற்றுவதற்குக் கஞ்சித் தொட்டிகளைத் திறந்து, அவர்களைக் காப்பாற்றியதுபோல இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதுதான் கேள்வி. அவைக் குறிப்பிலே என்ன ஏறி இருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு, உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** ஒரு பெண்ணைப் பார்த்து இந்த மாதிரிக் கூச்சல் போடுவது முறையல்ல. இதைக் கண்டிக்கிறோம்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Leave it. அதை அப்படியே விட்டுவிடுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே வினாக்கள்—விடைகள் நேரத்தில் கேள்விக்குரிய பதிலை மாண்புமிகு அமைச்சர்கள்தான் பதிலாகத் தருவது வழக்கம். ஓர் உறுப்பினர் கேள்வி கேட்கின்றபொழுது, அதில் ஏதாவது கடந்த கால அரசின்மீது குற்றச்சாட்டுகள் தொனிக்கின்ற வகையில் கேள்வி கேட்பாரேயானால், அதற்குரிய பதிலைச் சொல்கின்ற வாய்ப்பையும் கடந்த காலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயம் உங்களுக்கு ஏற்படுகிறது. ஆனால், அந்த மாதிரியான ஒரு சூழ்நிலை இங்கே மரபில்லை. எந்தக் கேள்வி கேட்டாலும் அதற்குத் தொடர்புள்ளதாக இருக்க வேண்டும். மாண்புமிகு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், அவர் சொன்னதைக் குற்றச்சாட்டாகக் கருத முடியாது என்று சொன்னார்கள். குற்றச்சாட்டாகக் கருதக்கூடிய

அளவிற்கு அவருடைய துணைக் கேள்வி இருந்ததனால்தான், நாங்கள் பதில் சொல்வதற்கு ஒரு வாய்ப்பைக் கேட்கின்றோம். ஆனால், மரபின்படி--மாண்புமிகு அமைச்சர்கள்தான் பதில் சொல்ல வேண்டிய ஒரு மரபு இருக்கிறது. அந்த மரபை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் இரு தரப்பிலும் சொல்ல வேண்டும். கேள்வி கேட்கின்றவர்கள், அதன் தொடர்புடைய துணைக் கேள்வியை மட்டும் கேட்க வேண்டும். கடந்த காலத்தைப் பற்றி ஏதாவது அவர்களுக்குக் குற்றச்சாட்டு இருந்தால், மற்ற விவாதங்கள் இருக்கின்றன, அப்பொழுது அதை எழுப்பிக் கேள்வியாகக் கேட்கலாம். வினா—விடை நேரத்தில் இந்த மாதிரியான குறுக்கீடுகள் இருப்பது நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் சொன்னதைப்போல, சென்ற ஆட்சியிலே ஆட்சியாளர்கள் சார்பிலே கஞ்சித் தொட்டி திறக்கப்படவில்லை. எதிர்க்கட்சிகள் சார்பிலேதான் கஞ்சித் தொட்டிகள் திறக்கப்பட்டன. இதுதான் உண்மை. உறுப்பினர் திருமதி கமலாம்பாள் அவர்கள் தவறாகச் சொல்லவில்லை. தவறாகப் புரிந்துகொண்டு எதிர்க்கட்சியினர்தான் இங்கே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமன், அந்த matter-ஐ அப்படியே விட்டுவிடுங்கள், ஏதாவது supplementary question இருந்தால் அதை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது கேள்வி கேட்பதாக இருந்தால், அதை மட்டும் கேளுங்கள். அந்த subject–க்குள் போய் clarification தேவையில்லை.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சுட்டிக்காட்டுவதிலே எனக்குப் பங்கு இருக்கிறது என்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No clarification. (Interruption) No, no, supplementary question இருந்தால் மட்டும் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** நான் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், அவர் supplementary question–க்கு அனுமதி கேட்டிருக்கிறார். அவர் முதலில் supplementary question கேட்டுவிடட்டும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இடர்களைக் களையும்வண்ணம், இந்த அரசு ஓர் உயர்மட்டக் குழுவை அமைக்கும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழு எப்போது அமைக்கப்படும்? அந்தக் குழுவின் அமைப்பு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அந்த உயர்மட்டக் குழு அமைக்கப்படும்போது, அந்தத் தொழிலிலே வல்லுனர்களாக இருக்கின்ற பல அனுபவசாலிகளைச் சேர்த்துக்கொள்வீர்களா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு இல்லாத காரணத்தினால், ஓரிரு வருடங்களாக, முந்தைய காலங்களிலே தொழில் இல்லாத காரணத்தால்தான், அந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்று, கூலி உயர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. அதனால்தான் சம்பந்தப்பட்டதை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சகோதரி கமலாம்பாள் இங்கே கேட்டார்கள். ஆக, சம்பந்தம் இல்லாத கேள்வி அல்ல. அதனடிப்படையில், இதுபோன்ற நிகழ்ச்சி நடந்துவிடக்கூடாது. அவருடைய கேள்வி, சம்பந்தமுள்ள கேள்வி என்பதை அவருக்குத் தெரிவித்து, இதுபோன்ற உயர்மட்டக் குழு போடப்படுகின்ற பூர்வாங்க நடவடிக்கை இப்போது துறையின்மூலமாக எடுக்கப்பட்டு வருகிறது. அதனுடைய செயல், அதிலே இருக்கிற நெசவாளர்களுடைய வாழ்க்கையில் இருக்கிற அனைத்துப் பிரச்சினைகளையும் களையக்கூடிய சூழ்நிலையில், அதிலே சம்பந்தப்பட்டிருக்கிற, மாநிலத்திலே இருக்கிற அனைத்துப் பிரிவுகளிலும் இருக்கிற அனைவரும் அதிலே உறுப்பினர்களாக்கப்பட்டு, அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, இந்த அரசின்மூலமாக அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களின் ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை பல நாட்களாக நிலுவையிலே இருக்கிறது. தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, முதியோருடைய ஓய்வூதியத்தைக்கூட -- O.A.P.–ஐக்கூட 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். உடல் ஊனமுற்றவர்களுக்கு 500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதுபோல, கைத்தறி நெசவாளர்கள் ஓய்வு பெறுகிறபோது, அவர்களுடைய ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, முதியோர் உதவித் தொகை உயர்த்தப்பட்டதுபோல, நெசவாளர்கள் ஓய்வு பெறுகிற காலத்திலே கொடுக்கப்படுகிற அந்தத் தொகையையும்—அதற்குரிய மாற்று ஏற்பாடுகளும், இன்னும் அவர்களைப் பாதுகாக்கிற வகையில் துறையின்மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 3 மாத காலமாக, அங்கே இருக்கிற நெசவாளர்களுக்குப் பட்டுச் சரிகைகள் வழங்காமல் உள்ளதால், அவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகின்ற ஒரு சூழ்நிலை அந்தப் பகுதியிலே நிலவுகிறது. நெசவுத் தொழிலையே நம்பியிருக்கின்ற அந்த நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக உடனடியாகப் பட்டுச் சரிகை கொடுத்து, அந்த நெசவாளர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கிட இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு சில மாதங்களாகத் தங்கம், வெள்ளியினுடைய விலையேற்றத்தின் காரணமாக நடந்த





நிகழ்ச்சிகளினால், சரிகை கொடுப்பதிலே சற்றுத் தடுமாற்றம் ஏற்பட்டது. துறையின்மூலமாக உடனடியாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்று அனைத்துச் சங்கங்களுக்கும் சரிகை கொடுக்கிற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும், வட மாநிலத்திலே, சூரத்திலே, வெள்ளத்தின் காரணமாகவும் இந்தத் தடங்கல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்கும் மாற்று ஏற்பாடு செய்யத் துறையின்மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தல்கள் நடைபெற்றபோது, முன்னாள் முதல்வர் அவர்கள், 'நான் ஆணையிடுகிறேன், 30 சதவீதக் கூலி உயர்வு தரப்படும்' என்று சொன்னார்கள். அந்தக் கூலி உயர்வு தரப்பட்டதா? அப்படித் தரப்படவில்லையென்றால், அந்தக் கூலி உயர்வு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூலி உயர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே 40, 45 சதவீதத்தினர் கூலி உயர்வைச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இந்தக் கூலி உயர்வைச் செயல்படுத்தாமல் இருக்கிற மீதமுள்ளவை அனைத்தும் இந்த அரசின்மூலமாகக் கண்காணிக்கப்பட்டு, உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியினுடைய பட்டு நெசவாளர்கள் போராட்டம் நடத்தியதால், அவர்களுக்குக் கூலி உயர்வு வழங்கப்பட்டது. ஒரு பட்டு நெசவாளிக்கும், கைத்தறி நெசவாளிக்கும் அடிப்படையாக என்ன கூலி தரப்படுகிறது? அது எத்தனை ஆண்டு காலமாக உயர்த்தப்படாமல் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூலியைப் பற்றிக் கேட்டுள்ளார்கள். கூட்டுறவு அடிப்படையிலே பணிபுரிகிற நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு என்கிற ஒரு நிலை தற்போது இல்லை. காரணம், பட்டுச் சேலை தயாரிக்கிற

தனியார் உற்பத்தியாளர்கள், நெசவாளர்களுக்கு நாளொன்றுக்கு 80 ரூபாய் ஊதியமாகக் கொடுக்கிறார்கள். ஆனால், கூட்டுறவு அடிப்படையிலே பணியாற்றுகிற நெசவாளர்களுக்கு 180 ரூபாய் கூலி கொடுக்கிற நிலையிருக்கிறது. ஆரணி பகுதியிலே இது குறித்து ஏதாவது பிரச்சினை இருந்தால், இந்தத் துறையின்மூலமாக மீண்டும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். அதிலே ஏதாவது பிரச்சினை இருந்தால், அங்கேயிருக்கிற மாவட்ட ஆட்சியர்மூலமாக அதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கைத்தறித் தொழிலை நம்பி ஏராளமான குடும்பங்கள் உள்ளன. பொதுவாக, கடந்த சில ஆண்டுகளாகவே இந்தத் தொழில் மிகவும் நலிவடைந்துவிட்டது. காரணம், மத்திய கூட்டுறவு வங்கியின் ஒத்துழைப்பு இல்லாததாலும், நெசவாளர்களின் உற்பத்திக்கு நூலும், கூலியும் சரிவாக் கிடைக்காததாலும், அந்த மக்கள் பெரிதும் பாதிப்படைந்து, வறுமையின் எல்லையிலே நிற்கிறார்கள். இதைப் போக்கிட அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைத் தனிக் கேள்வியாகக் கேட்கும்படி உங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 108, செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**108—**

**உதவித் தொகை**

**•1183—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர், விதவைப் பெண்களுக்கு ஆண் வாரிசுகள் இருந்தாலும் உதவித் தொகை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைப் பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 18 வயதுக்கு மேல் ஆண் வாரிசு இருந்தாலும், தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டு, ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது. ஆனால், மாறி வரும் சமூகச் சூழ்நிலையில் இதே விதிகளை முதியோர் ஓய்வூதியத் திட்டத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனப் பல்வேறு திசைகளிலிருந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. கண்டிப்பாக அனைவரின் கோரிக்கைகளையும் அரசு பரிசீலிக்கும் என்று இந்த மாமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமூகத்தில் இருக்கக்கூடிய முதியோர்களுக்கு, விதவைப் பெண்களுக்கு, அனாதரவான பெண்களுக்கு 200 ரூபாய் உதவித் தொகையை 400 ரூபாயாக நமது அரசு உயர்த்தி இருப்பது பாராட்டிற்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 18 வயதுக்குட்பட்ட ஆண் வாரிசுகள் இருந்தால், அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கும் என்றும், 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் வாரிசு இருந்தால் உதவித் தொகை கிடைக்காது என்றுமுள்ள அரசாணைதான் நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 1998 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருந்தபோதுதான் விதவைப் பெண்களுக்கு வயது வரம்பு நீக்கப்பட்டு, ஆண் வாரிசு இருந்தாலும் உதவித் தொகை வழங்கலாம் என்ற அரசாணை கொண்டு வரப்பட்டது. ஆனால், அதற்குப் பிற்பாடு, அது நடைமுறையில் இல்லை. மேலும், உதவித் தொகை கோரிய விதவைப் பெண்களுடைய விண்ணப்பங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அனுப்பப்பட வேண்டுமென்ற அரசாணைகூட இப்போதும் இருக்கிறது. ஆகவே, இவற்றை நீக்குவதற்கு இந்தத் துறை பரிசீலிக்குமா? இப்போது அமைச்சர் அவர்கள் கூறிய அந்த விதிகளை உடனடியாக அரசாணையாகக் கொண்டு வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டத்தில் '18 அல்லது அதற்கு மேல் வயதுள்ள வாரிசு உள்ளவர்களாக இருந்தாலும்' என்று எங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் ஏற்கெனவே இருக்கிறது. So, அதை நீங்கள் பார்த்துக்கொள்ளலாம். மற்ற கோரிக்கைகளைக் கண்டிப்பாக இந்த அரசு பரிசீலிக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.*

**திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் சிக்கன நடவடிக்கை என்ற பெயரில், முதியோர்கள், விதவைகள் பெற்று வந்த உதவித் தொகைகள் நிறுத்தப்பட்டு, பல ஆயிரம் ஏழை எளியவர்கள் தெருவிலே நிற்கின்றார்கள். அவர்களுக்கு எல்லாம் மீண்டும் அந்த உதவி கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அதோடு, முதியோர்கள், விதவைகள் உதவித் தொகை பெறுவதற்கு விதிக்கப்பட்டிருக்கின்ற அந்த நிபந்தனைகள் -- ஆயிரம் ரூபாய்க்கு மேல் சொத்து இருக்கக்கூடாது என்பது போன்ற நிபந்தனைகள் எல்லாம் இருக்கின்றன. பல பேருக்கு ஒரு சென்ட் நிலம் இருக்கும். அதுவே ஆயிரம் ரூபாய் இருக்கும். ஆனால், அந்த ஒரு சென்ட் நிலத்தை வைத்து எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிபந்தனைகளையெல்லாம் சற்றுத் தளர்த்தி, கலைஞருடைய ஆட்சிக் காலத்தில், முதியோர்கள், விதவைகள் எந்தவிதமான கஷ்டமும் இன்றி வாழ்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதே பதில்தான். கண்டிப்பாக அரசு அனைத்துக் கோரிக்கைகளையும் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஷ்ணுபிரசாத்.*

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை என்பதனால், நான் கேட்கும் கேள்வி இந்தத் துறையில் வருகின்றதா அல்லது இதற்குத் துணைக் கேள்வியாக*





*உள்ளதா அல்லது தனிக் கேள்வியாகத் தர வேண்டுமா என்று எனக்குத் தெரியாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வந்தால்தான் கேள்வி கேட்க வேண்டும்.*

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** *ஏனென்றால், நேற்றைய முன்தினம் எனக்கு வாய்ப்புத் தவற விடப்பட்டது. சமூகத்திற்கும், தமிழகத்திற்கும் மிக, மிக முக்கியமான ஒரு பிரச்சினை. இன்று இந்திய அளவிலே உயர் கல்வியிலே நாம் சாதித்திருக்கின்ற 27 per cent இட ஒதுக்கீடு கிடைத்ததற்குத் தமிழகம் முன்னோடியாக விளங்கியது. தாய், தந்தையர் அரவணைப்பிலும், குடும்பச் சூழ்நிலையிலும் படிக்கின்ற குழந்தைகளுக்கு உயர் கல்வியிலே 27 per cent இட ஒதுக்கீடு இன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், தாய் யார் என்றும், தந்தை யார் என்றும் தெரியாமலும், என்ன ஜாதியில் பிறந்திருக்கிறோம் என்று தெரியாமலும் ஆயிரக்கணக்கான அனாதைக் குழந்தைகள்—தவறு—தெய்வத்தின் குழந்தைகள் தமிழகத்திலே இன்று நிறைய இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம் உயர் கல்வியிலே இட ஒதுக்கீடு தந்து, சமூகத்திலே ஒரு நல்ல உயர் நிலையை அடைவதற்கு வழிவகை செய்து, சரித்திரம் படைக்குமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தனிக் கேள்வியாகக் கேட்கும்படித் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

*வினா எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

**109—**

## கட்டட வசதி

***1669—திரு. கே.வீ. ராமநாதன்:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2006 ஆகஸ்ட் 28

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சியில் பழனிவேல்புரம் புதுவலவு காலனியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) எப்போது என்று கேட்டிருக்கிறார்கள். அங்கன்வாடிக் கட்டடங்கள் கட்டுவதற்குக் குறைந்தபட்சம் மூன்றிலிருந்து ஆறு மாதங்கள் ஆகும் என்று சட்டமன்ற உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், எனது பவானி தொகுதியிலுள்ள பல அங்கன்வாடிக் மையங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அதேபோன்று, அரசால் கட்டப்பட்டுள்ள பல கட்டடங்கள் பழுதாகி, மழைக் காலங்களிலே வெள்ளமும், மேலும் மழை பெய்கின்றபோது தண்ணீரும் உள்ளே வருகின்றது. அதையெல்லாம் நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமெங்கும் சில இடங்களில் அங்கன்வாடிக் கட்டடங்கள் பழுது பார்க்கப்பட வேண்டும். இது ஒரு பிரச்சினைதான். ஏனென்றால், அங்கன்வாடி கட்டடம் கட்டுவதற்குத் தனிப்பட்ட முறையில் நிதி கிடையாது. ஒன்று, மத்திய அரசிடம் கிடைக்கும் அல்லது பஞ்சாயத்துமூலமோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதிமூலமோ அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாகவோ கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கை விளக்க உரையிலே கூறியதைப்போல, கண்டிப்பாக, படிப்படியாகத் தமிழகத்திலுள்ள அத்தனை அங்கன்வாடி மையங்களும் சீரமைக்கப்படும் என்று உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



[2006 ஆகஸ்ட் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதியில், அங்கன்வாடியில் பணி செய்யும் ஊழியர்கள் மாதம் ஒரு முறை கூட்டங்கள் நடத்த, திருப்போரூர் மற்றும் காட்டாங்குளத்தூர் ஒன்றியங்களில் நிரந்தரக் கட்டடம் எதுமில்லை. அவர்கள் அனைவரும் மரத்தடியில் நின்றுதான் கூட்டம் நடத்துகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான கட்டடம் காட்டாங்குளத்தூர் மற்றும் திருப்போரூர் ஒன்றியங்களில் கட்டித் தரப்படுமா? அதேபோன்று, பால்வாடி பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக இல்லை, ஒழுகுகின்றன. தரமான கட்டடங்கள் இல்லை. அவற்றையும் சரி செய்து தர ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக அரசு இதனைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**10—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***802—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாலை மாவட்டம், போளூர் தொகுதி, களம்பூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்குப் பதிலாக, வாய்ப்புள்ள இடங்களில் மொத்தப் பால் குளிர்விப்பான்கள் அமைத்து, பால் சேகரம் செய்வது எனக் கொள்கை முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தி வருவதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதிக்குட்பட்ட களம்பூர் பகுதியில் தனியாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க இயலாது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.க. விஜயகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தஞ்சை டெல்டா மாவட்டங்களில், விவசாயத்திற்கு அடுத்ததாகப் பால் உற்பத்தியாளர்கள் அதிகமாகப் பயன் அடையக்கூடிய பால் குளிர்படுத்துகின்ற அந்த நிலையத்தை மயிலாடுதுறையில் எங்கள் பகுதிக்கு அமைத்திருக்கிறார்கள். 1996–2001 ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட அது, இடையில் சீர்கெட்டிருக்கிறது. குத்தாலம், மயிலாடுதுறை மற்றும் செம்பனார்கோயில் பகுதிகளிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பயன் அடையக்கூடிய அளவிற்கு உள்ள நாகை மாவட்டம், மயிலாடுதுறையிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தினை மீண்டும் செயல்படுத்த, மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு செயலாக்கம் செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

பகல் 10–15

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28–1–2002 முதல், தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் பால் உற்பத்தி குறைந்த காரணத்தினால், மயிலாடுதுறை பால் குளிரூட்டும் நிலையத்தின் செயல்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. கடைசியாக, இந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தின் கையாளும் திறனான, நாளொன்றுக்கு 8 ஆயிரம் லிட்டர் என்பது, 600 லிட்டராகக் குறைந்ததால், செயல்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. தற்சமயம், மயிலாடுதுறை பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவு சுமார் 2,000 லிட்டராகும். அதில்,



2006 ஆகஸ்ட் 28]

காவிரிப்பூம்பட்டினம் பகுதியில் மட்டும் உற்பத்தி சுமார் 1,200 லிட்டராகும். எனவே, காவிரிப்பூம்பட்டினத்தில் மொத்தப் பால் குளிர்விப்பான் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்சமயம் உடனடியாக மயிலாடுதுறையில் பால் குளிரூட்டும் நிலையத்தைச் செயல்படுத்த இயலாது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, ஈரோடு மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலே விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கிற பாலுக்கு ஒரு ரூபாய் குறைத்துக் கொடுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று வினவியபோது, 'அந்த ஒன்றியங்கள் எல்லாம் நஷ்டத்திலே ஓடுகின்றன; எனவே, ஒரு ரூபாய் குறைத்துக் கொடுக்கிறோம்' என்று சொல்கிறார்கள். எனவே, அந்த நஷ்டத்தை அரசு ஈடு கட்டி, விவசாயிகளுடைய கொள்முதல் விலையை--அந்தக் குறைக்கப்பட்ட விலையை அரசு உயர்த்தித் தருமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அதோடு, ஈரோட்டிலே, கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வந்த, N.D.D.B. என்கிற தேசிய பால் வள நிறுவனத்தினுடைய அலுவலகம் கடந்த ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து மூடப்பட்டு விட்டது. அதைத் திறப்பதற்கும் அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துகளை, அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, நான் அங்கே நேராகச் சென்று, அதைப் பரிசீலித்து, அதன் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) புதிய குடும்ப அட்டைகள் நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் ஓர் அரசாணை பிறப்பித்து, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால், முன்னுரிமை அடிப்படையில் அதைப் பரிசீலனை செய்து குடும்ப அட்டை வழங்கப்படும் என்கிற ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த வகையில், இப்போது தமிழகத்தில் யார், யாருக்கெல்லாம் குடும்ப அட்டை இல்லையோ, அவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி, பரிந்துரை பெற்று, இப்போது அதற்கான மனுக்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றம் இப்போது நடந்துகொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், working days—வேலை நாட்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே இருக்கிறபோது, சில பேர் மனுக்களை எடுத்துக்கொண்டு நேரடியாக அலுவலகத்திற்குச் சென்று, தாலுகா வினியோக அதிகாரியிடம் கொடுக்கிறபோது, அவர்கள் ஒப்புகைச் சீட்டு வழங்காத காரணத்தினாலே, கூட்டம் அங்கங்கே அலை மோதுகிறது என்ற ஒரு நிலை ஏற்பட்டு, அந்த நிபந்தனைகள் தளர்த்தப்பட வேண்டும் என்றெல்லாம்கூட, சில அரசியல் கட்சியினுடைய தலைவர்கள் அறிக்கைகளை எல்லாம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஓர் அங்கீகாரம் கிடைத்தது. ஏனென்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்; அந்தப் பிரதிநிதிகள் பரிந்துரை செய்தால், இந்த மாதிரிக் குடும்ப அட்டை வழங்க வேண்டுமென்று ஏற்கெனவே ஒரு அரசாணை, 1993 ஆம் ஆண்டுகூடப் பிறப்பிக்கப்பட்டது; இப்போதும் பிறப்பித்திருக்கிறீர்கள். முன்னுரிமை அடிப்படையிலே நீங்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், யாராவது அலுவலகத்திலே மனுக் கொடுத்தால், அங்கே ஒப்புகைச் சீட்டைக்



கொடுத்துவிட்டாலே பிரச்சினை தீர்ந்துவிடும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புகைச் சீட்டைக் கொடுப்பதற்கு ஆவன செய்வாரா; கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு உடனே ஒரு இரண்டு வார காலத்திலோ அல்லது மூன்று வார காலத்திற்குள்ளோ ரேஷன் அட்டைகளை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனே, தமிழ்நாடு முழுவதும் 27 மாவட்டங்களிலே நான் நேரடியாகச் சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு செய்தபோது, பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், "நாங்கள் செல்கிறபோது, பொது மக்கள் எங்களிடத்திலே குடும்ப அட்டை வேண்டுமென்று மனுக்களைக் கொடுக்கிறார்கள்; நாங்கள் என்ன செய்வது?" என்று கேட்டுக்கொண்டார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே அதையெல்லாம் கலந்து பேசி, என்னுடைய மானியக் கோரிக்கையிலே அதை நாங்கள் குறிப்பிடுகிறபோது சொன்னோம்; "சட்டப் பேரவை உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதி; நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதி; எனவே, உங்களுக்குவரும் மனுக்களை நீங்கள் பரிந்துரை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பினால், அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே அனுப்பி, தலத் தணிக்கை செய்து, உரியவர்களுக்கு கார்டு வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்" என்று அறிவித்தோம். அதன் அடிப்படையிலே இந்த அரசாங்கம் 8–8–2006 அன்று ஆணை எண் 130ஐ வெளியிட்டு அதிலே மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்ய, புதிய குடும்ப அட்டைகள் கோரும் விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள் பெற்று, அதனை உரிய ஆய்வு மற்றும் தலத் தணிக்கைக்கு உட்படுத்தி, அவற்றில் தகுதி வாய்ந்த குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் அச்சடித்து வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்தோம். எனவே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே வருகிறபோது, பரிந்துரை செய்து அனுப்பினால், மாவட்ட ஆட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி, அதை ஆய்வு செய்துதான் அந்த கார்டுகளே கொடுக்கப்படுகின்றனவே தவிர, நாடாளுமன்ற உறுப்பினர்கள்,

சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுப்பதாலேயே அதை உடனே கொடுத்துவிடுகிறோம் என்றல்ல. இதற்கு ஒரு முன்னுரிமை, அவ்வளவுதான். ஆனால், அதே ஆணையிலே, பிறருக்குக் கொடுக்கக்கூடாது என்று இல்லை. அதே ஆணையிலேயே தமிழக அரசிடம் 2004 ஆம் ஆண்டு புதிய குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பங்கள் தந்து, அதில் விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்பட்டு, அநேக விண்ணப்பங்கள் இன்னும் உள்ளன. இவர்கள் ஏற்கெனவே கொடுத்திருக்கிற விண்ணப்பப் படிவங்களையும் எடுத்து, மீண்டும் தலத் தணிக்கை செய்து, அவற்றில் தகுதி வாய்ந்த குடும்பங்களுக்குப் புதிய அட்டைகள் வழங்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறோம்.

*முற்பகல் 10–40*

அதோடு மட்டுமல்ல, 2005–2006 ஆண்டுக்குப் புதிய குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பம் செய்த குடும்ப அட்டைதாரர்களுக்கு, புதிய குடும்ப அட்டை கோரி மனுச் செய்தால் அந்த மனுக்களையும் தலத் தணிக்கை செய்து, அவற்றில் தகுதி வாய்ந்த குடும்பங்களுக்குக் குடும்ப அட்டை வழங்கப்படும் என்று அதையும் சொல்லியிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, கூட்டுக் குடும்பமாக இருந்து, தற்போது தனித் தனிக் குடும்பமாகப் பிரிந்து சென்று, புதிய குடும்ப அட்டை கோரும் விண்ணப்பதாரர்களுக்குத் தலத் தணிக்கை செய்து, குடியிருக்கும் இடத்தில் தனித்தனியாகச் சமையலறை இருப்பதை உறுதி செய்தால், பின்னர் தகுதி வாய்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறோம். ஆக, தொடர்ந்து ஏற்கென்வே process–ல் இருந்தது, அப்படியே இருக்கிறது.

இருந்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே, நேரடியாகப் போகிறபோது அவர்களிடத்திலே மனுக் கொடுக்கிறார்கள், நாங்கள் என்ன செய்வது என்று கேட்டதால், பரிந்துரை செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்புங்கள், அதைத் தலத் தணிக்கை செய்து அனுப்புகிறோம் என்று அவர்களுக்கு, அந்த ஆணையிலே சொல்லியிருக்கிறோம். ஆக, ஏற்கெனவே நேரடியாகக் கொடுக்கலாம், கொடுக்கக்கூடாது என்று அல்ல. ஆனால், ஒரு பத்திரிகையிலே வந்த செய்தி. இப்போது நம்முடைய சட்டமன்றம் நடைபெறுகிறது, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இங்கேதான் இருக்கிறோம். ஆனால், அதற்குப் பின்னால் நேரடியாக மனுக்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சான்று. இந்த ஆணையைப் பிறப்பிப்பதற்கு முன்னால்





5,466 மனுக்கள் வட சென்னையிலே நிலுவையிலே இருந்தன. ஆனால், ஆணையைப் பிறப்பித்த பின்பு இன்றைக்கு வட சென்னையிலே 46,105 மனுக்களைப் பெற்றிருக்கிறோம். இப்போது 46,105 மனுக்களைப் பெற்றிருக்கிறோம் என்றால், இவ்வளவு மனுக்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டிருக்க முடியாது. நேரடியாகக் கொடுக்கப்படுகின்ற மனுக்கள் பெறுவதன்மூலமாகத்தான் அவ்வளவு பெற முடியும்.

அதேபோன்று, தென் சென்னையைப் பொறுத்தளவுக்கு, ஏற்கெனவே நிலுவையிலே இருந்தவை 6,895 தான். இன்றைக்குப் புதிதாக 29,592 மனுக்களை அதிகமாகப் பெற்றிருக்கிறோம். ஆக, நேரடியாகவும் மனுக்களை இன்றைக்குப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதே சென்னையைப் பொறுத்தளவிற்கு, 14 இடங்களிலே இன்றைக்கு மனுக்களைப் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதேநேரத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத்தோடு, இந்தத் தேதியன்றுதான் மனுக்களைப் பெற வேண்டும் என்றுகூட அல்ல. இது ஒரு continuous processதான், தொடர் நடவடிக்கைதான். எனவே, அவற்றையும் இன்றைக்குத் தொடர்ந்து அந்தந்த அலுவலகங்களிலே பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய இரசீதுகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலேகூட 24 ஆம் தேதிக்குப் பின்னர், அந்தப் பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்துக்கொண்டு, நாங்கள் ஒரு விழிப்புணர்வுக்கு உதவுகின்ற வகையிலே, புதியதாகக்கூடத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். நேரடியாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலே, வட்ட அலுவலகங்களிலே, இங்கே இருக்கிற துணை ஆணையர் அலுவலகங்களிலே அவற்றை எல்லாம் பெற்று ஒப்புகைச் சீட்டு கொடுக்க வேண்டும். ஆக, தலத் தணிக்கை கட்டாயம் செய்து கார்டு வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். காரணம், 20 சதவிகிதம் bogus கார்டுகள் ஏற்கெனவே இருந்துகொண்டிருக்கிறன. ஆனால், ஒரு முறைக்கு இரண்டு முறை தலத் தணிக்கை செய்து வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் போடப்பட்டிருக்கக்கூடிய ஆணை, அந்த முன்னுரிமைக்காக நீங்கள் அனுப்பலாம், அதுவும் கொடுக்கப்படும், நேரடியாகக் கொடுக்கிற மனுக்களையும் பரிசீலனை செய்து, அவர்களுக்கும் உரிய நேரத்திலே கூடிய சீக்கிரத்திலே கார்டுகள் வழங்கப்படும் என்கிற விளக்கங்களை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) என்ன point of order?

*முற்பகல் 10–45*

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இதையொட்டி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கம் சரியானது, ஏற்றுக்கொள்கிறோம். ஏனென்றால், இது குழப்பத்தை ஏற்படுத்துகிற ஒரு நிகழ்ச்சியாக, ஏதோ செய்திகள் பத்திரிகையிலே வந்திருப்பதால், அவற்றை வைத்துக்கொண்டு நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்களே தவிர, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்வதனாலே எந்தவிதமான இடையூறுகளும் வந்துவிடாது. ஆகவே, அது நடைமுறையிலே இருக்க வேண்டும் என்பதுதான் இதிலே இருக்கிற நிலைமை. அதிலே ஒரேயொரு வேண்டுகோள் என்பது, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை என்பது — அந்தப் படிவத்தைத் தயாரிக்கிறபொழுது, பழைய படிவங்களாக இப்பொழுது வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அதிலே ஒரு சரத்து சேர்க்கப்பட வேண்டும். அதாவது, விண்ணப்பம் செய்வதற்கான முயற்சிகளை எடுக்கிறபொழுது, அதிலே நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்வதற்குரிய வாய்ப்புடன்கூடிய ஒரு சரத்தை அதிலே சேர்ப்பதற்குரிய முயற்சியை அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை அரசு செய்யுமா எனவும் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், உறுப்பினர் பாலபாரதி அவர்களும் என்ன கேள்வி கேட்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, கடைசியாக, இரண்டிற்கும் சேர்த்து ஒரேயடியாகப் பதில் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தின் கருத்து,





சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுடைய பரிந்துரைக் கடிதமும் இருக்க வேண்டும் என்று சொன்ன நிபந்தனை குறித்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால், அரசு நிர்வாகத்தினுடைய இதற்கான பல துறைகள், அதிகாரிகள், அலுவலர்கள், ஊழியர்கள் தொடர்ந்து புதிய விண்ணப்பங்களைக் கொடுத்து, மனுக்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. இந்த இடைப்பட்ட நேரத்தில், அரசின் இந்த உத்தரவு வருகிறபொழுது, மக்கள், சட்டமன்ற உறுப்பினர்களையும், எம்.பி.–க்களையும் தேடி மீண்டும் அலைய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, மக்களுடைய சிரமத்திலிருந்து விடுபட, இதை அரசு நிர்வாகமே செய்யலாம், தேவைப்பட்டால் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுடைய பரிந்துரைக் கடிதங்களையும் பயன்படுத்தலாம் என்ற முறையிலேதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கருத்துகளைத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொல்கிறபோதுகூட, இது எம்.எல்.ஏ., எம்.பி.–க்களுக்கான ஒரு அங்கீகாரம் என்றுகூடச் சொன்னார்கள். பரிந்துரைக் கடிதம் கொடுப்பதே ஓர் அங்கீகாரத்தை உருவாக்கிவிடாது. ஆகவே, அரசு நிர்வாகத்தினுடைய தொடர் வேலைகளில் குறைபாடு இருந்தால், எம்.எல்.ஏ.–க்கள், எம்.பி.–க்கள் பரிந்துரை செய்யலாம். 'இங்கு இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது' 'நீங்கள் கொடுங்கள்' என்று பரிந்துரை செய்யலாம். அது அல்லாமல், ஒரு புதிய நடைமுறை என்பது, மக்களுக்குக் குழப்பத்தையும், வீணான அலைச்சலையும் ஏற்படுத்துமே, அதைத் தவிர்க்கலாமே என்ற முறையிலேதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்துகளைக் கூறினோம். இப்போதும் கூறுகிறோம். ஏற்கெனவே இருந்த நடைமுறை தொடரட்டும். கூடுதலாக எம்.எல்.ஏ.–க்கள், எம்.பி.–க்களுடைய பரிந்துரைக் கடிதங்கள் இருந்தால், அவையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அரசு அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். தொடர்ந்து ஏற்கெனவே இருக்கிற process அப்படித்தான் இருக்கிறது. அது continue ஆகிறது.

[திரு. எ.வ. வேலு] [2006 ஆகஸ்ட் 28

நேரடியாக மனுக் கொடுக்கலாம். நேரடியாக அவர்களுக்குரிய தலத் தணிக்கை செய்து, அவர்களுக்கெல்லாம் கார்டு கிடைக்கும். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள், "எங்களிடத்திலே கொடுக்கப்படுகிற மனுக்களை நாங்கள் யாரிடம் அனுப்புவது" என்று கேட்கிறபொழுதுதான், "நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிவிடுங்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலத் தணிக்கை செய்வார்கள்" என்று சொல்லியிருக்கிறோம். ஏனென்று சொன்னால், மக்கள் பிரதிநிதிகளாகிய, அவர்களிடம் அதிகமாகக் கூட்டம் வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், "நாங்கள் எங்கே அனுப்புவது?" என்று கேட்கிறபொழுது அதையும் நாங்கள் சொன்னோம். அதைத்தான் ஆணையிலும் சொல்லியிருக்கிறோம். ஏற்கெனவே இருக்கிற process அப்படியேதான் இருக்கிறது. அதைத்தான் நான் படித்துக் காட்டினேன், அதுதான்.

இரண்டாவது, ஏதோ மக்களாகவே கற்பனை செய்துகொண்டு, சட்டமன்ற உறுப்பினர்களிடம்தான் கொடுக்க வேண்டும்போல் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு, திருவொற்றியூர் பகுதியிலே திடீரென்று ஒரு நாள் கூட்டம் கூடியது. அப்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர் பலராமன் அவர்கள் நான் சட்டமன்றத்திலே இருக்கிறபொழுது என்னிடத்திலே தொடர்புகொண்டார்கள். நான் உடனே என்னுடைய அறைக்குச் சென்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், "அப்படியெல்லாம் இல்லை, உடனே மனுக்களைப் பெறுங்கள்" என்று சொல்லி, உடனே மனுக்களெல்லாம் பெற்றுக்கொள்ளப்பட்டன. சென்னையைப் பொறுத்தவரைக்கும் 14 இடங்களிலே மனுக்களை நேரடியாகப் பெறுகிறார்கள். அதைத் தெளிவுபடுத்துவதற்கு 25 ஆம் தேதி ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறோம். 25 ஆம் தேதி ஆணையிலே, ஏற்கெனவே இருக்கிற process எல்லாம் இருக்கிறது என்று சொல்லி, நேரடியாக அட்டை கோருகிற, விண்ணப்பிக்கிற மனுதாரர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, விசாரணைக்குப் பின், தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கு மட்டும் புதிய குடும்ப அட்டைகளை அச்சடித்து வழங்கப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கிறோம். ஆகவே, உங்கள் அறிக்கை என்பதை நாங்கள் ஒரு விழிப்புணர்வாக எடுத்துக்கொண்டு, 25 ஆம் தேதிகூட மறுபடியும் ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களும் பரிந்துரை செய்து, அதை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பலாம். அவர்களுக்கும் கார்டு கிடைக்கும்.



2006 ஆகஸ்ட் 28] [திரு. எ.வ. வேலு]

நேரடியாக மனுச் செய்தவர்களுக்கும், தலத் தணிக்கை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதன்மூலமாக அட்டைகள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) என்ன விஷயம்? இது தொடர்பானதா? இந்த subject தானா? (குறுக்கீடு) சரி.

## (ஆ) கடலூர் மாவட்டம், இடி தாக்கி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் இடிதாங்கிகள் அமைத்தல்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களில், கடலூர் மாவட்டத்தில் மட்டும் இடி தாக்கி ஐந்து பேருக்கு மேல் இறந்திருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த ஒரு தகவல், அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில், இடியே விழாத அளவிற்கு, அந்த நாட்டினுடைய அரசாங்கம், இடி தாங்குகின்ற கருவிகளைப் பல்வேறு பகுதிகளில் பொருத்தி, அப்படி இடி ஏற்படுகின்றபோது, இடியினுடைய வேகத்தை, அதனுடைய பாதிப்பை அவை உள்வாங்கிக் கொண்டு, அந்த மக்களுக்கு உயிர்ச் சேதங்கள் இல்லாத ஒரு நிலை அங்கெல்லாம் இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழகத்தில், குறிப்பாக மழைக் காலங்களில், பல்வேறு மாவட்டங்களில் இடி ஏற்படுகின்றபோது, கூலிகள், விவசாயிகள், ஏழை மக்கள், தங்களின் வயலைச் சார்ந்த வேலைகளைச் செய்கின்றபோதும், சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போதும், மரங்களின் கீழ் ஒதுங்குகின்றபோதும் இடி விழுந்து, மிகப் பெரிய உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. ஆதலால், மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, இதுபோன்று இடிச் சம்பவங்கள் ஏற்படுகின்றபோது, அந்த விலை மதிக்க முடியாத உயிர்களைப் பாதுகாக்கின்ற வகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மேலை நாடுகளில் இருப்பதுபோன்ற அனைத்துப் பகுதிகளுக்குமான அந்த இடிதாங்கிகளை நிறுவி, உயிர்ச் சேதங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஒரு வாரத்தில் மட்டும் கடலூர் மாவட்டத்தில் ஐந்து உயிர்கள் பலியாகியிருக்கின்றன. உயிரிழந்த அந்தக் ஐந்து குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதி வழங்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதல்வர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடி விழுந்ததன் காரணமாக உயிரிழந்த மக்களுடைய குடும்பங்களுக்குக் குடும்ப நிதி வழங்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார். அது பற்றிப் பரிசீலித்து, வழங்குவதா, இல்லையா என்பதை அல்ல, எவ்வளவு வழங்குவது என்பதைப் பரிசீலித்து, ஆவன செய்யப்படும். இடி தாங்குவதற்கு என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கேட்டார். நானே ஒரு இடிதாங்கி, என்ன செய்வது? (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சுதர்சனம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)*

## 3. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் தனித் தொகுதிகளாகவே தொடர முடிவு—பாராட்டும், நன்றியும்

**திரு. டி. சுதர்சனம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னவுடனே கேட்க வேண்டுமென்று அவசியமில்லை. முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) பொறுங்கள். (குறுக்கீடு), நீங்கள் கட்டாயப்படுத்தி அனுமதி வாங்க முடியாது. முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) முடியாது. சொல்லுங்கள், திரு. சுதர்சனம். (குறுக்கீடு) நான் கொடுக்கிற நேரம்தான் கொடுப்பேனே தவிர, இப்படியெல்லாம் கட்டாயப்படுத்தினாலெல்லாம் என்னிடம் நடக்காது. (குறுக்கீடு). திரு. சுதர்சனம், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னாலே, இந்த அவையிலே, ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கை இங்கே நடைபெற்றது. அப்போது



விவாதத்திலே தமிழகத்திலே பத்தாண்டு காலமாகத் தேர்தலே நடைபெறாமலிருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய நான்கு கிராமங்களிலே *ஆதி திராவிட மக்களுக்கு உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அதனாலே, நடக்கவிருக்கின்ற ஊராட்சி மன்றத் தேர்தலில் அந்தக் கிராமங்களை மீண்டும் சுழற்சி முறையிலே, *ஆதி திராவிட மக்களுக்கே ஒதுக்கித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை, எங்களுடைய கட்சியினுடைய துணைத் தலைவர் திருமதி டி. யசோதா அவர்கள் இங்கே வைத்தார்கள். இங்கே பேசிய மற்ற கட்சி உறுப்பினர்களும் அதே வேண்டுகோளை இங்கே வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலே அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஒப்புதலின் காரணமாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அவர்களுக்கு உரிமை வழங்கியிருக்கிறார்கள். அந்த உரிமை காப்பாற்றப்பட வேண்டுமென்று சொன்னால்--நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை இதுபோன்ற சமூகக் கொடுமைகள் பத்தாண்டு காலம் இங்கே நடைபெற்றுக்கொண்டிருந்திருக்கின்றன. அதை எப்படியும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீவிரமாகச் சிந்தித்து, அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதித்து, இந்த நான்கு ஊராட்சி மன்றங்களும் நிச்சயமாகச் சுழற்சி முறையிலே வராமல் *ஆதி திராவிட மக்களுக்கு, அந்த நான்கு ஊராட்சி மன்றங்களையும் ஒதுக்க ஏற்பாடு செய்ததற்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நல்ல நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரப்படும் இட ஒதுக்கீடு என்பது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகை அல்ல. அது இந்த நாட்டின் அரசியல் சாசனத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை. அந்த உரிமையைப் பாதுகாத்துத் தர வேண்டியது அரசின் கடமை. அந்த உரிமையைப் பாதுகாத்துத் தாவில்லையென்றால், இந்த நாட்டின் அரசியல் சட்டம் தோற்றுவிட்டது என்று பொருள். இன்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தக் கடமையை நிறைவேற்றி, நமது அரசியல் சாசனச் சட்டத்தின பெருமையைக் காப்பாற்றியிருக்கின்றார்கள். ஒட்டுமொத்த *ஆதி திராவிட மக்கள்-- இந்தத் தேர்தல் நடைபெறாத காரணத்தால், நான்கு கிராமங்களிலும்,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

நம்முடைய மக்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்க முடியவில்லையே என்று, தமிழகத்திலே இருக்கின்ற ஒரு கோடி *ஆதி திராவிட மக்கள் மனம் புண்பட்டு இருந்தார்கள். அந்தப் புண்ணுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு மருந்து போட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மருந்து போட்டது மட்டுமல்லாமல், இங்கேயிருக்கின்ற அத்தனை கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் அந்தக் கிராமங்களுக்கு சென்று, அவர்களோடு பேசி, அதற்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை அமைச்சரவை நிறைவேற்றி இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

*முற்பகல் 10–55*

பஞ்சாயத்து ராஜ் சட்டம் அமரர் ராஜீவ் காந்தி அவர்களாலே கொண்டு வரப்பட்டது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். அத்தனை மக்களும் இந்த நாட்டிலே பிறந்தவர்கள். ஒன்றாக இருக்க வேண்டும். ஒரு மனிதனுக்கு ஆபத்து ஏற்பட்டால் அல்லது ஏதாவது விபத்து ஏற்பட்டால் அவருக்கு இரத்தம் செலுத்த வேண்டும் என்ற நிலை வரும்போது, அது உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவருடைய இரத்தம்தானா அல்லது *ஆதி திராவிட மக்களுடைய இரத்தமா என்று பார்ப்பது இல்லை. அது A குரூப் இரத்தமா, B குரூப் இரத்தமா அல்லது O குரூப் இரத்தமா என்றுதான் பார்க்கிறார்களே தவிர, இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த இரத்தத்தைக் கொடுக்க வேண்டுமென்ற நிலை இன்றைக்கு இல்லை. அதனாலே, சமூக ஒற்றுமை பாதுகாக்கப்பட வேண்டும். சமூக நீதி காப்பாற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தில், டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த நான்கு பஞ்சாயத்துக்கள் திரும்பவும் ஆதி திராவிட மக்களுக்கே ஒதுக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக மீண்டும் ஒரு முறை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கேயிருக்கின்ற அத்தனை கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் அந்தக் கிராமங்களுக்குப் போய், அவர்களைத் தனித்தனியாகச் சந்தித்து, இந்தத் தேர்தலை சுமுகமாக நடத்தித் தர வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். மீண்டும் ஒரு முறை உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடு) உட்காருங்கள். திருமதி யசோதா, பேசுங்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையினுடைய மானியத்தின்மீது பேசும்போது பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய நான்கு பஞ்சாயத்துக்களிலும் பஞ்சாயத்துத் தலைவர்கள் சுழற்சி முறையில் மாற்றப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்கின்ற அதிர்ச்சியான செய்தியைக் கேள்விப்பட்டு, உண்மையிலேயே நாங்கள் மிகவும் வேதனையடைந்தோம். அதன் பிரதிபலிப்பாகத்தான் இந்த மாமன்றத்திலே அதை எடுத்து வைக்கின்றபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இல்லையே என்கின்ற வருத்தம் எனக்கு இருந்தது. ஆனால், அவர்களிடத்திலே நான் நேராகக் கேட்டபோது அவர் சொன்னார், நான் அறையிலேயிருந்துகொண்டு, நீங்கள் பேசியது அத்தனையையும் முழுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தேன் என்று சொன்னார்கள். அதனுடைய பிரதிபலிப்பாக—என்னுடைய உணர்வுகளை மட்டும் நான் இங்கே வெளிப்படுத்தவில்லை. சகோதர உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் இந்த நான்கு பஞ்சாயத்துக்களிலே நிச்சயமாகச் சுழற்சி முறையில் மாற்றக்கூடாது, ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்தான் வர வேண்டும், நீங்கள் இந்த நாட்டினுடைய முதல் மந்திரியாக இருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலேயாவது ஒரு ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர் அந்த நாற்காலியிலே உட்கார வேண்டும், அதற்கு வேண்டிய அவசரமான, எந்தவிதமான சட்டத்தையும் நீங்கள் கொண்டு வருவதற்கு முன் வர வேண்டுமென்ற எங்களுடைய கோரிக்கையை வைத்தோம், தாய் உள்ளத்தோடு, தட்டினால் திறக்கப்படும் என்கின்ற வேதவாக்கை ஒப்புக்கொண்டு, இன்றைக்கு அதில் மாற்றமில்லை, அது தொடரும் என்கின்ற அந்த இனிய செய்தியை முதல்வர் அறிவித்ததைக் கேட்டு, நான் மட்டுமல்ல, என் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அத்தனை பேரும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பிலே எங்கள் கட்சித் தலைவர் நன்றியைத் தெரிவித்திருந்தாலுங்கூட, நானும் அதிலே என்னை இணைத்துக்கொள்கின்றேன்.

அதே நேரத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கின்ற காரணத்தால், ஐயா 33–வது அரசாணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, 44–வது அரசாணையை நிறைவேற்றி, இன்றைக்குக் கொடுக்கப்படாமல்

இருக்கின்ற ஆதி திராவிட மக்களுடைய அந்தப் பொறுப்புக்களை, பதவிகளை உடனடியாக நிறைவேற்றித் தாருங்கள் என்ற கோரிக்கையையும் உங்கள் முன் வைத்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சிகளிலே, கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற இரண்டு உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களிலும், அந்த ஊராட்சிகளிலுள்ள தலைவர் தேர்தல் நடைபெறப் பல முயற்சிகள் எடுத்தும், அங்கே மனுக்களைத் தாக்கல் செய்யாத நிலை இருந்து, கடந்த முறை பாப்பாப்பட்டியிலே மட்டும் தேர்தல் நடைபெற்று, அந்தத் தலைவர் பதவியேற்றவுடனேயே, மறு நிமிடமே தன்னுடைய பதவியைத் துறப்பதாக அங்கேயே அவர் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார். அந்த நான்கு ஊராட்சிகளிலும் இதுவரையிலே உள்ளாட்சி அமைப்புகளுக்கான பிரதிநிதிகளாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வர முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது.

இங்கே நம்முடைய அரசாங்கம், நேற்றைய முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்திலே ஒரு நல்ல முடிவை எடுத்து, சுழற்சி முறை வருகின்ற சமயத்திலேகூட, மீண்டும் அந்த நான்கு ஊராட்சிகளிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஊராட்சி மன்றத் தலைவர்களாக வர வேண்டுமென்று நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல எண்ணத்திலே அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். அதற்காகப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எங்களுடைய நன்றியை இந்தச் சமயத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–00*

அந்த நான்கு ஊராட்சிகளிலும், அங்குள்ள மக்களுக்கு இருக்கிற பிரச்சினைகள் என்ன; அங்கிருக்கிற மக்களுக்கு விட்டுக் கொடுக்கின்ற தன்மை இல்லையா அல்லது அங்கிருக்கிற மக்களுக்கு சமூகப் பிரச்சினை ஏதேனும் இருக்கிறதா; அதை எப்படித் தீர்க்க வேண்டுமென்பதற்கான ஒரு நிரந்தர முடிவு ஏற்படுவதற்கு நம்முடைய அரசாங்கம் இந்தத் தேர்தலுக்கு முன்பாகவே முடிவு எடுத்து, அந்த மக்களுக்கு முதலிலே புரிதலை ஏற்படுத்தி, அங்கிருக்கிற தாழ்த்தப்பட்ட



மக்களுக்கு இருக்கிற அச்சத்தையும் போக்குவதற்கு முன்வர வேண்டும். வரவிருக்கிற உள்ளாட்சித் தேர்தலிலே, இந்த நான்கு ஊராட்சிகளிலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த தலைவர்கள் வருவதற்குச் சரியான ஏற்பாட்டை நம்முடைய தமிழக அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அமைச்சரவைக் கூட்டத்திலே எடுத்த முடிவை வரவேற்று, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்ட ரீதியாக வழங்கப்பட்டிருக்கிற உரிமைகளைக்கூட நடைமுறைப்படுத்த அனுமதிக்காமல், கடந்த 10 ஆண்டுகளாக ஜாதி ஆதிக்கச் சக்திகளால் இந்த நான்கு ஊராட்சி மன்றங்களில் தேர்தல் என்பது பெயருக்கு நடந்தாலும், அந்தத் தேர்தலில் ஒரு பகுதியினர் போட்டியிடவே முடியாது; அதையும் மீறிப் போட்டியிட்டுத் தேர்தலில் வெற்றி பெற்றால், வெற்றி பெற்ற அடுத்த நிமிடமே இராஜினாமாச் செய்யக்கூடிய அளவிற்கு ஒரு கடுமையான நிர்ப்பந்தம் ஆதிக்க சக்திகளால் செலுத்தப்பட்டு, கடந்த 10 ஆண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த இட ஒதுக்கீட்டின்படியான அந்த உரிமையைத் தாழ்த்தப்பட்ட மக்களாலே இந்த நான்கு ஊராட்சிகளிலும் பயன்படுத்த முடியவில்லை.

இங்கே ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சி உறுப்பினர்களாலும், இந்த நான்கு ஊராட்சிகளுக்கும் அந்தச் சுழற்சி முறை பொருந்தக்கூடாது; தாழ்த்தப்பட்டவர்கள் தொடர்ந்து 10 ஆண்டுகள் அந்தப் பதவியில் இருந்த பிறகுதான், சுழற்சி முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற வகையில் கோரிக்கை எழுப்பப்பட்டது. நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தன்னுடைய அமைச்சரவையிலே, உண்மையிலேயே துணிச்சலோடு மிகச் சிறந்த ஒரு முடிவை எடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வழிவகை செய்து கொடுத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத் தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, அரசு எடுத்திருக்கிற இந்த முடிவு, இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலின்மூலம் உறுதியாக நடைமுறையில் அமலாக்கப்படுவதற்கு, அந்த நான்கு ஊராட்சிகளிலும் தாழ்த்தப்பட்டவர்கள் இந்த முறை வெற்றி பெற்று, தொடர்ந்து பணியாற்றுவதற்குரிய ஒரு சூழலை உருவாக்குவதற்கும் அரசு உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதற்கு அனைத்துக் கட்சிகளும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக அதற்குத் துணை நிற்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.*

*முற்பகல் 11–05*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த அவையிலே வைத்த கோரிக்கைகளை ஏற்று, உணர்வுகளைப் புரிந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல தீர்வினை ஏற்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக, இங்கே உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை நடைபெற்றபொழுது, இந்தக் கோரிக்கையை இந்த அவையிலே இந்த ஆண்டு முதன்முதலாக வைத்தவன் நான். இந்த நான்கு ஊராட்சிகளையும் சுழற்சி முறையிலே மாறுதல் செய்யக்கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இங்கே வலியுறுத்திப் பேசப்பட்டது.

குறிப்பாக, இந்தக் கோரிக்கையில் பேசுகிறபொழுது, தொடந்து சென்ற ஆட்சிக் காலத்திலே—இதில் குற்றம் சொல்வதற்குரிய விஷயங்கள் இல்லை. காரணம், இங்கே முன்னாள் அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள்—தொடர்ந்து 5 ஆண்டு காலத்திலே பேசப்பட்டு வந்த செய்தி இது. இந்த நான்கு ஊராட்சிகளுக்கும் தேர்தல் நடத்துவதற்கான முறைகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்னாள் முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்த அவையிலே தொடர்ந்து வைத்து, அதன்மீது ஒரு தீர்வு காணுவதற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நான் பேசினேன். அப்பொழுது சென்ற ஆட்சிக் காலத்திலே அந்த முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒரு வாக்குறுதியை அளித்தார்கள். குறிப்பாக, இன்றைய எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கிற முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும்,





வேறு சிலரும் குழுவாகச் சென்று, அந்தக் கிராமங்களிலே ஆய்வுகளை மேற்கொண்டு, கருத்தை அறிந்து, அதற்குரிய தீர்வுகள் காணப்படும் என்று இந்த அவையிலே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தக் குழுவினரும் ஒரு முறை, இரு முறை அங்கே ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டார்கள். ஆனால், அதற்குரிய அறிக்கை இந்த அவையிலே வைக்கப்படவில்லை. அதைத் திரும்பவும் நான் சென்ற ஆண்டு இந்த அவையிலே வலியுறுத்திப் பேசி, அமைச்சர் பெருமக்களெல்லாம் ஆய்வு செய்தார்களே, அந்த அறிக்கை இந்த அவையிலே வைக்கப்படவில்லையே, முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய பதில் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டபொழுது, இன்றைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்தான் அதற்குரிய பதிலை இந்த அவையிலே அளித்தார்கள். ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறோம், தீர்வு காண்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்று மட்டும்தான் பதில் சொல்லப்பட்டது. ஆனால், தீர்வு காண்பதற்குரிய முயற்சி சென்ற ஆட்சியில் எடுக்கப்படவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை.

இதிலே கூடுதல், குறைவான செய்திகள் இல்லை. ஆகவே, இந்த முயற்சிகளைப் பற்றி இந்த அவையிலே இந்த ஆண்டு சொல்லப்பட்டவுடன், நான் பேசுகிறபொழுதே குறிப்பிட்டுச் சொன்னேன். தந்தை பெரியார் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா ஆண்ட மண், சமூக நீதிக் காவலராக வாழ்ந்துகொண்டு, இப்பொழுது ஆண்டுகொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களே, நீங்கள் ஆளுகிற இந்தச் சந்தர்ப்பத்தில்தான், *(மேசையைத் தட்டும் ஒலி)* அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய விடுதலைக்காகக் குரல் கொடுக்கிற நீங்கள், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய பாதிப்புகள் என்றைக்கெல்லாம் வருகின்றனவோ, அவற்றை அந்தக் கணமே எதிர்த்து, எதைப் பற்றியும் சிந்திக்காமல், பின் விளைவுகள் வருமா, வருத்தங்கள் வருமா என்றுகூடப் பார்க்காமல், தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்கு ஏற்படுகிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, அவற்றைக் களைவதற்கான முயற்சிகளை எடுக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்ற அந்த வேண்டுகோளை வைத்திருக்கிறேன். அதை மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் என்ற அந்த நான்கு கிராமங்களுக்குரிய தேர்தல் பழைய முறையிலேயே நடைபெறும் என்று சொல்லியிருப்பது என்பது, இந்திய நாட்டிலேயே, நமது தமிழகம் சமூக நீதியை

நிலைநாட்டக்கூடிய பல போராட்டங்களைக் கண்டு, வெற்றி பெற்றிருக்கிற மாநிலம் என்ற முறையிலும், இட ஒதுக்கீட்டு முறையைப் பெற்று, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி எடுக்கிற மாநிலம், அதற்குரிய தலைவர் கலைஞர் என்ற முறையிலும் இதைச் சிறப்பாக நிறைவேற்றி இருக்கிறார்.

ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இதிலே கம்யூனிஸ்டுகள், நாங்கள் ஜாதி, மத பேதங்களைப் பேசிய வரலாறுகள் இல்லை. கிட்டத்தட்ட 1997 ஆம் ஆண்டு முதல் இந்தச் செய்திகளை இந்தச் சபையிலே நான் பதிவு செய்து வருகிறேன். 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரையிலுமான அந்த 5 ஆண்டு காலத்திலும் 5 முறை இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்திருக்கிறேன். குறிப்புகளை எடுத்துப் பார்க்கலாம். என்னுடைய சமூகத்தைச் சொல்ல முடியாது. குறிப்பாக, என்னுடைய கிராமத்தினுடைய நிலைமைகளைக்கூட நான் இதிலே சொல்லி இருக்கிறேன். 90 சதவிகிதம் *ஆதி திராவிட மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற அந்தக் கிராமத்தில், எங்களுடைய கிராமத்திலே இரண்டே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்திலே இருக்கிறவர்கள், 30 ஆண்டு காலமாக நாங்கள் ஊராட்சி மன்றத் தலைவராக இருப்பதற்குரிய வாய்ப்பை அந்த மக்கள் வழங்குகிறார்கள். ஆனால், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளுக்கு சுழற்சி முறை வழங்கப்படவில்லை என்று சொன்னால், அந்த சமூக நீதி மறுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறேன். இப்பொழுதும் அந்த மனக் குறைகள், அந்த எதிர்பார்ப்புக்கள், அந்த ஏக்கங்களையெல்லாம் தீர்ப்பதற்குரிய முயற்சியை எடுப்பது டாக்டர் கலைஞர் அவர்களால் மட்டுமே முடியும் என்பதை மீண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) நிரூபித்துக் காட்டி இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலான வாழ்த்துதல்களை, பாராட்டுதல்களை, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை அமைச்சரவைக் கூட்டத்திலே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கிய தொகுதிகளில் மீண்டும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அவர்களே நிற்பார்கள் என்று அறிவிப்புச் செய்த, வாழும் பெரியார் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சித் தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்கள், மற்ற கட்சித் தலைவர்களெல்லாம் மனமார, நெஞ்சார முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் சார்ந்து இருக்கிற கட்சியின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சுதர்சனம் அவர்கள் ** என்று குறிப்பிட்டார். இந்த ** என்ற வார்த்தை புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களே ஏற்றுக்கொள்ளாத வார்த்தை. நம்முடைய சமூக நீதிக் காவலர் மாண்புமிகு முதல்வரும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று நான் கருதுகிறேன். இந்த ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து, ஆதி திராவிட மக்கள், அல்லது பட்டியலின மக்கள் என்று சேர்க்கும்படி வேண்டுகோள் விடுக்கிறேன். மீண்டும் ஒரு முறை, மாண்புமிகு வாழும் பெரியார் முதலமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) மைக் கொடுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பாப்பாப்பட்டி ஊராட்சி, கீரிப்பட்டி ஊராட்சி, நாட்டார்மங்கலம் ஊராட்சி ஆகியவையும், விருதுநகர் மாவட்டத்தில் கொட்டக்காச்சியேந்தல் என்ற ஊராட்சியும், கடந்த 10 ஆண்டுகளாக ஆதி திராவிடர்களுக்குரிய இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டு, 1996–லிருந்து 2001 வரை 5 ஆண்டுகளிலும் அங்கு யாரும் வேட்பு மனுத் தாக்கல் செய்யவில்லை, தேர்தலும் நடைபெறவில்லை என்ற ஒரு சூழ்நிலை கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து 5 ஆண்டு காலம் அந்த நிலைதான் அங்கு நீடித்து வந்தது.

2001–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அந்தப் பகுதிகளில் இருக்கின்ற அந்த நான்கு ஊராட்சி மன்றங்களிலும் ஆதி திராவிட இனப் பெருமக்களுடைய பிரதிநிதித்துவம் இருக்க

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், அரசு அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, அங்கிருக்கின்ற அத்தனை தாழ்த்தப்பட்ட மக்களையும் சந்தித்துப் பேசி, 2002, 2003, 2004 ஆகிய காலக்கட்டங்களில் வேட்பு மனுக்கள் பெறப்பட்டு, தேர்தல் நடைபெற்று, அவர்கள் உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டிய, செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே இருந்ததை மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் இங்கே குறிப்பிட்டதுபோல, இந்த மாமன்றத்தில் அனைத்து தாழ்த்தப்பட்ட கட்சி உறுப்பினர்களும் பேசி, மீண்டும் அதற்கான விளக்கங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லி, என்னையும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் அந்தப் பகுதிக்கு நேரடியாக அனுப்பி, (குறுக்கீடு) முன்னாள் ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் அந்த நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் நேரடியாக அனுப்பி, அந்தப் பகுதிகளிலே மக்களைச் சந்தித்து, ஓர் இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்துவார்கள் என்பதை அன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள்.

அதன் அடிப்படையில் நானும், முன்னாள் ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும், அந்த நான்கு ஊராட்சி மன்றங்களுக்கும் சென்று, நேரடியாக உட்கார்ந்து பேசி, அந்த நான்கு ஊராட்சி மன்றங்களிலும் இருக்கின்ற பிரதிநிதிகளும், அனைத்து தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டார்கள். தேர்தல் நடைபெறும், உறுதியாக நாங்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்வோம், உறுதியாக நாங்கள் பதவியேற்று, நாங்கள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்வோம் என்று உறுதி அளித்தார்கள்; நாங்களும் அதை ஏற்றுக்கொண்டு வந்ததற்குப் பின்னால், வேட்பு மனுக்கள் வாங்கப்பட்டன, தேர்தல் நடந்தது. அவர்கள் மீண்டும் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால், உடனடியாக இராஜினாமாச் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலைதான் அங்கே ஏற்பட்டது என்ற நிலை ஏற்பட்டு, இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிற நேரத்தில், சென்ற 12-வது சட்டமன்றத்தில் நான் அமைச்சராக இருந்த நேரத்தில், பதிலாக, இந்த விளக்கத்தினை நான் இங்கே அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது.

உதாரணத்திற்கு, கொட்டக்காச்சியேந்தல் கிராமத்திற்கு நாங்கள் சென்றபோது, அங்கு 9 வீடுகள்--காலனி வீடுகள் இருந்தன. அதில், மொத்தமே 16 வாக்குகள்தான் அங்கு இருக்கின்ற ஒரு சூழ்நிலை. அந்த 16 பேரும் பக்கத்தில் இருக்கின்ற செங்கல் சூளைக்கு வேலைக்குச் சென்றிருந்தார்கள். நாங்கள் காலையிலே போய், அவர்களை மீண்டும்



மதுரைப் பக்கத்திலிருந்து வரவழைத்தோம். அந்த 16 பேர்களும் மாலை வந்தார்கள். அதுவரை நாங்கள் அங்கே தங்கியிருந்து, அந்த 16 பேர்களையும் சந்தித்து, அவர்களிடம் நல்ல ஆலோசனைகளையெல்லாம் சொல்லி, அவர்களும் ஏற்றுக்கொண்டு, இவ்வளவு நடவடிக்கைகளும் கடந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், அந்த நான்கு ஊராட்சி மன்றங்களிலும் ஆதி திராவிட மக்களுடைய பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்ற முழு முயற்சி செய்யப்பட்டது. தேர்தல் நடந்தது, வேட்பு மனுக்கள் வாங்கப்பட்டிருக்கின்றன, தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால், உடனடியாக இராஜினாமாச் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலைதான் இருந்தது. மீண்டும் இந்தப் பிரச்சினை இன்றைக்கு இருக்கின்ற அரசினுடைய பொறுப்பில் இருக்கின்றது. நீங்களும் அதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு, அங்கு ஆதி திராவிட இனப் பெருமக்களுடைய பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு, கடந்த காலத்தில் நாங்கள் செய்த முயற்சிகளை நீங்களும் செய்ய வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் சார்பாக... (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை, குறிப்பாகவும், சிறப்பாகவும், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களில் நடைபெறுகின்ற தேர்தல் நம்முடைய சமுதாயப் புரட்சிக் கண்ணோட்டத்தோடுதான் நடைபெற வேண்டும் என்று எடுத்த முடிவை இங்கே உள்ள எல்லாக் கட்சிகளும் வரவேற்று, அதற்காகப் பாராட்டி, நன்றியினைத் தெரிவித்தமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசும்பொழுது, நாங்கள் இப்படி எல்லாம் முயற்சிகள் மேற்கொண்டோம், இன்ன விளைவுகள் ஏற்பட்டன, இப்பொழுது மீண்டும் முனைப்போடு காரியம் ஆற்ற வந்திருக்கின்றீர்கள், நீங்களும் இன்னின்ன முயற்சிகளை மேற்கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டார்கள். இதிலே "நீங்களும்", "நாங்களும்" என்ற வார்த்தைக்கு இடமேயில்லை.

"நாம்" இதைச் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்தப் பிரச்சினை எல்லோருக்கும் உரிய சமுதாயப் பிரச்சினை. 'உள்ளத்தால் ஒருவரே மற்றும் உடலினால் பலராய்க் காண்பார்' என்று புரட்சிக் கவிஞர் கூறியதைப்போல், நாம் உடல்களால் பலராக இருந்தாலுங்கூட, சமுதாய ஒற்றுமை, சமூக அநீதியைத் துடைத்தல் என்ற இந்தக் காரியத்தில் ஒரே உருவமாக இருந்து, இந்தப் பணியை ஆற்ற வேண்டும். அமைச்சரவைக் கூட்டத்திலே முடிவெடுத்துவிட்டோம். இங்கே பாராட்டுக்கள், நன்றிகள் குவிக்கப்பட்டுவிட்டன. அடுத்து, அங்கே தேர்தல் நடைபெற்றது, இந்த நான்கு தலைவர்களும் அங்கு வெற்றிபெற்று வந்தார்கள், அந்தத் தலைவர்களை அழைத்துச் சென்னையிலே நம்முடைய சர்வ கட்சி சார்பில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தினோம் என்ற அளவிற்கு, அது நிறைவுற வேண்டும்; அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லாக் கட்சித் தலைவர்களையும், இங்கே நன்றியுரை கூறியவர்களுக்கும், பாராட்டுரை கூறியவர்களுக்கும் அழைப்பு விடுத்து, ஒத்துழைக்க வேண்டும் என்று கூறி, இந்த அளவில் அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். எல்லோரும் நன்றி சொல்லி இருக்கிறீர்கள். பேரவையின் சார்பாகவும், பேரவையின் தலைவர் என்ற முறையில் எனது சார்பாகவும் தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். சமூக நீதியின்பால் அக்கறை கொண்ட மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், தாழ்த்தப்பட்டோருக்கான உரிமைகளை நிலைநாட்ட வேண்டுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சிகள் சுழற்சி முறையைப் பின்பற்றாமல், தனித் தொகுதிகளாகத் தொடர்ந்து நீடித்திருக்கும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு முதல்வருக்கு என் சார்பிலும், பேரவையின் சார்பிலும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 2. தகவல் கோரல் – தொடர்ச்சி

### (இ) பொள்ளாச்சி தொகுதி, சாலை விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்ினருக்கு நிவாரணம்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. பொள்ளாச்சி ஜெயராமன், சொல்லுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியிலே நடைபெற்ற மிகக் கொடுமையான சோகச் சம்பவம், கடந்த 16–8–2006 ஆம் நாளன்று விவசாயத் தொழிலாளர்கள் 25 பேர் ஒரு மினி ஆட்டோ மூலமாக இராமச்சந்திராபுரம் என்கிற கிராமத்திலேயிருந்து, அருகிலிருக்கும் ஒரு கிராமத்திற்கு விவசாயத் தொழில் செய்வதற்காகச் சென்றார்கள். சென்றவர்கள், எதிராக வந்த அரசுப் பேருந்து மோதியதன் விளைவாக 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்திருக்கிறார்கள். மீதமுள்ள 23 பேரைக் கோவை, பொள்ளாச்சி மருத்துவமனைகளுக்கு எடுத்துச் சென்று, ஆபத்தான நிலையிலிருந்த 8 பேர் கோவை, அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். அதிலே ஒருவருக்கு ஒரு கை வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒருவருக்கும் ஒரு கையும், காலும் வெட்டியெடுக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. 2, 3 பேர்கள் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலே 15 பேர் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று, அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப் பாதிக்கப்பட்ட 25 விவசாயத் தொழிலாளர்களில் இறந்து போன இரண்டு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த குடும்பங்கள், கை கால்கள் வெட்டி எடுக்கப்பட்டவர்கள், கை, கால்கள் செயலிழந்த நிலையிலே உள்ளவர்களுக்கு, விபத்து நடந்து 11 நாட்களாகியும், இன்று வரையில் அரசின் சார்பாக எவ்வகையான உதவியும் செய்யப்படவில்லை. அவர்களுடைய ஈமக்கிரியையை நடத்துவதற்குக்கூட வட்டாட்சியர் அலுவலகத்திலேயிருந்து ஒரு ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்கூட உதவித் தொகை வழங்கப்படவில்லை என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு ஈர்த்து, நம்முடைய தமிழக அரசு, நம்முடைய முதலமைச்சர், எங்களுடைய பொள்ளாச்சிப் பகுதியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு, உயிரிழந்தவர்களுக்கு, கை, கால்களை இழந்தவர்களுக்கு, வெட்டி எடுக்கப்பட்டவர்களுக்குத் தக்க உதவிகளை வழங்க வேண்டுமென்று, நிவாரண உதவிகளை வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொள்ளாச்சி உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறியது உண்மையாக இருக்குமேயானால், அப்படி இதுவரையிலே உதவித் தொகை வழங்கப்படாமல் இருக்குமேயானால், காரணம் கேட்டு, நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு வழங்க வேண்டிய தொகையும் வழங்கப்படும். எனக்கு இதிலே சின்ன ஒரு ஆதங்கம். அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக எல்லாம் இருந்தவர்கள். 10 நாள், 11 நாளாக வழங்கப்படாமல் இருந்ததை ஒரு தந்திமூலம் அவர் தெரிவித்திருந்தால், உடனடியாக நாங்கள் இயங்கி இருப்போம் என்பதையும், அப்படித் தந்திமூலம் தெரிவிக்காமல், இந்த அவையிலே தெரிவித்த காரணத்தால், அதைச் செய்ய முடியாது என்றில்லாமல், எங்கே தெரிவித்தாலும், செய்தி கேள்விப்பட்டவுடன் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதிலே இந்த அரசு தயங்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தொலைபேசிமூலமாகவும், வட்டாட்சியரிடத்திலே தொலைபேசிமூலமாகவும் 16 ஆம் தேதியே, தெரியப்படுத்தப்பட்டு, நானும் மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். மாவட்ட வருவாய் அலுவலர்—D.R.O. அவர்களும் மருத்துவமனைக்கு வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயராமன், சொல்லியாகிவிட்டது அல்லவா? உங்கள் கோரிக்கை நிறைவேறிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) முதல்வர் பதில் சொன்னதற்குப் பிறகு, திரும்ப அதில் என்ன கேள்வி? உட்காருங்கள்.



## 4. அறிவிப்பு

### கட்சித் தலைவர்கள் தவறான தகவல்களைப் பேட்டியாக அளிப்பதைத் தவிர்த்தல் – பேரவைத் தலைவர் ஆணை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையில் நடைபெறும் விவாதங்களையும், இதர நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துகிற மிக முக்கியப் பொறுப்பு பேரவைத் தலைவர் என்ற முறையில் எனக்கு உள்ளது. அவையில் நடைபெறும் விவாதங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையைக் கருத்தில்கொள்ளாமல், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையைச் சிறப்பாக ஆற்றுவதற்கு அதிகமான நேரம் ஒதுக்கப்பட்டு வருகிறது. இன்னும் சொல்லப் போனால், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, அந்த நேரம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு ஒதுக்கப்படுகிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

இச்சட்டமன்றத்தில் உள்ள கட்சித் தலைவர்கள் சிலர், பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிக்கும்போது, பேரவையில் மக்கள் பிரச்சினைகள் குறித்துப் பேச அனுமதி மறுக்கப்படுவதாகப் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்துள்ளனர். ஆனால், அவைக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த திரு. விஜயகாந்துக்கு ஆளுநர் உரை விவாதம் நடைபெற்றபோது, 29–5–2006 அன்று 8 நிமிடமும், நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதம் நடைபெற்றபோது, 28–7–2006 அன்று 19 நிமிடமும், மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் 4–8–2006 அன்று 17 நிமிடமும், 11–8–2006 அன்று 14 நிமிடமும், 17–8–2006 அன்று 5 நிமிடமும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரே ஒரு உறுப்பினரைக் கொண்ட தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு மொத்தம் ஒரு மணி 3 நிமிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், 94 உறுப்பினர்களைக் கொண்ட ஆளுங்கட்சிக்கு 12 மணி நேரம் 30 நிமிடம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகைகளுக்கு இதுபோன்று தவறான தகவல்களைப் பேட்டியாகக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

என்ன? (குறுக்கீடுகள்) திரு. சி.வி. சண்முகம், உங்களுக்கு அதைவிட அதிகமான time கொடுக்கப்பட்டிருக்கிறது. விடுங்கள்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 29- செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா

### (ஆ) கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம்

### (இ) கோரிக்கை எண் 30- செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு

---

### (அ) கோரிக்கை எண் 29-செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006–2007* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

முற்பகல் *11–25*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய *29* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.*31,99,34,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.*14,05,05,000*/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் *1617*, திரு. கோவை தங்கம்.



**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் சுற்றுலாத் துறையின் கிளை அலுவலகம் ஒன்றைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய *29* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*31,99,34,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*14,05,05,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7382*, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3240*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய *29* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*31,99,34,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*14,05,05,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5357*, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காங்கேயத்திலுள்ள அருள்மிகு சென்னிமலை முருகன் கோயிலையும், சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலையும் சுற்றுலாத் தல மையங்களாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய *29* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*31,99,34,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*14,05,05,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7231*, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9416, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1882, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2368, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4227, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, ஆற்காடு நகரத்திலுள்ள சரித்திரப் புகழ் பெற்ற டில்லி கேட், பச்சை கல் மசூதி போன்ற இடங்களைத் தமிழக அரசு எடுத்து, அவற்றை அழகுபடுத்தி சுற்றுலாத் தலங்களாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7451, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் அணையைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து, தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7830, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுழற்சி முறையில் நிதி வசூலித்து, அரசுப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5603, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சிகுளத்தில் படகுகள் விட்டு, அதனைச் சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2830, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3467, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள லகூன் மற்றும் அலையாத்திக் காடுகளைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3446, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், தீர்த்தமலையைச் சுற்றுலாத் தலமாக அமைப்பதன் அவசியம் குறித்தும், மேலும் கிரிவலப் பாதை அமைப்பதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3363, திருமதி ரா. லீமா றோஸ்.

**•திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திற்பரப்பு நீர்வீழ்ச்சி மற்றும் சிவலோகம் சுற்றுலா மையங்களை இணைக்க Rope Car அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3318, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7702, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதி, அமராவதி ஆற்றின் கரையில் கரூரில் சுற்றுலா மையம் மற்றும் அழகிய பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5957, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, கடையால் சிறப்பு ஊராட்சியின் களியலாற்றுப் படகுத் துறையில் எக்காலத்திலும் தண்ணீர் இருப்பதாலும், 4 கி.மீ. தூரம் வரைக்கும் படகு சவாரி செய்ய வாய்ப்பு இருப்பதாலும், House Boat–களை இயக்கவும், இப்பகுதியில் park வசதிகளை மேம்படுத்தவும் தேவையான நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1647, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை, திருமூர்த்தி அணையின் முன்பகுதியில் உள்ள முள் மரங்கள் வெட்டப்பட்டு வருவதால், அந்த இடத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8309, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் கைலாசநாதர் திருக்கோயிலில் உள்ள பழங்காலச் சிற்பச் சிலை அதிசயங்களைக் காண அதிகம் பேர் வருவதால் அதனைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8194, திரு. ந. சுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8218, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதியில் உள்ள இடைக்காட்டூரில் உள்ள கிறிஸ்தவ



ஆலயம் சுற்றுலாத் தலமாக மாற்றப்பட்டுள்ளது; அதை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2131, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரைச் சுற்றுலாத் தலமாக்கி, வேலூரிலிருந்து பக்கத்திலுள்ள திருப்பதி, திருத்தணி, திருவலம், பள்ளிகொண்டா, மேல்மலையனூர், மேல்மருவத்தூர், சோளிங்கர், ரத்தினகிரி, வெட்டுவாணம், படவேடு, திருவண்ணாமலை, தெங்கால் ஆசிரமம், விநாயகபுரம், காணிப்பாக்கம், கலவை, அரியூர், திருமலைக்கோடி ஆலயங்களுக்குச் சுற்றுலாத் துறைப் பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7307, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், சாத்தனூர் கல்தூண் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5690, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை அருகேயுள்ள சித்தன்னவாசல் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5766, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னைக்கும், மாமல்லபுரத்திற்கும் இடையே பக்கிங்காம் கால்வாயில் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி சுற்றுலா படகுப் போக்குவரத்து ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6479, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதி, நடுப்பட்டி அருகில், தெற்காசியாவில் இரண்டாவது பெரிய பாலம் உள்ளது; அதைத் தொங்கு பாலம் என்றும் அழைக்கின்றார்கள்; அதைப் பார்ப்பதற்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மக்கள் வருகிறார்கள்; எனவே, அதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6912, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் மோட்டல் (Motel) கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3578, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் ஊத்துக்கோட்டை வட்டத்தில் பெரியபாளையம் ஊராட்சியில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ பவானி அம்மன் கோயில் உள்ளது; சுற்றுலாத் துறை இப்பகுதியில் ஓட்டல், விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6030, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6311, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பழவேற்காட்டில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயம் பெயரளவில் உள்ளது. மேற்படி பறவைகள் சரணாலயத்தைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7586, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட இயற்கை எழில் மிகுந்த ஆரோவில் கிராமத்தைச் சுற்றுலாத் தலமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3215, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம்—சீர்காழி நெடுஞ்சாலையில் வல்லம்படுகை என்ற இடத்தில் முதலைப் பண்ணை மற்றும் பாம்புப் பண்ணை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9328, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9353, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் ஏரியில் படகுக் குழாம் அமைப்பதன்



அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9176, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மற்றும் கொல்லிமலை போன்ற இடங்களைச் சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்தப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9191, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீராணம் ஏரி அழகுபடுத்தப்பட்டு, படகுச் சவாரி ஏற்படுத்தி, சுற்றுலாத் தலமாக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9143, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டைக்கு அருகில் வைகை ஆற்றில் அமைந்துள்ள பேரணைக்கு ஏராளமான சுற்றுலாப்

பயணிகள் வருகிறார்கள்; இங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, பேரணையைச் சுற்றுலா மையமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9118, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம், சித்தர் கோயிலைச் சுற்றுலா மையமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7962, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8143, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதியிலுள்ள சிறுமலையைச் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8188, திரு. எல். ரவிச்சந்திரன்.



**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகர மையப் பகுதியில் அமைந்துள்ள அம்மாப்பேட்டை குமரகிரி ஏரியைச் சுற்றுலாத் தலமாக்கி, படகுகள் விடுவதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8018, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை பேரூராட்சி மிகவும் பழமை வாய்ந்த, தொன்மை வாய்ந்த பகுதி; இதில் வெள்ளாறு வங்கக் கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் பூங்காவும், வெள்ளாற்றில் படகுக் குழாம் ஒன்றினையும் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4275, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4137, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, கல்லார் அரசுப் பழப் பண்ணைக்குத் தினந்தோறும் ஏராளமான பொது மக்கள் வந்து செல்வதால், அப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கி மேம்பாடு செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5374, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4440, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதியில் அய்யனார்கோயில் அருவி, சாஸ்தாகோயில் அருவி ஆகியவற்றைச் சுற்றுலாத் தலங்களாக ஆக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6712, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளதால், புண்ணியத் தலமான சங்கரன்கோவிலைச் சுற்றுலாத் தலமாக அமைக்கக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1931, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் சுற்றுலாத் தலம் ஒன்று அமைப்பது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2398, திரு. அருள் அன்பரசு.

**•திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதி, சோளிங்கரில் சுற்றுலா மையம் ஒன்று அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2706, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவன் கோயில் அமைந்துள்ள தேவர் பெட்டாவைச் சுற்றுலா மையமாக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2486, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5309, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை ஒன்றியம், ஜேடர்பாளையம் அணைக்கட்டுப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8599, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் அடங்கியுள்ள முட்டுக்காடு படகுக் குழாம் சுற்றுலா மையத்தில் படகு வசதி சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லை. படகுக் குழாம், சுற்றுலா மையத்தைச் சிறப்பாக மாற்றிப் படகுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5040, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணி நகரைச் சுற்றுலாத் துறை தனிக் கவனம் செலுத்தி, ஆறுபடை வீடுகளில் ஒன்றானதும், அருள்மிகு அருணகிரி நாதரால் பாடப் பெற்றதுமான இந்நகரை, மேலும் திட்டங்கள் தீட்டிச் சிறப்புறச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7507, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புகழ் வாய்ந்த கங்கைகொண்ட சோழபுரம் கோயிலில் பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் கழிவறை மற்றும் குளியலறை வசதியின்றி உள்ளது; கழிவறை மற்றும் குளியலறை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8520, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் சில்வர் பீச்சில் படகுச் சுற்றுலா அதிக அளவில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7357, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதிக்கு அருகில் செஞ்சிக்கோட்டை, திருவண்ணாமலை உள்ளன; எனவே, மேல்மலையனூர் தொகுதியில் பயணிகள் தங்கிச் செல்ல தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5529, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓசூர் பேரூராட்சிக்குட்பட்ட படகுத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,05,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6519, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை –செய்தி மற்றும் விளம்பரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.35,73,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1840, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்த் திரைப்படங்களில் பாலியல் உணர்வு, மது அருந்துதல், கற்பழிப்பு, வன்முறைக் காட்சிகளைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7381, திரு. சு. சிவராஜ். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3270, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8130, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வன்முறை எதிர்ப்பு மற்றும் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் தமிழகச் செய்தித் துறையின்மூலம் திரைப்படம் எடுத்து, திரையரங்குகளில் அதனை வெளியிடச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57;23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9417, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1921, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9248, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2372, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1063, திரு. தி.க. ராஜா. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9323, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் அரசு விளம்பரங்கள் திரையிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7468, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிக்குச் செய்திட்ட சாதனைகளை இலவசமாக விளம்பரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8518, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு சுவர்களில் விளம்பரம் செய்யப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8890, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3466, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் பத்திரிகையாளர்களுக்குப் பத்திரிகையாளர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6520, திரு. என். நன்மாறன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9319, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1976, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமீபத்திய தமிழ்ப் படங்களில் ஆபாசம் மற்றும் உறவு முறைகளைத் தவறாகச் சித்தரிக்கும் திரைப்படங்களைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9088, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்தி-விளம்பரத் துறைமூலம் அரசின் திட்டங்களை வெளியிட மாவட்டந்தோறும் அரசு நிருபர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4927, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பத்திரிகைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு பற்றி விளம்பரம் மற்றும் செய்தி வெளியிட வேண்டிய்தன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6238, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்தியாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8844, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீடியோ சாதனங்களுடன் வீடியோ விளம்பர வேன் வாங்கி, அதன்மூலம் அரசினுடைய அனைத்துத் திட்டங்களையும் கிராமப்புறப் பட்டிதொட்டிகளெல்லாம் பரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5550, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் பஸ் பாஸ், வீட்டு வசதித் துறையில் முன்னுரிமை, குடும்பப் பாதுகாப்புத் திட்டம் போன்றவை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2138, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரிலுள்ள அரசின் அண்ணா கலையரங்கத்தை புதுப்பித்து நவீனமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2882, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டையில் உள்ள பட்டுக்கோட்டை கவிஞர் கல்யாணசுந்தரம் நினைவிடத்தில், அவரது பாடல்கள் கொண்ட ஒளிப்பேழை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5677, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி நகரில் வாழும் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சிச் செய்தியாளர்கள் ஆகியோருக்கு அரசு சார்பில் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7243, திரு. பெ.சு. விஜயகுமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5063, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகரத்தில் சில திரையரங்குகளில் ஆபாசப் படம் வெளியிட்டு, சுவரொட்டிகளை மிகவும் மோசமாக அருவருக்கத்தக்க

வகையில் வெளியிட்டுக் கலாச்சாரச் சீரழிவு ஏற்படச் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6534, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்தி வார இதழ்கள், மாத இதழ்கள், தொலைக்காட்சிகளில் வரும் ஆபாசப் படங்கள், பாடல்கள், இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5326, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியிலுள்ள மேலநீலிதநல்லூர், குருவிக்குளம், மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங்களுக்குச் செய்தி—விளம்பர வாகனம் வாங்கிடக் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9454, திரு. சி. கோவிந்தசாமி.



**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு செலவில் விளம்பரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5450, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் அனைத்துப் பத்திரிகை நிருபர்களுக்கும் வீடு கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,73,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4824, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 30–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை– எழுதுபொருள் மற்றும் அச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,93,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 3791, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் அரசின் அச்சகக் கிளை ஒன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2423, திரு. சு. சிவராஜ். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3272, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4773, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசிதழ்களை அனைத்துத் தரப்பு மக்களும் எளிதில் பெற ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9418, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1919, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5748, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8000, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3140, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு கிளை அச்சகம் செங்கல்பட்டில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4107, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள மாவட்டங்கள்தோறும் அரசு அச்சகங்கள் தொடங்கி, பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை அச்சடித்து, குறித்த நேரத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4549, திரு. தி.க. ராஜா. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6713, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு மாவட்டத்திற்கு வெளியிடப்படும் சிறப்பு இதழ்கள் எளிதில் மக்களுக்குக் கிடைப்பதற்கு இலவசமாக அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7454, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களுக்கு எழுதுபொருட்கள் (Stationery) வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7747, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் அரசு அச்சகம் ஒன்றைத் தொடங்கி, அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8601, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3860, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8873, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாக்காளர் பட்டியலை அரசு அச்சகங்களில் அச்சடிக்காமல், தனியார் அச்சகங்களில் அச்சடித்தது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2148, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் அரசு அச்சகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6662, திரு. சொ. கருப்பசாமி.



**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவிலில் அரசு அச்சகம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,93,17,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரம் மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சு மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழில் உள்ளதை@@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவையின் குறிப்பேட்டில் பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் இறுதியில் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கெல்லாம் விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@195 முதல் 235 வரையிலான பக்கங்களில் இணைப்பு I—ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@@237 முதல் 283 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III—ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். 10 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 10 நிமிடங்களுக்கு மேல் பேசக்கூடாது. முதலிலே மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திருமதி பதர் சயீத்:** இறைவன் அருளால் என் உரையை ஆரம்பிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை திருவல்லிக்கேணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்வதற்குக் காரணமாக இருந்த தமிழக மக்களின் நிரந்தரத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கம் சொல்லி என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு அரசியல் முகவரி தந்த அம்மா அவர்களுக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களைச் சட்டமன்றத் தேர்தலில் நிறுத்துவதற்கு முன்னால், தகுதி, திறமை, இவற்றை ஆராய்ந்ததோடு மட்டுமல்லாமல், மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களா, மக்கள் பணியினை நல்ல முறையில் செய்யக்கூடியவர்களா என்பதை எல்லாம் தெரிந்துகொண்டுதான் வாய்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே என்னை அம்மா அவர்களின் தோழி என்று சொன்னார். உண்மைதான். அதில் எந்த மாற்றமும் இல்லை. எனக்கு அம்மா அவர்கள் தோழி மட்டுமல்ல, வழிகாட்டியும் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆங்கிலத்தில் சொல்வார்கள், friend, philosopher and guide என்று. அதுதான் அம்மா அவர்கள் எனக்கு.

குறிப்பாக, சிறுபான்மை மக்களுக்கு, குறிப்பாக முஸ்லிம் பெண்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று ஓர் உறுப்பினர் இங்கே சொன்னார். கடந்த காலத்தில் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த மரியம் உல் ஆசியா என்ற பெண்மணி சட்டமன்றத்தில் அ.தி.மு.க. உறுப்பினராகப் பணியாற்றினார்கள். என்னைப் பொறுத்தவரை, எனக்கு Tamil Nadu Minorities Commission-ல் பணியாற்ற வாய்ப்பு வழங்கி அழகு பார்த்தார்கள். தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவர் பதவியை வழங்கி, முஸ்லிம்களுக்குப் பணியாற்ற வாய்ப்பு வழங்கி



அழகு பார்த்தார்கள். சென்னை உயர் நீதிமன்றத்தில் Addtitional Advocate-General ஆக நியமனம் செய்து, சட்டத் துறையில் பணியாற்றும் வாய்ப்பு வழங்கி அழகு பார்த்தார்கள். இவற்றை நான் சரியாகச் செய்ததனால், எனக்கு திருவல்லிக்கேணி மக்களுக்குப் பணியாற்ற வாய்ப்பு வழங்கினார்கள். உத்தரவுக்குக் கட்டுப்பட்டு, தேர்தலில் வெற்றி பெற்று, உங்கள் முன்னால் நின்று உரையாற்றக்கூடிய வாய்ப்புப் பெற்றவராக இருக்கிறேன். இத்தகைய வாய்ப்பு வழங்கி, எனக்குப் பொது வாழ்வில் இடமளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னை நம்பிக்கையுடன் தேர்ந்தெடுத்த திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கும், வெற்றி பெறுவதற்கு உழைத்த நிர்வாகிகளுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்குத் தாய்மொழி தமிழ்தானே?

**திருமதி பதர் சயீத்:** ஆமாம் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி பதர் சயீத்:** இப்போது சந்தேகமா உங்களுக்கு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் பேசுங்கள்.

**திருமதி பதர் சயீத்:** சரி, பேசுகிறேன். எனக்கு இன்னும் ஒரு 15 minutes கொடுக்க வேண்டும் நீங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடம்தான்.

**திருமதி பதர் சயீத்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No, No. (Interruption)

**திருமதி பதர் சயீத்:** இல்லை, (குறுக்கீடு) நம்முடைய அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டார்கள். (குறுக்கீடு) என்னுடைய முதல் உரையை ஆரம்பிக்கிறேன். இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் கோபித்துக்கொள்கிறார் என்பதற்காக, ஆங்கிலத்திலே சில வார்த்தைகளைச் சொல்லிவிடுகிறேன்.

[Tmt. Badar Sayeed] — [2006 ஆகஸ்ட் 28

Coming to today's subject, I would like to refer to the excellent hard work done during 2001-2006 by our Hon. former Chief Minister Puratchi Thalaivi Amma in all spheres to today's reference. It could be appropriate to state that all the progressive programmes for Tourism, Information and Publicity which have been implemented very successfully are taken note of by the present Government, and if feasible to the present administration, may be carried further.

*முற்பகல் 11–40*

In the past few years, the State of Tamil Nadu has won several prestigious awards in the field of tourism both at the National and the International level. During the previous Government of Amma, crucial changes were implemented so that infrastructure was put in place so as to enable national and international tourists to visit all the heritage sites with ease and comfort of travel, food and boarding. If you look at the facilities implemented at Courtallam, Mahabalipuram, Yercaud and other hill stations and tourist spots, we will be able to appreciate the amount of work that has gone in to make Tamil Nadu the most favoured destination for tourism. The various sanctuaries along the way are an excellent reflection of what kind of facilities have been provided by the previous Government of Amma. One doesn't expect any gigantic or any overnight changes. But I do hope that all the progressive dynamic changes which have brought Tamil Nadu forward by our dynamic Amma are not abrogated.

It is my request to the Government to convert Nagore Dargah and Velankanni Church into heritage sites, the symbol of communal harmony. All facilities of travel, boarding and lodging are improved upon to increase tourism at these sites. There are several temples, churches and mosques which carry exemplary architecture and these need to be converted as heritage sites. I request this Government to form a Committee to identify all these places of worship as a first step to convert such exemplary architecture into heritage sites.

The St.Mary's Church which stands adjacent to this august House in the same campus is the oldest British building in India. This needs to be declared as a heritage site. It is gratifying to note that a museum has been set up in the Madras High Court campus by the efforts of the Hon. Chief Justice Markandeya Kadju, Judge, Supreme Court of India of today. However it is a matter of regret that the original charter signed by Queen Victoria which is a heritage document is missing.



2006 ஆகஸ்ட் 28] [Tmt. Badar Sayeed]

It is a matter of pride that the "green cover" in Chennai inclusive of all the parks have been the initiative of no one else but of Dr. Puratchi Thalaivi Amma. Similar to the well being of the common citizen of Tamil Nadu on the protection of the heritage of our State, I am sure that there can be no alternate opinion here. I appeal to everyone here to see that our priceless history is preserved for our future generations to come. Otherwise we will be blamed by posterity. To do all this, I think, we need a law. I wish to bring to the knowledge of this House that there is already a draft bill to ensure the survival of our heritage sites. If this House wishes and permits me, I will be more than proud to present it for its consideration and implementation.

If tourism has flourished in our State of Tamil Nadu, one of the important reasons is because, unlike other States where tourists feel unsafe, prime importance was given to the maintenance of law and order by the Government of Dr. Puratchi Thalaivi Amma. (Thumping of desks) I wish to point out that there are several incidents to show that law and order is breaking down today. I hope that this Government will take note of this situation and ensure that tourists in large numbers visit Tamil Nadu.

I wish to state one point, on the question of information. Several posters — if we look throughout the city, there are several posters which intimidate and defy the dignity of women. In the previous Government, we did as much as possible to prevent exhibition of such posters. I am sure the present Government will pursue and complete all the good works done by Amma and eradicate all those obnoxious and objectionable posters which are put up. These posters are not only in bad taste, but also a driving hazard to the public. Sir, May I now go back to Tamil for two minutes.

இப்போது நான் தொகுதிக்குப் போகிறேன். திருவல்லிக்கேணி, (சிரிப்பு) இல்லை. போகமாட்டேன். இங்கே நின்றுகொண்டுதான் சொல்வேன் Sir. திருவல்லிக்கேணி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அமைத்துத் தந்த இடம் இன்னும் எங்களுக்குத் திறக்கவில்லை. மாநகராட்சி கமிஷனர் அவர்களை அணுகினோம். மாவட்ட கலெக்டரை அணுகினோம். இங்கும், அங்கும் அலைய விடுகிறார்கள். இன்னும் திறக்கவில்லை. மக்கள் கோரிக்கை மனுக்களை அளிக்க வந்தால் உட்காரக்கூட இடமில்லை. இருந்தாலும்கூட, நான் மக்கள் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறேன். திருவல்லிக்கேணி தொகுதிவாழ் மக்களுக்கு இப்போதிருக்கிற 95 ஆம் எண்ணுள்ள ரேஷன் கடைக் கட்டடம் எந்த நேரமும் இடிந்து விழக்கூடிய

சூழ்நிலையில் உள்ளது. மோசமான நிலையில் கட்டடம் உள்ளதால், ரேஷன் பொருட்களை வாங்க வருகிற பொது மக்கள் உயிருக்கு ஆப்பத்து (குறுக்கீடு) ஆபத்து ஏற்படலாம்.

முற்பகல் 11—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னது?

**திருமதி பதர் சயீத்:** ஆபத்து. (குறுக்கீடுகள்) படிக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, படியுங்கள், படியுங்கள்.

**திருமதி பதர் சயீத்:** மோசமான கட்டடம், மழை வந்தால் அங்கே leak ஆகும். மேலிருந்து ஒழுகும். அதைச் சொன்னால், நீங்கள் சிரிக்கிறீர்கள். அதனால் leak ஆகும் என்று சொல்கிறேன். நீங்கள் எல்லாம் என்னை encourage பண்ண வேண்டும். அது தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) Thank you. Thank you.

என்னுடைய திருவல்லிக்கேணி தொகுதிவாழ் மக்களுக்கு 95 ஆம் எண்ணுள்ள ரேஷன் கடையை உடனே நல்ல பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற வேண்டும்.

அடுத்து, வட்டாட்சியர் அலுவலகம். கிரீன்வேஸ் சாலையில் இயங்கும் திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகத்தை உடனே திருவல்லிக்கேணி தொகுதியில் இட மாற்றம் செய்ய வேண்டும். காரணம், திருவல்லிக்கேணி தொகுதியில் பொது மக்கள், பள்ளிக்கூடம், கல்லூரி தொடங்கி நடக்கும் நாட்களில், சாதிச் சான்றிதழ்—Caste Certificate போன்ற பல வேலைகளுக்குத் தங்கள் தொகுதியை விட்டு, வேறு இடத்திற்குச் செல்வதற்குக் கஷ்டப்படுகிறார்கள். எனவே, வட்டாட்சியர் அலுவலகத்தைத் திருவல்லிக்கேணி தொகுதிக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவல்லிக்கேணி பகுதி, மீன் விற்பனைக்குச் சிறந்த இடமாக உள்ளது. ஆனால், சரியான மீன் சந்தை, இட வசதியுடன் இல்லை. எனவே, நவீன முறையில் நல்ல இட வசதியுடன் மீன் விற்பனை அங்காடி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

வேலூர் கோட்டை சம்பந்தமாக புதிய நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்று கூறியுள்ளீர்கள். அதே வேலூர் கோட்டையில் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக, இந்துக்களுக்குக் கோயிலும், கிறிஸ்தவர்களுக்கு சர்ச்சும், முஸ்லிம்களுக்கு மசூதியும் உள்ளது. தற்சமயம் கோயிலில் வழிபாடும், சர்ச்சில் ஜெபமும் நடந்து வர



அனுமதி இருக்கிறது. ஆனால், மசூதியில் தொழுகை நடத்த, prayer சொல்ல அனுமதியில்லை. வேலூர் கோட்டையில் உள்ள அந்த மசூதியில் தொழுகை நடத்த உங்கள் (குறுக்கீடு) நம்முடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதி அளிக்க முயற்சி செய்யுமா?

அடுத்து, நம்முடைய Hon. Minister for Wakfs-க்கு ஒரு கோரிக்கை. For the last 50 years—50 ஆண்டு காலமாக—the Tamil Nadu Wakf Board did not have a place of its own to house its office. Today, thanks to the administrative efforts of our Hon. former Chief Minister Amma, a building of 11,000 square feet is ready towards the cause of the minorities. But the Hon. Minister for Wakfs has not deemed it fit to ensure its completion, with even the front entry door of the building not being put in place. Appropriate orders may be issued immediately to complete this building for immediate occupation of the Wakf Board Office. I also request the Hon. Chief Minister—I wish he was here, he is not here—to expedite this issue, lest it becomes uncared for—அனாதையாகக் கிடக்கிறது—and trespassed into by anti-social elements.

We have worked very hard to set right the Wakf Board College at Madurai, but today, in complete violation of Court orders, a frightening situation has developed in that institution. I am sure that the Hon. Minister for Wakfs will look into this personally and rectify that situation and see that the institution runs smoothly. I would be more than happy to provide him with any further details, should he require my assistance.

Just, I have one more request. Despite being a first-timer here in this House, all of you will grant me the credit of my age and professional experience in fields of law, administration and social service. Having said this, can I request this Hon'ble House to progress beyond retorting to each other's comments, since it is not for retorting or for mud-slinging that the people of our respective Constituencies have sent us to this august House? Without any offence meant, I appeal to the Hon. Speaker here and to all the leaders who are here, who are more seasoned, more experienced and older than I am, to see that the dignity of this House is not jeopardised and fruitful debate and functioning is established hereafter.

Before I conclude I have one more point to say. இரண்டு நாட்களுக்கு முன்னால் நம் உறுப்பினர் கோ. அரி, இங்கே இந்தியிலே விளம்பரம் வருகிறது என்று சொல்லிக் காட்டினார். நம்முடைய முதலமைச்சர் அதற்குப் பதில் கொடுத்தார். அதற்கு என்ன பண்ணப்பட்டது?

227433

இன்றைக்குக் காலையில்கூட தினத்தந்தியிலே இந்தியிலே விளம்பரம் வந்திருக்கிறது. நான் படிக்கலாம். எனக்கு இந்தி, தமிழ், இங்கிலீஷ் படிக்க முடியும். ஆனால், உங்களுக்கெல்லாம் இந்தி புரியாது.

*முற்பகல் 11–50*

**HON. SPEAKER:** Please note one thing. You should not read it without showing to me.

**Tmt. BADER SAYEED:** Sorry. I apologise for this.

**HON. SPEAKER:** It has not been brought to my notice.

**Tmt. BADER SAYEED:** I apologise. (Interruption) I apologise.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினத்தந்தியில் வந்த அந்த விளம்பரத்தைப் பார்த்தோம். அது மத்திய இரயில்வே துறையைச் சார்ந்த விளம்பரம். இங்கே தமிழ்நாட்டிலே வட இந்திய மக்களும் வாழ்கிறார்கள். அவர்களுக்குப் புரிய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அந்த விளம்பரத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள் சார். கொஞ்சம் இருங்கள். அவர்கள் பேசுகிறார்கள் அல்லவா? (குறுக்கீடு) பேசுங்கள். (குறுக்கீடுகள்) வேண்டாம். இல்லை, இல்லை சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திருமதி பதர் சயீத்:** அனைத்து உறுப்பினர்களுக்கும் 'இங்கே நன்றி சொல்வதற்கு விரும்புகிறேன். ஏனென்றால், நீங்கள் ரொம்ப patient ஆக சிரித்தீர்கள். ஆனால், என்னை encourage பண்ணித்தான் தமிழில் பேசுவதற்கு allow பண்ணினீர்கள், அனைவருக்கும் நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு special நன்றி, மணி அடிக்கவில்லை, அவர் மணி அடிக்கவில்லை எனக்கு. அவருக்கு நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (சிரிப்பு)

**HON. SPEAKER:** Don't be reluctant to read tamil books. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் அவர்கள்



தமிழிலே பேசினாலும், மென்மையாகப் பேசினார்கள். ஆனால், அவர்கள் கடந்த கால ஆட்சியைப் பாராட்டினார்கள். அது அவர்களுடைய உரிமை. நான் தெரிந்துகொள்ள விரும்புவது, கடந்த காலத்திலே Tourism இலாகாவிலே 16 ஓட்டல்கள் நன்றாக நடந்துகொண்டிருந்தன. அவற்றை எதற்காகத் தனியாரிடத்திலே lease–க்கு விட்டார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா? ஒன்று. இரண்டாவது. அவர்கள் கட்டிக்கொண்டிருந்த வக்ஃபு வாரியக் கட்டடத்தை தொடர்ந்து இந்த அரசும் கட்டிட வேண்டும் என்றும் சொன்னார்கள். கடந்த கால ஆட்சியிலே எந்தக் கட்டடத்தை ஆரம்பித்திருந்தாலும், இந்த அரசாங்கம் நிச்சயமாக முடித்து வைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Minister சொன்னதற்குத்தான், சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்கு?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அவருக்குப் பதில் ஒன்று சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tourism மூலமாகக் கட்டப்பட்டிருக்கிற சில ஓட்டல்களை ஏன் நீங்கள் நடத்தவில்லை, அவை தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். தனியாருக்குக் கொடுக்கப்படவில்லை, நஷ்டம் ஏற்படுகிற காரணத்தினாலே, அவற்றை ஏலத்திற்கு விட்டு, அதிலே அதிகத் தொகை தனியார்கள் யார் வழங்குகிறார்களோ, அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் சுற்றுலாத் துறை நஷ்டத்தில் இயங்கவில்லை. ஓட்டலைப் பொறுத்தமட்டிலும் எந்தவிதமான நஷ்டத்திலும் இயங்கவில்லை என்பதை அதிகாரபூர்வமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லிவிட்டார்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப என்ன சார்? அவர்தான் சொல்லிவிட்டார் அல்லவா? இலாபத்திலே போகவில்லை, அதனால்தான். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டம் ஏற்படுகிற காரணத்தினாலே, மத்திய அரசுகூட ஓட்டல் நடத்துகிறபோது, அந்த ஓட்டலைக்கூட ஏலத்தில் விட்டிருக்கிறார்கள். அதே நிலைதான் இங்கே பின்பற்றப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) அவர் என்னவோ சொல்லப் போகிறார். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், 1996–லிருந்து 2001 வரை 43.04 இலட்சம் ரூபாய் நிகர இலாபம் ஈட்டியது. ஆனால், அ.தி.மு.க.வினுடைய ஆட்சிக் காலத்தில்தான்-- இந்தத் துறை ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை இருக்கக்கூடிய அந்தக் காலக்கட்டத்தில், அ.தி.மு.க.வினுடைய ஆட்சிக் காலத்தில்தான்--89.94 இலட்சம் ரூபாய் என்ற பெரும் நஷ்டத்தை ஈட்டியது என்பதையும் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் உரையாற்றும்போது, அவர்களுடைய உரையிலே ** என்று சொன்ன இடங்களிலே எல்லாம் 'ஆதி திராவிடர்' என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

***திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மாவட்டமான, தமிழ் வாழ வேண்டும் என்று அவ்வைக்கு நெல்லிக்கனி வழங்கிய அதியமான் வாழ்ந்த தகடூர் மாவட்டத்தில், சாமானியனான என்னை, பெண்ணாகரம் ஒன்றியச் செயலாளராக, மாவட்டப் பொறுப்பாளராக, அதற்குப் பின் பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில், 30 ஆண்டுகளுக்குப் பின், கழகத்தின் சார்பில் என்னைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளித்த, தஞ்சைத் தரணி கண்டெடுத்த, தந்தை பெரியாராய், பேரறிஞர் அண்ணாவாய், கரிகால் சோழனாய், வாழும் வள்ளுவராய்த் திகழும் தமிழாய்ந்த தலைவர், தமிழின முதல்வர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கலைஞர் அவர்களுக்கு உற்ற துணையாய் விளங்கும் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், கழகத்தின் பொருளாளர் ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்களின் அண்ணனாக, தமிழகத்தின் கலங்கரை விளக்கமாக, தமிழகத்தின் தளபதியாக, வெள்ளை மாளிகையின் வெண்புறாவாக, உள்ளாட்சியில் நல்லாட்சி புரியும் எங்கள் நாயகன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் பெருமக்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்ய உழைத்த கழக நிருவாகிகள், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், குறிப்பாக, களப் பணியாற்றிய செயல் மறவர்கள், வாக்களித்து வெற்றி பெறச் செய்து இம்மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவோடு அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

இம்மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மாமேதை முரசொலியார் ஆகியோரை வணங்கி, என் கன்னி உரையைத் தொடங்குகின்றேன்.

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு"

என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க, தந்தை பெரியாரின் கொள்கைகளை, அறிஞர் அண்ணாவின் இலட்சியங்களை இதயத்தில் ஏந்தி, அவர்களின் கனவுகளைச் செயலாக்கி வரும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும்போதெல்லாம், ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் மட்டுமல்ல, தமிழகத்தின் தனி மனித வாழ்க்கைத் தரக் குறியீடும் உயர்ந்து வருகிறது. அவரது திட்டங்கள் யாவும், தாழ்ந்து கிடக்கும் தமிழினத்தையும், தமிழ் மொழியையும் முன்னெடுத்துச் செல்வதையே தலையாய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.

அதுபோலத்தான், ஐந்தாம் முறையாகப் பொறுப்பேற்றவுடன், பட்டினிக் கொடுமைகள் வரக்கூடாது என்பதற்காக, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, வறட்சியால் வாடிய விவசாயிகளினுடைய வாழ்விலே ஒளியேற்ற, அனைத்து விவசாயக் கூட்டுறவுக் கடன்களும் தள்ளுபடி, பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவில் வாரம் 2 முட்டை, ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு

15,000/– ரூபாய் வழங்கும் திட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000/– ரூபாய், எல்லாத் துறைகளிலும் வேலைவாய்ப்பு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று சட்டம், இவைபோன்ற பல்வேறு நலத் திட்டங்களைக் கண்டு, இந்த நாடு மட்டுமல்ல, தலைவரே, உலகமே போற்றுகின்றது, பாராட்டுகின்றது.

இந்த வரியில்லா பட்ஜெட்டில், அரசின் நலத் திட்டங்களால் பயனடைந்ததன் விளைவாக, அண்டை மாநிலங்களில் வாழ்வதற்காகச் சென்று, அங்கே பிழைத்துக்கொண்டிருக்கின்ற தமிழ்ச் சமுதாயம் நம்முடைய தமிழகத்தை நோக்கி மீண்டும் வந்துகொண்டிருக்கிறது. இவற்றை எல்லாம் கண்டுகொண்டிருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூட, வெளிப்படையாகப் பாராட்ட மனம் இல்லையென்றாலும்கூட, மனதிற்குள், தலைவர் அவர்களே, எங்களுடைய தாயார் இதைப்போன்ற நல்ல காரியங்களையெல்லாம் செய்யவில்லையே என்று, அவர்கள் மனதாரப் பாராட்டவில்லையென்றாலும், மனதிற்குள்ளாகவே பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்கள் மாவட்டத்திற்கு ஃபுளோரைடு நிறைந்த நீரையே பருகி, சுதந்திரம் அடைந்து 60 ஆண்டு காலமாகியும்கூட வாழ்க்கையிலே கால்வாசியைக் குறைத்துக்கொண்டு வாழுகின்ற எங்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும், ஏன் இன்னும் சொல்லப் போனால், மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தபோது, 'யாரும் கலங்க வேண்டாம், நானிருக்கின்றேன்; இந்த மாவட்டத்திற்குப் புதிய பொருளாதாரத் திட்டங்களையும், தொழிற்பேட்டைகளையும் ஏற்படுத்தித் தருவேன்' என்று அன்றைய ஆட்சியாளர்களால் விடப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் கானல் நீராகவும், காகிதப் பூக்களாகவும் மாறிப் போய்விட்ட இந்த நிலைமையிலே, திக்கற்று, திசை தெரியாமல் வாழ்ந்து கிடந்த எங்கள் மாவட்டத்திற்கு ரூ.1,005 கோடியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், தொழில் வளர்ச்சிக்கு சிட்கோ தொழிற்பேட்டைத் திட்டமும், தருமபுரி நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டமும், எனது தொகுதியில் விவசாய மேம்பாட்டிற்காக 17 ஏரிகளுக்கு நீர் வழங்கி, 815 ஏக்கர் பாசன வசதி பெறும் பஞ்சப்பள்ளி–பாப்பாரப்பட்டி கால்வாய்த் திட்டமும் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வழங்கி கடையேழு வள்ளல்களைக் காட்டிலும், எட்டாவது கொடை வள்ளலாக விளங்கும் கணினி யுகத்தின் முதல் வள்ளலே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே, தங்களின் பாதம்



தொட்டு வணங்கி, எம் மாவட்ட மக்களின் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

நண்பகல் 12–00

சுற்றுலாத் துறையின்மூலம் தமிழகத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களை மாவட்ட வாரியாக ஒருங்கிணைத்து சிறப்புச் சுற்றுலாப் பேருந்துகளை இயக்கிடப் பணிவுடன் வேண்டுகிறேன். தருமபுரி மாவட்டத்தினைப் பொறுத்தவரை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியின் எழிலைக் காணப் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மேலை நாடுகளிலிருந்தும் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், அருவியின் எழிலைக் கண்டு களிக்க ஏதுவாக ரோப் கார் வசதித் திட்டத்தையும், வனத் துறைமூலமாக ஒரு பிரம்மாண்டமான வனப் பூங்காவையும், சுற்றுலாப் பயணிகள் குளிக்க வசதியாகக் கூடுதல் இட வசதியையும் ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

தமிழகத்தின் எந்த ஆலயத்திலும் இல்லாத சிறப்பு வாய்ந்த, அதாவது, கடும் வறட்சியிலும், 3,200 அடி உயரமுள்ள தீர்த்தமலையின் உச்சியிலிருந்து, 25 அடி உயரத்திலிருந்து கொட்டுகின்ற புனிதத் தீர்த்தத்தில் நீராடி, அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரரைத் தரிசிக்க வருகின்ற மக்களின் நலனுக்காக ரோப் கார் அமைத்திடவும், வாணியாறு அணை, தொப்பையாறு அணை, நாகாவதி அணை போன்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், ஆங்காங்கே பூங்காக்களை அமைத்திடவும் வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களே, தாங்கள் எழுப்பிய நினைவுச் சின்னங்கள் எல்லாம்தான் இன்றும் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களாகக், காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன. குமரி முனையில் வானுயர அய்யன் வள்ளுவன் சிலை, பூம்புகார், வள்ளுவர் கோட்டம், அம்பேத்கர் மணிமண்டபம், அண்ணா சதுக்கம், காந்தி மண்டபம், காமராஜர் நினைவகம், இராஜாஜி நினைவகம், இப்படி எண்ணற்ற தலைவர்களுக்கும், தியாகிகளுக்கும் நினைவிடங்களை அமைத்த தலைவர், சுதந்திரப் போராட்ட தீரராகிய சுப்பிரமணிய சிவாவுக்கு, தலைவர் அவர்களே, பாப்பாரப்பட்டியில் ஒரு நினைவுச் சின்னத்தை அமைத்திடத் தங்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும், தருமபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கி இருப்பினும், மனித வளம் மிகுந்து காணப்படுவதால், அங்கே ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா, சிப்காட் தொழிற்பேட்டை,

ஒகேனக்கல்–ராசிமணல் புனல் மின் திட்டம், மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், கல்வி வளர்ச்சிக்காக அரசின் சார்பில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, சட்டக் கல்லூரி, மகளிர் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் போன்றவற்றையும், விவசாய வளர்ச்சிக்காக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து வலியுறுத்தப்பட்டு வரும் வேப்பாடி அணைக்கட்டுத் திட்டம் ஆகியவற்றை அறிவித்திடவும், பணி தொடங்கியும் நிறைவேற்ற முடியாமல் உள்ள மொரப்பூர் இரயில்வே மேம்பாலப் பணி விரைவில் முடிக்கப்படவும், மழை பெய்தால் சேலம்–அரூர்–சென்னை சாலையே துண்டிக்கப்பட்டு, போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்கின்ற அனுமன்தீர்த்தத்தில், தென்பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலத்தை அமைத்திடவும் வேண்டுகிறேன்.

நாள்தோறும் 1.50 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் எங்கள் மாவட்டத்திற்குத் தனியாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

மேலும், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் பிரிக்கப்பட்டு, 13 ஆண்டுகளாகியும், அங்கே அமைக்கப்படக்கூடிய அலுவலகங்கள், நீதிமன்றங்கள், கருவூலம் போன்றவற்றை அமைத்திட வேண்டுகிறேன். தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் உள்ளிட்ட அனைத்து இடங்களுக்கும் நீதிமன்ற வளாகம் கட்டித் தருமாறு தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மலையாளி, குறவர், குறும்பா, குறும்பர், காணிக்காரர், லம்பாடி, குறிச்சான் இன மக்களை S.T. பிரிவில் சேர்க்குமாறு, தலைவர் அவர்களே, உங்களை கேட்டுக்கொள்கிறேன். சொல்வதைச் செய்கின்ற, செய்வதைச் சொல்கின்ற ஒரே தலைவர், உலக வரலாற்றிலே தன்னிகரற்ற தலைவர், தலைவர் அவர்களே, நீங்கள் தருமபுரி மாவட்டத்திற்குத் தேர்தல் பிரச்சாரம் செய்ய வரும்போது, இந்த மக்களுக்கு நீங்கள் சான்று வழங்குகிறேன் என்று சொன்னதால், அதை முதலிலே நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு, மதம் மாறியவர்களுக்கும், அதேபோன்று, அவர்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களோ, அந்த சாதிச் சான்றை அவர்களுக்கு வழங்குமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாதையில், அறிஞர் அண்ணாவின் அற வழியில், ஏழைகள் ஏற்றம் பெற அல்லும் பகலும் அயராமல் பாடுபடும் தமிழாய்ந்த தமிழர், தமிழ்நாட்டின் முதல்வர், தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களே, இளைஞர்களின் பாசறை, எங்களின் பாசமிகு அண்ணன், தளபதி அவர்களின் உற்ற துணையோடு உங்கள் பணி சிறக்கட்டும், அதைக் கண்டு அகிலம் வியக்கட்டும் என்று கூறிக் கொள்கிறேன்.



எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் அவர்கள் இங்கே கூறியபொழுது, என்னுடைய தாய் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு எதிரியல்ல என்று கூறினார். பதர் சயீத் அவர்கள் சிறுபான்மைச் சமுதாயத்தவராக இருந்தாலும், சிறுபான்மைச் சமுதாய மதமாற்றத் தடைச் சட்டத்தை அவர் அறிவித்தபோது, என்னுடைய தாய் என்று சொல்கிறீர்களே, பதர் சயீத் தாய் அவர்களே, நீங்கள் அன்று என்ன செய்துகொண்டிருந்தீர்கள்? உங்கள் தாய்க்கு அதை எடுத்துக் கூறினீர்களா? 'எங்கள் சமுதாயத்தை இழிவுபடுத்தாதீர்கள், மத மாற்றத் தடைச் சட்டத்தை உடனே வாபஸ் வாங்குங்கள்' என்று கூறினீர்களா என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்களே, நீங்கள் எதற்காகவோ மௌனம் சாதித்துக்கொண்டிருந்தீர்களே ஒழிய, அதைக் கேட்கவில்லை. தலைவர் 14 வயது முதல் 85 வயதிலும், சுமார் 24 மணி நேரத்தில் 17 மணி நேரம் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் உழைத்துக்கொண்டிருக்கின்ற, சிறுபான்மை மக்களின் ஒரே பாதுகாவலர் தலைவர் என்பதை உணர்ந்திருக்கின்ற பதர் சயீத் அவர்களே, இன்றே நீங்கள் வேறு கட்சியில் சேர வேண்டுமென்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபாலன்.

***திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு உதகமண்டலம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக முதன்முதலாக அவையில் நுழைந்தேன். இன்று, ஏறக்குறைய 29 ஆண்டுகளுக்குப் பின்னால், மீண்டும் இரண்டாவது முறையாக, காங்கிரஸ் கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக, அதே உதகைத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்று வந்திருக்கிறேன். என்னுடைய வெற்றிக்காகவும், எனக்கு இடம் பெற்றுத் தருவதற்காகவும் பாடுபட்ட என்னுடைய ஒப்பற்ற தலைவர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பிரபு அவர்களுக்கும், எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய மாபெரும் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், எனக்காக ஊட்டிக்கு வந்தபொழுது, பார்த்த மக்களிடமெல்லாம் நான் கேட்காமலேயே வாக்குகளைக்

[திரு. போ. கோபாலன்] [2006 ஆகஸ்ட் 28

கேட்ட தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும், எனக்காக உழைத்த நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தோழர்கள் அத்துணை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–05*

50, 60 ஆண்டு காலமாக, படுகர் சமுதாயத்திற்கு அமைச்சர் பதவி கிடைக்கவில்லை என்ற நீலகிரி மாவட்ட மக்களுடைய ஏக்கத்தைத் தீர்க்க, முதன்முதலாக எங்களுடைய மாவட்டத்திற்கு, மாண்புமிகு திரு. ராமசந்திரன் அவர்களை அமைச்சராகத் தந்ததற்காக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்டத்தின் ஒன்பது இலட்சம் மக்களின் சார்பாக நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், மரியாதைக்குரிய சுற்றுலாத் துறையினுடைய அமைச்சராக மாண்புமிகு திரு. சுரேஷ் ராஜன் அவர்கள் இங்கேயிருக்கிறார்கள். அவருக்கு ஒன்றை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஐந்து ஆண்டு காலம் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்தார் என்பதையும் நீங்கள் நினைவிலே கொள்ளவேண்டும். என்றாலும், சுற்றுலாத் துறையில் மட்டுமல்ல; எந்தத் துறையிலும் நீலகிரி மாவட்டம் கவனிக்கப்படாத காரணத்தால்தான், ஊட்டி, கூடலூர், குன்னூர் ஆகிய மூன்று தொகுதிகளையும் டாக்டர் கலைஞர் அவர்களே, உங்களுடைய கையிலே நாங்கள் கொடுத்திருக்கிறோம், எங்களுடைய மக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் சின்னச் சின்னக் கோரிக்கைகளைத்தான் கேட்டிருந்தோம். 1977 ஆம் ஆண்டிலே உதகை சுற்றுலா மையத்திற்கு—இன்று யார், யாரோ Rope Car வேண்டும், Cable Car வேண்டும் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு சட்டமன்றக் குறிப்புகளைப் பாருங்கள். ஊட்டிக்கு ஒரு Rope Car வேண்டும், ஒரு Cable Car வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டே இருந்தோம். கேட்காத M.L.A-வே இல்லை. எட்டுப் பேர் வந்துவிட்டார்கள். நான் ஒன்பதாவதாக வந்து மீண்டும் கேட்கிறேன். எங்களுடைய ஒப்பற்ற தலைவர் அவர்களே, முதன்முதலாக ஊட்டி நகருக்கு, தமிழகத்திலே சிறப்பான மலைவாச ஸ்தலத்திற்கு, உலகத்திலே முதல் ஸ்தானத்திற்கு வர வேண்டிய ஒரு மலைவாழ் இடத்திற்கு அந்த வசதியைச் செய்து



2006 ஆகஸ்ட் 28] [திரு. போ. கோபாலன்]

தாருங்கள் என்று நான் உங்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஒன்றை இந்த நல்ல நேரத்தில் நான் நினைவுகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1965 ஆம் ஆண்டில் ஊட்டிக்கு நீங்கள் வருகிறீர்கள். போஸ் திடலிலே ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மழை கொட்டோ கொட்டு என்று கொட்டியபோது, அந்தக் கூட்டத்தை ஒரு மண்டபத்திலே வைப்பதற்காக, மாவட்டச் செயலாளர், மறைந்த திரு. கருணைநாதன் அவர்களைப் போன்றவர்கள், ராஜுவைப் போன்றவர்கள், முருகேசனைப் போன்றவர்கள் எல்லாம் ஒரு மண்டபத்திலே கூடிக்கொண்டு இருக்கிறார்கள். போஸ் திடலிலே ஒரு பையன் நின்றுகொண்டு இருக்கிறான், உங்களுடைய வருகைக்காக. நீங்கள் ஒரு taxi–யிலே வந்திருந்தீர்கள், 1965 ஆம் ஆண்டிலே, கொட்டும் மழையில். அந்த போஸ் திடலிலே உங்களைச் சந்தித்துக் 'கூட்டம் நடைபெறும் இடம் மாற்றப்பட்டிருக்கிறது. மண்டபத்திற்கு வாருங்கள்' என்று சொல்லி அழைத்துப் போனான் ஒரு மாணவன். அந்த மாணவன்தான் இன்று 60 வயதுக் கிழவனாக இங்கே நின்று கொண்டிருக்கிறேன். காங்கிரஸ் இயக்கத்திலே நான் மாவட்டத் தலைவனாக பத்தாண்டு காலம் பணியாற்றி, இன்று உங்கள் முன்னால் மீண்டும் இரண்டாவது முறையாக வந்திருக்கிறேன், தலைவர் அவர்களே. நினைவுகள் மறப்பதில்லை, நான் அப்போது 1977 ஆம் ஆண்டு உங்களுக்கு எதிராக நின்றுகொண்டிருந்தேன்;— உட்கார்ந்துகொண்டிருந்தேன் எதிரியாக. இன்றும் உங்களுக்கு எதிராக உட்கார்ந்துகொண்டிருக்கிறேன், உங்களுடைய தொண்டனாக, உங்களுக்குப் பக்கபலமாக, ஆதரவாக, உங்கள் ஆட்சிக்கு நாங்கள் நிரந்தரமான காவலனாக, காங்கிரஸிலே 34 முத்துக்களை நாங்கள் பெற்றிருக்கிறோம். அன்னை சோனியா காந்தியினுடைய உத்தரவுப்படி, உங்களுடைய ஆட்சிக்கு எந்த ஆபத்தும் வாராமல், இந்தக் காங்கிரஸ்காரர்கள் 34 பேரும் (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய முத்துக்களாக நாங்கள் இருப்போம் என்பதைச் சுட்டிக்காட்ட இந்த நேரத்தை நான் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறை சுற்றுலாத் துறை என்ற காரணத்தால் நான் சொல்லியாக வேண்டும். எங்களுடைய ஊட்டி நகரத்திற்கு சுற்றுலாப் பயணிகள் இலட்சக்கணக்கிலே வந்துகொண்டே இருக்கிறார்கள். பாதைகளைச் செப்பனிட நீங்கள் நிதி ஒதுக்கப் போகிறீர்கள், தெரியும். சுற்றுலாவைப் பயன்படுத்த நிதி ஒதுக்கப் போகிறீர்கள், தெரியும். மலை

மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப் போகிறீர்கள், தெரியும். ரோடுகளுக்கெல்லாம், பள்ளிகளுக்கெல்லாம், எது வேண்டுமானாலும் செய்வீர்கள். நன்றியுடன் இருக்கிறோம். ஆனாலும்கூட, பணிவோடு ஒன்றை மட்டும் நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

திரைப்பட நட்சத்திரங்கள், திரைப்படப் படப்பிடிப்புகள், மும்பையிலிருந்து, சென்னையிலிருந்து பல காலக்கட்டங்களிலே, பல்வேறு இடங்களிலிருந்து, ஏன் அமெரிக்காவிலிருந்துகூட ஆங்கிலப் படம் முழுவதும்கூட இங்கே வந்து ஊட்டியிலே எடுத்தார்கள். எங்களுக்கு ஒரு Film City ஏற்படுத்தித் தாருங்கள். எங்களுடைய ஆட்டோ ஓட்டுநர்கள், கார் ஓட்டுநர்கள், Hotel வியாபாரிகள், மளிகைக் கடை வைத்திருப்பவர்கள், பாதையோர வியாபாரிகள், அத்தனை பேரும் பயனடைய, சுற்றுலாப் பயணிகளும் பயனடைய, ஒரு நிரந்தரமான Film City–ஐ ஏற்படுத்தித் தாருங்கள். அதன் காரணத்தை நான் சொல்வேன்; டாக்டர் கலைஞர் அவர்களே, உங்களுக்குத் தெரியாதது அல்ல; ஒரு சினிமா எடுக்க வேண்டுமென்று சொன்னால், ஒரு பாடல் காட்சிக்காகத்தான் ஊட்டிக்கு வருகிறார்கள். அந்தப் பாடல் காட்சியை எடுக்க வேண்டுமென்று சொன்னால், generator வேண்டும்; generator என்பதை ஒரு லாரியிலே கொண்டு வர வேண்டும். பம்பாயிலேயிருந்தும், சென்னையிலேயிருந்தும் லாரிகளிலே கொண்டு வந்து, வாடகை கொடுத்து, லாரி வாடகை, generator வாடகை என்று கொடுத்து, அதற்குப் பின்னாலே, சூரிய ஒளியை அந்தக் கதாநாயகன், கதாநாயகியினுடைய முகத்திலே போடுவதற்கு reflector–கள் என்று சொல்லி, பெரிய, பெரிய தட்டிகளைக் கொண்டு வா வேண்டும். அந்தத் தட்டிகள் எல்லாம் இங்கே சென்னையிலேயிருந்தும், பம்பாயிலேயிருந்தும் கொண்டு வருகிறார்கள்; Camera-க்களைக் கொண்டு வர வேண்டும். இப்பொழுதெல்லாம், இரண்டு Camera, மூன்று Camera என்றெல்லாம் வைத்துப் படமெடுக்கிறார்கள். ஒரு Camera 30 இலட்சம் ரூபாய், 35 இலட்சம் ரூபாய்; இவ்வளவு மதிப்புள்ள Camera-க்களுக்குப் பாதுகாவலர்களாக இரண்டு பேராவது விமானத்திலே வர வேண்டும்; புகைவண்டியிலே வர வேண்டும். எவ்வளவு செலவு பாருங்கள்?

பிற்பகல் 12–10

இப்படிப்பட்ட நிலையில். அந்தச் சுற்றுலா பூமியில், மலைகளின் இராணி என்று சொல்கிறீர்களே, அந்த உதகை நகரிலே ஏராளமான இடங்கள் இருக்கின்றன; நானும் காட்டத் தயாராக இருக்கிறேன் எனவே. தயவுசெய்து ஒரு Film City–ஐ ஏற்படுத்தித் தாருங்கள்; அதை



உங்களுடைய பெயரிலே வைக்க வேண்டுமென்றுகூட நான் ஆசைப்படுகிறேன். தயவுசெய்து நீலகிரி மாவட்டத்திற்கு அதைச் செய்து தாருங்கள் என்று பணிவோடு நான் உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 5 ஆண்டு காலம் அமைச்சராக இருந்தும்கூட செய்யாததை—நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கலைஞர் அவர்களைப் பார்க்கிறார்கள். நீங்கள் தைரியமாக அந்த cable car–ஐப் பற்றிச் சொல்லலாம்; சொல்லிவிடலாம். நிச்சயமாக அதைத் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. கோபாலன் அவர்கள், அவ்ருடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் கடந்த காலத்திலே அமைச்சராக இருந்தார் என்று சொல்லி...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோபாலன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** ‘Cable Car வசதிகளைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், தொடர்ந்து தரவில்லை’ என்று சொன்னார்கள். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட துறை. நிச்சயமாகக் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில், வருகிற டிசம்பர் மாதத்திற்குள்ளாக ஊட்டியில் Cable Car உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. போ. கோபாலன்:** அதற்கான எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே, மிக முக்கியமான ஒன்று. ஊட்டி நகரம் என்று சொன்னால், வரக்கூடிய பயணிகள் எல்லாம், ஊட்டியை மட்டுமே பார்த்துவிட்டு ஓடிவிடக் கூடிய நிலைமைதான் இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், தங்குவதற்கு 1,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று வாடகை வசூலிக்கக்கூடிய நிலையில், பயணிகளாக வந்தவர்கள் வேறு வழியில்லாமல் மேட்டுப்பாளையத்திற்கும், கோவைக்கும் ஓடக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. நம்முடைய அரசாங்கத்தின் மூலமாகப் பல்வேறு இடங்களிலே, ஊட்டி நகாம் மட்டுமல்ல; ஊட்டி என்பது, மேட்டுப்பாளையத்தைப்போல, காரமடையைப்போல,

[திரு. போ. கோபாலன்] [2006 ஆகஸ்ட் 28

இங்கேயிருக்கக்கூடிய Parrys Corner-ஐப்போல மாறிவிடக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. பக்கத்திலே, Parsen Valley இருக்கிறது; அவலாஞ்சி இருக்கிறது; Western Ghat இருக்கிறது; பல்வேறு இடங்கள், கோத்தகிரி இருக்கிறது; கொடநாடு இருக்கிறது; பைக்காரா இருக்கிறது; கல்லட்டி இருக்கிறது. பல்வேறு பார்க்கக்கூடிய இடங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக, 50 அறைகள், 20 அறைகள், 30 அறைகள் என்று நல்ல அறைகளை அமைத்தீர்களேயானால், ஊட்டியை விட்டுக்கூட பல்வேறு இடங்களைப் பார்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். வருபவர்கள் Botanical Garden போகிறார்கள்; தொட்டபெட்டா போகிறார்கள்; Boat House போகிறார்கள்; அவ்வளவுதான், ஊட்டியினுடைய கதை முடிந்துவிட்டது என்று எண்ணிவிட வேண்டாம். அற்புதமான இடங்கள்; நம்முடைய அருமைத் தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. சமீபத்திலேதான் நீங்கள் கோத்தகிரிக்குப் போய் வந்தீர்கள். எவ்வளவு அழகான இடம்; எவ்வளவு நிம்மதியான இடம்; பார்ப்பதற்கு எவ்வளவு ரம்மியமான இடங்கள்! அந்த இடங்களை சுற்றுலாப் பயணிகள் பார்ப்பதற்குக்கூட இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு இடத்தை மட்டும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கோத்தகிரி ரோடு அற்புதமாக இருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால், நம்முடைய மேட்டுப்பாளையத்திலேயிருந்து ஊட்டிக்குச் செல்லக்கூடிய ரோடு, முக்கியமான ரோடு. சகிக்கவே முடியாத நிலையில், கூடலூர் வரை மனிதனால் வண்டியிலேகூடச் செல்ல முடியாது. யார், யாரோ வருகிறார்கள்; helicopter-லே வருகிறார்கள். தேர்தல் நேரத்திலே helicopter-லே வந்து, கூடலூரிலே இறங்குகிறார்கள்; கோத்தகிரியிலே இறங்குகிறார்கள்; ஓட்டுக்களைக் கேட்கிறார்கள்; போய்விடுகிறார்கள். காரிலேகூட அவர்களால் வர முடியவில்லை. எனவே, எங்களுடைய அன்புத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களே, உங்களைப் பார்த்துப் பணிவோடு கேட்க விரும்புகிறேன். வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் அதிக அளவிலே ஊட்டிக்கு வர ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; ஆவலோடு இருக்கிறார்கள். ஒரு சிறிய விமானம், கோயம்புத்தூரிலேயிருந்து ஊட்டிக்குச் செல்வதற்கான ஏற்பாட்டை நீங்கள் செய்து தந்தீர்களேயானால், ஊட்டியினுடைய பொருளாதார நிலை, சுற்றுலா வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். அந்த விமான வசதியைச் செய்து தரும்போது, முதன்முறையாக நீங்கள் ஊட்டி நகருக்கு அந்த விமானத்திலே வந்திறங்க வேண்டும்



2006 ஆகஸ்ட் 28] [திரு. போ. கோபாலன்]

என்று எங்களுடைய ஆசையாக நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஊட்டி நகராட்சியினுடைய வருமானத்தைப் பெருக்கியாக வேண்டும். அந்த நகராட்சியினுடைய வருமானத்தைப் பெருக்கிட, தயவுசெய்து எங்களுடைய ஊட்டி நகராட்சியின் வருமானத்தைப் பெருக்கிட, ஒரு Check-post-ஐ வைத்து வாகன வரி வசூலிப்பதற்கான உரிமையை அந்த நகராட்சி மன்றத்திற்குக் கொடுத்தீர்களேயானால், நாங்கள் நிம்மதியாக இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதையும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

ஊட்டி நகரத்தை London-ஐப்போல, Paris-ஐப் போல, Switzerland-ஐப் போல அழகான நகரமாக மாற்ற முடியும். அதற்கான வழிவகைகளை, திட்டங்களை நீங்கள் தீட்டுங்கள்—இன்று சிங்காரச் சென்னை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, இந்தச் சென்னையிலே 10 மேம்பாலங்களைக் கட்டியதற்குப் பின்னால் இன்றைக்குக் காலையிலே ஒரு காரிலே வரும்பொழுது, என்னுடைய பையன் இங்கே வேலை செய்கிறான்; காரை ஓட்டி வரும்போது சொல்கிறான், இந்தப் பாலங்கள் மட்டும் இல்லையென்று சொன்னால், நாம் சட்டமன்றத்திற்குப் போவதற்குக்கூட இன்னும் ஒரு மணி நேரம் ஆகும் என்ற ஒரு நிலைமையைச் சொல்லிவிட்டு, அப்பா, இன்னும் ஒரு பத்து, பதினைந்து ஆண்டுகள் போய்விட்டால், சென்னையிலே நடமாடவே முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்றான். இத்தனை பாலங்கள் அமைத்தும்கூட இந்த நிலைமை. நீங்கள் செய்த சாதனைதான் இது என்பதை நான் சுட்டிக்காட்டி, அதுபோன்ற சிற்சில வசதிகளை ஊட்டி நகருக்கு நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஊட்டி நகரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார். ஊட்டியிலே ஒரு கால்வாய் ஓடிக்கொண்டிருக்கிறது. வாகனங்களை, டாக்சிகளை, ஆட்டோக்களை, லாரிகளை நிறுத்துவதற்கு ஊட்டியிலே இடமேயில்லை. இப்போது யார் வேண்டுமானாலும் ஊட்டிக்கு வந்து பார்க்கலாம். நடப்பதற்குக்கூட முடியாத நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. தலைவர் அவர்களே, அந்தக் கால்வாயை சிமென்ட் தளம் போட்டு மூடி, அதன்மீது ஆட்டோக்களையும், டாக்சிகளையும், மற்ற வண்டிகளையெல்லாம் நிறுத்தும் வாய்ப்பை ஏற்படுத்துவோமேயானால், சேரிங் கிராசிலிருந்து போட் ஹவுஸ் வரை

அந்தக் கால்வாய் போய்க்கொண்டிருக்கிறது; ஆயிரக்கணக்கான வண்டிகளை நிறுத்தினால், நிச்சயமாகப் பாதுகாப்பாகப் பயணிகள் செல்லக்கூடிய அருமையான பாதைகளைப் பார்க்க முடியும்; ஊட்டியை இரசிக்க முடியும் என்ற என்னுடைய எண்ணத்தையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஊட்டி என்று சொன்னால், சுற்றுலா என்று சொன்னால், தேயிலை முக்கியமான விஷயம். தேயிலை இருந்தால்தான் நாங்களும் அங்கே இருக்க முடியும். தேயிலைக்கு நல்ல சூழ்நிலை உருவானால், மக்கள் இருக்க முடியும், ஊட்டியும் இருக்க முடியும்; ஊட்டி இருந்தால்தான் சுற்றுலாப் பயணிகள் வர முடியும். கடந்த 10 ஆம் தேதி நம்முடைய இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் மாண்புமிகு கமல்நாத் அவர்கள் உங்களைச் சந்தித்தபோது, நீலகிரி மாவட்ட மக்களுக்குத் தேயிலைக்கு நீங்கள் என்ன செய்கிறீர்களோ, தமிழக அரசும் அதிலே சரி பாதிப் பங்கை நாங்கள் எடுத்துக்கொள்வோம் என்று சொன்னதைப் பார்த்து, நீலகிரி மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். உங்களைப் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். எனவேதான், நான் ஒன்றைப் பணிவான ஒரு வேண்டுகோளாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு விலை ஏறக்குறைய ஏறி, இறங்கிக் கொண்டிருக்கிறது. இங்கு எட்டு ரூபாய், எட்டரை ரூபாய் கிடைக்கிறது. சில காலக்கட்டங்களில் நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் என்று இருந்தது. எங்களால் தாங்கவே முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த காலத்தில் மானியமாகக் கொடுத்தார்கள். 25 ஏக்கரா, 30 ஏக்கரா, 50 ஏக்கரா, 100 ஏக்கரா வைத்திருந்தவர்கள்கூட மானியத்தைப் பெற்றுக்கொண்டு போனார்கள், இலட்சக்கணக்கிலே. 27 கோடி ரூபாய் மானியமாகக் கொடுத்தார்கள்.

எங்களுடைய அன்புத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களே, உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், ஏழை என்பவன் யார்? குறு விவசாயி என்பவன் யார்? சிறு விவசாயி என்பவன் யார்? ஐந்து ஏக்கராவுக்குக் கீழே வைத்திருப்பவன்தான் சிறு விவசாயி, குறு விவசாயி என்பதைத் தயவுசெய்து கொண்டு வாருங்கள், அறிவிப்புச் செய்யுங்கள். இன்று பணத்தை வாங்குபவன், அரசாங்கத்தினுடைய மானியத்தைப் பெறக்கூடியவன் 100 ஏக்கரா வைத்திருப்பவர்கூட மகன் பெயரிலே 25 ஏக்கர், மகள் பெயரிலே 25 ஏக்கர், மச்சான் பெயரிலே 25 ஏக்கர் என்று போட்டுவிட்டு, அந்தப் பணத்தையெல்லாம் மொத்தமாக வாங்கக்கூடிய நிலைமைதான் ஏற்பட்டது. எனவே, சிறு



விவசாயிகளுக்கு அந்தப் பயன் வரக்கூடிய வகையில், ஐந்து ஏக்கராவுக்குக் கீழே உள்ளவர்கள்தான் சிறு விவசாயி என்று தயவுசெய்து நீங்கள் அறிவிக்க வேண்டும் என்ற என்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்து நாங்கள் மிகப் பெரிய ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பது, பால் வளத்தைப் பெருக்குவதுதான். மிகச் சிரமப்பட்டுப் பெருக்குகிறோம். பாலாடைக் கட்டி—cheese தொழிற்சாலை, பசும்பாலால் தயாரிக்கக்கூடிய ஒரே தொழிற்சாலை தமிழ்நாட்டில் நீலகிரியில் மட்டும்தான் நடந்துகொண்டிருக்கிறது. விலை உயர்வு காரணமாகக் கடந்த ஆட்சியிலே, ஒரு ரூபாய் உயர்வு ஏற்படுத்திய காரணத்தினால் சற்று நட்டத்திலே இயக்கிக்கொண்டிருக்கிறோம். ஏறக்குறைய 90, 97 இலட்சம் ரூபாய் நட்டத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது. அதைக் காப்பாற்ற வேண்டிய கடமை இருக்கிறது. ஏனென்று சொன்னால், தேயிலைக்கு அடுத்து நாங்கள் 34,000 மக்கள் பசுக்களை நம்பித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டிலேயே நீலகிரியில் மட்டும்தான் பசும்பாலை மட்டும் பெறக்கூடிய ஒரு dairy-யை நாங்கள் பெற்றிருக்கிறோம். அதற்கான உதவியை நீங்கள் செய்து தர வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதிப் பிரச்சினையை நான் சுருக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஊட்டிதானே உங்கள் தொகுதி? (குறுக்கீடு) ஊட்டிதானே உங்கள் தொகுதி?

**திரு. போ. கோபாலன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு நேரம் ஊட்டியைப் பற்றித்தானே பேசினீர்கள்? (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. போ. கோபாலன்:** ஒரே ஒரு நிமிடம். இவ்வளவு நேரம் சுற்றுலா பற்றிச் சொன்னேன். இப்போது என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினைகளைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

இதய நோய், சிறுநீரக நோய் ஏற்படுகிறவர்கள், கோயம்புத்தூருக்கு ஓடி வரக்கூடிய நிலைமைதான் ஏற்படுகிறது. திடீரென்று இதய நோய் ஏற்பட்டால் இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் கோயம்புத்தூருக்கு வர வேண்டுமென்றால், வாய்ப்புகள் எல்லாம் ஏழைகளுக்கு இல்லை.

தயவுசெய்து இதய நோய்க்கான ஒரு தனி யூனிட்டை ஊட்டியிலே நீங்கள் ஏற்படுத்த வேண்டுமென்ற என்னுடைய மேலான வேண்டுகோளை நீலகிரி மக்களுடைய சார்பாக உங்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் H.P.F. தொழிற்சாலையை நாங்கள் நம்பிக்கொண்டிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை ஒரு சிறப்பான தொழிற்சாலையாக, மத்திய அரசாங்கத் தொழிற்சாலையாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையினுடைய X-ray film--களைத்தான் நம்முடைய சுகாதாரத் துறையிலே நாம் வாங்கிக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து அந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் X-ray film-களை நம்முடைய தமிழக அரசாங்கம் வாங்க வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அந்த film-களுக்குத் தமிழக அரசாங்கம் பெறக்கூடிய விற்பனை வரியைத் தயவுசெய்து இரத்துச் செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அது நட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே, இரத்துச் செய்ய வேண்டுமென்று மக்களின் சார்பாக நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போன மானியத்திலே நம்முடைய திருப்பூர் எம்.எல்.ஏ. அவர்கள் கேட்டார்கள், ஈழவர்கள், தீயாஸ் பிரச்சினைகளைப் பற்றிக் கேட்டார்கள். நீங்கள் விருந்துபோல் கொடுத்தீர்கள். ஓணம் பண்டிகைக்கு உங்களுக்கு விடுமுறை; நீலகிரி, கோவை மாவட்ட மக்களுக்கு விடுமுறை, அரசு விடுமுறை என்று சொன்னீர்கள். அந்த இரண்டு மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், கூடவே ஒரு மருந்தையும் நாங்கள் கேட்டிருந்தோம். அந்த மருந்தை நீங்கள் அறிவிக்கவில்லை. இந்த முறை நிச்சயமாக நீங்கள் அறிவிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

அந்த ஈழவர்களையும், தீயாஸ்களையும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலே, மலைவாழ் மக்கள் பட்டியலிலே், தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலே, தயவுசெய்து சேர்த்து அறிவிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், போன மாதம்கூட ஒரு பத்துப் பேர் பெற்றுவிட்டார்கள். கல்லூரிகளில் இடம் வாங்கிவிட்டார்கள். ஆனால், மற்றவர்களுக்குத் தரக்கூடாதா? பத்துப் பேருக்குத் தருவது, பத்துப் பேருக்கு இல்லை என்ற சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது, தலைவர் அவர்களே. தயவுசெய்து உடனடியாக ஓர் ஆணையை நீங்கள் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, புதிரி வண்ணான் என்று சொல்லி, 100 பேர், 200 பேர் கன்னியாகுமரியிலே வாங்கியிருக்கிறார்கள். அந்தச் சான்றிதழை, நீலகிரியிலே 100 பேர் இருப்பார்கள், அவர்களுக்கும் நீங்கள் தர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

மாவட்ட ஆட்சித் தலைவர் என்பவர், நீலகிரி மாவட்டத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய, முழுமையாக ஆட்சி செய்யக்கூடியவர்தான் ஆட்சித் தலைவர். எங்களுடைய மாவட்டத்திலே வித்தியாசமான ஒரு சூழ்நிலை. மற்ற இடங்களிலே எப்படியிருக்கிறதோ; ஆனால், காடுகள் சூழ்ந்த நீலகிரி மாவட்டத்தில் D.F.O. இருக்கிறார். அந்த D.F.O. அவர்கள் வனத் துறையைச் சார்ந்தவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவருக்குக்கீழே வர வேண்டும் என்பது உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. போலீஸ் இருக்கிறது, எஸ்.பி. அவர்கள் கலெக்டருக்குக் கீழே இருக்கிறார்கள். கூப்பிட்டால் ஓடி வருகிறார்கள். ஆனால், வனத் துறையினர் தனித்தியங்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. நீலகிரியை நீங்கள் முக்கியமாகக் கருத்திலே கொண்டு, கட்டாயமாக வனத் துறையினருடைய அன்றாட டைரியை, கலெக்டர் பார்க்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற என்னுடைய மேலான ஆசையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்திலே நம்முடைய Finance Minister சிதம்பரம் அவர்கள், 100 கோடி ரூபாய்த் திட்டத்தைத் தேயிலைக்காக அறிவித்திருக்கிறார்கள். தேர்தல் வந்துவிட்ட காரணத்தால், அதைப் பயன்படுத்த முடியாமல் இருந்துகொண்டிருக்கிறது. சென்ற மத்திய பட்ஜெட்டிலே அறிவித்தார்கள். அந்தப் பணத்திலே நீங்கள் எப்படி நம்முடைய உரிமையை--3.5 ஆயிரம் விவசாயிகள் இருந்துகொண்டிருக்கிறோம். அதனுடைய பயனை நாம் கேட்டால், அதிலே 25 கோடி ரூபாய், 30 கோடி ரூபாய் நமக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது—டாக்டர் கலைஞர் அவர்களே, நீங்கள் நினைத்தால், நாம் அதிலே சிறிய உதவி செய்து, ஒரு சிறிய விவசாயி, ஐந்து ஏக்கர் என்று சொன்னால், ஒரு ஏக்கராவுக்கு அவர்கள் கடந்த காலத்திலே கொடுத்தார்களே, நான்காயிரத்து எண்ணூறு ரூபாய், நீங்கள் பத்தாயிரம் ரூபாயாவது தயவுசெய்து தர வேண்டுமென்பதை என்னுடைய பணிவான வேண்டுகோளாக வேண்டிக் கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்புத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞருக்கும்

நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்கு முதன்முறையாக அறிமுகப்படுத்திய என்னுடைய இனமானக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களை நான் வணங்கி, அதற்கும் மேலாக, கல்விக்கென்று ஓர் அறக்கட்டளையை நிறுவி—அனைத்து மக்களுக்கும் இலவசமாகக் கல்வி அளிப்பதற்குக் கல்வி அறக்கட்டளையை நிறுவிய சரஸ்வதி அம்மையாரையும் நான் வணங்கி, அதற்கும் மேலாக, இந்த இந்தியத் திருநாட்டில் ஒரு தமிழ் மகனாக, மத்திய சுகாதார அமைச்சராக, உலகம் போற்றும் அளவிற்கு இருக்கக்கூடிய என்னுடைய சின்ன அய்யா அவர்களையும் நான் வணங்கிக்கொண்டு, அதற்கும் மேலாக, என்னைப் பெற்றெடுத்த தாய், தந்தை, தாய் பாப்பாத்தி அம்மையாரையும், என்னுடைய தந்தை பெரியசாமி அய்யாவையும் வணங்கி, பாட்டாளி மக்கள் கட்சியை வழிநடத்திச் செல்லக்கூடிய தலைவர் ஜி.கே.எம். அவர்களையும் பாராட்டி, வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

தமிழகத்தில் ஏழையெளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் இன்று ஒரு எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள், ஏழைகள் வாழ முடியும், எந்த நேரமும் அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்ற நிலையை ஏற்படுத்திக் கொடுத்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும் நான் வணங்கிக்கொண்டு, அதோடு, இளைஞர்களுக்கு ஒரு தலைவனாகவும், இளைஞர் படைத் தளபதியாகவும் இருக்கின்ற அண்ணன், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் நான் வணங்கிக்கொண்டு, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் பெருவாரியாக 13,560 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த என்னுடைய தொகுதி மக்களையும் நான் வணங்கி, தாரமங்கலம் தொகுதி மக்களுக்கும் நான் என்னுடைய அன்பான நன்றிக் கடனைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு எப்பொழுதும் நன்றிக் கடன்பட்டவனாக இருந்திடுவேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல்' 12–25

அதோடு, சேலம் மாவட்டத்தில் ஒரு அரசியல் ஆசானாக, அனைத்து மக்களையும் அரவணைத்து, இன்று வேளாண்மைத் துறை



அமைச்சராக இருக்கக்கூடிய அண்ணன் வீரபாண்டியார் அவர்களையும் நான் வணங்கி, அதோடு, மாநிலத் துணைப் பொதுச் செயலாளராக இருந்த ஓமலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தமிழரசு அவர்களையும் நான் நன்றியோடு வணங்கிக்கொண்டு, நடந்து முடிந்த தேர்தலில் ஜனநாயகத் தருமத்தின்படி, ஜனநாயகத் தருமத்தை வெல்ல வைத்த காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, தி.மு.க., கம்யூனிஸ்ட் அனைத்துக் கட்சிகளினுடைய பொறுப்பாளர்களையும், அனைத்துக் கட்சிகளையும் நான் நன்றிக் கடனோடு வணங்குகிறேன்.

எனது தொகுதியில் அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்திற்கு, அந்தச் சுற்றுலாத் துறைக்கு ரூ. 20 இலட்சம் வழங்கியதை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் இன்று பார்த்தேன். அதற்காக இந்த முத்தான முதலமைச்சருக்கு நான் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே தாரமங்கலத்தில், கைலாசநாதர் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். ஆனால், அதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கோயிலின் பின்புறம் கோயில் நிலத்தையே பஸ் நிலையத்திற்குத் தந்திருக்கிறார்கள். ஆனால், இன்று நெரிசல் இருக்கிற காரணத்தினாலேயும், அந்த மூன்று குளங்களும் அசுத்தமாகி, அதில் இந்தக் கோயில் பக்தர்கள் குளிக்கக்கூடிய நிலைமை இல்லை. அந்த பஸ் நிலையத்தைச் சந்தையில் அமைத்து, சந்தைக்கு வேறு இடம் கொடுத்தால், அந்தக் கோயில் சுற்றுலாத் தலம் இன்னும் சிறப்பாக இருக்குமென்றும், அதேபோல் ஒரு தினசரி மார்க்கெட்டிற்கும், ஒரு வேறு இடம் மாற்றிக் கொடுக்க வேண்டுமென்றும், உழவர் சந்தை அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், மழையையே நம்பியிருக்கக்கூடிய விவசாயிகள். ஏழைகள். அந்த ஏழைகள் பக்கத்து மாநிலத்தில் பிழைப்புத் தேடிச் செல்கிறார்கள். அங்கு பிழைப்பும் கிடைக்கவில்லை. ஆனால், அவர்கள் கெடுவதைவிட அந்தக் குழந்தைகள் கெடுகிறார்கள். பாவம் அந்த மக்கள், படிக்க முடியவில்லை. அந்தக் குழந்தைகளையும் படிக்க வைக்க முடியவில்லை. ஏனென்று சொன்னால், அதில் நான் ஒருவன் படிக்காதவன். படிக்காதவனாக இருந்த என்னை, மருத்துவர் அய்யா இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பியதுபோல, இந்த மாமன்றத்திலுள்ள இந்த முத்தான தமிழ் அறிஞர், அந்தக் குழந்தைகளை விடுதியில் தங்க வைத்து, அவர்களை மேல்நிலைப் படிப்பு வரை படிக்க வைக்க வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது மேட்டூர் அணையில் இருக்கும் உபரி நீர் கடலில் போய்க் கலக்கிறது. எவ்வளவு கடலில் கலக்கிறது என்று அதை அளவு எடுக்க வேண்டும். அதை தாரமங்கலம் தொகுதிக்குக் கால்வாய்மூலம் கொண்டு வந்தால், அந்தத் தண்ணீரை ஏரியில் நிரப்பினால் குடிநீருக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம். அதோடு, ஓமலூர், எடப்பாடி, வீரபாண்டி, சங்ககிரி ஆகிய அனைத்துத் தொகுதிகளிலேயும், 6,000 ஏக்கர் பயன்பெறும். அதனால் அந்த ஏழை மக்களும் அங்கேயே வாழ்வார்கள். அடுத்த மாநிலத்திற்கும் செல்லமாட்டார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியில் வீணாகப் போகும் தேங்காய் மட்டையை எடுத்து, அவர்கள் நார் ஆக்கி, அதைக் கயிறு ஆக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது கெட்ட காலமாக, பிளாஸ்டிக் கயிறு வந்ததனால், அவர்கள் எங்கேயும் கொண்டு போய் விற்க முடியவில்லை. இந்த அரசு அதைக் கருத்திற்கொண்டு பக்கத்து மாநிலமான, கேரளாவில் கால் மிதி, படுக்கை விரிப்பு, பஸ்ஸுக்கு இருக்கை, இப்படியெல்லாம் விதவிதமாகச் செய்து, ஏற்றுமதி செய்கிறார்கள். அதற்கு வருமானமே அதிகமாக வருகிறது என்று அனைவரும் சொல்கிறார்கள். அதற்கு ஒரு குழுவை நாம் அமைத்து, அந்தக் குழுமூலம் தமிழகத்திற்கும் அதை நாம் செய்து கொடுத்தோம் என்றால், அந்த ஏழை மக்கள் நல்ல முறையில் வாழ்வார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

பிற்பகல் *12–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவரால் மானியக் கோரிக்கைக்கெல்லாம் வர முடியாதுபோல இருக்கிறது.

**திரு. பெ. கண்ணன்:** எனது தொகுதியில், மேச்சேரியில், பூனாண்டியூர் பகுதியில் காவிரி ஆற்று ஓரமாகக் குடியிருக்கக்கூடிய மக்கள், பள்ளிக்கூடம் செல்பவர்கள், கூலி வேலைக்குச் செல்பவர்களுக்கு, அந்தத் தடத்தில் தண்ணீர் வந்துவிட்டால் அரித்து விடுகிறது. அதனால் அவர்கள் பரிசலிலும் செல்ல முடியவில்லை, நேரம் கடந்துவிடுகிறது. அதனால், அதற்கு அரசுமூலமாகத் தேவையான ஏற்பாட்டினைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல், ஏரிப் படுகைகளும் ரோட்டை அரிப்பதால், அதற்கும் இந்த அரசு தேவையான ஏற்பாட்டைச் செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் அணைப் பூங்காவைக் காணவும், அங்குள்ள தண்ணீரைக் காணவும் அந்த இடத்திற்கு டூர் வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, நீங்கள் ஒரு சுற்றுலாத் தலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அந்தப் பூங்காவினை விரிவுபடுத்துவதற்காக நிதியும் ஒதுக்க வேண்டும். அதேபோல், ஏற்காட்டிலே இருக்கக்கூடிய சுற்றுலாத் தலத்தை மேம்படுத்திட வேண்டும், விரிவுபடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூரில் பொருட்காட்சி ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, குழந்தைகளும், மற்றவர்களும் மகிழ்ச்சியோடு இருக்க ஏற்காட்டில் 100 ஏக்கர் நிலத்தை எடுத்து, M.G.M. போன்ற மனமகிழ் பூங்காக்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் சுப்பிரமணிய சிவா நினைவு மண்டபத்தை அமைப்பதுபோல், இன்னும் 85 வயது, 90 வயது என்று, இன்னும் இருப்பவர்களுக்கு, அந்தத் தியாகிகளுக்கு நாம் என்ன உதவி செய்து கொடுக்க வேண்டுமோ, அதை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவ்வளவுதான். கண்ணன், பக்கத்திலே இருப்பவர்கள் பேப்பர் கொடுத்தால் வாங்காதீர்கள்.

**திரு. பெ. கண்ணன்:** பத்திரிகையாளர்கள். நிகழ்ச்சிகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். ஆனால், உடனுக்குடன் அந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கக்கூடிய அந்தப் பத்திரிகையாளர்கள் சில இடங்களில் பிரச்சினைகளில் மாட்டிக்கொள்கிறார்கள். அத்தனைப் பிரச்சினைகளிலும் மாட்டிக்கொண்டாலும், அவர்களுக்குச் சம்பளம் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய குழந்தைகளைக்கூட பள்ளிக்கு அனுப்பி வைக்க முடியாத சூழ்நிலையில்கூட சில பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய பா.ம.க. தலைவர் ஜி.கே.எம். அவர்கள் இதே மன்றத்தில் பத்திரிகையாளர்கள் நலனைக் கருதி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோ.க. மணியா, ஜி.கே.எம்–ஆ? (குறுக்கீடு) கோ.க. மணியா, ஜி.கே.எம்–ஆ?

**திரு. பெ. கண்ணன்:** ஜி.கே.எம். இந்த முதலமைச்சர் முன்பு அதை வேண்டுகோளாக வைத்துள்ளார். பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்குமாறு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம். அதோடு, ஓய்வூதியமாக அவர்களுக்கு மாதம் ஐந்தாயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல, தலைமையில் இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களுக்கும் அதேபோலக் கொடுக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகக் கேட்டுக்கொண்டு, அவர்களுக்கு எங்கு சென்றாலும் இலவச பாஸ் வழங்க வேண்டும். தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்வதற்கு இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகத் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ். (குறுக்கீடு) இன்றைக்கு உங்கள் பேச்சு எல்லாப் பத்திரிகைகளிலும் வந்துவிடும். ஏனென்றால், பத்திரிகையாளர்களைப் பற்றி நிறையப் பேசிவிட்டீர்கள்.

**திரு. பெ. கண்ணன்:** இங்கே, இந்த மாமன்றத்தில் நான் முதன்முதலாகக் கன்னிப் பேச்சுப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில், செய்தி, விளம்பரம், சுற்றுலாத் துறை சம்பந்தமாகப் பேசுவதற்கான வாய்ப்புக் கிடைத்தமைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முதலில் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

இந்தியத் திருநாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற நான்கு தூண்களில் பத்திரிகை ஜனநாயகம் ஒரு தூணாகும். இப்பத்திரிகை



ஜனநாயகம்மூலம்தான், ஒரு நாட்டின், ஒரு ஆட்சியின் ஆக்கபூர்வப் பணிகள், மக்களுக்கான நலத் திட்டங்கள், அறிவிப்புகள், தேச ஒற்றுமை, மத நல்லிணக்கம், கோடிக்கணக்கான மக்களுக்குச் சென்றடையும் மிக முக்கியமான துறை செய்தித் துறையாகும். இங்கு நமது சட்டப் பேரவையில் பேசப்படுபவை, விவாதிக்கப்படுபவை, அறிவிக்கப்படுபவை உடனே மக்களுக்குச் சென்று சேர்கின்றன என்பதும் இத்துறையின் சிறப்பான செயல்பாட்டினால்தான்.

இத்துறையில் ஈடுபட்டு வரும் பத்திரிகையாளர்களுக்கு உரிய சலுகைகள், சம்பளம், குடும்ப உதவித் திட்டம், ஓய்வூதியம், புகைப்பட நிபுணர்களுக்குப் புகைப்படக் கருவிகள் வாங்குவதற்கான வங்கிக் கடன் உதவி, இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்து அவை உயர்த்தப்பட வேண்டியுள்ளன. உண்மைச் சம்பவங்களை வெளியுலகிற்குக் கொண்டு வர, இத்துறையில் உயிரையும் பணயம் வைத்து இப்பணிகளில் ஈடுபடுபவர்களைப் பாதுகாத்திடும் சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோருகிறது.

செய்தித் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 8–ல், பத்திரிகையாளர்களுக்கு இரயில் பயணத்தில் 50 சதவிகிதம் கட்டணச் சலுகை அளிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மூன்றில் ஒரு பங்குதான், 30 சதவிகிதம் மட்டுமே வழங்கப்படுகிறது. மீண்டும் மத்திய அரசை அணுகி, 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டுகிறேன்.

1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை கலைஞர் ஆட்சியில் சிறு பத்திரிகைகளுக்குப் பாரபட்சம் இல்லாமல் அரசு விளம்பரங்கள் வழங்கப்பட்டு வந்தன. இடையில், கடந்த 2001 முதல் 2006 வரை இருந்த அ.தி.மு.க. ஆட்சியில், சிறு பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் மறுக்கப்பட்டன. இதனால் அப்பத்திரிகைகள் மிகுந்த சிரமத்திற்குத் தள்ளப்பட்டன. எனவே, கலைஞர் தலைமையிலான அரசு மீண்டும் சிறு பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுத்து, அவற்றை ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

பத்திரிகையாளர்கள், குறிப்பாகக் கிராமப்புறப் பத்திரிகையாளர்கள், நிருபர்கள், புகைப்பட நிபுணர்கள், தொலைக்காட்சி நிருபர்கள், வார இதழ்களின் நிருபர்கள் அனைவருக்கும் நகர்ப்புறப் பத்திரிகையாளர்களைப்போல அடையாள அட்டை, பஸ் பாஸ், வீட்டுமனை, குடும்ப ஓய்வூதியம், பத்திரிகையாளர்கள் இறந்தால்

நிவாரண உதவி, வாகன 'Press' sticker, ஒரு நிறுவனத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தால் அங்கீகார அட்டை, ஆகியவை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மேலும், மாவட்ட அளவில் குடியிருப்பு வசதி, பத்திரிகையாளர்களுக்கான நல வாரியம் அமைத்திட வேண்டுகிறேன்.

பெண் பத்திரிகையாளர்கள் பிரச்சினையை ஆய்வு செய்ய, தனி கமிட்டி அமைத்திடுமாறு வேண்டுகிறேன்.

இதே கொள்கைக் குறிப்பு, பக்கம் 10–ல், பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டுமனை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக இதே செய்தி இங்கு படிக்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக ஏராளமானோர் பணியில் சேர்ந்துள்ளனர். அவர்களுக்கு வீட்டுமனை வழங்க அறிவிப்பு வெளியிட வேண்டுகிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. அவர்களை அனைத்துப் பேருந்துகளிலும் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

சாலை விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க, சாலையோரங்களில் அரசு சார்பில் தட்டி போர்டு விளம்பரங்கள் அமைக்கப்பட வேண்டும்.

எய்ட்ஸ் போன்ற ஆட்கொல்லி நோய்களைத் தவிர்க்க, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு முகாம்களும், சுவரொட்டிகளும் அமைக்கப்பட வேண்டும்.

சிக்குன்குன்யா போன்ற வைரஸ் தாக்குதல் நோய் சம்பந்தமாகவும் சுவரொட்டிகள், தட்டி போர்டுகள், விழிப்புணர்வு முகாம்கள் போன்றவை அரசு சார்பில் அமைக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் 12 இலட்சம் பேர்களுக்கு வழங்கப்படுவதைப்போல, அச்சக ஊழியர்கள் 2,500 பேர்களுக்கு அரை நாள் சம்பள விடுப்பு வழங்கிட வேண்டும். அரசு ஊழியர்கள் 5 நாட்கள் வேலை முறை அச்சக ஊழியர்களுக்கு அமலாக்கப்பட வேண்டும். அச்சகத்தில் பணிபுரியும் நூல் கட்டுனர் போன்றவர்களுக்கு 5 சதவீதம் ஊதியம் வழங்கிட வேண்டும். பார்வையற்றோர், ஊனமுற்றோர்க்கு செய்மானத் திறனை 50 சதவீதமாகக் குறைக்க வேண்டும். சிறப்பு ஊதியம் 75 ரூபாய் என்பதிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும்.



பிற்பகல் 12–40

சுற்றுலாத் துறை என்பதில் நம் அரசு கூடுதல் கவனம் செலுத்திட வேண்டி உள்ளது. சுற்றுலாத் தலங்களில் இன்றைக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், வெளி மாநிலச் சுற்றுலாப் பயணிகளின் வருகைதான் அதிகமாகக் காணப்படுகின்றது. உள்நாட்டில் நம் கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மக்கள், மாணவர்கள் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும்போது இப்பயணிகளுக்குப் பேருந்து வசதி, உணவு அருந்தும் இடம், குடிநீர் வசதி, தங்கும் இடங்கள், இவை கடந்த 10, 20 ஆண்டுகளுக்கு முன்னால் எந்த நிலையில் இருந்தனவோ, அந்த நிலையில்தான் தற்பொழுதும் தொடர்கிறது. எனவே, இவற்றிற்காக உடனடியாக அரசு புனரமைப்புகளைச் செய்து பணிகளைச் செய்திட வேண்டுகிறேன்.

நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கங்கள், தேச ஒற்றுமைக்காக உயிர் நீத்த சுதந்திரப் போராட்டத் தியாகிகள், இவர்களது வாழ்க்கை வரலாறு சுற்றுலாத் தலங்களில் இடம் பெற வேண்டும். வரலாற்றுப் பாடங்களை இதன்மூலம் உணர்த்திடலாம்.

அதேபோல், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், பெண்கள், இப்படி வருகிறவர்களுக்கு உரிய வழிகாட்டுதலுக்கு, ஆண்கள், பெண்கள் என்று கூடுதலாக வழிகாட்டிகளை அரசு கொண்டு வர வேண்டுகிறோம். பல நேரங்களில் சுற்றுலாப் பயணிகள், பெண்கள் கடத்தப்படுவது, அதேபோன்று பாலியல் பலாத்காரம் போன்ற நிலைகளுக்கு உள்ளாக்கப்படுவது போன்றவற்றைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

மதுரை, தஞ்சாவூர், குற்றாலம், குமரி, மாமல்லபுரம், நீலகிரி, கொடைக்கானல் போன்ற தென்னிந்தியச் சுற்றுலாவினால் தமிழ்நாடு வளர்ந்து வந்திருக்கிறது. உலகச் சுற்றுலா என்பது சமூகப் பொருளாதாரப் பின்னணிகளான வேலைவாய்ப்பை உருவாக்குதல், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல், வறுமையை ஒழித்தல், அமைதியைப் பாதுகாத்தல் போன்றவற்றைப் புரிந்துகொள்வதில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விமானப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்துமூலமாகச் சுற்றுலா வளர்ச்சியை மேன்மேலும் உருவாக்க முடியும். இந்த விஷயங்களில் தமிழகத்தைவிட கேரளா முன்னணியில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, தமிழகத்தைத் தாண்டி சுற்றுலாப் பயணிகள் கேரளாவிற்குச் செல்கின்றனர். ஆகையால்தான், சுற்றுலாப் பயணிகளைத் தமிழகத்திலே

கவரக்கூடிய அளவிலான திட்டங்களை உருவாக்க வேண்டும். இந்தியாவில் சுற்றுலாப் பயணிகள் வருகையின்மூலமாக 32 ஆயிரம் கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்திருக்கின்றது. எனவே, இதைத் தக்க வைத்துக்கொள்கின்ற வகையிலே தமிழ்நாட்டில் பழைய கலாச்சாரத்தைப் பாதுகாத்து, நடனம், பாடல்கள் போன்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் கவனம் செலுத்த வேண்டும். உள்ளூர், வெளியூர் சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வர வாய்ப்புக் கிடைக்கும். வெளிநாடுகளிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வர வசதியாக விமானப் போக்குவரத்து வசதியை இந்தத் துறை செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, தற்பொழுது சுற்றுலாத் திட்டங்களை உருவாக்கி, அவற்றை ஊக்குவிக்க வேண்டும். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஒரு சுற்றுலாக் கிராமமாக அறிவிக்கத் தகுதியான எல்லா வாய்ப்புகளும் உள்ளன. சர்வதேசப் பயணிகள் வந்து தங்கி, சுற்றுலா மையங்களைப் பார்த்து, ரசிக்க வசதியாக விமானப் போக்குவரத்து அரசின்மூலம் செய்து தரப்பட வேண்டும்.

குமரியில் தொடங்கி, கடைக்கோடியான சிவலோகம் வரை குமரிக் குற்றாலம் திற்பரப்பு நீர்வீழ்ச்சி, பேச்சிப்பாறை அணை, ஆசியாவிலேயே அதிக நீளமான மாத்தூர் தொட்டிப் பாலம், உலகச் சுற்றுலா மையமான ஜெயின் மலைக் கோயில், கடையால் படகுத் துறை பத்மநாபபுரம் கோட்டை, முட்டம் போன்ற சுற்றுலா மையங்களைச் சிரமமின்றி சுற்றுலாப் பயணிகள் பார்வையிட வசதியாக இம்மையங்களை இணைத்து, முதற்கட்டமாக Circular Bus வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

குமரிக் குற்றாலம் என்று அழைக்கப்படக்கூடிய திற்பரப்பு நீர்வீழ்ச்சியில் ஒருபோதும் தண்ணீர் குறைவதில்லை. எனவே, அரசு சார்பிலே தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின்பொழுது சாரல் விழா நடத்தி, பயணிகளைக் கவரவும், வருமானம் ஈட்டித் தரவும் வாய்ப்பளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கொச்சியில் எவ்வாறு Bolghaty கொட்டாரம் சிறந்த சுற்றுலா இடமாக மாற்றப்பட்டுள்ளதோ, அதேபோன்று பேச்சிப்பாறையில் 8 தீவுகள் உள்ளன. அதனுடைய புவியியல் தன்மையைக் கணக்கில் கொண்டு, அந்தத் தீவுகளுக்குப் படகுச் சவாரியும் பொழுதுபோக்கிற்கான மான் பூங்கா மற்றும் பயணிகள் தங்குவதற்கான கட்டமைப்பு வசதிகளையும் செய்து தர வேண்டுகிறேன்.



பேச்சிப்பாறை அணை கட்டி 100 ஆண்டுகள் ஆகின்றன. இந்த நூற்றாண்டு விழாவை அரசு விழாவாகக் கொண்டாடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பேச்சிப்பாறை அணையில் நீர்ப்பரப்புப் பகுதி மணலால் மூடியுள்ளது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்பொழுது, பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர்தான் தற்போதும் அமைச்சராக உள்ளார். அந்த மணலைத் தூர் வாரி தண்ணீர் அங்கே தேங்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம் எனக் கூறப்பட்டிருந்தது. அந்த வகையிலே, தற்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், அந்த மணலை அரசு கொள்முதல் செய்து, மணல் பற்றாக்குறையைத் தவிர்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** பேச்சிப்பாறை அணை சுற்றுலா மையமாக மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரசித்தி பெற்ற காளிகேசவன் கோயில், முத்துக்குழி வயல், கோதையாறு நீர் மின் நிலையம், பெருஞ்சாணி அணை போன்றவற்றை சுற்றுலா மையங்களாக அறிவிக்க வேண்டுகிறேன்.

அதேபோன்று, தமிழகச் சுற்றுலா மையங்களில் சிறந்த ஒன்று ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி. இந்நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் வசதி, உணவு வசதிகள் போதுமானவையாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** அதேபோல், தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்கு உட்பட்ட அனுமன்தீர்த்தம் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கின்றனர். அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டுகிறேன்.

வேலூர் மாவட்டம், வேலூர் சிப்பாய்ப் புரட்சி நடைபெற்ற இடம். அந்த இடத்தில் இருக்கும் வேலூர் கோட்டையைச் சுற்றுலா மையமாக்க வேண்டுமெனக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன். 7 நிமிடங்கள்தான். அவ்வளவுதான் நீங்கள் சுற்றுலாவிலே சுற்றிப் பார்க்க வேண்டும். (சிரிப்பு)

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நன்றியைத் தெரிவித்து, ஒரு சில கருத்துகளை இந்த அவையின்முன் வைக்க விரும்புகின்றேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில், இந்தியா சுற்றுலாவில் 5–வது இடம் வகிக்கிறது என்றும், சோஷலிஸ்ட் சீனா இன்னும் 15 ஆண்டுகளில் உலகத்தில் முதல் இடத்தில் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றும் சொல்லியிருக்கின்றார்கள். அந்த நிலையில், இந்தியாவில் இன்றைக்குப் பல்வேறு பயங்கரவாதங்கள் காஷ்மீர் போன்ற இடங்களில் நடந்துகொண்டிருக்கின்றபோதே, இந்தியா 5–வது இடத்தை வகிக்கிறது என்பது நல்ல செய்தியாகும்.

அதைப்போல, தமிழ்நாட்டிலும் சுற்றுலாவைப் பற்றி இந்த அரசு பல்வேறு முறைகளில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக, 2006–2007 ஆம் ஆண்டுக்கு சுற்றுலாவுக்கென 830 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கக்கூடிய ஓர் அம்சமாகும்.

அதைப்போல, நம்முடைய தமிழ்நாட்டில் கடற்கரைச் சாலை என்பது மிக நீளமானது. இந்தச் சாலையைப் பயன்படுத்தி, பல்வேறு சுற்றுலாக்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. குறிப்பாக, மெரினா கடற்கரை உலகத்திலே மிக முக்கியமானது, அதைப்போல, மேலும் பல இடங்களில், குறிப்பாக, அய்யன் திருவள்ளுவர் சிலை கன்னியாகுமரியில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதைப்போல, தஞ்சை மாவட்டம், பேராவூரணிக்கு அருகேயுள்ள மனோரா மிகப் பிரசித்தி பெற்ற ஒரு இடமாகக் கருதப்படுகின்றது. அந்த இடத்தைச் சிறப்புக் கவனம் செலுத்திப் பராமரித்து, சுற்றுலாத் தலமாக உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கற்பனையில் உருவானதுதான் முக்கொம்பு. அதைப்போல, வள்ளுவர் கோட்டம், அய்யன் திருவள்ளுவர் சிலை. கரிகாலன் கட்டி வைத்த கல்லணை என்பது. இன்றைக்கு அதனுடைய தேவைக்கேற்றபடி கிடையாது.



ஆகவே, அந்தக் கல்லணையை முக்கொம்புபோல் உருவாக்க வேண்டுமென்று முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு இந்த நோத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், அது கரிகால் சோழன் கட்டிய கல்லணை. இந்தச் சோழன் அதைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பாரம்பரியச் சின்னங்களான பல்வேறு சின்னங்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார்கோவில், சித்தன்னவாசல், திருமயம் கோட்டை, இவையெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டிய பாரம்பரியச் சின்னங்களாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதை ஏற்று இருப்பதற்கு நன்றி தெரிவித்து, அதே நேரத்தில், புதுக்கோட்டையில் புதுக்குளம் என்றவொரு குளம் இருக்கின்றது. அது மன்னர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு குளம், குடிதண்ணீருக்காக உருவாக்கப்பட்ட ஒரு குளம். இப்போது அந்தக் குளத்தைச் சுற்றுலாத் தலமாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். அது நகராட்சியினுடைய பராமரிப்பில் இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் குளத்தைச் சுற்றுலாத் துறை ஏற்றுக்கொண்டு, அங்கே சுற்றுலாத் தலம் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாடு ஓட்டல்கள் என்று வருகின்றபோது, ஒன்றிரண்டை மட்டும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு ஓட்டல் என்று புதுக்கோட்டையில் ஒரு ஓட்டல் கட்டியிருக்கின்றார்கள். அதில் யாரும் போவதும் கிடையாது, வருவதும் கிடையாது. 5 ஆண்டு காலமாக அந்த ஓட்டல் பூட்டியே இருக்கின்றது. சம்பந்தம் இல்லாத ஒரு இடத்தில் கட்டி வைத்திருக்கின்றார்கள். அதேபோல், திருமயத்திற்குப் பக்கத்தில் ஒரு ஓட்டலை அந்த மாதிரிப் பல ஆண்டுகளாகப் பூட்டி வைத்திருக்கின்றார்கள். இந்த மாதிரி ஓட்டல்களையெல்லாம் கண்காணித்து, அவற்றைப் புனரமைப்புச் செய்து, அவை சிறப்பாக நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–50*

அடுத்து, பத்திரிகையாளர்கள். பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு விவாங்களை இங்கே குறிப்பிட்டார்கள். பத்திரிகையாளர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுக்க இந்த அரசு தயங்காது என்பது எனக்குத் தெரியும். குறிப்பாக, நம்முடைய

முதல்வரே பத்திரிகையாளர் என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பார். ஆகவே, பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில் சென்ற ஆட்சியில் கூண்டிற்குள் நிறுத்தி வைத்ததை நாம் பார்த்தோம். சில பேர் நீதிமன்றங்களுக்குப் போய், தங்களைப் பாதுகாத்துக்கொண்டதை நாம் பார்த்தோம். ஆனால், இந்த அரசு அந்தப் பத்திரிகையாளர்கள் சம்பந்தமாகக் கவனத்தோடு பரிசீலித்து, அவர்களுக்கு வழங்கிய வீடுகளைச் செப்பனிடவும், புது வீடுகள் கட்டிக் கொடுக்கவும், மனையிடம் கொடுக்கவும், சம்பளத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசினுடைய நலத் திட்டங்கள் என்று வருகின்றபோது, அவை செய்தியாக்கப்பட வேண்டும். கடந்த வாரத்தில் கவனித்தபோது, இராஜஸ்தானிலே உடன்கட்டை ஏறியது என்ற செய்தி ஞாபகத்திற்கு வருகிறது. சென்ற வாரம்கூட அது நடந்திருக்கின்றது. ஆனால், தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படுவதில்லை. காரணம், பெரியார் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா வளர்த்த கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையிலே இங்கே அந்த மாதிரிச் சம்பவங்கள் எல்லாம் நடைபெறுவதில்லை. பகுத்தறிவுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு துறையையே ஏற்படுத்தி இருக்கின்றார்கள். அந்தத் துறைக்கு இந்தச் செய்தியை, அந்தப் பகுத்தறிவுக் கொள்கையை மக்களிடத்திலே பரப்புவதில் கவனம் செலுத்திப் பரப்ப வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல பத்திரிகையாளர்களை எடுத்துக்கொண்டால், சென்னையில் மட்டும் 608 பேர் இருப்பதாகவும், மாவட்டங்களில் 82 பேர் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. நான் முன்னாலே சொன்ன மாதிரி, அவர்களுக்கு வீடுகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதோடு, விவசாயத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட ஒரு தலைவர், கர்நாடக மாநிலத்திலிருந்து இங்கே தமிழ்நாட்டிற்கு வந்து, தமிழ்நாட்டினுடைய விவசாயத் தொழிலாளர்களை, விவசாயிகளை ஒன்றுபடுத்திய ஒரு தலைவர் திரு. பி. சீனிவாச ராவ் அவர்கள். அவர்களுக்கு ஒரு நினைவிடம் திருத்துறைப்பூண்டியிலே கட்ட வேண்டும் என்று பல ஆண்டுகளாக நாங்கள் கோரி வருகின்றோம். அதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே,



திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுக்கு ஒரு நினைவிடம் கட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதே மாதிரி, தேசிய விடுதலை எழுச்சியை உருவாக்கிய தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டியில்—அங்குதான் உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது—அங்கு நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும் என்று அங்குள்ள மக்கள் எல்லோரும் விரும்புகின்றார்கள். இந்த ஆட்சியும் சென்ற தடவை, அங்கு உருவாக்கப்படும் என்ற உறுதியையும் கொடுத்திருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், உரையை முடியுங்கள். Time ஆகிவிட்டது. (குறுக்கீடு) No, No, No 7 நிமிடங்களுக்கு மேலே ஆகிவிட்டன. 8 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு நிமிடம்தான்.

**திரு. எஸ். இராசசேகரன்:** சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவிடம் கட்டப்பட வேண்டும்.

அதைப்போல, சுய மரியாதை இயக்கத்தினுடைய சமதர்மக் கொள்கைகளின் இலக்கியப் போராசான் ஜீவானந்தம் அவர்களுடைய 21-வது நூற்றாண்டு விழா இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்களுடைய பேச்சைக் கேட்கவே ஜீவா அவர்கள் பரமக்குடியில் ஆற்று மணலில் பல மணி நேரம் காத்திருந்ததாக முதல்வர் அவர்களே சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு தபால் தலை வெளியிடவும், அவருடைய நினைவாக, அவர்களுடைய பிறந்த நாளான ஆகஸ்ட் 21 ஆம் தேதியை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, தியாகிகளையும், சமூக நீதிக்காகப் போராடிய, மறைந்த 50 பேருக்கு நினைவுச் சின்னங்கள் இருப்பதைப்போல, எல்லோருக்கும் நினைவுச் சின்னங்கள் இருக்க வேண்டும் என்று கூறி, எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு. ஐந்து நிமிடங்கள்தான்.

**திரு. அருள் அன்பரசு:** பத்து நிமிடங்கள் மட்டும் கொடுத்தால் போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. Time இல்லை. இருந்தால் கொடுக்கலாம்.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோளிங்கர் தொகுதியிலுள்ள அருள்மிகு யோக நரசிம்மர், மற்றும் அருள்மிகு யோக ஆஞ்சநேயர் திருக்கோயில்கள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும். இந்தக் கோயில்களில் ஏற்கெனவே என்னுடைய கோரிக்கையை ஏற்று, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், rope car வசதி செய்து தரப்படும் என்று அறிவிப்புச் செய்துள்ளார்கள். அவருக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்தக் கோயிலைத் தமிழகச் சுற்றுலாத் தலமாக அறிவித்து, மேலும் சிறப்புறச் செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மறைந்த அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடைய பெயரிலே ராஜீவ் ஆன்மீகச் சுற்றுலா என்று பெயரிட்டு, பல்வேறு முக்கிய வழிபாட்டுத் தலங்களை ஒன்றிணைத்து, பக்தர்கள் தரிசிக்க சொகுசுப் பேருந்து ஒன்றும் ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–55

பத்திரிகைத் துறை பற்றிச் சில கோரிக்கைகள். பத்திரிகை நிருபர்கள்தான் அரசியலின் முக்கியத் தூண்கள். அவர்களின் நலன் காக்க வேண்டி, அவர்களுக்கு என்று நல வாரியம் ஒன்றை உடனடியாக அமைத்து தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும் ஒரு பத்திரிகையாளர்தான் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், பத்திரிகை நிருபர்கள் எதிர்பாராதவிதமாக மரணம் அடைந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூபாய் இரண்டு இலட்சம் என அரசு அறிவித்துள்ளது. அந்த இறந்த நிருபரின் அடையாள அட்டையையும், நிருபர்கள் நலச் சங்கத்தின் கடிதத்தினையும் இணைத்தால் போதும் என்ற விதிமுறையை அரசு நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தலைமைச் செயலகத்திலே நிருபர்கள் அறையில் ஒரே நேரத்தில் நிருபர்களும், கேமராமேன்களும் சேர்ந்து வந்துவிட்டால், அந்த அறையில் இடம் போதாமல், நிருபர்கள் வெளியே நிற்கும் சூழ்நிலை ஏற்படுகின்றது. இதை அரசு கவனத்தில் கொண்டு, நிருபர்களுக்குத் தனி அறையும், கேமராமேன்களுக்குத் தனி அறையும் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



மேலும், இந்த அறையிலே குப்பைக் கூளங்களை வாரத்திற்கு ஒரு முறைதான் சுத்தப்படுத்துவதாகக் கேள்விப்படுகின்றேன். இதை மாற்றி, இந்த அரசு, நமக்கெல்லாம் அச்சாணியாகத் திகழும் நிருபர்கள் அறையைத் தினமும் பராமரிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடந்த டாக்டர் கலைஞர் தலைமையிலான ஆட்சியில், சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்குப் பாரபட்சம் ஏதுமின்றி அரசு விளம்பரங்கள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால், 2001 முதல் 2006 வரை நடந்த அ.தி.மு.க. ஆட்சியில், சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்கள் மறுக்கப்பட்டன. அதனால் அப்பத்திரிகைகள் மிகுந்த சிரமத்திற்குத் தள்ளப்பட்டன. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்குப் பாரபட்சமின்றி அரசு விளம்பரங்கள் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திரைப்படங்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்ப் பெயர் வைத்துத் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு முழு வரி விலக்கு என அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். தமிழிலே பெயரை மட்டும் வைத்துவிட்டு, தமிழ்ப் பண்பாட்டை, கலாச்சாரத்தைச் சீர்குலைக்கும் படங்களை எடுக்க வாய்ப்புள்ளது. உதாரணத்திற்கு, இனிமையான இரவுகள் என்ற திரைப்படம், முழுமையான நீலப்படம் போன்ற திரைப்படம். தமிழில் பெயர் வைத்ததாலேயே இந்தத் திரைப்படத்திற்கு அரசு முழு வரி விலக்கு அளிக்குமா என்று இவ்வரசைக் கேட்க விரும்புகின்றேன். தமிழர் கலாச்சாரத்தைச் சீர்தூக்கி நிறுத்தும் வகையில் எடுக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு மட்டுமே முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென இவ்வரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், தற்போது வெளியிடப்பட்டுத் திரைக்கு வந்துள்ள சில திரைப்படங்கள், 'கொக்கி, புதுப்பேட்டை, தலைநகரம், தூத்துக்குடி, ஆச்சார்யா' போன்ற தமிழ்த் திரைப்படங்கள் வன்முறை நிறைந்ததும், வன்முறையைத் தூண்டுவதுமாக உள்ளன. இப்படி வியாபார நோக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எடுக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களை முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

'உயிர், திருட்டுப் பயலே' போன்ற தமிழ்த் திரைப்படங்கள், தமிழர்களின் உணர்வை, உணர்ச்சிகளை, நாகரிகத்தைக் கொச்சைப்படுத்துவதாகவும், தமிழ்நாட்டிலே நீண்ட நெடுங்காலமாக நிலவி வரும் கூட்டுக் குடும்ப தார்மீகத்தைக் கெடுப்பதாகவும் உள்ளன. இது மாதிரியான தமிழ்த் திரைப்படங்களை அரசு ஒரு குழு அமைத்துக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தொலைக்காட்சித் தொடர். தற்சமயம் தமிழக மக்களிடம், குறிப்பாகத் தாய்மார்களிடையே சின்னத் திரை எனப்படும் தனியார் தொலைக்காட்சிகளில் மெகா தொடர் எனும் போர்வையில், நம் தமிழ்நாட்டிலே பண்டைய காலம் தொட்டு இன்று வரையில் பாதுகாக்கப்பட்டு வரும், தாய், தந்தை, அண்ணன், தங்கை, கூட்டுக் குடும்பம் போன்ற உறவுகளைக் கொச்சைப்படுத்துவதோடு அல்லாமல், ஒருவனுக்கு ஒருத்தி எனும் பண்பாட்டைச் சீர்குலைக்கும் விதமாக, ஒருவர் மனைவியை இன்னொருவர் இழுத்துச் செல்வது, அவரது மனைவியை வேறொருவர் தள்ளிக்கொண்டு போவது என, பல தொலைக்காட்சித் தொடர்களிலே காட்டப்பட்டு வருகின்றது. தமிழ்த் தாய் உருவிலே தமிழே ஆட்சி செய்யும் இந்தப் பொற்கால ஆட்சிக் காலத்தில், தமிழ்ச் சமுதாயக் கோட்பாடுகளை முறிக்கும் தொலைக்காட்சித் , தொடர்களைத் தடை செய்வதோடு, தொலைக்காட்சிக்கு என்று ஒரு Censor Board தனியாக அமைத்து, தமிழ்ச் சமுதாயத்தை, தமிழினத் தலைவர் கலைஞராகிய தாங்கள்தான் காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குறிப்பாக, தற்போது தொலைக்காட்சியிலே Toon Disney, JETIX போன்ற Channel-களில் தமிழில் S.P.D., Power Rangers என்ற Cartoon தொடர்களை நம்முடைய பிள்ளைகள் தொடர்ந்து பார்ப்பது வழக்கமாகிவிட்டது. இதிலே வரும் கதாநாயகர் 'பாத்திரம் பல அடுக்கு மாடியிலிருந்து, மேலேயிருந்து கீழே குதிப்பது, நெருப்பிலிருந்து சண்டையிடுவது போன்ற செயல்பாடுகள் சித்தரித்துக் காட்டப்பட்டு வருகின்றன. இது கணினி வளர்ச்சியில் graphics முறையில் எடுக்கப்பட்டது என்பதை அறியாத நம் குழந்தைகள், அதை அப்படியே செய்ய வேண்டுமென்று எண்ணி உயிரை மாய்த்துக்கொள்ளும் அளவிற்குச் செல்வது நம்மிடையே பேரதிர்ச்சி மிகுந்த மன வருத்தத்தை அளிக்கின்றது. இந்தச் செய்தியை இந்த அவையிலே சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், சென்ற ஆகஸ்ட் 7 ஆம் தேதி



மதுரையைச் சேர்ந்த ஓமியோபதி டாக்டர் திரு. சிவக்குமார் என்பவருடைய ஒரே மகன், சுமார் 13 வயதுள்ள தியாகேஷ் என்ற சிறுவன், அந்த Channel-இலே வந்த கதாநாயகப் பாத்திரம் நெருப்பிலே சண்டையிடுவதைப் போன்ற அந்த நிகழ்வு சிறுவனின் மனதிலே ஆழப் பதிந்து, தானும் அவ்வாறு செய்ய வேண்டுமென்று எண்ணி, நெருப்பை மூட்டி, அதில் இறங்கி உயிரை மாய்த்துக்கொண்டான் என்ற செய்தி நம்மைச் சொல்லொணாத் துயருக்கு ஆளாக்கியுள்ளது. ஆகவே, இதுபோன்ற Channel-ஐ எல்லாம் தமிழக அரசு தடை செய்ய உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கல்விக் கண் திறந்த காமராஜர் திரைப்படத்திற்கு அரசு ஊக்கத் தொகை வழங்கிட வேண்டுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு நிமிடம். பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற நினைக்கும்போது விதிக்கப்படும் நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும். அவர்கள் பணியாற்றும் பத்திரிகைகளில் சில மூடப்பட்டு இருந்தால், அந்தப் பத்திரிகைகளிடம் சர்வீஸ் சான்றிதழ் பெற வாய்ப்பில்லை. ஆகவே, மூத்த பத்திரிகையாளர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவும், பத்திரிகையாளர் சங்கமும் சிபாரிசு என்று வருகிறவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் வகையில் நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும். இன்னும் ஒன்று...

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், திரு. அருள் அன்பரசு, போதும். ஒன்று, ஒன்று என்று எத்தனை தடவை ஒன்று?

**திரு. அருள் அன்பரசு:** நன்றி சொல்லி முடித்து விடுகிறேன். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வரால் அமைக்கப்பட்ட பட்டுக்கோட்டையில் உள்ள கவிஞர் கல்யாணசுந்தரம் நினைவகத்தில் ஒளி, ஒலிப் பேழை ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையிலே எனக்கு இரண்டாவது முறையாகப் பேச வாய்ப்பளித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி, அதேபோல சபாநாயகரும் இரண்டாவது தடவை மணியை அடிக்காமல் எனக்கு வாய்ப்பளித்ததற்கும் நன்றி கூறி. விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி. உங்களுக்கும் 5 நிமிடங்கள்தான்.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா பேரவையினுடைய மணப்பாறை ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்ற வாய்ப்பளித்து, அதற்குப் பின்னாலே ஒன்றியக் கழகத்தினுடைய துணைச் செயலாளராகவும், ஒன்றியக் கழகப் பொருளாளராகவும் பணியாற்ற வாய்ப்பளித்து, மருங்காபுரி தொகுதியிலே போட்டியிடுகின்ற அரிய வாய்ப்பினை வழங்கி, என்னுடைய வெற்றிக்காக அல்லும், பகலும் அயராது உழைத்து, வெற்றி பெறச் செய்து இந்த மாமன்றத்திலே வந்து பேசுவதற்கு வாய்ப்பாக என்னை ஆளாக்கி அழகு பார்த்துக்கொண்டிருக்கிற, உலகம் போற்றும் உத்தமத் தலைவி, பார் போற்றும் வீராங்கனை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வெற்றிக்காக அல்லும், பகலும் அயராது உழைத்து இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், விடுதலைச் சிறுத்தை இயக்கத்தைச் சார்ந்திருக்கிற அன்பர்களுக்கும், அதைப்போலவே, என்னுடைய வெற்றிக்காக அல்லும், பகலும் உழைத்து இருக்கிற உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, நான் உயிரினும் மேலாக வணங்கிக்கொண்டிருக்கின்ற மருங்காபுரி தொகுதியில் இரட்டை இலைச் சின்னத்திலே வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்து, இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிற அந்த வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினை, கமலப் பாதங்களில் சமர்ப்பித்து, என்னுடைய கன்னிப் பேச்சைப் பேச விழைகிறேன்.

முதலிலே என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியத்திலே பொன்னர், சங்கர், பெரியகாளியம்மா திருக்கோயில் அமைந்து இருக்கிறது. அந்தத் திருக்கோயிலுக்கு ஒரு நினைவு மண்டபத்தை இந்த அரசு அமைக்க வேண்டும் என நான் வேண்டுகோளை இங்கு வைக்க விரும்புகிறேன். அதைப்போலவே, அந்தத் திருக்கோயிலை வணங்கத் தமிழகத்திலே இருந்தும், வெளி மாநிலங்களிலே இருந்தும் வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அதைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மணப்பாறை தாலுகா, மணப்பாறையிலே, அரசு தலைமை மருத்துவமனைக்குப் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்திலே ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையை



உடனடியாகச் செயல்படுத்திட வேண்டுமென இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, என்னுடைய தொகுதியிலே இருக்கிற காதகவுண்டம்பட்டியிலும், வேம்பனேரியிலும் ஆரம்ப சுகாதார மையங்கள் அமைத்துத் தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, துவரங்குறிச்சியைச் சுற்றி இருக்கிற கிராமப் பகுதிகளிலே விவசாயிகள் எல்லாம் தக்காளி நிறையப் பயிர் செய்கிறார்கள். ஒரு நாளைக்கு 10 லாரி தக்காளி உற்பத்தி ஆகிறது. எனவே, அங்கே தக்காளியைப் பதப்படுத்துவதற்கு ஒரு குளிரூட்டும் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மணப்பாறை ஒன்றியத்திலே, மலையடிப்பட்டி, பொதிகைப்பட்டி, வடுகப்பட்டி போன்ற கிராமங்களிலே வாழ்கிற, அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் கிறிஸ்தவ மக்கள். அவர்கள் எல்லாம் பூக்களைச் சந்தையிலே கொண்டு வந்து விற்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வாய்ப்பு வழங்குகின்றவண்ணம், அங்கே ஒரு சென்ட் தொழிற்சாலை அமைத்து, அந்த மக்களுடைய குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, வையம்பட்டி ஒன்றியத்திலே இருக்கிற கிறிஸ்தவர்கள் எல்லாம், அனைவரும் பூக்களை வைத்து விவசாயத் தொழில் செய்துகொண்டு இருக்கிறார்கள். அங்கேயும் ஒரு சென்ட் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, என்னுடைய மருங்காபுரி தொகுதியிலே இதுவரை அரசுக் கல்லூரி இல்லாத நிலை இருக்கிறது. எனவே அரசுக் கலை, அறிவியல் கல்லூரியை மருங்காபுரி தொகுதிக்கு வழங்க வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மருங்காபுரி தொகுதியைப் பொறுத்தமட்டிலே, இன்றைக்கு இருக்கிற விவசாயப் பெருமக்கள் பகுதிகளான ,வண்ணங்கொம்பு, துவரங்குறிச்சி போன்றவற்றிலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே, அங்கே 110 கிலோ வாட் டிரான்ஸ்பார்மர்களை இரண்டு இடங்களிலும் அமைத்தால்தான், அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் போதுமான மின்சாரம் கிடைக்கின்ற வழி இருக்கும். எனவே, அங்கே டிரான்ஸ்பார்மர் அமைத்துத் தர வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–05*

அதைப்போலவே, மருங்காபுரி தொகுதியிலே இருக்கிற பொன்னனியாறு dam–க்குச் செல்கின்ற சாலை பொதுப் பணித் துறையினுடைய பராமரிப்பிலே இருக்கிறது. சுமார் 3 கி.மீ. நீளமுள்ளது. அவர்கள் அதைச் சீர்செய்வதற்கு நிதி இல்லையென்கிறார்கள். ஆனால், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்தவர்கள், அந்தச் சாலையை எங்களிடத்தில் ஒப்படைத்து விட்டால், நாங்கள் சீர்படுத்தி, அதைத் தார்ச் சாலையாக அமைத்துத் தருவோம் என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதி மக்களைப் பொறுத்தவரையில், எந்த இலாகாவிலே இருந்தாலும் பரவாயில்லை, எங்களுக்குச் சாலை வேண்டுமென்று அந்த மக்கள் எல்லாம் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தச் சாலையை அமைத்துத் தரவும், அந்தப் பொன்னனியாறு dam கட்டியதிலிருந்து, இதுவரை தூர் வாரப்படாமல் 11 அடி மண் நிரம்பியிருக்கிறது. ஆகவே, அதையும் தூர் வாரித் தர வேண்டுமெனவும் இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்றைக்கு செய்தி, விளம்பரம் மற்றும் எழுதுபொருள் துறைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்து இருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நான் முதலிலே நன்றி சொல்ல மறந்து விட்டேன். எனவே, இந்த நேரத்திலே அவர்களுக்கு நன்றியைச் சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்தாயிற்றா?

**திரு. செ. சின்னச்சாமி:** இங்கே பத்திரிகையாளர்களுக்கு வழங்குகின்ற ஓய்வூதியம் 2001–லே ரூ.2,000 ஆக இருந்தது. ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 67 பத்திரிகையாளர்களுக்கு ரூ.3,000 ஆக உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்கு ஓய்வூதியமாக ரூ.500 என இருந்ததை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ. 1,500 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, பத்திரிகையாளர்கள், செய்தி, புகைப்படம், தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்கள் ஆகியோர் பணியிலிருக்கும்போது இறந்தால், அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலேயிருந்து வழங்கப்பட்ட ரூ.50,000–ஐ புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.2 இலட்சமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதைப்போல, 1,032 பத்திரிகையாளர்களுக்கு இலவச பஸ் பாஸ் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, காஞ்சிபுரம், இராமநாதபுரம், மதுரை, தருமபுரி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 49 பத்திரிகையாளர்களுக்குச் சலுகை விலையில் வீட்டுமனைப் பட்டாக்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, தூத்துக்குடி மாவட்டம், கட்டாரம்குளத்து கிராமத்திலே ரூ.28½ இலட்சம் செலவிலே வீரன் அழகு முத்துக்கோன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டி, 8–12–2005 அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் நினைவாக, திருநெல்வேலியிலே 75 இலட்சம் ரூபாய் செலவிலே மணிமண்டபம் 23–6–2005 அன்று கட்டி, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல, திருப்பூர் குமரன் நினைவிடத்திலே மார்பளவு வெண்கலச் சிலை, மேலும், குமரனுடைய நூற்றாண்டுத் தபால் தலையையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்குச் சென்னையிலே ரூ.19.5 இலட்சம் செலவிலே நினைவு மண்டபமும், அதைப்போல நினைவுச் சின்னமும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, வீரபாண்டிய கட்டபொம்மன் போர்ப் படைத் தளபதியான வெள்ளையத்தேவனுக்கு வல்லநாடு கிராமத்திலே ரூ. 25 இலட்சம் ரூபாய் செலவிலே மணிமண்டபம் அமைக்கப்பட்டது.

அதைப்போல, தூத்துக்குடி மாவட்டத்திலே ஒட்டப்பிடாரம் வட்டம், பாஞ்சாலங்குறிச்சி என்ற இடத்திலே 25 இலட்சம் ரூபாய் செலவிலே அங்கே மணிமண்டபம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணருக்கு மதுரையிலே ரூ.39.60 இலட்சம் செலவிலே மணிமண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அதைப்போல, பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்திருக்கும் வேறு வகையான சலுகைகளை அரசு அங்கீகரிக்கப்பட்ட வாரப் பத்திரிகை நிருபர்களுக்கும் தர வேண்டும். அப்போதுதான் அவர்கள் இரயில் பயணங்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் திரைப்படத் துறைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. செ. சின்னச்சாமி:** ... தமிழகத்திலேயே இரண்டாவது இடமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. அதைப்போல, சென்னை மெரினா கடற்கரையிலே மக்கள் திலகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.38.50 இலட்சம் செலவிலேதான்...

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) ரைட், நிறையச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்)

**திரு. செ. சின்னச்சாமி:** சார், ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு நேரமாக? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. செ. சின்னச்சாமி:** நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கோடிட்டுக் காட்டுவதற்கு நேரம் இல்லாத காரணத்தால், அங்கேயிருக்கிற சாலைகளையெல்லாம் செப்பனிட்டுத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். அதைப்போலவே, என்னுடைய தொகுதியிலே இருக்கிற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்த நேரத்திலே சப்ஜெக்ட்டைப் பேசியிருக்க வேண்டும் நீங்கள்.



**திரு. செ. சின்னச்சாமி:** எனது தொகுதியிலுள்ள, உயர்நிலை, நடுநிலை, தொடக்கப் பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கடந்த வெள்ளத்தில், மணப்பாறை ஒன்றியத்திலே இருக்கிற குறுமலைப்பட்டி என்கிற ஊருக்கு ஒரு வாரமாக மக்கள் செல்ல முடியவில்லை. அங்கே Fire Service, Police சென்று, அவர்களையெல்லாம் வடம் பிடித்துக் கொண்டு வந்து, ஒரு பள்ளியிலே தங்க வைத்திருக்கிறார்கள். அந்த ஊருக்குச் செல்வதற்கு 30 இலட்சம் ரூபாய் செலவில் பாலம் அமைக்க வேண்டும். அதனையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணில் என்னை மணியாய் நிறுத்திட வைத்தவர் என் தந்தை இளம்பரிதி. விண்ணில் என்னை மலராய் முகிழ்த்திட வைத்தவர் தலைவர் கலைஞர் என்னும் காலப் பரிதி. (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்குப் புறக் கண் திறந்தவர் என் பெற்றவர். எனக்கு அகக் கண் கொடுத்தவர் என் கொற்றவர். பெற்றவர் தந்தை என்றால், கொற்றவர் ஞானத் தந்தை. என் ஞானத் தந்தை விரல் நீட்டும் இடங்களெல்லாம் வித்தகங்கள். கரம் காட்டும்பொழுதெல்லாம் காவியங்கள். முத்தமிழில் மூழ்கி முத்தெடுத்த முதல்வர். சரிவு வரும்போதெல்லாம் தன் அறிவாற்றலால் சரி செய்தவர். இலக்கிய உலகிலும் கலக்கியவர், நிர்வாகத் துறையிலும் நிமிர்ந்தவர். அவர்தம் கையொப்பத்திலே வாள் வீச்சிருக்கும், இந்திய வரைபடமும் விரிந்திருக்கும். அவருடைய கையொப்பத்தைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். இப்படி (கையைக் காட்டி) கடைசியிலே வரும். அது வாள் வீச்சு. இப்படி (கையைக் காட்டி) கீழே இப்படி இருக்கும். அது இந்தியாவினுடைய வரைபடம். (மேசையைத் தட்டும் ஒலி)

நுணுக்கம், நுட்பம், நுண்ணாய்வு என்று, துறைதோறும் தன் முத்திரையைப் பதித்தவர். எழுத்துக்கள் எல்லாம் தம்மையே உச்சரிக்க வேண்டுமென்று இவரை நச்சரிக்கும் நாவன்மை படைத்தவர்.

மென்மையாய் இருப்பதை வளைக்க முடியாது என்கிறார் தாவோ. எங்கள் ஆயுதங்களை எதிரிகளே நிர்ணயிப்பார்கள் என்கிறார் மாவோ.

கருணை கசிந்தோடும் இதயம், இடிகளும் இறங்கும்போது தாங்குவது எப்படியோ என்று, கன்னத்தில் கை வைத்துக் காலமெல்லாம் சிந்தித்ததுண்டு. கடற்பஞ்சு இதயத்தைக் கடப்பாரை துளைக்குமோ? 6 முறை இம்மாமன்றம் வருவதற்கு என்னை முன்மொழிந்து அனுப்பியவர். அவர்தம் மேடைப் பேச்சுக்கள் செவிகளில் விழுந்ததால் மேன்மை அடைந்தவன் நான். தலைவர் கலைஞர், கடைமடைக்கும் பாய்கின்ற மடை திறந்த வெள்ளம்; சுட்டுவிடாமல் சுற்றி எரிக்கும் தீ. தேவைப்படும்போது தென்றல், புறப்படும்போது புயல், பொறுமையிலும், மணியை மகசூல் ஆக்குவதிலும் மண். விழித்திருந்து கண்ட கனவை நினைவாக்கும் உயர்வு நவிச்சியில் விண். அவர் பஞ்சபூதங்களும் தம்மிடம் தஞ்சம் புகுந்த அஞ்சுகத் தாய் ஈன்றெடுத்த தன்னிகரற்ற தனிப் பெருந்தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தம் இனிய வழிகாட்டுதலில் மக்களுக்குப் பணியாற்றச் சட்டங்கள் இயற்றுகின்ற மாமன்றத்தில் தொடர்ந்து 6 முறை நுழைய எனக்கு அனுமதி கிடைத்தது. அவர்தம் மோதிரக் கை பட்டதால் பேரவைத் துணைத் தலைவர் பதவி பெற்றேன். இன்று செய்தித் துறையின் அமைச்சராக அவர்தம் தலைமையில் பணியாற்றும் பேறு பெற்றேன். அவர்தம் அருட்கொடைக்கு ஏற்றது என்ன பணிவிடை? கட்டுப்பாடும், நேர்மையும், கண நேரமும் ஓயாதிருந்து செயலாற்றிடும் பாங்கும், முட்டுக்கட்டை வரும்போதெல்லாம் தட்டிக் கழிக்காமல், முட்டி, மோதி உடைத்து முன்னேறும் பக்குவமும் பெற்று, 'எனை ஈன்ற தமிழ்நாடுதனக்கு, தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால், செத்தொழியும் நாள் எனக்குத் திருநாள் என்று கடமையாற்றுதலுமே' என்பதை அறிந்து அவருக்கு என் நன்றியறிதலுடன் என் பணிகளை அவர்தம் கமல மலர்ப் பாதங்களில் காணிக்கையாக்கி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இனமானம் ஒன்றே பெரிது என்று கண நேரமும் உறங்காமல் கடமையாற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பெருந்தன்மை, அரசியல் வாழ்வுக்கு விடிவெள்ளி. அவர், நாம் தடுக்கி விழாமல் காப்பாற்றும் ஊன்றுகோல். விழிப்புணர்வை அதிகரிக்கும் நெம்புகோல். நியாயத்தை வழங்குவதில் துலாக்கோல். அவரையும் பணிவுடன் வணங்குகின்றேன்.

செல்லிடப்பேசி நிறுவனங்கள் இவரைத் தம் விளம்பரத்திற்கு மாடல் ஆக்கலாமா என்று யோசிக்கும் அளவுக்குச் செல்லுமிடமெல்லாம் செல்லிடப்பேசியுடன் செல்பவர். ஆணைகளை அதிலேயே அவ்வப்போது அதிகாரிகளுக்குச் சொல்பவர். அவர் கழகத்தின் பொருளாளர், தொண்டர்களுக்கு அருளாளர், ஆற்காட்டாருக்கும் எனது வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1–15

பேச்சாற்றலிலும் சிறந்தது கேட்கும் ஆற்றல். அதற்குத் தேவை உணர்ச்சி நுண்ணறிவு. அதாவது, emotional intelligence. பதட்டமின்றிக் கேட்பவரே தளபதியாகப் பரிமளிக்க முடியும். பதவிப் பணியேற்றவுடன் சுழன்று, சுழன்று பணியாற்றும் எங்கள் தளபதி, எதிர்காலத் தமிழகத்தின் நிகழ்கால நம்பிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) எனை என்றும் அரவணைத்து ஆதரிக்கும் அவருக்கும் என் வணக்கங்கள்.

எங்கள் நினைவில் வாழும் அரசியல் மேதை, அண்ணன் முரசொலி மாறன் அவர்களின் மறுபதிப்பு, மத்திய சென்னையின் நாடாளுமன்ற உறுப்பினர், மத்தியிலே தகவல் தொடர்பு பதவியில் இருக்கும் காரணத்தால், இவர் தலையிட்டு வருகின்றது அஞ்சல் தலை. நம் முன்னேற்றத்தில் மாறுதலை ஏற்படுத்தும் அவருக்கும் என் போற்றுதலைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

பேரன்புக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றும் என்னைக் கைவிடாமல், அது அனுதாப அலையானாலும் அல்லது எனது உயிருக்கே உலை வைக்கும் அராஜகச் செயலானாலும், அவற்றிலிருந்து என்னைக் காப்பாற்றி, என்னை இங்கே தொடர்ந்து அனுப்பி வைக்கும் என் எஜமானர்களாகிய எழும்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். பரிதி நான், இறுதிக் குருதி இருக்கும் வரை தலைவர் கலைஞரின் விசுவாசி என்பதை மட்டும் குறிப்பிட்டு, வழுதி என் உரையில் வழுவிருந்தால் பொறுத்தருள வேண்டி, மேலே செல்கின்றேன்.

இங்கே இந்த விவாதத்தில் பங்கேற்று, பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கவனத்துடன் குறித்து வைத்திருக்கிறேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழியில் உருவாக்கப்பட்ட அரசில், ஐந்தாம் முறையாக அரியணை ஏறி, இக்காலத்திற்கு மட்டுமல்ல, எக்காலத்திற்கும் ஏற்ற வகையில் எண்ணற்ற திட்டங்களையும், சாதனைகளையும் அறிவித்து, அறிவித்த திட்டங்களை உடனடியாக அமல்படுத்தும் வகையில் அரசாணைகளுக்கு ஒப்புதல் அளித்து, ஏழை, எளிய மக்களின் பொருளாதார வாழ்வை மட்டுமல்லாது, தமிழ் மக்கள் அனைவருக்கும் ஏற்புடைய வரவு–செலவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், இன்றைய தமிழ்நாடு அரசு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவது கண்டு, இன்றைக்கு நாடே

போற்றிக்கொண்டிருக்கிறது. ஐந்தாண்டுகளில் செய்ய வேண்டிய சாதனைகளை, ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களில் செய்து காட்டியதை இன்றைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நாடும், ஏடுகளும் ஏற்றிப் போற்றி எழுதுகின்றன. இங்குள்ள பத்திரிகைகள் மட்டுமல்ல, பிரபல ஆங்கில நாளேடுகளான, The Economic Times, Financial Express, Times of India, The Hindu போன்ற ஏடுகள், 'The glorious days of D.M.K. — D.M.K. Government clinches century. The State of Joy' (மேசையைத் தட்டும் ஒலி) என்று எங்கள் 100 நாள் ஆட்சியின் சாதனைகளைப் பாராட்டி சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார்கள். சமீபத்தில், CNN, UNI, The Hindu எடுத்த survey-யில், இந்தியாவில் மிகச் சிறந்த 5 முதல்வர்களில், பதவியேற்ற மூன்றே மாதங்களில் தலைவர் கலைஞர் அவர்கள் 4-வது இடத்தை வகிப்பதாக சிறப்பித்துக் கூறியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் செய்தித் துறையைப் பொறுத்தவரையில், எங்களுக்கு வழங்கப்பட்ட பணியைச் செவ்வனே, சிறப்பாக எங்கள் துறை செய்து வருகிறது என்பதைப் பெருமையோடு, மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதல்வர் கலைஞர் அவர்கள், எப்போதுமே சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருப்பவர். அந்த உறுதியிலே கிஞ்சித்தும் மாறாதவர். கடந்த கால ஆட்சியில் அகற்றப்பட்ட, தமிழர் பண்பாட்டின் அடையாளச் சின்னமான, உயர்ந்தோர் ஏற்றும் உரைசால் பத்தினித் தெய்வமான கண்ணகி சிலையை மீட்டெடுத்து, அதே இடம், அதே சிலை, அதே நிலை என்று கண்ணகி சிலையை மீண்டும் நிறுவி, (மேசையைத் தட்டும் ஒலி) லாரி கொண்டு மோதி வீழ்த்தப்பட்ட தமிழர் பண்பாட்டின் அடையாளச் சின்னத்தைத் தூக்கி நிறுத்திவிட்டார். ஆம், கடந்த 3-6-2006 ஆம் நாளன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் கண்ணகி சிலை திறந்து வைக்கப்பட்டது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

லாரி மோதியது என்று சொன்னதும் எனக்கு வேறொன்று நினைவுக்கு வருகிறது. ஒரு கவியாரங்க நிகழ்ச்சியிலே தலைவர் கலைஞர் அவர்களை உட்கார வைத்துகொண்டு, பெருங்கவிஞர் வாலி அவர்கள் ஒன்றைச் சொன்னார். கடல் அலைகளுக்கு இலக்கியத் தமிழில் 'வாரி' என்ற ஒரு பெயர் உண்டு என்று சொல்லிவிட்டு—அதாவது, 'வாரி' என்றால் கடல் அலை என்று கூறினார். அப்படிச் சொல்லிவிட்டு, அடுத்துச் சொன்னார், 'தலைவா, வான்புகழ்



வள்ளுவனுக்கு வாரி மோதும் இடத்தில் சிலை வைத்தாய், நல்ல வேளை லாரி மோதும் இடத்தில் சிலை வைக்கவில்லையே!' (மேசையைத் தட்டும் ஒலி) என்று நகைச்சுவையாகச் சொன்னார். எல்லோரையும், எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக்கொண்ட சுனாமிகூட அய்யன் வள்ளுவரின் 133 அடி பிரம்மாண்டமான நினைவுச் சிலையைப் பார்த்துப் பிரம்மித்துப் போய்ப் பின்வாங்கிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அய்யன் திருவள்ளுவர் சிலையின் அருகில் அமையவுள்ள திருவள்ளுவர் மையத்தில், திருக்குறள் ஆய்வு நூல்கள், மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் பணிகள், புத்தகங்கள் வாங்கி வைப்பதற்கும், அலமாரிகள் மற்றும் மேஜை, நாற்காலிகள் வாங்கவும் 7-7-2006 அன்று ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்து முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோல, கலை உலகத்திலே, திரை உலகத்திலே நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பங்கு என்ன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நாடு போற்றும் அந்த மாபெரும் கலைஞனுக்கு நம்முடைய தலைவர் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் — சிவாஜிகணேசன் அவர்களுடைய சிலை காவல் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு அருகில் 21-7-2006 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் எனப் பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரைப்படத் துறை மற்றும் சின்னத் திரையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், படப்பிடிப்புக் கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. திரைப்படத் துறைக்கு, தமிழ்த் துறைக்கும், தமிழ் மொழி ஆர்வத்திற்கும் மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில், புதிய திரைப்படங்களுக்குத் தமிழிலே பெயர் சூட்டப்படுமானால், அந்தத் திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளித்து, 22-7-2006 அன்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரர் பகத்சிங் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதற்கும் ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

எல்லைப் போராட்ட வீரர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, 15–8–2000 அன்று அவருடைய அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.1,49,400 செலவில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களுக்குச் சிலை அமைக்க 11–8–2006 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு சட்டப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள்முன் அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும் இவ்வரசின் திட்டங்கள் அனைத்தும் நாட்டின் அடித்தள மக்கள் வரை சென்று சேரும் வகையில், செய்தி – மக்கள் தொடர்புத் துறை சிறப்பாக, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே சமயம், நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பல்வேறு கோணங்களில் அறிந்து, அவற்றைச் செயல்படுத்தும் விதமாகவும் இத்துறை செயல்படுகிறது. அரசின் திட்டங்கள் மக்களுக்குச் சென்று சேரவும், மக்களின் எண்ணங்களை அரசு அறியவும், ஆட்சியின் விழிகளாகவும், செவிகளாகவும் செயல்பட்டு வருகிறது செய்தி – மக்கள் தொடர்புத் துறை. தகவல்களை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் மகத்தான பணிகளைச் செய்து முதன்மையான இடத்தில் உள்ளது என்றால், அது மிகையாகாது. நவீன உலகில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் பணிகள் நவீன யுக்திகளைப் புகுத்திச் செம்மையாக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்துறையை மேலும் நவீனமயமாக்க இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தொடர்ந்து பல்வேறு சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இத்துறையின் சார்பாக ஒரு சில அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியுடன் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

தகவல் தொடர்பினை வலுப்படுத்திடும் வகையில், 30 மாவட்டச் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் தலைமையிடத்திலுள்ள 20 அலுவலர்களுக்கும், ரூ.1.50 இலட்சம் செலவில் செல்லிடத் தொலைபேசிகள் வாங்கி வழங்கப்படும்.



மாவட்டச் செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் 30 ஸ்கேனர்கள் வாங்கி வழங்கப்படும்.

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் தலைமையிடம் மற்றும் அலகு அலுவலகங்களுக்கு, ரூ.5.00 இலட்சம் செலவில் 10 கணினிகள் வாங்கி வழங்கப்படும். அதற்குத் தொடர் செலவினமாக ரூ.0.60 இலட்சம் செலவிடப்படும்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு, திரைப்படம் மற்றும் வீடியோ தயாரிப்புப் பணிகளை நவீன முறையில் விரைந்து மேற்கொள்ள ஏதுவாக, ரூ.18.00 இலட்சம் செலவில் "ஃபைனல் கட் புரோ–5" என்ற நவீனக் கருவி வாங்கி வழங்கப்படும்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு, ரூ.50 ஆயிரம் செலவில் ஒரு பென்டியம்–IV கணினி வாங்கி வழங்கப்படும்.

எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள மறு ஒலிப்பதிவு அரங்கத்தில் ரூ.36.00 இலட்சம் செலவில், ஒருமுகப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதியும், இருக்கை வசதியும் ஏற்படுத்தித் தரப்படும். அதற்குத் தொடர் செலவினமாக ரூ.0.36 இலட்சம் செலவிடப்படும்.

எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் "டிடிஎஸ்–டால்பி டிஜிட்டல் ரெக்கார்டிங்" கருவி, "என்கோடர்" கலவை இயந்திரம் மற்றும் இதர நவீனக் கருவிகள் ரூ.50.00 இலட்சம் செலவில் வாங்கி நிறுவப்படும்.

தமிழரசு அச்சகத்திற்கு, ரூ.13.69 இலட்சம் செலவில், "டிப்ளமாட்" தானியங்கித் தாள் மடிக்கும் இயந்திரம் வாங்கி நிறுவப்படும்.

தமிழரசு அச்சகத்திற்கு, ரூ.8.03 இலட்சம் செலவில் "பிரின்டிங் டவுன் பிரேம்" மற்றும் "பிளேட் பிராசசர்" ஆகிய நவீன இயந்திரங்கள் வாங்கி நிறுவப்படும்.

பிற்பகல் 1–25

தமிழரசு அச்சகத்தில், "மெமரி இமேஜ் மேக்கர்" மற்றும் "மெமரி பிராசசர் ரேப்பிட் ஆக்சஸ்" என்ற நவீன வசதி ரூபாய் 6.23 இலட்சம் செலவில் நிறுவப்படும். தமிழரசு அச்சகத்திற்கு ரூபாய் 7.78 இலட்சம் செலவில் நவீன "லேமினேஷன்" இயந்திரம் வாங்கி நிறுவப்படும். நான்கு மாவட்டச் செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு,

ரூபாய் 16.00 இலட்சம் செலவில், நான்கு "டெம்போ ட்ராக்ஸ் ஜூடோ" வாகனங்கள் வாங்கி வழங்கப்படும்.

பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத் தொகையை ரூபாய் 3,000/–லிருந்து ரூபாய் 4,000/– ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூபாய் 4,000/– ஆக உயர்த்தப்படுவதால், பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிகையாளர் இயற்கை எய்தினால், அவரின் துணைவியாருக்கு, அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 1,500/–லிருந்து 2,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் இதைச் சீராக்கும் பொருட்டு, ஏற்கெனவே 500 ரூபாய் குடும்ப ஓய்வூதியமாகப் பெறுபவர்கள் எல்லோருக்கும் ஒரே அளவாக 2,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, திருமலை சாலையிலுள்ள காமராசர் இல்லம் பழுதுகள் நீக்கி, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுப் புதுப்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, வள்ளுவர் கோட்டம் சீரமைத்து, மேம்பாடு செய்யப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம், சின்னக் காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் புதுப்பிக்கப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளியில் 'உள்ள மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் பழுதுகள் நீக்கி, மேம்பாடு செய்யப்படும்.

நாமக்கல்லில் உள்ள கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் பழுதுகள் நீக்கி, மேம்பாடு செய்யப்படும்.

பட்டுக்கோட்டையில் உள்ள பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் அழகுபடுத்தப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், நெற்கட்டும்செவல் கிராமத்தில் உள்ள மாவீரன் பூலித்தேவன் சிலை வர்ணம் பூசி, பராமரிக்கப்படும்.



தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உள்ள வ.உ.சி. இல்லம் பராமரிக்கப்பட நிதி ஒதுக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் மணிமண்டபம் பழுதுகள் நீக்கி, மேம்பாடு செய்யப்படும். தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் இல்லம் பழுதுகள் நீக்கி, பராமரிக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், கட்டாரங்குளத்தில் உள்ள வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம் பழுதுகள் நீக்கி, பராமரிக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுப் பூங்காவைப் பராமரிக்க நிதி ஒதுக்கப்படும்.

திருச்சிராப்பள்ளியில் உள்ள வ.வே. சுப்பிரமணியம் நினைவகம் புதுப்பிக்கப்பட்டு, மேம்பாடு செய்யப்படும்.

கன்னியாகுமரியில் உள்ள காந்தி நினைவு மண்டபத்தின் பழுதுகள் நீக்கப்படும்; மண்டபத்தின் பின்பகுதியில் கடலோரத் தடுப்புச் சுவர் கட்டப்படும். கன்னியாகுமரியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபத்தில் உள்ள தூண்களில் கிரானைட் கற்கள் பொருத்துதல், கடற்கரையோரச் சுற்றுச் சுவர் உயரத்தை அதிகரித்துக் கட்டுதல் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம் மேம்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், இடலாக்குடி–கோட்டாரில் உள்ள சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம் மேம்படுத்தப்படும்.

ஈரோட்டில் உள்ள பெரியார்–அண்ணா நினைவகம் பழுதுகள் நீக்கி, மேம்பாடு செய்யப்படும்.

மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியில் உள்ள தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள மருதுபாண்டியர் நினைவு மண்டபம், குன்றக்குடியில் உள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் மற்றும் காரைக்குடியில் உள்ள கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம் ஆகியவை சீரமைக்கப்படும்.

சென்னை, கலைவாணர் அரங்கம் புதுப்பிக்கப்படும். கலைவாணர் அரங்கில் புதிய திரைப்படங்களுக்கான முன்னோட்டக் காட்சி (Preview show of Commercial Film) நடத்த அனுமதி அளிக்கப்படும்.

கலைப் படங்களுக்கு மானியம் வழங்க வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் தளர்த்தப்படும்.

தேசிய, சர்வதேச விருதுகள் பெறும் தமிழ்த் திரைப்படங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும். எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரியிலுள்ள படப்பிடிப்புத் தளம் குளிர்சாதன வசதியுடன் நவீனப்படுத்தப்பட்டு தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்கு வழங்கப்படும்.

குழந்தைகள் திரைப்பட விழா 1–8–2006 முதல் 9–8–2006 முடிய, சென்னை, கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோல், ஆண்டுதோறும் சென்னையிலும், அனைத்து மாவட்டத் தலைநகர்களிலும் குழந்தைகள் திரைப்பட விழா நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செய்தி–மக்கள் தொடர்புத் துறை கணினிமயமாக்கப்படும். வாரந்தோறும் வெளியிடப்பட்டு வரும் மாநில மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தில் வெளியிடப்படும். அரசு ஒப்பந்தப்புள்ளிகள் விளம்பரங்களை இலவசமாக வெளியிட முன்வரும் தனியார் நிறுவனங்கள் நடத்தும் இணையதளத்தில் வெளியிட அனுமதி வழங்கப்படும்.

கள விளம்பரம் மற்றும் இதரப் பணிகளுக்கு மாதந்தோறும் மதிப்பெண்கள் வழங்கும் பணி தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இம்மதிப்பெண்கள் அடிப்படையில், சிறந்த செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, ஆண்டுதோறும் சிறந்த செய்தி–மக்கள் தொடர்பு அலுவலருக்கான பரிசு வழங்கப்படும்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** சென்னை, தலைமைச் செயலகச் செய்தி வெளியீட்டுப் பிரிவு, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ஆகியவற்றிற்குத் தலா ஒரு மோட்டார் சைக்கிள் வீதம், மூன்று மோட்டார் சைக்கிள்கள் வாங்கி வழங்கப்படும்.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஒன்றியத் தலைநகரங்களிலும் ஆண்டுதோறும் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் மற்றும் கண்காட்சி நடத்தப்படும்.

ஒன்றிய, கிராம அளவில் பொதுக் கோரிக்கைகளை உடனுக்குடன் களையவும், கள விளம்பரங்களையும்—நேரத்தின் அருமை கருதி,



பத்திரிகைத் துறை சம்பந்தமாகப் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி. இதுதொடர்பாக, தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம், சென்னை நிருபர்கள் சங்கம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தங்களுடைய கோரிக்கை மனுவினை வழங்கினார்கள். முதல்வர் அவர்கள் உடனே அதைப் பரிசீலித்து, பத்திரிகைத் துறையில் உள்ள பத்திரிகை ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், புகைப்படக்காரர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கும் காலக்கட்டத்தில் இயற்கை எய்துவார்களானால், அவர்களுடைய குடும்பங்களுக்குத் தி.மு.கழக ஆட்சியில் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்கீழ் 25 ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற திட்டம் 1997 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, அது படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது இரண்டு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளபோதிலும், இந்தத் தொகை பெற விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் காரணமாகப் பலர் இந்தப் பயனைப் பெற முடியாத நிலை உள்ளது.

இது குறித்துத் தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம், சென்னை நிருபர்கள் சங்கம் மற்றும் பல சங்கத்தினர் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, முறையிட்டார்கள். அவர்கள் தந்த விண்ணப்பத்தில், விஜய் தொலைக்காட்சியைச் சேர்ந்த தருமபுரி தனபால், தினபூமியைச் சேர்ந்த மணப்பாறை எம்.கே. ராஜன், தினத்தந்தியைச் சேர்ந்த ராஜபாளையம். எஸ். கணேசன், மணிச்சுடரைச் சேர்ந்த ஆற்காடு சையது அகமது, தினத்தந்தியைச் சேர்ந்த ஆற்காடு ஆடி. ராதாகிருஷ்ணன், சென்னையைச் சேர்ந்த பத்திரிகையாளர் மணிமொழி, தினகரனைச் சேர்ந்த மன்னார்குடி சீனிவாசன், சன் தொலைக்காட்சியைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி திருமால் அழகர், போலீஸ் செய்தி இதழைச் சேர்ந்த பொள்ளாச்சி பி.எம். தாமஸ், தினகரனைச் சேர்ந்த புதுக்கோட்டை ஆர்.ஜி. பன்னீர்செல்வம், சன் தொலைக்காட்சியைச் சேர்ந்த கோவை சிவா, சென்னை ரசூல்கான், விகடன் நிறுவனத்தைச் சேர்ந்த சென்னை எம்.பி. மணி, மூத்த பத்திரிகையாளர் சென்னை பரதன், தினபூமியைச் சேர்ந்த பாண்டிச்சேரி தமிழ்மாறன் ஆகியோருக்கு இந்தக் குடும்ப உதவி நிதி வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

பத்திரிகையாளர் நலனில் எப்போதும் அக்கறை செலுத்திடும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த மனுவினைப் பரிசீலித்து, 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியிலே இருக்கும் காலக்கட்டத்தில் இறந்துவிடுவார்களேயானால், அவர்களுடைய குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப் பார்களேயானால் ஒன்றரை இலட்சம் ரூபாய் என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ஒரு இலட்சம் ரூபாய் என்றும்,

5 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ஐம்பதாயிரம் ரூபாய் என்றும் குடும்ப உதவி நிதி வழங்கலாம் என்று அறிவித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக, 20 ஆண்டு காலம் பணிபுரியாத காரணத்தினால் இந்த உதவித் தொகையைப் பெற வாய்ப்பில்லாமல் இருந்த பத்திரிகையாளர் அனைவருக்கும் குடும்ப உதவி நிதி கிடைத்திடும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்னொன்றையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கோப்பு எண் 5735/செ.வெ./6/2002—தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் 1997 ஆம் ஆண்டில் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களுடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 25,000 ரூபாய் நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அவ்வாறு வழங்கப்பட்டு வந்தது. 1999 ஆம் ஆண்டு மீண்டும் தி.மு.கழக ஆட்சியில் இத்தொகை 40,000 ரூபாயாகவும், மீண்டும் 2000 ஆம் ஆண்டில் 50,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. வண்ணத் திரை இதழின் துணை ஆசிரியர் திரு. தேசிங்கு என்பவர் 6-11-2001 அன்று இயற்கை எய்தினார். இதற்கான நிதி உதவி கோரி, அவருடைய துணைவியார் ஆர்த்தி என்பவர் 13-3-2002 அன்று மனுச் செய்துகொண்டார். உதவி நிதி வழங்க வேண்டிய கோப்பு முதலமைச்சர் அலுவலகத்திற்கு 30-11-2004 அன்று அனுப்பப்படுகிறது. அதாவது, அந்தக் கோப்பினைச் சமர்ப்பிக்க அந்த ஆட்சியில், கடந்த கால ஆட்சியில் 2 ஆண்டு காலம் ஆகியிருக்கிறது. முதலமைச்சர் அலுவலகத்திற்கு 2004 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட கோப்பு, 2006 ஆம் ஆண்டு அவர் பதவியிலிருந்து செல்கின்ற வரை, கையெழுத்தே போடவில்லை. தற்போது 14-7-2006 அன்று அந்தக் கோப்பு வந்தவுடன், 18-7-2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அந்தக் கோப்பிலே கையெழுத்திடப்பட்டு ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

அது மட்டுமல்ல. இன்னொரு கோப்பு எண் 27907/செ.வெ./2002. மதுரை மணி மற்றும் குமரி முரசு நாளிதழின் சென்னைச் செய்தியாளர் திரு. எஸ். தாமோதரன் 25-4-2002 அன்று இயற்கை எய்தினார்.



அவருடைய துணைவியார் புனிதா நிதியுதவி கேட்டு அரசுக்கு 24-7-2002 அன்று மனுச் செய்துகொண்டார். இதற்கான கோப்பு 13-1-2005—சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அன்றைய முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டு, கடைசி வரை கையெழுத்துப் போடாமலே துறைக்குத் திரும்ப அனுப்பப்பட்டு, தற்போது மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டவுடன் அந்தக் கோப்பு தலைவர் கலைஞர் அவர்களுக்கு வந்தவுடன், 18-7-2006 அன்று அதிலே கையெழுத்திட்டு ஆணையிட்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோல இன்னொரு கோப்பு. (குறுக்கீடு), கோப்பு எண் 31638/செ.வெ/2002. மதுரை மாலை முரசு நாளிதழின் உதவியாசிரியர் திரு. எம். இன்பராஜ் 28-8-2002 அன்று இயற்கையெய்தினார். அவரது துணைவியார் திருமதி வேல்தங்கம் குடும்ப நிதியுதவி கேட்டு 17-10-2002 அன்று மனுச் செய்துகொண்டார். இதற்கான கோப்பு அன்றைய முதலமைச்சர் அவர்களுக்கு 17-1-2005 அன்று அனுப்பப்பட்டது. அதாவது, சுமார் மூன்று ஆண்டுகள் கழித்து— மிக வேகமாக மூன்று ஆண்டுகள் கழித்து—அது அனுப்பப்பட்டது— 17-1-2005 அன்று முதல்வருக்குச் சென்ற கோப்பு, 15 மாதங்கள் வரை கையெழுத்திடாமல், ஆட்சி மாறிய பிறகு, மீண்டும் தலைவர் கலைஞர் அவர்களுடைய கரங்களுக்கு வந்து, 17-7-2006 அன்று கையொப்பமிட்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) கோப்புகள், தேங்காமல், தூங்காமல் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே சொன்னேன்.

அதேபோல, 1,118 கோப்புகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இங்கே சொல்வதற்கு நேரம் இல்லை. இருந்தாலும், இவற்றை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொண்டு, எழுதுபொருள் – அச்சுத் துறை சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள்.

தமிழகத்தின் தலைமையிடமான சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டையில் 1831 ஆம் ஆண்டு அரசின் அச்சகப் பணிகளை நிறைவேற்ற, 10 பணியாளர்களைக் கொண்டு அரசு அச்சகம் தொடங்கப்பட்டது. தற்போது அரசு மைய அச்சகம், சென்னை-79, அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1, அரசு கிளை அச்சகங்கள், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104, மதுரை, சேலம், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் 2,382 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன.

அரசு அச்சகம் நவீனமயமாக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, அனைத்து அரசுப் பணிகளும் பலரும் பாராட்டும் வகையில், அரசு நிர்ணயப செய்யும் காலக்கெடுவிற்குள் நல்ல தரத்துடன் சீரிய முறையில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும் அரசு முக்கிய ஆவணங்கள் மற்றும் கமுக்கத் தன்மை வாய்ந்த ஆவணங்களின் இரகசியங்கள் காப்பாற்றப்பட்டு, இத்துறை 175 வருடங்களாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ் இயங்கி வரும் மைய அரசு அச்சகம், சென்னை மற்றும் கிளை அச்சகங்களால், 84 துறை அலுவலர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் 1,329 கேட்ட அலுவலகங்களுக்கு 2,275 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு அனுப்பப்பட்டு வருகின்றன.

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள், அவர்களின் அரசு சம்பந்தப்பட்ட பல்வேறு உரைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன மூவண்ண அரசுச் சின்னம் பொறித்த தலைப்புத் தாள்கள், மாண்புமிகு அமைச்சர்கள், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோருக்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன. மேலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தலைப்புத் தாள்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

அரசுத் தேர்வுத் துறைக்கான பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ்–2 மாணவர்களுக்கான பொதுத் தேர்வு வினாத் தாள்கள் உரிய நேரத்தில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. மாநிலக் கணக்காய்வுத் துறைக்கான பல்வேறு அறிக்கைகள், ஓய்வூதிய விவரங்களைப் பராமரிக்கும் பதிவேடு போன்றவை அச்சிட்டு வழங்கப்படுகின்றன. பொது மக்களுக்குத் தேவைப்படும் சாதிச் சான்றிதழ்கள், பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், பத்திரப் பதிவு நகல் படிவம், வாகனப் பதிவுச் சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், சட்டத் துறையின் புத்தகங்கள், வணிக வரித் துறையின் கமுக்கத் தன்மை வாய்ந்த படிவங்கள் மற்றும் இந்திய அரசின் தமிழாக்கச் சட்டப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

பிற்பகல் 1–40

தமிழ்நாடு அரசிதழில் பொது மக்களின் தேவைக்கேற்ப பெயர் மாற்றம், மத மாற்றம் போன்ற அறிவிக்கைகள் உரிய காலத்தில் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. தேர்தல் துறைக்கான சுவரொட்டிகள், கையேடுகள், தேர்தல் சின்னங்களின் புத்தகம், வாக்காளர் சேர்க்கைக்கான படிவம் மற்றும் மின்னணு வாக்குச் சீட்டுகள் உரிய நேரத்தில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.



தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத் துறைக்கான விண்ணப்பப் டிவங்கள் மற்றும் விடைத் தாள்கள் உரிய காலத்தில் தேவைக்கேற்ப ு ச்சிட்டு வழங்கப்படுகின்றன.

உயர் நீதிமன்றத்திலே எடுத்துக்கொள்ளும் அன்றாட வழக்குகள் ட்டியல்கள், உரிய நேரத்தில் எவ்விதத் தொய்வுமின்றி அச்சிட்டு ழங்கப்பட்டு வருகின்றன.

அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான உள்நோயாளிகள் மற்றும் றநோயாளிகளுக்கான அனுமதிச் சீட்டு, ஒளிக்கதிர் கவர் (X-ray cover), ரிசோதனைச் சீட்டுகள், பதிவேடுகள் மற்றும் பொது விநியோக முறையின் குடும்ப அட்டைகள். தேவையான விண்ணப்பங்கள் அவ்வப்போது அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் தேவையான வெள்ளைத் தாட்கள், படிப்பெருக்கித் தாட்கள், stencil paper, carbon தாட்கள், மை குழல் போன்ற எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கி இயந்திரங்கள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. இத்துறையினால், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தல் சமயத்தில் அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, உரிய காலத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அரசுப் பணியாளர்களின் நலனில் அக்கறை கொண்ட இவ்வரசு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையைச் சார்ந்த அச்சகப் பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பில் அதிகபட்சமான 180 நாட்களை அவர்கள் ஓய்வு பெறும்போது அரசுக்கு ஒப்புவித்து பணப் பயன் பெறலாம் என இம்மாமன்றத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் இரு முறை அறிவிக்கப்பட்டு, இதுநாள் வரை வழங்கப்படாமல் இருந்த இந்தச் சலுகையினை, பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை இவ்வரசு பரிவுடன் ஆய்வு செய்து, தற்போது இச்சலுகையினை உடனடியாக அமல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனால், 2,039 தொழில்நுட்பப் பணியாளர்கள் பயன் அடைவார்கள் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு அச்சகத்தை நவீனமயமாக்கும்போது, பிற பணியிடங்களில் பணி புரிந்த பணியாளர்கள், 19 வகையான பதவிகளில் பணிபுரிய நியமிக்கப்பட்டு, நீண்ட காலமாக எவ்விதப் பயனுமின்றிப் பணிபுரிந்து வருகின்றனர். இந்த 19 வகையான பதவிகளில், 333 பணியிடங்களை

உருவாக்கிக்கொள்ள இம்மாமன்றத்தில் முந்தைய அரசால் அறிவிக்கப்பட்டு, இதுவரை செயல்படுத்தப்படவில்லை. அதனை இவ்வரசு மீண்டும் பரிவுடன் ஆய்வு செய்து, தற்போது அதற்கு உரிய ஆணை வழங்க முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, பல்வேறு துறைகளின் தேவைக்கேற்ப, குறித்த காலத்தில், நேர்த்தியாகவும், தரமானதாகவும் அச்சிட்டு, அரசின் கமுக்கத் தன்மையினைக் காப்பாற்றியும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்னும் ஓரிரு மணித்துளிகளிலே முடிந்துவிடும்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சம்பந்தமான ஒரு சில அறிவிப்புகள்:

சென்னை, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகத்திற்கு லைன் டாட்மேட்ரிக்ஸ் பிரின்டர், தீயணைப்பான்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய ரூபாய் 1.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, அரசு மைய அச்சகத்தினை மேலும் நவீனப்படுத்த, கணினி மற்றும் அதன் பிற உபகரணங்கள், பிரின்டர்கள், குளிர்சாதனப் பெட்டி, ரீ டச்சிங் மேசை, நாற்காலி, ஆஃப்செட் அச்சு இயந்திரம், வெட்டு இயந்திரம், கம்பி அடிக்கும் இயந்திரம், தீயணைப்பான்கள், குடிநீர் குளிர்சாதனம் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய ரூபாய் 79.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு கிளை அச்சகம், திருச்சி, நவீனமயமாக்கப்படும் நோக்கத்துடன், அதற்குக் கணினி மற்றும் அதன் உபகரணங்கள், லேசர் பிரின்டர், மேசை மற்றும் நாற்காலி, வெப்–ஆஃப்செட் அச்சு இயந்திரம், ஈரம் மற்றும் மை கலந்த உருளை சுத்தம் செய்யும் இயந்திரம் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய ரூபாய் 53.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, உயர் நீதிமன்ற அரசுக் கிளை அச்சகத்தினை மேலும் மேம்படுத்த வெப்–ஆஃப்செட் அச்சு இயந்திரம், வெட்டும் இயந்திரம், குடிநீர் குளிர்சாதனம், தீயணைப்பான்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய ரூபாய் 55.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, அரசு எழுதுபொருள் அலுவலகம், புதுக்கோட்டை, விருத்தாசலம் மற்றும் மதுரை உயர் நீதிமன்றக் கிளை அச்சகங்களுக்குக்



குடிநீர் குளிர்சாதனம், தீயணைப்பான்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய ரூபாய் 2.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, அரசு மைய அச்சகத்தினை முற்றிலும் நவீனமயமாக்கவும், புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுகாறும் பொறுமையாக என்னுடைய பதிலுரையைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, இருப்பதாகச் சொல்லப்படுகின்ற இறைவன், எனக்கு முன் தோன்றி, உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டால், 'இறைவா, இனி நான் பிறவாத வரம் வேண்டும்; அப்படிப் பிறந்துவிட்டால், ஈரேழு ஜென்மத்திற்கும் என் தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களை மறவாத மனம் வேண்டும்' என்று கேட்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு அரிய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு, உரிய முறையிலே ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் எல்லாம் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொண்டு, என்னுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு, நன்றி கூறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரின் பதிலுரை.

பிற்பகல் 1–45

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் மீண்டும் மானியக் கோரிக்கையினைச் சமர்ப்பிக்கின்ற வாய்ப்பினை வழங்கிய, இருபத்தொன்றாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சிந்தனையாளரே; தந்தை பெரியார் என்ற தத்துவமே; அறிஞர் அண்ணா என்ற அருந்தமிழே; என்னை ஆளாக்கிய ஆசானே; ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் முத்தமிழ் அறிஞரே; தமிழக முதல்வரே; தலைவர் கலைஞர் அவர்களே; என்னைக் கழக இளைஞரணியில் உறுப்பினராக, மாவட்டத் துணை அமைப்பாளராக, சட்டமன்ற உறுப்பினராக,

மாவட்டச் செயலாளராக, இரண்டாவது முறையும் என்னை அமைச்சராக ஆக்கி அழகு பார்த்த எங்கள் குடும்பத் தலைவர், தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு என் முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

என் அரசியல் வழிக்கு விழியாக இருப்பவரும், ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையின் அமைச்சருமான மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்களின் தேர்தல் அறிக்கையினை, நிதிநிலை அறிக்கையாகத் தந்த மாண்புமிகு நிதியமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர், அன்பிற்குரிய அண்ணன் மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கும் மற்றும் மூத்த அமைச்சர்களுக்கும் என் நெஞ்சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'வடக்கே இமயம் எல்லை; தெற்கே குமரி எல்லை' என்னும் புவித் தத்துவத்தை மாற்றி, 'வடக்கே இமய மலை எல்லை; தெற்கே வள்ளுவர் சிலை எல்லை' என எல்லைகளை உருவாக்கிய முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த அய்யன் வள்ளுவப் பெருந்தகையின் வானுயரச் சிலை அமைந்துள்ள மண்ணிலிருந்து என்னைச் சட்டமன்றத்திற்கு இரண்டாவது முறையாக அனுப்பியுள்ள கன்னியாகுமரி தொகுதி மக்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியினை இம்மாமன்றத்தில் காணிக்கையாக்குகின்றேன்.

இங்கே பேசிய பல்வேறு சட்டப் பேரவை உறுப்பினர்கள், இந்தத் துறையினுடைய வளர்ச்சிகளில் அக்கறையோடு பல்வேறு கருத்துகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகளையெல்லாம்— நிச்சயமாக இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட துறை—உங்களுடைய கருத்துகளை எங்களுடைய துறை அதிகாரிகளும் குறித்து வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக உங்களுடைய கோரிக்கைகள், எடுத்துச் சொன்ன கருத்துகள், இவற்றை நிச்சயமாக இந்தத் துறை நிறைவேற்றும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர் திருமதி பதர் சயீத் அவர்கள், கடந்த ஆட்சிக் காலத்தில்தான் சுற்றுலாத் துறைக்குப் பரிசுகள் கிடைத்தன என்றும், Heritage கட்டடங்கள் எல்லாம் கடந்த காலத்தில்தான் பராமரிக்கப்பட்டன என்றும் சொன்னார்கள். ஆனால்,



இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற 100 நாட்களுக்குள், ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் நடந்த India Travel Mart என்ற விழாவில் Tourism Promoting Award என்ற Award-ஐ தமிழக அரசுக்கு வழங்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தனியார் நிறுவனங்களால்தான் கடந்த ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டதே தவிர, மாநில அரசாங்கமோ, மத்திய அரசாங்கமோ அந்தத் துறைக்கு வழங்கவில்லை.

Heritage கட்டடத்தைப் பொறுத்தமட்டில், கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான் பாதுகாக்கப்பட்ட வரலாறு உண்டு. அதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த காலத்தில் இராணி மேரி கல்லூரியையே இடிக்க முற்பட்டவர்களுடைய ஆட்சிதான் கடந்த காலத்தினுடைய ஆட்சி. அந்தக் கட்டடத்தைக்கூட பாதுகாத்த தலைவர்தான் கலைஞர் அவர்கள் என்பதையும் இந்த நேரத்தில் நினைவுகூர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகனைத்தும் உறவாகக் கொள்வதே தமிழர் பண்பாடு என்பதை இந்த அவை உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். உலகப் பொதுக் கண்ணோட்டமே, தமிழ்ப் பண்பாட்டின் ஆணி வேர் என்பதை, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற ஒரே வரியில், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக்காட்டியவர் பழந்தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனார் அவர்கள். எங்கும், எதிலும் பரவி நிற்கும் சுற்றுலாவின் சிறப்புக்களும், வளர்ச்சிகளும் இதில்தான் அடங்கியுள்ளன.

உலகத் தமிழர்களின் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைவராம் நம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்; அவர் ஒரு எழுத்தாளர், பேச்சாளர், பதிப்பாளர், வெளியீட்டாளர், சிறந்த நிர்வாகி, அபூர்வ சிந்தனையாற்றல் மிக்கவர். அவற்றில் நம் நினைவில் தோன்றாத ஒன்று, அவர் ஒரு சுற்றுலா விரும்பி.

கணியன் பூங்குன்றனார் கூறிச் சென்ற தமிழ்ப் பண்பாட்டின் பொது இலக்கணத்தைக் கடைப்பிடித்து வருபவர் தலைவர் கலைஞர் அவர்கள். தந்தை பெரியார் அவர்கள், தம் வாழ்நாளின் பெரும் பகுதியைத் தமது கொள்கைப் பிரச்சாரத்திற்காக, சுற்றுப் பயணத்திற்காகக் கழித்தார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம. அய்யா அவர்களுக்கு இணையாக, நம் பாசமிகு தலைவர் கலைஞர் அவர்களின்

கால் படாத இடமே தமிழகத்தில் இல்லையென்ற அளவிற்குத் தமிழகத்தின் பட்டிதொட்டிகள், மூலைமுடுக்கெல்லாம் சுற்றி வந்தார்கள். பொழுதுபோக்கிற்காக அல்ல இந்தச் சுற்றுப் பயணங்கள். தாழ்ந்து கிடந்த தமிழகத்தை, தமிழக மக்களைத் தன் காந்தப் பேச்சால் தலைநிமிரச் செய்து, ஆங்காங்கே விழிப்புணர்வுகளை ஊட்ட, பயணத்தை மேற்கொண்டார்கள்.

*பிற்பகல் 1–50*

இன்று இன்டர்நெட் மூலம் விண்வெளி உல்லாசப் பயணத்திற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்ற காலம் இது. அன்று விண்வெளியில் சென்று நிலவில் மனித குலத்தின் காலடியைப் பதிப்பித்த 'நீல் ஆம்ஸ்டிராங்கின்' பாதங்களைக் காட்டிலும் பல மடங்கு உயர்வானது நம் தலைவர் கலைஞர் அவர்களின் பாதங்கள். தமிழகத்தைச் சுற்றிச் சுற்றி வந்த ஓய்வறியாத பாதங்கள் அவை. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சின்னம்–குடை. உவமைக்காகச் சொல்லவில்லை. ஆனால், உண்மையிலே சின்னமாக இருக்க வேண்டியது, தலைவர் அவர்களின் திருப்பாதங்கள்தான் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவிற்கு இந்தத் துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து, இந்தத் துறையை 1971 ஆம் ஆண்டு உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதேபோன்று, தமிழ்ச் சான்றோர்களின், மாமன்னர்களின் மேன்மைகளை எடுத்துக் காட்ட வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கினார்கள். உலகத்தின் எட்டாவது அதிசயமாக குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலையை வானுயர நிர்மாணித்தார்கள். ஒரு காலத்தில் சோழர்களின் தலைநகரமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை அப்படியே வெளிக் காட்ட பூம்புகார் கலைக் கூடத்தை உருவாக்கினார்கள். கட்டபொம்மன் கோட்டைகளை உருவாக்கினார்கள். அருஞ்சாதனைகள் பல புரிந்த தமிழகத்தின் விடிவெள்ளிகளுக்கு ஆளுயரச் சிலை எழுப்பினார்கள். தமிழகத்தில் சுற்றுலா வளர, சுற்றுலாக் கொள்கைகளை உருவாக்கித் தந்தார்கள்.

இன்று தமிழகத்தில பல வகையான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க, அன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும், தீட்டிய திட்டங்களும்தான் காரணம் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கலைஞர் அவர்களைப் பொறுத்தமட்டில், அவர் எடுத்த நடவடிக்கையின்மூலம்



தீட்டிய திட்டங்கள்தான் காரணம். "என் பாதை, சுய மரியாதைப் பாதை, தமிழ் நலம் காக்கும் பாதை, தமிழ் மொழி காக்கும் பாதை, பெரியார் பாதை, அறவழிப் பாதை, அமைதிப் பாதை, ஜனநாயக நெறிமுறைப் பாதை; எந்த நிலையிலும் அந்தப் பாதையிலிருந்து மாறமாட்டேன் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடிக் கூறுவார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக் காட்டிய பாதையில் ஒன்றுதான் சுற்றுலாப் பாதை. அந்தளவிற்கு சுற்றுலாவினுடைய வளர்ச்சிகளைக் கண்ணும்கருத்துமாக இருந்து, ஒவ்வொரு நேரத்திலும் பார்க்கின்றபோது இத்துறையை உயர்வாக முதலிடத்திற்கு கொண்டுவந்து முதல் மாநிலமாகத் தமிழகத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்று அறிவுரை வழங்கக்கூடியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

வெளிநாட்டுப் பயணிகள் வருகையில் இந்திய மாநிலங்களில் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. இன்னும் முதல் இடத்தைப் பெறக்கூடிய அளவிற்குப் பல முயற்சிகள் இந்தத் துறையின்மூலமாக எடுக்கப்பட்டு வருகின்றன. அயல்நாட்டுத் தரத்திற்கு இணையாக அடிப்படை வசதிகளை உருவாக்கிடக் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, இந்த ஆண்டு தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய பாரம்பரியப் புகழ் மிக்க சுற்றுலா இடங்கள் ஒவ்வொன்றிற்கும் 5 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் செய்யப்படவுள்ளன. கலை அழகும், சிற்பச் சிறப்பும் கொண்டு, உலகப் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாகத் திகழும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை நிர்மாணித்தவன் இராஜராஜ சோழன். அம்மாமன்னனுக்கு, அவன் உருவாக்கிய ஆலயத்திற்கு அருகே பெரும் போராட்டத்திற்குப் பின்பு சிலை எழுப்பி சிறப்புச் செய்தவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

இராஜராஜ சோழனின் பழம் பெருமைகளைத் தமிழ் மக்கள் அனைவரும் விரிவாகவும், தெளிவாகவும் அறிய வேண்டும் என்ற நோக்கில், அம்மாமன்னனின் வரலாற்றைப் பெரிய கோயில் வளாகத்தில் சுமார், 150 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒலி–ஒளிக் காட்சியாக எடுத்துக் காட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுபோன்று அய்யன் திருவள்ளுவரின் அருமை, பெருமைகளை எடுத்துக்காட்ட ஒலி–ஒளிக் காட்சிகள் கன்னியாகுமரியிலும் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

கொடைக்கானல், உதகமண்டலம் ஆகிய இடங்களில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்று, முதற்கட்டமாக இழுவைக் கார்—cable car அமைக்கும் திட்டம் இந்த நிதி ஆண்டிலேயே செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழகத்தை நோக்கி மேலும் பல்லாயிரம் வெளிநாட்டினரை ஈர்க்கும் வகைகளில், வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுலாச் சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை கலந்துகொள்ளச் செய்யவும், அதன்மூலமாகத் தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்பு பற்றியும் விளம்பரப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் முதல் முயற்சியாக இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் ஹாங்காங்கில் நடைபெறும் 'பாட்டா' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை கலந்துகொள்ளவுள்ளது. இச்சந்தையில் தமிழகத்தினுடைய முக்கிய ஓட்டல் நிறுவனங்கள், பயண முகவர்கள் போன்றோர் கலந்துகொள்வதற்கான வாய்ப்புகளும் உருவாக்கித் தரப்படவுள்ளன. இதைத் தொடர்ந்து, லண்டன், பெர்லின் போன்ற இடங்களிலும் நடைபெற உள்ளது.

அதேபோன்று, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் என்ற வகையில், கடந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டிற்கு 323.39 இலட்சம் பயணிகள் வருகை புரிந்துள்ளார்கள். எனவே, இதனை அதிகப்படுத்தக்கூடிய அளவிற்கு, இத்துறையின்மூலமாகப் பல விளம்பர முகாம்களையும் வெளிநாட்டிலும், வெளிமாநிலங்களிலும் நடத்தி, அதன்மூலமாக அதிகமான பயணிகள் தமிழகத்திற்கு வருகைத் தரக்கூடிய முயற்சிகளில் இத்துறை ஈடுபட்டிருக்கிறது.

அதேபோன்று, தமிழ்நாட்டுப் பயணிகளின் எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்ற வகைகளில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 10 சொகுசுப் பேருந்துகளை விரைவில் வாங்கவுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் தங்கிச் செல்வோர்களது எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, முதற்கட்டமாக, ஒன்பது ஓட்டல்களின் தரம் ரூ.3.50 கோடி செலவில் உயர்த்தப்பட இருக்கிறது.

தமிழ்நாட்டின் மாமல்லபுரம், தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கைகொண்ட சோழபுரத்தின் பிரகதீஸ்வரர் ஆலயம் தாராசுரம் ஐராவதீஸ்வரர் ஆலயம், நீலகிரி மலை இரயில் ஆகியவை UNESCO நிறுவனம் அறிவித்த இந்தியாவின் 26 புராதனச் சின்னங்களில் ஐந்து



சின்னங்களாகும். இவற்றின் சிறப்புகளை எடுத்துக் கூறும் வகையில், நவீன வகை சிறப்புக் கையேடு ஒன்றும் வெளியிடப்பட இருக்கிறது.

பிற்பகல் 1—55

பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய பகுதிகளில் சுற்றுலாத் தலங்களை உருவாக்க வேண்டும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில், அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக இந்த நிதியாண்டில் 8 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும், திருவண்ணாமலை மாவட்டத்தின் சாத்தனூர் மற்றும் ஜவ்வாது மலைப் பகுதிகளை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று ரூ. 10.80 இலட்சம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் கொட்டிவாக்கம் கடற்கரையை அழகுபடுத்த ரூ.17.05 இலட்சம், தஞ்சாவூர் மாவட்டத்தின் புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.73.70 இலட்சம் எனத் தொகை வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, வேலூர் கோட்டையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, வேலூர் கோட்டையை அழகுபடுத்தி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்காக, ரூ.5 கோடி மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு, கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை—காஞ்சிபுரம்—மாமல்லபுரம் வழிப் பாதைகளில் உள்ள பூவிருந்தவல்லி, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், குன்றத்தூர், திருக்கழுக்குன்றம், பழையசீவரம் போன்ற சுற்றுலாப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பரந்த அளவில் பிரபலமாகாத, அதே சமயத்தில் முக்கியத்துவம் பெறும் வகையிலான சுற்றுலாப் பகுதிகளை மேம்படுத்தவும் அரசு உறுதி பூண்டுள்ளது. இதனடிப்படையில் முதற்கட்டமாக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பிச்சாவரம், தரங்கம்பாடி, பழவேற்காடு, ஏற்காடு ஆகிய பகுதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

அடுத்த கட்டமாக, புதிய அறிவிப்புகளை... (குறுக்கீடு) பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். கன்னியாகுமரியில், அய்யன் திருவள்ளுவர் சிலை...

**•மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புகளையெல்லாம் படித்ததாகப் பதிவு செய்துகொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கோரிய நிதியை வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, அறிவிப்புகள் அனைத்து உறுப்பினர்களுக்கும் தரப்பட்டிருக்கின்றன. அந்த அறிவிப்புகளை@ இந்த அவையிலே நான் படித்ததாகக் கருதிப் பதிவு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் சுமார் 159 வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும், நானும், துறை அதிகாரிகளும் நன்கு ஆராய்ந்து, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றக்கூடிய அளவிற்குப் பரிசீலனை செய்து வருகிறோம். எனவே, வெட்டுத் தீர்மானங்களுக்கு எனது உரையையே பதிலாக ஏற்றுக்கொண்டு, தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு அன்போடு வேண்டுகிறேன்.

### @அறிவிப்புகள்

### 1. கன்னியாகுமரியில் உள்ள அய்யன் , திருவள்ளுவர் சிலைப் பகுதியைச் சுற்றிக் கூடுதல் வசதிகள்:

கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை, அய்யன் திருவள்ளுவர் எழுதிய உலகப் பொதுமறையான திருக்குறள் சாராம்சங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இச்சிலை முக்கடல்களும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது. மேலும், திருக்குறளின் முக்கியக் கொள்கைகளான அறம், பொருள், இன்பம் போன்றவற்றை விவரமாக விளக்கியுள்ளது. இச்சிலை கடல் நடுவில் உள்ள சிறிய பாறையில் 133 அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது. சிலையைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.39.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.



### 2. தூத்துக்குடி மாவட்டம்

#### கழுகுமலை மேம்பாடு:

கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். இங்குள்ள சமணர்களின் கல்வெட்டுக்கள் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கிறது. எனவே, கழுகுமலையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.48.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளை முழுமையாக முடிக்க ரூ.13.00 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்படும்.

### 3. திண்டுக்கல் மாவட்டம்

#### கொடைக்கானலில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல்:

கொடைக்கானலில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுவதற்கு ரூ.15.00 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலமானது மிகவும் தாழ்வான பகுதியில் உள்ளதால், தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.15.00 இலட்சம் போதுமானதாக இல்லை. எனவே, சுற்றுலா வரவேற்பு மையம் கட்டும் பணிகளை, ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தில் முடிப்பதற்குக் கூடுதல் செலவினத்திற்கு ரூ.10.00 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்படும்.

### 4. வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை மேம்பாடு:

ஏலகிரி, கடல் மட்டத்திலிருந்து 1,000 மீட்டர் உயரத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள உலாத் தலமாகும். ஏலகிரி மலையினை ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ஏலகிரி மலை மேம்பாட்டிற்கு ரூ.100.60 இலட்சம் இந்த ஆண்டில் ஒப்பளிப்புச் செய்யப்படும்.

### 5. தேனி மாவட்டம்

#### சுருளி நீர்வீழ்ச்சி மேம்பாடு :

இயற்கையின் எழில் கொடைக்கு எடுத்துக்காட்டாகும் "சுருளி நீர்வீழ்ச்சி". எனவே, இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி, சுருளி அருவியை மேம்படுத்தி, குடிநீர் வசதி, சிறுவர் பூங்கா, அணுகு சாலை போன்ற கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.19.50 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்படும்.

**6. தேனி மாவட்டம் சின்ன சுருளி நீர்வீழ்ச்சி மேம்பாடு:**

சின்ன சுருளி நீர்வீழ்ச்சிக்கு அருகில் அணுகு சாலை, ஓய்வறை, படிக்கட்டுகள் அமைத்தல், கைப்பிடி, நடைபாதை போன்ற கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.10.85 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்படும்.

7. மேதகு ஆளுநர் அவர்கள் 24–5–2006 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, தமிழ்நாட்டில் சுற்றுலாப் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் சுற்றுலாப் பெருந்திட்டம் தயாரிக்கும் பணி முடிவடைந்துவிடும்.

8. மேதகு ஆளுநர் அவர்கள் 24–5–2006 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்குச் சென்று வருவதற்குப் புதிய கப்பல்கள் வாங்கப்படும்.

9. படித்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டு, சுற்றுலாப் பகுதிகளில் வழிகாட்டிகளாக ஈடுபடுத்தப்படுவார்கள்.

10. தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் விளம்பர முகாம்களில் காண்பிக்கும் வகையில் குறும்படம் ஒன்று தயாரிக்கப்படும்.

11. சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பிச்சாவரம், முத்துப்பேட்டை, கோடியக்கரை, ஏலகிரி, பழவேற்காடு போன்ற இடங்கள் மேம்படுத்தப்படும்.

12. சுற்றுலாப் பயணிகளைத் தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் ஈர்ப்பதற்கு சுற்றுலாத் துறையால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக, டாக்ஸி / ஆட்டோ ஓட்டுநர்களுக்கு, சுற்றுலாப் பயணிகளிடம் எவ்வாறு தோழமையோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கும் வகையில் "விருந்தினர் போற்றுதும், விருந்தினர் போற்றுதும்" என்ற விளம்பர முகாம்கள் நடத்தப்படும்.

13. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் சுற்றுலாப் பயணிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்த சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்த, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் 21 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகள் சொகுசு வசதிகள் நிறைந்த "ஓல்வோ"



பேருந்துகளையே அதிகம் விரும்புகின்றனர். எனவே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் "ஓல்வோ" பேருந்துகள் வாங்கப்படும்.

14. தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்குத் தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளை விளக்கும் வகையில், சுற்றுலாக் கொள்கை (Tourism Policy) ஒன்று வகுக்கப்படும்.

15. பாரம்பரியப் பெருமை மிக்க இடங்கள் (Heritage Centres) தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

16. தஞ்சாவூரில் மாமன்னன் இராஜராஜ சோழனின் சிறப்புகளை எடுத்துக் கூறும் வகையில், தஞ்சைப் பெரிய கோயிலில் ஒலி–ஒளிக் காட்சி அமைக்கப்படும்.

17. சுகாதாரச் சுற்றுலாவினை (Health Tourism) மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

18. குழந்தைகள் சுற்றுலாவினை ஊக்குவிக்க (Children Tourism) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறப்புப் பயணத் திட்டங்களைத் தொடங்கும்.

19. சுற்றுச் சூழல் சுற்றுலாவை (Eco Tourism) மேம்படுத்தும் நோக்கில், இயற்கையோடு இயைந்த சுற்றுலா நுகர்வை வழிவகுத்து, நம்முடைய வன வளங்களும், நில வளங்களும், கடல் வளங்களும், மலை வளங்களும் மாசுபடாமல், சுற்றுலா மேம்பாட்டுக்கு வழிவகுக்கப்படும்.

20. ஆண்டுதோறும் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில், நம் சுற்றுலா வளத்தைக் காட்டும் வகையில் வண்ணப் புகைப்படங்களுடன் நாட்காட்டி தயாரிக்கப்படும்.

21. சுற்றுலாச் செய்தி (News Letter) ஒன்றைக் காலாண்டு இதழாக வெளியிட்டு, அதன்மூலம் நம் மாநிலச் சுற்றுலா மேம்பாடுகளைப் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

22. தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழ்ப் பண்பாட்டையும், இலக்கியத்தையும் பெரிதும் கண்டுகளிக்க விரும்புகிறார்கள். அவர்களின் பேராவலைத் தணிக்கும்பொருட்டு, சென்னையில், தனியார்கள் ஒத்துழைப்புடன் "பண்பாட்டுப் பெருவிழா" நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

23. சுற்றுலா வளர்ச்சி கருதி, புதிய சுற்றுலாத் தலங்களில் மக்களைக் கவரும் விதத்தில் தொடங்கப்படும் ஓட்டல், பொழுதுபோக்குப் பூங்கா, படகுத் துறை போன்ற சுற்றுலாத் திட்டங்களுக்கு (Tourism Projects) மொத்த முதலீட்டில் 10 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். மானியத் தொகை உச்சபட்சமாக ஒரு கோடி ரூபாய் வரை அளிக்கப்படும். முதல் ஐந்தாண்டு காலத்திற்குச் செலுத்தும் விற்பனை வரிக்கு மென் கடன் அளிக்கவும், அந்தக் கடனை அடுத்த ஐந்தாண்டுகளில் 0.1 வட்டி விகிதத்தில் திருப்பிச் செலுத்தவும் புதிய கொள்கை உருவாக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1938 ஆம் ஆண்டிலேயே, தமிழ் மொழியைக் காக்க வேண்டுமென்று, இந்தியை எதிர்த்து, திருச்சியிலிருந்து சென்னை வரை 42 நாட்கள், உடல் நலிவுற்றபோதும் நடைப் பயணமாகச் சென்றவர் அஞ்சா நெஞ்சன் அழகிரி அவர்கள். திராவிட இயக்கத்தினுடைய முதுபெரும் தளபதியாக இருந்தவர். அவருடைய பெயரிலே பட்டுக்கோட்டையிலே ஒரு நினைவகம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, மொழிப் போரிலே உயிர் நீத்தவர்களுக்கு, அந்தந்த மாவட்டங்களிலே இருப்பவர்கள் யார், யாரென்று பார்த்து, அறிந்து, அவர்களுடைய பெயர்களை அரசுக் கட்டடங்களுக்கு—எப்படிச் சென்னையிலே தாளமுத்து நடராஜனுடைய பெயர் வைக்கப்பட்டிருக்கிறதோ, அதைப்போல, அவர்களுடைய பெயர்களை, அந்தந்த மாவட்டங்களிலே இருக்கிற அரசுக் கட்டடங்களுக்கு வைத்தால், எதிர்காலத்திலே வருகின்ற சந்ததியினர்களுக்கு, அந்த மொழிப் போர்த் தியாகிகளுடைய பெயரை, அவர்களுடைய மனதிலே பதியச் செய்ய வழி வகுப்பதாக இருக்கும். அதைப்போல, ஜான்சி ராணி சுதந்திரப் போராட்டத்திற்குப் போராடுவதற்கு முன்னாலே, 72 ஆண்டுகளுக்கு முன்னாலே, தமிழ் மண்ணிலே சுதந்திரக் குரல் எழுப்பியவர்தான், சிவகங்கையிலே இருந்த வீரமங்கை வேலு நாச்சியார் அவர்கள். அவர்கள் பெயரிலேயும் ஒரு நினைவகத்தை இந்த அரசு அமைக்குமா என்று கேட்க விரும்புகிறேன். அதைப்போல, தமிழ் அறிஞர்களுக்கெல்லாம் வாழ்வளித்து, அவர்களை வரவேற்றவர் ஐந்தாம் தமிழ்ச் சங்கம் கண்ட பாண்டித்துரைத் தேவர் அவர்கள். அவருடைய பெயரிலே மதுரையிலே ஒரு நினைவகம்



அமைக்கப்படுமா என்று இந்த அரசாங்கத்தை நான் கேட்க விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களுடைய பெயரிலே நினைவகம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள் கேட்டிருக்கிறார். அதேபோலப் பல்வேறு கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார். அவருடைய உணர்வுகள் பாராட்டுக்குரியவை. அவற்றை மதிக்கிறேன். அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரியின்மீது, எங்கள் தலைவர் அவர்கள் அசையாத பற்றுக் கொண்டவர். அதனால்தான் அவருடைய மகனுக்கு அழகிரி என்று பெயர் சூட்டியிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நினைவுபடுத்தி, உங்களுடைய கோரிக்கைகள் உண்மையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் கேட்டுவிட்டு எழுந்திருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, சொல்லுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகச் செம்மல் ம.பொ.சி. அவர்களுக்குச் சிலை எழுப்பவிருப்பதைச் சுட்டிக்காட்டியதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, தியாகச் செம்மல், தாழ்த்தப்பட்ட மக்களுடைய தனிப் பெருந்தலைவர் கக்கன்ஜி அவர்களுக்கும் சென்னையில் சிலை அமைக்கின்ற அந்த உத்தேசத்தை இந்த அரசாங்கம் ஏற்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும், விடுதலைக்காகப் போராடிய தியாக சீலர்களையும் போற்றுகின்ற அரசு, இவ்வரசு. எனவே, இது பற்றியும் பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, தலைவர் கலைஞர் அவர்கள், திண்டுக்கல் மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திற்கு, 'வேலு நாச்சியார் வளாகம்' என்று 1989 ஆம் ஆண்டு பெயர் சூட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களுக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் நினைவு மண்டபம் மேலூரில் திறந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள்?

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய படம்—இந்த நாட்டிலே ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைக்காகப் போராடிய ஒரு சமூக நீதியினுடைய தலைவருடைய பெயரில் படம் எடுப்பதற்காக நம்முடைய தமிழக அரசு 95 இலட்சம் ரூபாய் வழங்குவதாக அறிவித்தது. அதை இங்கே இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் மனதார வரவேற்றோம். ஆனால், இன்றைக்கு அந்தப் படத்தினுடைய கதாநாயகியாக, மணியம்மை அவர்கள் இடத்தில், இந்த நாட்டினுடைய ஆறு கோடித் தமிழர்களுடைய மனதையும், அங்கு வாழ்கின்ற தமிழச்சிகளினுடைய மானத்தையும் ஒரு கேலிக்கூத்து ஆக்குகின்ற ஒரு நடிகை, தமிழ்நாட்டிலே வாழ்கின்ற தமிழச்சிகளுக்கெல்லாம், கற்பு இருக்கிறதா எனக் கேள்வி எழுப்பிய ஒருவர், அந்தப் படத்தினுடைய நாயகியாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். மணி என்ன ஆகிறது? 2 மணி 2 நிமிடம்.

**திரு. தி. வேல்முருகன்:** ஆதலால், எங்களுடைய கேள்வி, சமுதாயக் கருத்துகளைச் சொல்லுகின்ற தந்தை பெரியார் அவர்களுடைய படத்தில், இந்த நாட்டையும், மொழியையும், பண்பாட்டையும்,



நாகரிகத்தையும் கேலிக்கூத்து ஆக்கியவர்களுக்கெல்லாம் இந்த நிதி, தமிழக அரசினுடைய நிதி, அவர்களுக்குச் செல்லுகின்ற வகையிலோ, நாளை தமிழக அரசு, தந்தை பெரியார் அவர்களுடைய பட வெற்றி விழா நடக்கின்றபொழுது, மேடையிலே அவர்களை அமர வைத்து, இந்த அரசாங்கத்தினுடைய மரியாதை செலுத்துகின்ற தகுதியுடையவர்கள், தமிழ்நாட்டிலே தமிழச்சிகள் வேறு யாரும் இல்லையா என்பதைத் தேர்வு செய்து, அதற்கான மாற்று ஏற்பாட்டை இந்த அரசு செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய பெயரிலே திரைப்படம் எடுக்க முன்வந்த காரணத்தால், அந்தத் தயாரிப்பாளருக்குத் தொகை வழங்கப்படும் என்று அரசு அறிவித்து, வழங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் குறிப்பிட்ட அந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிறது. அது பற்றிக் கருத்துச் சொல்வது சரியாக இருக்காது. இருந்தாலும், நடிப்பாற்றலைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, நடிகையைப் பற்றிப் பார்க்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடு) உட்காருங்கள். திரும்பத் திரும்பக் கேட்காமல் உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடு)

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி, கொஞ்சம் பொறுங்கள். திரு. டி. ஜெயக்குமார்.

***திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிவிப்பிற்கான புத்தகத்தில், பேரறிஞர் அண்ணா நினைவிடம், காமராஜர் நினைவிடம், இராஜாஜி நினைவிடம் போன்றவற்றையெல்லாம் இங்கே அச்சடித்துக் கொடுத்திருக்கின்றனர். ஆனால், வரையாது வழங்குவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட புரட்சித் தலைவர் நினைவிடம் இதில் இல்லையே என்கின்ற ஒரு வருத்தத்தையும், கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. டி. ஜெயக்குமார்] [2006 ஆகஸ்ட் 28

கேள்விக்கு வருகின்றேன். நாகப்பட்டினத்திலே பிறந்த அதிபக்தநாயனார் மீனவ வகுப்பைச் சேர்ந்தவர். ஒவ்வொரு ஆண்டும், அன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலேகூட, இரண்டு ஆண்டுகள் அந்த சிவபெருமானுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** சொல்கிறேன் சார். பிடிக்கின்ற மீனை சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கின்ற நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நாகை மாவட்டத்திலே நடக்கின்றது. நான், நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒவ்வொரு ஆண்டும் அந்த மீனவப் பெருமக்களுடைய விழாவை அரசு விழாவாக நடத்த வேண்டும்.

*பிற்பகல் 2–05*

அது மட்டுமல்லாமல், அரசாணைகள் பொதுவாக, அரசாங்கத்திலிருந்து வெளி வரும்போது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே, இனி வருங்காலங்களில் அரசாணைகள் ஒவ்வொன்றும், எந்தத் துறையாக இருந்தாலும் சரி, வழங்கப்படுகின்ற அரசாணைகள் செய்தித் துறைமூலமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகின்றேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. *(குறுக்கீடு)* கொஞ்சம் பொறுங்கள். பாலபாரதி, என்னவென்று சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நமது உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், நம்முடைய தமிழகத்தில் மூடநம்பிக்கைகள் மிகுந்த, பெண்ணடிமைத்தனக் கருத்துகள் மிகுந்த, சாதியத்தை உயர்த்திப் பிடிக்கக்கூடிய பல்வேறு கருத்துகள் அடங்கிய காட்சிகள், கதைகள், சின்னத் திரைகளிலும், பெரிய திரைகளிலும் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மத்திய அரசாங்கத்தைப்போன்று, இந்தத் துறையின் சார்பாகவும், மாநில அளவிலே ஒரு கண்காணிப்புக் குழு அமைப்பதற்கு இந்தத் துறை முன்வருமா என்பதனை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.



2006 ஆகஸ்ட் 28]

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள், இதிலே அண்ணா நினைவிடம், காமராசர் நினைவகம், தியாகிகள் மணிமண்டபம், இராசாசி மண்டபம் எல்லாம் போட்டிருக்கிறதே, முன்னாள் முதல்வர் பெரியவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடம் போடவில்லையே என்று கேட்டார். நான் இருப்பதை அப்படியே சொல்கிறேன்.

டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில், ரூ. 38.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு அருங்காட்சியகம் அமைக்க, 17–6–2003 அன்று அரசாணை நிலை எண் 116 வெளியிடப்பட்டது. அருங்காட்சியகக் கட்டுமானப் பணிகள் ஏப்ரல்–மே 2004–ல் முடிக்கப்பட்டுள்ளன. எம்.ஜி.ஆர். அருங்காட்சியகத்தில் வைக்க வேண்டிய அவர் பயன்படுத்திய பொருட்கள், அவரது வாழ்க்கை வரலாற்று அரிய புகைப்படங்கள் எல்லாம் சேர்த்து இருப்பில் இருக்கின்றன. ஆனால், இறுதி வரை அந்த அருங்காட்சியகத்தைத் திறந்து வைக்க முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தேதி வழங்கவில்லை. இங்கிருந்து அங்கே போய்த் திறந்து வைப்பதற்குச் சிரமமாக இருந்தாலும்கூட, கோட்டையிலிருந்து ஒரு பொத்தானை அழுத்தித் திறந்து வைத்திருக்கலாம். தேர்தல் நேரத்தில் மட்டும்தான் உங்களுக்கு எம்.ஜி.ஆர். நினைவு வருகின்றதே தவிர, மற்ற நேரத்தில் அவர்களை மறந்துவிடுவீர்கள் என்பதற்கு இது ஒன்றே சாட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 29 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை– சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ் இராமன், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன். அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம். பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன்அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன் இருக்கையில் இல்லை.



திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேரன்.

**திரு. சி. ஞானசேகரன்** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.



திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். தேன்மொழி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திர அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுட திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது

“செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 31,99,34,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 14,05,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் **‘ஆம்’** என்க. (ஆம்)

மறுப்போர் **‘இல்லை’** என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம். வெட்டுத்



தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இஎஸ்.எஸ். இராமன, இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன். இருக்கையில் இல்லை.

திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம். இருக்கையில் இல்லை.

திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.



**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 33,57,23,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.35,73,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

பொறுங்கள், என்னது? Voting–க்கு விட்டாகிவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். மானியக் கோரிக்கை எண் 30 (குறுக்கீடுகள்) அடுத்த business–க்கு போய் ஆகிவிட்டது. இன்னும் என்ன, clarification? (குறுக்கீடு) Voting–க்கு விட்டு Demand pass ஆகிவிட்டது. இதிலே இன்னும் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

பிற்பகல் 2–10

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவருடைய பெயரால் எழுப்பப்பட்ட அருங்காட்சியகத்தைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறபோது, ஏன் அதைத் திறக்கவில்லை என்று கேட்டார்கள். அதைத் திறப்பதற்குத் தயாரான



நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்ட காரணத்தினாலே, அது திறக்கப்படவில்லையே தவிர, வேறொன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மானியக் கோரிக்கை எண் 30... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** இல்லை, இல்லை. இதைச் சொல்லிவிட வேண்டும். தேர்தல் அறிவிக்கை—2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம்தான் தேர்தல் notification வந்தது. அது 2001–லே கட்டி முடிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு வருடங்கள் என்ன பண்ணினீர்கள்? தூங்கினீர்களா? அதுதான் நான் சொன்னேன், தேர்தல் வந்தால்தான் உங்களுக்கு எம்.ஜி.ஆர். ஞாபகமே வருகிறது என்று.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி வந்து அதில் சேதம் ஏற்பட்ட காரணத்தினாலேதான், அதற்குப் பிறகு அந்தப் பணிகள் முடிந்தன. தேர்தல் அறிவித்ததற்கு இரண்டு நாட்களுக்கு முன்னாலே அது வந்ததே தவிர, அமைச்சர் சொல்வது தவறான தகவல்.

## (இ) மானியக் கோரிக்கை எண் 30–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.



**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 58,78,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 1,93,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2006), மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

---

@ 4—8—2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

### பிரிவு 3

பிரிவு 3, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள், தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the said Bill, in clause 3, in sub-clause (2) (a), *for* the words "sand-offenders" *substitute* the words "sand-offenders, slum grabbers"

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 4 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 4 முதல் 8 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

பிற்பகல் 2–15

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகாமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2006) திருத்தப்பெற்றவாறு நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றவாறு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29–8–2006) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

26. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

27. 2004–2005 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

28. 2004–2005 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

29. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்

(தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

30. 2004–2005 ஆம் ஆண்டிற்கான நாமக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

31. 2004–2005 ஆம் ஆண்டிற்கான சேலம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

32. 2004–2005 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

33. 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்மீதான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

101. மானியக் கோரிக்கை எண் 29–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

102. மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

103. மானியக் கோரிக்கை எண் 30–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)



# இணைப்பு I

(95 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

# மானியக் கோரிக்கை எண் 29 –செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா கொள்கை விளக்கக் குறிப்பு 2006–2007

## முன்னுரை

சுற்றுலா, தேசிய ஒருமைப்பாட்டையும், பன்னாட்டு நட்புறவையும் வளர்க்கிறது. மேலும் அது சுற்றுலா நினைவுச் சின்னங்கள், பாரம்பரியச் சின்னங்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் சரணாலயங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதோடு, மரபுவழி கலை வடிவங்கள், கைவினைத் தொழில், கலாச்சார தொடர்வாழ் நிலை ஆகியவற்றையும் ஊக்குவிக்கிறது. சுற்றுலா, தன்னுடைய இலக்குகளான அந்நியச் செலாவணி ஈட்டும் திறன், வேலைவாய்ப்பைப் பெருக்கும் திறன் மற்றும் மக்களிடையே அன்பையும், சகோதரத்துவத்தையும் வளர்க்கும் திறன் முதலியவற்றில் மாபெரும் சாதனை புரிந்துள்ளது.

இன்றைய சூழலில், சுற்றுலா என்பது ஒரு இடத்திற்குச் செல்லுதல், அவை தொடர்பான புகைப்படங்களை எடுத்தல் மற்றும் திரும்பிச் செல்லுதல் போன்ற சராசரி நடவடிக்கை எனக் கருதப்படுவதில்லை. மாறாக, மனிதநேய மேம்பாட்டுக்கு உதவி புரியும் ஒரு முக்கியக் கருவியாக அது கருதப்படுகிறது. சுற்றுலாவின் பயன்களைப் பரவலாக விநியோகிப்பதும், ஏழ்மைக் குறைப்பிற்குப் பங்களிப்பதும், தொடர்ந்த முன்னேற்றத்தை உருவாக்குவதும், பாலின வேறுபாட்டினைக் களைவதும், எதிர் சமூக விளைவுகளைக் குறைப்பதும் தேசத்தின் இன்றைய குறிக்கோளாகக் கருதப்படுகிறது.

## 2. உலக அளவில் சுற்றுலா

உலக நாடுகள் அனைத்தும் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக அளவிலாப் பணத்தைச் செலவழிக்கத் தயாராக உள்ளன. உதாரணமாக, ஜப்பான் 1,000 டன் வெள்ளை மணலை சீனாவிலிருந்து கொண்டு வந்து, டோக்கியோவில் 7,000 சதுர அடி பரப்பளவில் ஒரு

[2006 ஆகஸ்ட் 28

செயற்கைக் கடற்கரையையே உருவாக்கியுள்ளது. உலக சுற்றுலா நிறுவனத்தின் கூற்றுப்படி, சீனா 2020 ஆம் ஆண்டு வாக்கில் உலக அளவில் மிகப் பெரிய சுற்றுலா செல்லிடமாக மாறும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

### 3. இந்தியாவில் சுற்றுலா

உலக சுற்றுலா நிறுவனத்தை உள்ளடக்கிய பல்வேறு முன்னணி சுற்றுலா அமைப்புகள், இந்திய சுற்றுலா ஆண்டுக்கு 8.8% அளவில் அதி விரைவாக வளர்கிறது என்று தெரிவித்திருக்கின்றன. இந்தியாவில் அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் சுற்றுலா மூன்றாவது இடத்தை வகிக்கிறது. சுற்றுலாப் பயணிகளின் வருகைமூலம் 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.21,000 கோடிக்கும் அதிகமாக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் 10.2 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ளனர். அதன் வாயிலாக 163.40 கோடி அமெரிக்க டாலர்கள் அந்நியச் செலாவணியாகப் பெறப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் செலவழித்துள்ள தொகை 2004 ஆம் ஆண்டைவிட, 2005 ஆம் ஆண்டு 23 விழுக்காடு அதிகரித்துள்ளது. இந்திய சுற்றுலா, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3–4 விழுக்காடு வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்தியாவில் சுற்றுலா பெற்றுள்ள வளர்ச்சிக்கு, விமானப் போக்குவரத்து வசதிகளின் அதிகரிப்பு ஒரு முக்கியக் காரணமாக விளங்குகிறது.

'கான்டி நாஸ்ட் டிராவலர்' (Conde Nast Traveller) எனும் இங்கிலாந்திலிருந்து வெளிவரும் சுற்றுலாப் பயணப் பத்திரிகை நடத்திய ஒரு கணக்கெடுப்பின்படி, உலக அளவில் முன்னணியில் இருக்கும் 10 சுற்றுலா செல்லிடங்களில் இந்தியா ஐந்தாவது இடத்தில் இருக்கிறது.

2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.830 கோடி சுற்றுலாப் பிரிவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.422.50 கோடி சுற்றுலா அடிப்படை வசதிகளுக்காகச் செலவிடப்பட உள்ளது.

காஷ்மீரின் குல்மார்க்கிலிருந்து அஃபர்வாத் வரை 4,390 மீட்டர் உயரத்தில் செல்லக்கூடிய கம்பிவழி ஊர்தித் திட்டத்தின் இரண்டாம் நிலைத் தொடக்கத்தோடு, உலகிலேயே அதிக உயரத்தில் கம்பிவழி ஊர்தி செலுத்தும் நாடு என்ற பெருமையை இந்தியா பெறவுள்ளது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் சுற்றுலாவை வளர்ப்பதில் தனிக் கவனம் செலுத்தி போட்டியுடன் செயல்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 28]

### 4. தமிழ்நாட்டில் சுற்றுலா

தென்னிந்தியாவின் வாயில் எனப்படும் தமிழ்நாடு, மேற்காசியாவிற்கும், தென்கிழக்கு ஆசியாவிற்கும் மைய அச்சாக விளங்குகிறது. ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலச்சார நிறுவனம் (UNESCO) உலகிலுள்ள 788 இடங்களைப் பாரம்பரியத் தலங்களாக அறிவித்துள்ளது. இவற்றில் 611 இடங்கள் கலாச்சார வகையில் முக்கியமானவை: 154 இயற்கையானவை: 23 இரண்டும் கலந்தவை. இந்த 788 பாரம்பரியத் தலங்களில், 26 இந்தியாவில் உள்ளன. இந்த 26–ல், 5 தமிழ்நாட்டில் உள்ளன. அவையாவன: மாமல்லபுரத்திலுள்ள புராதனச் சின்னங்கள், தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், தாராசுரத்திலுள்ள ஐராவதீஸ்வரர் ஆலயம், கங்கைகொண்ட சோழபுரத்தின் பிரகதீஸ்வரர் ஆலயம் மற்றும் நீலகிரி மலை இரயில்.

### 5. தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்கள்

***(அ) இயற்கைச் சுற்றுலா வளம்:*** இயற்கை தமிழ்நாட்டிற்கு அரிய பல சுற்றுலாத் தலங்களை அளித்துள்ளது. கடற்கரைகள் இயற்கை வனப்பு மிகுந்தவைகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்தியா 7,516.6 கி.மீ. நீளக் கடற்கரையைப் பெற்றுள்ளது. இதில் தமிழ்நாட்டுக் கடற்கரையின் நீளம் 1,076 கி.மீ. சென்னையின் மெரினா கடற்கரை உலகிலேயே இரண்டாவது நீளமான கடற்கரை. கன்னியாகுமரியின் கடற்கரையில் சூரிய உதயத்தையும், அஸ்தமனத்தையும் கண்டு களிக்கலாம். மேலும் அரபிக் கடல், இந்துமகா சமுத்திரம், வங்காள விரிகுடா ஆகிய மூன்று கடல்களும் சங்கமிக்கும் இடமாகவும் கன்னியாகுமரி விளங்குகிறது. தூத்துக்குடி கடற்கரை சங்கு மற்றும் முத்துவிற்குப் புகழ் பெற்றது.

இயற்கை தமிழ்நாட்டுக்கு அளித்துள்ள மற்றொரு கொடை, மலைவாசஸ்தலங்கள். உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு போன்றவை பிரதானத் தலங்களாகும்.

"மன்னார் வளைகுடா" பவளப் பாறைகளுக்குப் பெயர் பெற்றது. தரங்கம்பாடியில் நிலவும் முனைப்புயிரக நீரின் (ozone) அளவு சுவிட்சர்லாந்துக்கு அடுத்தபடியாக உலகிலேயே இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. குற்றாலம், ஒகேனக்கல் போன்ற இடங்களில் உள்ள நீர்வீழ்ச்சிகள் பிரமிப்பூட்டுபவை. கடலூர் மாவட்டத்தின் பிச்சாவரத்திலுள்ள சதுப்பு நிலக் காடுகள் பரப்பளவில் மிகப் பெரியவை. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பழவேற்காடு ஏரி இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய உப்பங்கழி ஏரி (lagoon).

***(ஆ) இயற்கை மற்றும் உருவாக்கப்பட்ட சுற்றுலா வளங்கள்:*** இயற்கையாக அமைந்து, பின்பு மனித முயற்சிகளால் சுற்றுலாத் தலமாக உருவாக்கப்பட்ட இடங்கள் இப்பிரிவில் அடங்கும். வன விலங்குச் சரணாலயங்கள் (முதுமலை, ஆனைமலை, முண்டந்துறை, களக்காடு போன்றவை), பறவை சரணாலயங்கள் (காஞ்சிபுரத்தின் வேடந்தாங்கல், திருவள்ளூர் மாவட்டத்தின் பழவேற்காடு, திருநெல்வேலி மாவட்டத்தின் கூத்தங்குளம், பெரம்பலூர் மாவட்டத்தின் கரைவெட்டி, நாகப்பட்டினம் மாவட்டத்தின் கோடியக்கரை போன்றவை), உயிரியல் பூங்காக்கள் (சென்னையில் வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா போன்றவை), தாவரவியல் தோட்டங்கள் (உதகமண்டலம் மற்றும் குன்னூரிலுள்ளவை) ஆகியவை இயற்கையும், மனிதனும் இணைந்து உருவாக்கியவை.

***(இ) உருவாக்கப்பட்ட சுற்றுலா வளங்கள்:*** ஆன்மீகத் தலங்கள், வரலாற்று மற்றும் பாரம்பரியப் புராதனச் சின்னங்கள் இவ்வகையில் அடங்கும். தமிழ்நாட்டின் முக்கிய பலமே கோயில்கள்தான். இவை பக்தர்களையும், சுற்றுலாப் பயணிகளையும் ஒருங்கே கவர்ந்திழுக்கின்றன. தமிழ்நாட்டில் 35,000 கோயில்கள் உள்ளன. இந்தியாவில் காணப்படும் சுமார் ஒரு இலட்சம் கல்வெட்டுக்களில், 65,000 கல்வெட்டுக்கள் தமிழகத்தில் உள்ளன. சென்னையில் உள்ள சாந்தோம் பேராலயம், புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள புனித மேரி ஆலயம் (இந்தியாவின் முதல் ஆங்கிலேய ஆலயம்), சென்னை பரங்கிமலை மாதா ஆலயம், புனித ஜார்ஜ் பேராலயம், ஆர்மீனியன் ஆலயம், பெரம்பலூர் மாவட்டத்தின் ஏலாக்குறிச்சியிலுள்ள அடைக்கல மாதா ஆலயம், தஞ்சாவூர் மாவட்டத்தின் பூண்டி மற்றும் வேளாங்கண்ணியிலுள்ள ஆலயங்கள், மணப்பாட்டில் உள்ள புனித சிலுவை ஆலயம் போன்ற உலகப் புகழ் பெற்ற கிறித்துவ தேவாலயங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாகூர் தர்கா, சென்னையில் உள்ள ஆயிரம் விளக்கு மசூதி, இராமநாதபுரம் மாவட்டத்தின் ஏர்வாடி தர்கா போன்ற இஸ்லாமியத் தலங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. இவையல்லாமல் சரித்திரப் புகழ் வாய்ந்த புத்த மற்றும் சமணத் தலங்களும் தமிழகத்தில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 241 புராதனச் சின்னங்கள் மத்திய அரசின் இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டிலும், 88 புராதனச் சின்னங்கள் மாநில அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டிலும் இருக்கின்றன. பாரம்பரிய நகரங்களைப்





பாதுகாத்தல் மற்றும் பேணுதலுக்காகத் தமிழக அரசு கீழ்க்கண்ட 38 இடங்களைப் பாரம்பரிய நகரங்களாக அறிவித்துள்ளது.

| வ.எண் | பாரம்பரிய நகரம் | மாவட்டம் |
|---|---|---|
| 1.<br>2.<br>3. | காஞ்சிபுரம்<br>மாமல்லபுரம்<br>ஸ்ரீபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 4.<br>5.<br>6.<br>7.<br>8. | சிதம்பரம்<br>பிச்சாவரம்<br>மருதூர்<br>குறிஞ்சிப்பாடி<br>மரக்காணம் | கடலூர் |
| 9. | இராமேசுவரம் | இராமநாதபுரம் |
| 10. | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி |
| 11. | ஸ்ரீவில்லிப்புத்தூர் | விருதுநகர் |
| 12.<br>13. | தஞ்சாவூர்<br>கும்பகோணம் | தஞ்சாவூர் |
| 14. | கங்கைகொண்ட சோழபுரம் | பெரம்பலூர் |
| 15. | மதுரை | மதுரை |
| 16. | பழனி | திண்டுக்கல் |
| 17. | திருச்செந்தூர் | தூத்துக்குடி |
| 18. | திருத்தணி | திருவள்ளூர் |
| 19.<br>20.<br>21. | கன்னியாகுமரி<br>பத்மநாபபுரம்<br>கொளச்சல் | கன்னியாகுமரி |
| 22. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 23. | செஞ்சி | விழுப்புரம் |
| 24.<br>25. | செட்டிநாடு<br>காரைக்குடி | சிவகங்கை |
| 26. | வாலிநோக்கம் | இராமநாதபுரம் |
| 27.<br>28.<br>29.<br>30. | தரங்கம்பாடி<br>பூம்புகார்<br>நாகூர்<br>வேளாங்கண்ணி | நாகப்பட்டினம் |
| 31.<br>32. | குற்றாலம்<br>திருநெல்வேலி | திருநெல்வேலி |

[2006 ஆகஸ்ட் 28

| வ.எண் | பாரம்பரிய நகரம் | மாவட்டம் |
|---|---|---|
| 33. | திருச்செங்கோடு | நாமக்கல் |
| 34. | பேரூர் | கோயம்புத்தூர் |
| 35. | பவானி | ஈரோடு |
| 36.<br>37.<br>38. | சித்தன்னவாசல்<br>ஆவுடையார்கோவில்<br>திருமயம் | புதுக்கோட்டை |

இப்பகுதிகளை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதியினை நகர் மற்றும் ஊரமைப்புத் துறையும், சுற்றுலாத் துறையும் வழங்குகிறது.

## 6. தமிழகத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை

தேசிய மற்றும் சர்வதேச அளவில் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களின்மூலம் மேற்கொள்ளப்பட்ட இடைவிடா வர்த்தக, விளம்பர முயற்சிகளின் வாயிலாகவும், சுற்றுலா/ஆன்மீக மையங்களில் அடிப்படை வசதிகளை உருவாக்கி/மேம்படுத்தியதன்மூலமாகவும், தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விவரம் பின்வருமாறு:

| வருடம் | உள்நாடு (இலட்சங்களில்) | வெளிநாடு (இலட்சங்களில்) | மொத்தம் (இலட்சங்களில்) | அந்நியச் செலாவணி வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 2000 | 229.82 | 7.86 | 237.68 | 1788 |
| 2001 | 238.12 | 7.73 | 245.85 | 1750 |
| 2002 | 246.61 | 8.05 | 254.66 | 1809 |
| 2003 | 270.59 | 9.02 | 279.61 | 1913 |
| 2004 | 300.77 | 10.58 | 311.35 | 2283 |
| 2005 | 323.39 | 11.79 | 335.18 | 2556 |

2001 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை புரிந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. 2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி, அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப்



2006 ஆகஸ்ட் 28]

பிடித்துள்ளது. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் மூன்றாவது இடத்தில் இருந்து வருகிறது. உள்நாட்டுப் பயணிகள், வெளிநாட்டுப் பயணிகள் ஆகிய இரு பிரிவினரின் வருகையிலும் முதலிடத்தை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 7. சுற்றுலா ஆணையரகம் மற்றும் அதன்கீழ் இயங்கும் அலுவலகங்கள்

சுற்றுலா ஆணையரகம், சுற்றுலா ஆணையர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. சுற்றுலா ஆணையரகத்தில் ஒரு இணை இயக்குநர், இரண்டு துணை இயக்குநர்கள், மூன்று உதவி இயக்குநர்கள், ஒரு வெளியீட்டு அலுவலர், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் 206-க்கும் மேற்பட்ட அமைச்சுப் பணியாளர்கள் பணியிடங்கள் உள்ளன. சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் 20 சுற்றுலா அலுவலகங்கள் (14 தமிழ்நாட்டிலும், 6 வெளிமாநிலங்களிலும்) மற்றும் 27 சுற்றுலாத் தகவல் மையங்கள் (19 தமிழ்நாட்டிலும், 8 வெளிமாநிலங்களிலும்) இயங்கி வருகின்றன. சுற்றுலாப் ப்யணிகளுக்குத் தேவையான தகவல் வழங்குதல், மேலும் அவர்கள் தங்கள் பயணங்களை மேற்கொள்ள உதவி செய்தல், தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஆட்சியர்/பொதுப் பணித் துறை/உள்ளாட்சி அமைப்புகளுடன் சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஒத்துழைத்தல் போன்றவை சுற்றுலா அலுவலகங்களின் முக்கியமான பணிகளாகும்.

சுற்றுலா அலுவலகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

**தமிழ்நாட்டில் செயல்படுபவை**

1) சென்னை
2) கன்னியாகுமரி
3) உதகமண்டலம்
4) கொடைக்கானல்
5) மாமல்லபுரம்
6) மதுரை
7) இராமேசுவரம்
8) தஞ்சாவூர்
9) திருச்சிராப்பள்ளி

10) திருநெல்வேலி

11) சேலம்

12) தருமபுரி

13) சிதம்பரம்

14) பூம்புகார்

**பிற மாநிலங்களில் செயல்படுபவை**

15) புது தில்லி

16) மும்பை

17) கொல்கத்தா

18) பனாஜி (கோவா)

19) ஜெய்ப்பூர்

20) ஆக்ரா

**சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் செயல்பட்டு வரும் சுற்றுலாத் தகவல் மையங்கள்**

**தமிழ்நாட்டில் செயல்படுபவை**

**விமான நிலையங்கள்**

1) சென்னை (பன்னாட்டு விமான நிலையம்)

2) சென்னை (உள்நாட்டு விமான நிலையம்)

3) மதுரை

4) கோயம்புத்தூர்

5) திருச்சிராப்பள்ளி

**இரயில் நிலையங்கள்**

6) சென்னை (சென்ட்ரல்)

7) சென்னை (எழும்பூர்)

8) மதுரை

9) கோயம்புத்தூர்



10) இராமேசுவரம்

11) திருச்சிராப்பள்ளி

12) திருநெல்வேலி

**பேருந்து நிலையங்கள்**

13) புறநகர்ப் பேருந்து நிலையம், கோயம்பேடு

14) இராமேசுவரம்

**பிற இடங்கள்**

15) கூடலூர் (நீலகிரி மாவட்டம்)

16) தரங்கம்பாடி (நாகப்பட்டினம் மாவட்டம்)

17) ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர் (தஞ்சாவூர் மாவட்டம்)

18) பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்)

19) வேலூர் கோட்டை (வேலூர் மாவட்டம்)

**பிற மாநிலங்களில் செயல்படுபவை**

20) இரயில் நிலையம், பெங்களூர்

21) ஐதராபாத்

22) திருவனந்தபுரம்

23) அகமதாபாத்

24) புவனேஷ்வர்

25) சண்டிகர்

26) கௌகாத்தி

27) வாரணாசி

## 8. சுற்றுலா அலுவலர்களின் எல்லைகள்

தமிழ்நாட்டிலுள்ள 14 சுற்றுலா அலுவலகங்களில் பொறுப்பு வகிக்கும் சுற்றுலா அலுவலர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்தப் பணிபுரிந்து வருகிறார்கள். விவரம் பின்வருமாறு:

| வ.எண் | சுற்றுலா அலுவலர் | எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மற்றும் திருவள்ளூர் |
| 2. | மாமல்லபுரம் | காஞ்சிபுரம் மற்றும் வேலூர் |
| 3. | சிதம்பரம் | விழுப்புரம் மற்றும் கடலூர் |
| 4. | பூம்புகார் | நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 5. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை |
| 6. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 7. | மதுரை | மதுரை மற்றும் விருதுநகர் |
| 8. | இராமேசுவரம் | இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 9. | கன்னியாகுமரி | கன்னியாகுமரி |
| 10. | சேலம் | சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு |
| 11. | தருமபுரி | தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை |
| 12. | கொடைக்கானல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| 13. | உதகமண்டலம் | நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் |
| 14. | திருநெல்வேலி | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி |

## 9. சுற்றுலாப் பயணிகளின் வகைப்பாடு

தமிழ்நாட்டுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளைக் கீழ்க்கண்ட வகைகளில் பிரிக்கலாம்:

***(அ) பொழுதுபோக்கு சுற்றுலாப் பயணிகள்* (Leisure Tourists):** தங்கள் விடுமுறையை உல்லாசமாகக் கழிப்பது என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டவர்கள் இவ்வகை சுற்றுலாப் பயணிகள். பொதுவாக இவர்கள் தங்கள் குடும்பத்துடன் மலைவாசஸ்தலங்கள்,,கடற்கரை வளாகங்கள், வன விலங்குச் சரணாலயங்கள் போன்ற இடங்களுக்குச் செல்வர்.

***(ஆ) ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகள்:*** இவ்வகையினர் வழிபாடு சார்ந்த கடமைகளைப் பூர்த்தி செய்வதற்காகக் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்கின்றனர். தாங்கள் வந்த நோக்கம் பூர்த்தியானவுடன் அப்பகுதியைச் சுற்றியுள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வதையும் தவிர்ப்பதில்லை. ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகளில் மூத்த குடிமக்களே (Senior Citizens) அதிக அளவில் இருக்கின்றனர்.





***(இ) பாரம்பரியச் சுற்றுலாப் பயணிகள்:*** இவர்கள் வரலாறு மற்றும் பாரம்பரியம் சார்ந்த புராதனச் சின்னப் பகுதிகளுக்குச் செல்வதோடு தங்கள் சுற்றுலாவை நிறுத்திக் கொள்கின்றனர்.

***(ஈ) சாகசச் சுற்றுலாப் பயணிகள்:*** பெரும்பாலும் இளைஞர்களே சாகசச் சுற்றுலாவில் ஈடுபடுகின்றனர். நீர் விளையாட்டு, வான்வெளி விளையாட்டு, காடுமுரடான மலைப் பாதைகளில் நடத்தல் போன்றவை இவர்களின் விருப்பமாக உள்ளன.

***(உ) தொழில் சார்ந்த சுற்றுலாப் பயணிகள்:*** முன்னணித் தனியார் நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் போன்றவற்றில் பணிபுரியும் உயரதிகாரிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், பொதுக் குழுக் கூட்டங்கள் முதலியவற்றில் கலந்துகொள்வதற்காக ஆண்டு முழுவதும் தமிழ்நாட்டுக்கு வருகை புரிகின்றனர். தங்கள் தொழில் சார்ந்த வேலை முடிவடைந்ததும், இவர்கள் அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் செல்கின்றனர்.

***(ஊ) மருத்துவச் சுற்றுலாப் பயணிகள்:*** இவ்வகையினர் இதர மாநிலங்களிலிருந்தும், ஒரு சில வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டுக்கு வருகை புரிகின்றனர். இவர்களுக்கு உதவிபுரிய உதவியாளர்கள் உடன் வருவார்கள். தங்கள் மருத்துவச் சிகிச்சை முடிவடைந்ததும், சோர்வு நீக்கும் வழியாக அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று வருகின்றனர்.

***(எ) கல்விசார் சுற்றுலாப் பயணிகள்:*** கல்வியையும், சுற்றுலாவையும் இணைத்து கல்வி நிறுவனங்களிலிருந்து வருகை புரியும் மாணவர்கள் இப்பிரிவில் அடங்குவர். மாணவர்களுக்கென்று பிரத்தியேகமாக சுற்றுலாத் துறை தன் கட்டுப்பாட்டில் உள்ள பூம்புகார் சுற்றுலா மையம், மதுரை ஒலி-ஒளிக் காட்சி, பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டை ஆகியவற்றின் நுழைவுக் கட்டணத்தில் சலுகை அளித்து வருகிறது.

***(ஏ) சமூகச் சுற்றுலா:*** தங்கள் உற்றார், உறவினருடன் பண்டிகைகளைக் கொண்டாடுவதற்காகவும், கண்காட்சிகளில் பங்குகொள்வதற்காகவும், சமூக விழாக்களில் கலந்துகொள்வதற்காகவும் தமிழ்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். இவர்கள் தாங்கள் வந்த நோக்கம் முடிவடைந்தவுடன், சுற்றுலாத் தலங்களைக் கண்டு களிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

[2006 ஆகஸ்ட் 28

## 10. மத்திய அரசின் உதவித் திட்டங்கள்

மத்திய அரசு, மாநிலங்களில் சுற்றுலா அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, மத்திய நிதி உதவித் திட்டங்களின்மூலம் உதவி புரிந்து வருகிறது. எட்டு மற்றும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், நாடு முழுவதும் பரவலாக, சிறு, சிறு தனித் தனித் திட்டங்களுக்காக இந்நிதி பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, உபயோகம் குறைந்த அளவில் உணரப்பட்டதுடன், சுற்றுலா வளர்ச்சியில் எதிர்பார்த்த அளவு மத்திய நிதி உதவி பயன்படவில்லை. எனவே மத்திய அரசு தனது பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (2002–2007) கீழ்க்கண்ட திட்டங்களுக்கு மட்டும் நிதியுதவி அளிப்பது என முடிவெடுத்துள்ளது :

(அ) ஒருங்கிணைந்த கட்டமைப்பு/அடிப்படை வசதிகள் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம்

(ஆ) சுற்றுலா சுற்றுச் சாலை ஒருங்கிணைந்த மேம்பாடு

(இ) கிராமியச் சுற்றுலாவின் அதிக வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்கள்

(ஈ) கிராமியச் சுற்றுலா

ஏற்கெனவே உள்ள கட்டமைப்பு/அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் புதிய சுற்றுலாத் தலங்களை உலகத் தரத்திற்கு உயர்த்துதல் ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த கட்டமைப்பு/அடிப்படை வசதி மற்றும் சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது. கட்டமைப்பு/அடிப்படை வசதி மற்றும் சுற்றுலாத் தல மேம்பாட்டிற்காக மத்திய அரசு சுற்றுலாத் தலம் ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ. 5.00 கோடி (ஆண்டொன்றுக்கு) வரை ஒவ்வொரு சுற்றுலாத் தலத்திற்கு நிதி ஒப்பளிப்புச் செய்கின்றது. சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாட்டிற்காக, சுற்றுச் சாலை ஒன்றிற்கு ரூ. 8.00 கோடி வரை ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. அதிக அளவு வருமானத்தை உருவாக்கும் திட்டங்களின்கீழ், மத்திய அரசு மொத்த மதிப்பீட்டில் 25 சதவிகிதத்தை மானியமாக அளிக்கிறது. மீதமுள்ள 75 சதவீதத்தை மாநில அரசுகள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் அவர்களின் பங்களிப்பாகச் செலவழிக்க வேண்டும். கிராமியச் சுற்றுலாவிற்காக ரூ. 50.00 இலட்சம் ஒப்பளிப்புச் செய்கின்றது.

மேற்கண்ட மத்திய அரசின் திட்டங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகள் பின்வருமாறு:



2006 ஆகஸ்ட் 28]

(அ) **சுற்றுலாத் தலங்களைச் சுற்றியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல்:**

இதில் நிலச் சீரமைப்பு (landscaping) மேம்படுத்துதல், பூங்காக்களை அபிவிருத்தி செய்தல், வேலி அமைத்தல், சுற்றுச் சுவர் எழுப்புதல் முதலியன அடங்கும்.

(ஆ) சுற்றுலாத் தலத்தையும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஒளிரும் விளக்குகளால் (illumination) ஒளிரச் செய்தல்.

(இ) திடக் கழிவு மேலாண்மை மற்றும் கழிவு நீர் மேலாண்மையை மேம்பாடு செய்தல்.

(ஈ) சுற்றுலாவுடன் நேரடித் தொடர்புடைய நீர் சாகச விளையாட்டு, சாகச விளையாட்டு, சுற்றுலாப் பகுதிகளில் உலா வர சுற்றுச்சூழலுக்கு எதிர்வினை புரியாத போக்குவரத்து ஆகியவற்றுடன் தொடர்புடைய சாதனங்களைக் கொள்முதல் செய்தல்.

(உ) புராதனச் சின்னங்களைப் புதுப்பித்தல் (66:33 என்ற விகிதாச்சாரத்தில், அதாவது 66 சதவிகித மத்திய அரசின் நிதி உதவி).

(ஊ) விளம்பரப் பலகைகள் (Signages) நிறுவுதல்.

(எ) சுற்றுலாப் பயணிகள் வருகை மையங்கள்/வரவேற்பு மையங்கள்/ சுற்றுலா விளக்க மையங்கள்.

(ஏ) இதர வேலைகள்/சுற்றுலாவுடன் நேரடியாகத் தொடர்புடைய செயல்பாடுகள்.

2005–06 ஆம் ஆண்டில் மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்தால் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகைகளின் விவரம் பின்வருமாறு:

**2005–2006-ல் ஒப்பளிப்பு பெறப்பட்ட மத்திய அரசின் நிதி உதவித் திட்டங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். (1) | திட்டத்தின் பெயர் (2) | ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை (3) | மத்திய அரசால் அளிக்கப்பட்ட தொகை (முதல் தவணை) (4) |
|---|---|---|---|
| 1. | மாமல்லபுரம் ஒருங்கிணைந்த மேம்பாடு இரண்டாம் கட்டம் | 432.00 | 345.00 |

[2006 ஆகஸ்ட் 28

| | | | |
|---|---|---|---|
| 2. | கொடைக்கானல் மேம்பாடு | 470.19 | 376.15 |
| 3. | இராமேஸ்வரம் மேம்பாடு | 426.42 | 341.14 |
| 4. | திருவண்ணாமலை மேம்பாடு | 459.45 | 367.56 |
| 5. | ஜைன தீர்த்த சேத்திரங்கள் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு திருமலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல், மேல்சித்தாமூர், திருநாதர்குன்று, திருநறுங்கொண்டை, வள்ளிமலை மற்றும் திருப்பருத்திக்குன்றம் | 192.00 | 48.00 |
| 6. | ஆதிசங்கரர் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு (மாங்காடு, திருவொற்றியூர், சுவாமிமலை, சிதம்பரம், திருவானைக்காவல், மயிலாடுதுறை, கும்பகோணம், திருச்சி மலைக்கோட்டை மற்றும் திருச்செந்தூர்) | 443.00 | 354.40 |
| 7. | அறுபடை வீடு சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு (பழனி, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை, திருத்தணி) | 798.97 | 639.17 |
| 8. | சோழநாட்டு திருப்பதிகள் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு (மத்திய அரசு பங்கு ரூ. 500.00 இலட்சம் + மாநில அரசு பங்கு ரூ. 202.46 இலட்சம்) | 500.00 | 400.00 |
| 9. | இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தேவிப்பட்டினம் மேம்பாடு (மத்திய அரசு பங்கு ரூ.50.00 இலட்சம் + மாநில அரசு பங்கு ரூ.25.60 இலட்சம்) | 50.00 | 40.00 |
| 10. | திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருப்புடைமருதூர் மேம்பாடு | 49.55 | 39.64 |
| 11. | திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருக்குறுங்குடி மேம்பாடு | 50.00 | 40.00 |
| 12. | ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறை /சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலங்கள் மற்றும் அது சார்ந்த உடமைகள் சீர்செய்தல் (ஆழிப் பேரலை இடருதவி) | 499.50 | 150.00 |
| 13. | தஞ்சாவூரில் ஒலி ஒளிக் காட்சி அமைத்தல் | 150.00 | 135.00 |
| 14. | மாமல்லபுரத்தில் ஒலி வழிகாட்டி வசதியை அறிமுகப்படுத்துதல் (மத்திய அரசு பங்கு ரூ. 44.02 இலட்சம் + மாநில அரசு பங்கு ரூ. 44.02 இலட்சம்) | 44.02 | 39.62 |
| 15. | முட்டுக்காடு படகுக் குழாமில் ஒருங்கிணைந்த வளர்ச்சி மேம்பாடு (மைய அரசு பங்கு ரூ. 52.00 இலட்சம் + தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பங்கு ரூ. 15.00 இலட்சம்) | 52.00 | 41.60 |
| | மொத்தம் | 4.617.00 | 3.357.28 |



2006 ஆகஸ்ட் 28]

*மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**2006–07 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட சுற்றுலாத் தலங்கள் மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்படும்.**

***சுற்றுலாத் தலங்கள்:*** *(அ) மதுரை; (ஆ) தஞ்சாவூர்; (இ) கன்னியாகுமரி; (ஈ) வேலூர்*

***சுற்றுச் சாலை:*** *சென்னை–காஞ்சிபுரம்–திருக்கழுக்குன்றம் (பட்சி தீர்த்தம்)–மாமல்லபுரம்*

## 11. மாநில அரசின் உதவித் திட்டங்கள்

*கடந்த ஐந்தாண்டுகளில் வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலாப் பிரிவிற்காக ஒதுக்கப்பட்ட தொகைகள் பின்வருமாறு:*

| வருடம் | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 2001–2002 | 17.47 | 14.75 |
| 2002–2003 | 32.64 | 12.19 |
| 2003–2004 | 26.79 | 26.15 |
| 2004–2005 | 30.35 | 31.29 |
| 2005–2006 | 32.42 | 37.04 |

***(அ) சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை அளித்தல்:*** *சுற்றுலாத் துறையானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் படிப்படியான அளவில் வசதிகளை மேம்படுத்துதல், அடிப்படை வசதிகளை உருவாக்குதல் போன்ற முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதனடிப்படையில் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள முக்கியமான, ஆனால் அதிகப் பிரபலமடையாத சுற்றுலாத் தலங்கள் மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையோடு தெரிந்தெடுக்கப்படுகின்றன. இவற்றை மேம்பாடு செய்வதற்காகும் திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதத்தை சுற்றுலாத் துறை ஏற்றுக்கொள்கிறது. மீதமுள்ள 50 சதவிகிதம் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாவட்ட நிர்வாகத்தின்மூலம் செலவழிக்கப்படுகிறது.*

[2006 ஆகஸ்ட் 28

*2005–06*—ல் *15* மாவட்டங்களில் பரவியுள்ள *20* சுற்றுலா/ஆன்மீக மையங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | திட்டத்தின் மொத்த மதிப்பீடு | மாவட்ட நிர்வாகப் பங்கு | சுற்றுலாத் துறை பங்கு |
|---|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருநாங்கூர் மேம்பாடு | 22.28 | 11.14 | 11.14 |
| 2. | நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமணஞ்சேரியில் கட்டமைப்பு வசதிகள் | 20.00 | 10.00 | 10.00 |
| 3. | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தேவர்பெட்டாவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் | 69.00 | 34.50 | 34.50 |
| 4. | கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் உள்ள சந்திரசூடேசுவரர் திருக்கோயில் மேம்பாடு | 27.00 | 13.50 | 13.50 |
| 5. | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தளி பெரிய ஏரியில் கட்டமைப்பு வசதிகள் | 60.00 | 30.00 | 30.00 |
| 6. | தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பசுபதி கோயில் திருப்புலமங்கை பிரம்மபுரிசுவரர் திருக்கோயிலுக்கு அணுகு சாலை மேம்பாடு | 4.50 | 2.25 | 2.25 |
| 7. | தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பூண்டிமாதா தேவாலயத்தில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 20.00 | 10.00 | 10.00 |
| 8. | திருவண்ணாமலை மாவட்டம் எலத்தூர் மோட்டூரில் உள்ள அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் மேம்பாடு | 12.80 | 6.40 | 6.40 |
| 9. | திருவண்ணாமலை நகராட்சிப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 75.50 | 37.75 | 37.75 |
| 10 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் குமாரவயலூரில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 15.00 | 7.50 | 7.50 |
| 11. | உதகமண்டலத்தில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 80.00 | 40.00 | 40.00 |
| 12. | கொடைக்கானலில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 120.00 | 60.00 | 60.00 |
| 13. | நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 7.00 | 3.50 | 3.50 |
| 14. | கரூர் மாவட்டம், அய்யர் மலையில் உள்ள அருள்மிகு இரத்தினகிரீசுவரர் ஆலயத்திற்கு அருகில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 32.40 | 16.20 | 16.20 |
| 15. | சேலம் மாவட்டத்தில் உள்ள தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்திற்கு அருகில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 20.15 | 10.075 | 10.075 |
| 16. | மதுரையில் உள்ள வண்டியூர் மாரியம்மன் கோயில் குளத்தில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 10.00 | 5.00 | 5.00 |
| 17. | விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மேல்நாரியப்பனூர் புனித அந்தோணியார் ஆலயத்தில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 20.80 | 10.40 | 10.40 |
| 18. | உதயகிரியில் பயோடைவர்சிட்டி பூங்கா ஏற்படுத்துதல் | 37.50 | 18.75 | 18.75 |
| 19. | திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நைனார் குளம் மேம்பாடு | 130.00 | 65.00 | 65.00 |
| 20. | கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள சூலூர் ஏரி மேம்பாடு | 16.00 | 8.00 | 8.00 |
| | மொத்தம் | 799.93 | 399.965 | 399.965 |



2006 ஆகஸ்ட் 28]

*2006-07* ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகப் பிரபலமடையாத சுற்றுலா மையங்கள் மற்றும் ஆன்மீக மையங்கள் கண்டறியப்பட்டு, அவை மேம்படுத்தப்படும்.

**(ஆ) பகுதி-II (Part-II) திட்டங்கள் *(2005-06)*:** ஒவ்வொரு ஆண்டும் புதிய திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது. *2005–06*—ல் கீழ்க்கண்ட திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | திட்டம் | தொகை |
|---|---|---|
| 1. | சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் 2005–2006 ஆம் ஆண்டில் முதன்முறையாக தனியார் நிறுவனங்களுடன் இணைந்து சென்னையில் பயணச் சந்தை நடத்தப்படவுள்ளது | 20.00 |

[2006 ஆகஸ்ட் 28

| | | |
|---|---|---|
| 2. | சென்னை, கொடைக்கானல், தஞ்சாவூர், சிதம்பரம், மதுரை ஆகிய சுற்றுலா அலுவலகங்களுக்கும், சுற்றுலா ஆணையரகத்திற்கும் புதிய கணினிகள் 2005–2006 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டுள்ளன. | 5.00 |
| 3. | சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக திருவிடந்தை, திருமழிசை, திருநின்றவூர், கோயம்பேடு, மேலூர், திருமுல்லைவாயில், வல்லக்கோட்டை மற்றும் திருவொற்றியூர் ஆகிய புனிதத் தலங்கள் மேம்படுத்தப்படும். (முதல் கட்ட நடவடிக்கை) | 30.00 |
| 4. | பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டை 2005–2006 ஆம் ஆண்டில் புனரமைக்கப்படும் | 11.00 |
| 5. | ஏலகிரி மலை சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 2005–2006 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்படும் | 20.00 |
| 6. | 2005–2006 ஆம் ஆண்டில் அகமதாபாத், புவனேஸ்வர், சண்டிகர், கௌகாத்தி மற்றும் வாரணாசி ஆகிய சுற்றுலாத் தகவல் மையங்களில் நிகரி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது | 1.00 |
| 7. | ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதி சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 2005–2006 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்படும். (மாவட்ட நிர்வாகப் பங்கு ரூ. 75.00 இலட்சம்+சுற்றுலாத் துறை பங்கு ரூ. 75.00 இலட்சம்) | 75.00 |
| | மொத்தம் | 162.00 |

**2006–2007 ஆம் ஆண்டில் பல புதிய திட்டங்கள் பகுதி–2 திட்டங்களின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.**

***(இ) ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்:*** இவை 2005-06-ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களாகும். இத்திட்டத்தின்கீழ், கடலூர் மாவட்டத்திலுள்ள வெள்ளிக் கடற்கரையில் (கடலூர்) சில அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ. 10.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்புச் செய்யப்பட்டது.

கிழக்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அதிகம் பிரபலமடையாத மலைவாசஸ்தலமான சிறுமலையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக ரூ. 5.00 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டிலும் இதுபோன்ற திட்டங்கள் ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி திட்டத்தின்கீழ் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.



2006 ஆகஸ்ட் 28]

## 12. சுற்றுலா மேம்பாடு மற்றும் வர்த்தகம்

***(அ) விளம்பரம்:*** நீண்ட கால பயன்பாடு, அளவுக்கதிகமான வாசகர்கள், குறைந்த செலவில் உருவாக்குதல் போன்ற திறன்களைப் பெற்றிருப்பதால் விளம்பரம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. எனவே, சுற்றுலாத் துறை கடந்த ஆண்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து வெளியிடப்படும் சுமார் 116 தினசரி மற்றும் பத்திரிகைகளில் தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களை மையப்படுத்தி விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டிலும் இதுபோன்ற விளம்பரங்கள் வெளியிடப்படும். இதில் உலக அளவில் விற்பனையாகும் பத்திரிகைகள்/தினசரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

***ஆ) கையேடுகளை அச்சிடுதல்:*** சுற்றுலாத் துறை துவக்கத்திலிருந்து பலவிதமான கையேடுகளை பலப் பல வண்ணங்களில், பலப் பல மொழிகளில் அச்சிட்டு வருகிறது. இக்கையேடுகள் சுற்றுலா மையங்களைப் பற்றிய விவரங்கள், முக்கியமான தொலைபேசி எண்கள், தங்கும் வசதி மற்றும் போக்குவரத்து வசதிகள், சுற்றுலா மையங்களின் புகைப்படங்கள் முதலியவற்றை உள்ளடக்கியிருக்கும். சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலாத் தகவல் மையங்கள், ஓட்டல்கள், பொருட்காட்சிகள், கண்காட்சிகள் போன்ற ஊடகங்களின்மூலம் விநியோகிக்கப்படும் இந்தக் கையேடுகள் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு நீண்டகாலப் பயன்பாட்டில் உள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் மிகச் சிறந்த புகைப்படங்களுடன்கூடிய கையேடுகள் அச்சிடப்படும். உலக பாரம்பரிய புராதனச் சின்னங்களின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள கீழ்க்கண்ட பாரம்பரிய புராதனச் சின்னங்களைப் பற்றிய உடனறி வண்ணப்படக் கையேடு (Coffee Table Book) எனப்படும் புகைப்படப் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன:

(1) நீலகிரி மலை ரயில்

(2) பல்லவர்களின் புராதனச் சின்னங்கள்

(3) தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களில் உள்ள சோழர்களின் கோயில்கள்

மேலும், தமிழ்நாட்டிலுள்ள சமண நினைவுச் சின்னங்களைப் பற்றிய புத்தகம் ஒன்றும் 2006-07 ஆம் ஆண்டில் அச்சிடப்படவுள்ளது.

***(இ) வெளிநாட்டுப் பயண மற்றும் சுற்றுலாச் சந்தையில் பங்கு கொள்ளல்:*** நமது நாட்டின் பொருளாதாரத்திற்கு சுற்றுலாப் பிரிவு அளிக்கும் பங்களிப்பு 4.8 மில்லியன் அமெரிக்க டாலர். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் செலவு செய்யக்கூடியவர்களாதலால் பொருள்தார வளர்ச்சிக்கும், அந்நியச் செலாவணிக் கையிருப்பிற்கும் அவர்களின் பங்களிப்பு அதிகமாகவே இருக்கிறது. எனவே, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் தமிழக அரசின் சுற்றுலாத் துறை "பெர்லினில்" ஆண்டுதோறும் நடத்தப்படும் பிரபலமான சர்வதேச சுற்றுலாச் சந்தையில் (International Tourism Bourse, 2005) கலந்து கொண்டது. மேலும், இதுபோன்ற பல்வேறு பன்னாட்டு சுற்றுலாச் சந்தைகளில் பங்குகொண்டு அதிக அளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் முயற்சியிலும் அது ஈடுபட்டு வருகிறது.

***(ஈ) விளம்பர முகாம்கள்:*** சுற்றுலாத் துறை 2005–06 ஆம் ஆண்டில் சண்டிகார், ஜெய்ப்பூர், லக்னோ, விசாகப்பட்டினம், பெங்களூர், ஐதராபாத், புவனேஸ்வர் போன்ற இடங்களில் விளம்பர முகாம்களை நடத்தியுள்ளது. விமானம்/ரயில் மற்றும் சாலை வழிச் சுற்றுலாவிற்கான விளம்பர முகாம் புது தில்லியில் நடத்தப்பட்டது.

விளம்பர முகாம்களை வினைத் திறன்மிக்கதாக மாற்றிட, 2006–07 ஆம் ஆண்டில் முக்கிய நகரங்களில் சாலைக் கண்காட்சிகளை (Road Shows) நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கண்காட்சிகளில் தமிழகத்தின் உணவு வகைகள் மற்றும் கிராமப்புறக் கலைகள் செய்முறை மூலம் விளக்கம் மற்றும் பத்திரிகையாளர் கூட்டங்களும், உள்ளூர்ப் பயண முகவர்கள், ஓட்டல் மற்றும் அந்தந்த மாநில சுற்றுலாத் துறை சார்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடலும் நடத்தப்படும்.

## 13. சுற்றுலா வகைகள்

சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட சுற்றுலா வகைகளைத் தமிழ்நாட்டில் மேம்படுத்தி வருகிறது.

***(அ) ஆன்மீகச் சுற்றுலா:*** ஆன்மீக ஆற்றலுக்கும், தேசிய ஒருங்கிணைப்பிற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் அடையாளமாக விளங்குபவன வழிபாட்டுத் தலங்கள். அவை ஆண்டு முழுவதும் செல்லக்கூடிய இடங்கள். 90 சதவிகித பக்தர்கள் சுற்றுலாப் பயணிகளாக மாறுகிறார்கள். வழிபாட்டுத் தலங்கள் சுற்றுலாத்



துறையின் மிகச் சிறந்த விற்பனைக் கருவியாகப் பயன்படுகின்றன. இவ்வழிபாட்டுத் தலங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் அதிக அளவில் ஆன்மீக/சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவியலும். எனவே, வழிபாட்டு மையங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு சுற்றுலாத் துறை முன்னுரிமை அளித்து வருகிறது.

***2006–07 ஆம் ஆண்டில் முக்கியமான ஆன்மீகச் சுற்றுலா மையங்கள் மேம்படுத்தலுக்காகக் கண்டறியப்படும்.***

***(ஆ) சுற்றுச்சூழல் சுற்றுலா:*** விரைவான தொழில்மயமாக்கம் மற்றும் நகர வாழ்க்கை முறையினால் ஏற்படும் மன அழுத்தத்தின் காரணமாக, உலகம் முழுவதும் சுற்றுலாப் பயணிகள் சுற்றுச்சூழல் சுற்றுலாவில் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். தமிழக அரசின் சுற்றுலாத் துறை இச்சூழ்நிலையை நல்ல முறையில் உபயோகப்படுத்திக் கொள்ள விரும்புகிறது.

***2006–07 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் மையங்களைக் கண்டறிந்து அவை மேம்படுத்தப்படும்.***

***(இ) கடற்கரை சுற்றுலா:*** குறைந்த செலவில் பொழுதுபோக்குவதற்குகந்த இடம் கடற்கரை. எனவே, சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் கடற்கரையை நோக்கிச் செல்கின்றனர். கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவது சுற்றுலாத் துறையின் முக்கியக் கடமையாகிறது. 2006–07–ல் அதிகப் பிரபலமாகாத கடற்கரைப் பகுதிகள் மேம்பாட்டுப் பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கடற்கரைக்கு வருகை புரியும் அனைவருக்கும் பாதுகாப்பளிப்பது சுற்றுலாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. விபத்து மற்றும் ஏதாவது நிகழ்வுகள் எதிர் விளைவு விளம்பரத்தை ஏற்படுத்தி, எதிர்காலத்திற்குத் தீமை விளைவிக்கவல்லன. எனவே அனைத்து முக்கியக் கடற்கரைகளிலும், நன்கு பயிற்சியளிக்கப்பட்ட உயிர் காக்கும் பாதுகாவலர்களை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பாதுகாப்பாக நீச்சலடிக்கும் விதத்தில் பாதுகாப்பு வலைகளை அமைத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வலைகள் நீச்சலடிப்பவர்கள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்படுவதைத் தடுப்பதோடு, ஆபத்தான கடல்வாழ் உயிரினங்கள் நீச்சல் பகுதிக்குள் நுழைவதையும் தடுக்கும்.

***(ஈ) மருத்துவச் சுற்றுலா:*** தமிழ்நாட்டில் மிகச் சிறந்த மருத்துவ வசதிகளை அளிக்கக்கூடிய பல்வேறு தனித்துவ மருத்துவச் சேவைகள் கிடைக்கின்றன. சித்தா, ஆயுர்வேதம், யுனானி, இயற்கை வைத்தியம், யோகா போன்ற இதர வகை மருத்துவ சிகிச்சைகளும் கிடைக்கின்றன. நோயாளிகளும், அவர்களுக்கு உதவியாக வருபவர்களும் சுற்றுலாவின் வளர்ச்சிக்கு அதிக அளவில் பங்களிப்பதால், சுற்றுலாத் துறை, சுற்றுலாவை ஆரோக்கியம் பேணுவதுடன் இணைத்து 'நோய் நீங்கி நல்நிலை அடைதல்' (Illness to Wellness) என்ற கோட்பாட்டை வளர்க்க முயற்சிகளை எடுத்து வருகிறது. மருத்துவச் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அவர்கள் ஆவணங்களை உடனடித் தணிக்கை செய்து அனுப்பி வைக்குமாறு சென்னை பன்னாட்டு விமான நிலையத்திலுள்ள குடிபுகு அலுவலக அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். மருத்துவச் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் புது வகையான 'மருத்துவ நுழைவிசைவை' அறிமுகப்படுத்துமாறு சுற்றுலாத் துறை மத்திய அரசைக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், மருத்துவச் சுற்றுலாப் பயணிகளும், அவர்கள் உடன் வருவோரும் அதிகபட்சமாக ஓராண்டு வரை தங்கும் விதத்தில் தனி வகையான நுழைவிசைவுகள் வழங்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் கிடைக்கும் உலகத் தரம் வாய்ந்த மருத்துவ வசதிகள் அதிக அளவில் மருத்துவச் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது. இம்மருத்துவ வசதிகள் தமிழ்நாட்டில் செலவு குறைந்தனவாக இருப்பதால், மருத்துவமனைகள் வெளிநாடுகளில் கடுமையான வியாபார முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டு மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரீசியஸ் மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் மக்களும் தமிழ்நாட்டில் பெருமளவில் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்கிறார்கள்.

2006–07–ல் சென்னை, வேலூர், கோயம்புத்தூர், ஆகிய நகரங்களில் மருத்துவச் சுற்றுலா மேம்படுத்தப்படும்.

**(உ) பாரம்பரியச் சுற்றுலா:** 12–வது நிதிக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில், பாரம்பரியக் கட்டடங்களைப் பாதுகாப்பதற்காக அடுத்த நான்காண்டுகளில் ரூ.40 கோடியை மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு மானியமாக வழங்க உள்ளது. பாரம்பரியக் கட்டடங்களைப் பாதுகாப்பதற்கும், அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கும் இது உபயோகப்படுத்தப்படும்.



***(ஊ) கடலோரச் சுற்றுலா:*** மத்திய அரசு, ஒன்பது மாநிலங்களையும், நான்கு மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளையும் ஒட்டியுள்ள 7,516.6 கி.மீ. நீளக் கடற்கரையைப் பாதுகாக்கக் கடலோரப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை ரூ.329.52 கோடி செலவில் வடிவமைத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் காவல் நிலையங்களை நிறுவுதல், வாகனங்கள்/படகுகள் வாங்குதல் போன்றவற்றிற்காகக் கடலோர மாநிலங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

***(எ) கப்பல் பயணச் சுற்றுலா:*** 2005–06 ஆம் ஆண்டில் சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்குக் குறைந்தபட்சம் ஆறு சொகுசுக் கப்பல்கள் வந்துள்ளன. பாங்காக்கிலிருந்து வந்த மினர்வா–II, அமெரிக்க ஓரியானாவிலிருந்து வந்த ப்ரின்செண்டம், இங்கிலாந்தின் ஐலண்ட் ஸ்கை நாசா ஆகியவை இவற்றுள் முக்கியமானவை. இக்கப்பல்களில் வந்த சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாத் துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து பாரம்பரிய வரவேற்பை அளித்தன. அவர்கள் சுற்றுலா மையங்களைச் சுற்றிப் பார்ப்பதற்கும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மும்பை, கொச்சி மற்றும் கோவா துறைமுகங்கள் 40 ஆண்டுகளாக சர்வதேசக் கப்பல் பயண வரைபடத்தில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, தற்போது கொச்சி, புது மங்களூர், மர்மகோவா, மும்பை, கொல்கத்தா, போர்ட் ப்ளேர் மற்றும் தமிழ்நாட்டின் தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களைக் கப்பல் பயண நிலையங்களாக மேம்படுத்திட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சென்னை மற்றும் தூத்துக்குடியை உள்ளடக்கிய அனைத்துத் துறைமுகங்களுக்கும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கப்பல் பயணப் போக்குவரத்தை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, தமிழ்நாட்டுத் துறைமுகங்களை வியாபாரப்படுத்துதலின் ஒரு பகுதியாக, இத்துறை மும்பை துறைமுகக் கழகத்துடன் இணைந்து கப்பல் போக்குவரத்து வியாபாரத்தை முடுக்கிவிட முடிவு செய்துள்ளது.

***(ஏ) பறவைகள் சரணாலயங்கள்:*** தமிழ்நாட்டின் பறவைகள் சரணாலயங்களுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிவதால், இவ்விடங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர சுற்றுலாத் துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பழவேற்காடு மற்றும் கூத்தங்குளம் பறவைகள் சரணாலயங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

***2006–07–ல் மேலும் பல பறவைகள் சரணாலயங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர நிதி உதவிகள் அளிக்கப்படும்.***

***(ஐ) கலாச்சாரச் சுற்றுலா:*** கலாச்சாரச் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக சில விழாக்கள் வருடாந்திர நிகழ்வுகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளின் விவரங்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பரவலாக விளம்பரப்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் பயண முகவர்களும், சுற்றுலா நடத்துனர்களும் தங்கள் சுற்றுலாத் திட்டங்களை முன்கூட்டியே விளம்பரப்படுத்தி, தங்கள் சுற்றுலாக்களை இந்நிகழ்வுகளுடன் இணைந்து செயல்படுத்துவதற்கு முனைகின்றன.

***(i) பருவ கால விழாக்கள்:*** சுற்றுலாத் துறை உதகமண்டலம், ஏற்காடு, கொடைக்கானல், ஏலகிரி, கொல்லிமலை, நாகப்பட்டினம் கடற்கரை, வால்பாறை, ஜவ்வாது மலை, வெள்ளிக் கடற்கரை (கடலூர்) ஆகிய இடங்களில் மே மற்றும் ஜூன் மாதங்களில் கோடை விழாக்களை நடத்தி வருகிறது. மே மாதத்தில் தூத்துக்குடி மாவட்டத்தின் பாஞ்சாலங்குறிச்சியில் வெள்ளையர்களை எதிர்த்து வீர முழக்கமிட்ட வீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக சிறப்பு விழா நடத்தப்படுகின்றது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றால நீர்வீழ்ச்சியைப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக சாரல் விழா நடத்தப்படுகிறது.

***(ii) நாட்டிய விழாக்கள்:***

| வ.எண் | விழா | மாதம் | இடம் |
|---|---|---|---|
| 1. | நாட்டிய விழா | டிசம்பர்/ஜனவரி | மாமல்லபுரம் |
| 2. | நாட்டியாஞ்சலி விழா | பிப்ரவரி/மார்ச் | சிதம்பரம் |

***(iii) அறுவடை விழாக்கள்:***

| வ.எண் | விழா | மாதம் | இடம் |
|---|---|---|---|
| 1. | பொங்கல் விழா | ஜனவரி | தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முக்கியச் சுற்றுலா மையங்கள் |
| 2. | தேயிலை மற்றும் சுற்றுலா விழா | ஜனவரி | உதகமண்டலம்/குன்னூர் |
| 3. | மாங்கனி விழா | ஜூன் | கிருஷ்ணகிரி |



***(iv) இதர விழாக்கள்:*** சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட விழாக்களிலும் பங்குகொள்கிறது:

| வ. எண் | விழா | மாதம் | இடம் |
|---|---|---|---|
| 1. | சந்தனக் கூடு விழா | மார்ச் | ஏர்வாடி |
| 2. | சித்திரை விழா | ஏப்ரல்/மே | மதுரை |
| 3. | சித்திரை முழு நிலவு விழா | ஏப்ரல்/மே | பூம்புகார் |
| 4. | தேர்த் திருவிழா | மே | திருவாரூர் |
| 5. | சித்திரை விசுத் திருவிழா | மே | திருநெல்வேலி |
| 6. | ஆடிப் பூரத் திருவிழா | ஜூலை | மேல்மருவத்தூர் |
| 7. | ஆடிப்பெருக்குத் திருவிழா | ஜூலை/ஆகஸ்ட் | பவானி கூடுதுறை மற்றும் ஒகேனக்கல் |
| 8. | வேளாங்கண்ணி மாதா திருவிழா | ஆகஸ்ட்/செப்டம்பர் | வேளாங்கண்ணி |
| 9. | கந்தூரித் திருவிழா | ஆகஸ்ட்/செப்டம்பர் | நாகூர் |
| 10. | சதயத் திருவிழா | அக்டோபர்/நவம்பர் | தஞ்சாவூர் |

***(v) சிறப்பு நிகழ்வுகள்:*** அவ்வப்போது அகில இந்திய மற்றும் பன்னாட்டு நிலையில் நடைபெறும் உயர் மட்ட மாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை தனது வெளியீடுகள், ஒலி-ஒளிக் காட்சியமைப்புகள், வண்ணப் படக் கண்காட்சி முதலியவை மூலம் தமிழகத்தின் சுற்றுலா வளங்களை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. மேலும் சுற்றுலாத் துறையின் சின்னம் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசுகளை அக்கூட்டங்களில் பங்குகொள்ளும் பேராளர்களுக்கு நினைவுப் பரிசாகக் கொடுத்தும் சுற்றுலாத் துறையை விளம்பரப்படுத்துகிறது. 2005–06–ல் சுற்றுலாத் துறை கலந்துகொண்ட சில முக்கிய சிறப்பு நிகழ்வுகள் கீழ்வருமாறு:

***(அ) இந்திய ஓட்டல்கள் மற்றும் உணவு விடுதிகளின் சங்கங்களின் இணையம் (FHRAI):*** சுற்றுலாத் துறை 2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சென்னையில் நடைபெற்ற இந்திய ஓட்டல்கள் மற்றும் உணவு விடுதிகள் சங்கங்களின் இணையத்தின் 41–வது மூன்று நாள் அனைத்திந்திய ஆண்டுக் கூட்டத்தை சுற்றுலாத் துறை இணைந்து நடத்தியது. இதில் 700 பேராளர்கள் கலந்து கொண்டனர்.

***(அஆ) ப்ரவாசி பாரதீய திவாஸ் 2006:*** ப்ரவாசி பாரதீய திவாஸ் 7-1-2006 முதல் 9-1-2006 வரை ஐதராபாத்தில் நடைபெற்றது. இதை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும் சுற்றுலா விற்பனையாளர்கள் கலந்துகொண்டனர். சுற்றுலாத் துறை தமிழகத்திலுள்ள சுற்றுலாப் பகுதிகளை முன்னிறுத்தி ஒரு அரங்கை நிர்மானித்துக் கலந்துகொண்டது. கணினிமூலமான ஒலி-ஒளிக் காட்சியமைப்பை அமைத்து தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு உள்ள வளமான வாய்ப்புகள் விளக்கப்பட்டன. உள்நாட்டு, வெளிநாட்டு அளவில் தமிழ்நாடு சுற்றுலாவை வியாபாரப்படுத்த இந்நிகழ்வு ஒரு மாபெரும் வாய்ப்பாக அமைந்தது.

**(அஇ) இராமேசுவரத்தில் தேசிய ஆன்மீக விழா:** அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை, குறிப்பாக ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் தேசிய ஆன்மீக விழா ஒன்று இராமேசுவரத்தில் 13-1-2006 முதல் 18-1-2006 வரை நடத்தப்பட்டது. இவ்விழாவில் பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலை நடனங்கள், நீர் விளையாட்டு, நீச்சல் போட்டி, நாட்டுப் படகுப் போட்டி, பேச்சுப் போட்டி, நாடகம், கைப்பந்து மற்றும் தடகளப் போட்டிகள், கருத்தரங்கம், பரிச்சயமாக்கு சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா முதலியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

***(அஈ) கன்னியாகுமரியில் தேசிய கலாச்சார மற்றும் சுற்றுலா விழா:*** கன்னியாகுமரியை தேசிய, சர்வதேச அளவில் பிரபலப்படுத்துவதற்காக தேசிய சுற்றுலா மற்றும் கலாச்சார விழா ஒன்று கன்னியாகுமரியில் 1-1-2006 முதல் 5-1-2006 வரை நடத்தப்பட்டது. பல்வகைக் கலைஞர்கள் பங்குகொண்ட சுற்றுலாக் கொண்டாட்ட ஊர்வலம், பரதநாட்டியம் நாட்டுப்புற நடனங்கள், கைவினைப் பொருட்களின் கண்காட்சி, படகுப் போட்டி, நீச்சல் போட்டி, சுற்றுலாக் குறுந்தட்டுகள் வெளியிடுதல் என்று பல்வேறு அம்சங்களுடன் விளங்கிய இந்த விழாவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் கலந்துகொண்டனர். மேலும் ஓட்டல் தொழில், சுற்றுலா நடத்துநர்கள் பயண முகவர்கள், ஊடகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர்.

**(vi) அயல்நாட்டு அச்சு/மின்னணு ஊடகங்களுக்கான விருந்தோம்பல்:** சுற்றுலாவும், விருந்தோம்பலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. தமிழ்நாட்டின் பாரம்பரிய விருந்தோம்பல் உலகப் புகழ் பெற்றது. வெளிநாடுகளிலிருந்து பத்திரிகையாளர்கள்



திரைப்படம்/தொலைக்காட்சி சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள், வானொலி நிலையங்களின் செய்தி சேகரிப்பாளர்கள் பல்வேறு காரணங்களுக்காக அடிக்கடித் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். சில சமயங்களில் அவர்கள் தமிழகத்தின் சுற்றுலா வளங்களைப் பற்றி செய்தி சேகரிக்குமாறும் பிரத்தியேகமாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதுபோன்ற சமயங்களில் இவ்வூடகத் தொடர்பாளர்களுக்கு விமரிசையான வரவேற்பு அளிக்கப்படுகிறது. அவர்களுக்குத் தேவையான உணவு, தங்கும் வசதி, போக்குவரத்து போன்றவை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்றவுடன் தமிழகத்தின் சுற்றுலா வளங்களைப் பற்றி சிறப்பாகத் தங்கள் ஊடகங்களில் பதிக்கிறார்கள். இதனால் தமிழகச் சுற்றுலாவிற்கு நல்ல விளம்பரம் கிடைக்கிறது.

## 14. பொருட்காட்சிகளும், கண்காட்சிகளும் :

(i) வெளிமாநிலங்களையும் உள்ளடக்கிய அனைத்து சுற்றுலா அலவலகங்களிலும், சுற்றுலாத் தகவல் மையங்களிலும் உலக சுற்றுலா தினம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

(ii) ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் முதல் மார்ச் வரை சென்னையிலுள்ள தீவுத் திடலில் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிறது.

(iii) தமிழக அரசின் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சேலம், கோயமுத்தூர், மதுரை போன்ற இடங்களில் நடத்தும் அரசுப் பொருட்காட்சிகளில் சுற்றுலாத் துறை பங்குகொண்டு சுற்றுலா தொடர்பான செய்திகளை மக்களுக்கு எடுத்துச் சொல்கிறது.

## 15. தமிழ்நாட்டிலுள்ள தங்குமிட வசதிகள்:

தமிழ்நாட்டுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக, சுற்றுலா மையங்களைச் சுற்றியுள்ள இடங்களில் தங்குமிட வசதிகளுக்கான தேவை அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் 55 ஓட்டல்கள் அல்லாமல், கீழ்க்கண்ட வகைகளில் தனியார் ஓட்டல்கள் தமிழ்நாட்டில் உள்ளன:

[2006 ஆகஸ்ட் 28

| வகை | ஓட்டல்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாரம்பரியம் | 3 |
| 5-நட்சத்திரம் சொகுசு | 4 |
| 5 நட்சத்திரம் | 3 |
| 4 நட்சத்திரம் | 5 |
| 3 நட்சத்திரம் | 43 |
| 2 நட்சத்திரம் | 17 |
| 1 நட்சத்திரம் | 3 |
| | 78 |

வகைப்படுத்தப்படாத ஓட்டல்களும் தமிழ்நாட்டில் அதிகம் உள்ளன. வகைப்படுத்தப்பட்ட ஓட்டல்கள் அனைத்திலும் மொத்தமாகத் தனி நபர், இருவர், குடும்பத்தினர் தங்குவதற்காக 5,000-க்கும் மேற்பட்ட அறைகள் உள்ளன.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்புடைய தொழில்களின் அதிமிகு வளர்ச்சியின் காரணமாக, விருந்தோம்பல் பிரிவின் தொடர் வாழ்நிலை சம நிலையில் இருக்கும். தகவல் தொழில்நுட்பப் பிரிவு, வாகன உற்பத்திப் பிரிவு, தகவல் தொடர்புப் பிரிவு, வங்கிப் பிரிவு ஆகியவை தமிழகத்தைத் தங்களுக்கு விருப்பமான தொழில் சார்ந்த செல்விடமாகத் தேர்ந்தெடுத்துவிட்ட காரணத்தால், 2005-2006 ஆம் ஆண்டில் விருந்தோம்பல் பிரிவின் தங்குமிட வசதிகளில் 80% நிரப்பப்பட்டுள்ளன. தற்போது 29 ஓட்டல்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 5 நட்சத்திர வகைப்பாட்டில் ஐந்து திட்டங்களும், 4 நட்சத்திரத்தில் இரண்டும், 3 நட்சத்திரத்தில் மூன்றும், மற்றும் 1 நட்சத்திரத்தில் இரண்டும் அடங்கும். குறைந்த கட்டணத்துடன்கூடிய அதிகரிக்கப்பட்ட விமானத் தொடர்புகள், செலவு செய்யக்கூடிய வகையிலான அதிக வருமானம், இந்தியாவும், சீனாவும் முக்கிய 'பயண மற்றும் சுற்றுலா சந்தை'யாக மாறி வருதல் ஆகியவையும் விருந்தோம்பல் பிரிவின் தொடர் வாழ்நிலை சம நிலையில் இருப்பதற்கு உதவி செய்கின்றன. தனியார் நிறுவனங்கள் அதிக அளவில் ஓட்டல்கள் கட்டுவதை இத்துறை ஊக்குவிக்கும்.



2006 ஆகஸ்ட் 28]

**16. 2006-07-க்கான குறிக்கோள்களும், செயல் திட்டங்களும் :**

***(அ) சுற்றுலாப் பயணிகளின் வருகை:*** 2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 335.18 இலட்சம். இவ்வெண்ணிக்கையைக் கீழ்க்கண்ட விதத்தில் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:

| வருடம் | சுற்றுலாப் பயணிகளின் வருகையின் திட்டமிடப்பட்டுள்ள எண்ணிக்கை (உள்நாடு மற்றும் வெளிநாடு) |
|---|---|
| 2006 | 360.00 இலட்சம் |
| 2007 | 400.00 இலட்சம் |

***(ஆ) தங்கும் நாட்கள்:*** அரசு வருவாய் ஈட்டுவதற்கும், உள்ளூர்ப் பொருளாதாரச் செயல்பாடுகளைப் பெருக்குவதற்கும் தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் தங்கும் நாட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மிக முக்கியமானது ஆகும். எனவே, சுற்றுலாப் பயணிகள் தங்கும் நாட்களின் எண்ணிக்கையை கீழ்க்கண்ட விதத்தில் அதிகரிப்பதை முக்கியக் குறிக்கோளாகக் கருத்தில் கொண்டுள்ளது:

| வ.எண் | சுற்றுலாப் பயணிகள் தற்போது தங்கும் நாட்கள் | சுற்றுலாத் துறை நிர்ணயித்துள்ள குறியீடு |
|---|---|---|
| 1. | 4 முதல் 5 நாட்கள் (உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்) | 7 முதல் 8 நாட்கள் |
| 2. | 7 நாட்கள் (வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்) | 10 நாட்கள் |

அதிகப் பிரபலமில்லாத சுற்றுலாத் தலங்கள், ஆன்மீக மையங்கள் போன்றவற்றை மேம்படுத்தியும், ஒலி-ஒளிக் காட்சி, கம்பிவழிப் பாதை, படகுக் குழாம்கள் போன்ற புதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும், முக்கியச் சுற்றுலா மையங்களுக்கு சாலை வழித் தொடர்புகளை அதிகரித்தும், மேற்சொன்ன குறியீட்டை அடைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகளின் வகை மற்றும் அவர்கள் தங்கும் நாட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள சில விளம்பரத் திட்டங்கள்:-

(I) தினசரிகள், பத்திரிகைகள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிடுதல்.

(2) இதர மாநிலங்களின் அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளில் குறும்படங்கள் மற்றும் விளம்பரங்களைத் திரையிடல்.

(3) இரயில் நிலையங்கள்; விமான நிலையங்கள், பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டி (CCTV) மூலம் விளம்பரங்களைத் திரையிடல்.

(4) முக்கிய இடங்களில் தொடுதிரைக் கணினி வசதிகளை நிறுவி சுற்றுலாச் செய்திகளை அளித்தல்.

(5) பரிமாற்ற வழிவகை வலைத்தளம்.

(6) பல்வேறு மொழிகளில் உயர் தரம் வாய்ந்த சுற்றுலாத் தகவல் கையேடுகளை அச்சிட்டு விநியோகித்தல்.

(7) மின்னணு வியாபாரம்.

(8) சாலைக் கண்காட்சிகள்.

## 17. ஓட்டல் நிர்வாகம் மற்றும் உணவுத் தொழில்நுட்பப் பயிற்சி:

**(அ) மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பப் பயிலகம், திருச்சிராப்பள்ளி:** 1981–ல் தொடங்கப்பட்ட இந்தப் பயிலகம் புது தில்லியின் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு தமிழக அரசின் தொழில்நுட்பத் துறையுடன் இணைக்கப்பட்டது. உணவுத் தொழில்நுட்பத்தில் மூன்று வருடப் பட்டயப் படிப்பு, ஓட்டல் வரவேற்பு, கணக்கியல், உணவு தயாரித்தல், ரொட்டி மற்றும் இனிப்புப் பண்டங்களைத் தயாரித்தல் ஆகியவற்றில் ஓராண்டு சான்றிதழ் படிப்பு ஆகியவற்றை இப்பயிலகம் அளிக்கிறது. தற்போது இங்கு 800 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

**(ஆ) உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்பம் மற்றும் செயல் முறை ஊட்ட உணவுப் பயிலகம், தரமணி, சென்னை:** இப்பயிலகம் 1963–ல் மத்திய அரசால் நிறுவப்பட்டது. மூலதன மானியத்தை மத்திய அரசே அளிக்கிறது. உணவக நிர்வாகம், உணவாக்கத் தொழில்நுட்பம், உணவுத் தயாரிப்பு முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது 900–க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பயிலகத்தில் பயின்று வருகிறார்கள்.

## 18. ஆக்கபூர்வ எதிர்காலத்திற்கான புதிய பார்வைகள்:

செப்டம்பர் 2001–ல் அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும், டிசம்பர் 2004–ல் பேரழிவை



ஏற்படுத்திய ஆழிப் பேரலையும் சுற்றுலாவிற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. எனினும், இவ்விரு சூழ்நிலைகளிலும் தாக்கம் சிறிது காலத்திற்குத்தான் நீடித்தது. சுற்றுலா, குறுகிய காலத்திற்குள் தன்னை விடுவித்துக்கொண்டு, மீண்டும் வீறு நடைபோட ஆரம்பித்துவிட்டது. ஏனென்றால், சுற்றுலா உலகத்தின் தொன்மையான தொழிலாக இருந்தபோதிலும், அதன் வளர்ச்சிக்குப் புதுப் புது வழிகள் உருவாகிக் கொண்டிருந்தன. 2006–2007 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட புதிய வழிகளில் பயணிக்கத் தீர்மானித்துள்ளது:

**(அ) கம்பிவழிப் பயணம்:** சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக 2006–2007–ல் உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் தலங்களில் கம்பிவழிப் பயணம் அறிமுகப்படுத்தப்படும்.

**(ஆ) ஒலி–ஒளிக் காட்சி:** சுற்றுலாப் பயணிகளின் தங்கும் காலத்தை அதிகரிக்க மதுரை திருமலை அரண்மனையில் ஒலி–ஒளிக் காட்சி 2006–2007–ல் ரூ.96.18 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டு, பணிகள் முடிக்கப்படும். தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரியில் முறையே ரூ.150 இலட்சம், ரூ.225 இலட்சம் செலவில் ஒலி ஒளிக் காட்சி அமைக்கப்படும்.

**(இ) கன்னியாகுமரியில் புதிய படகுகள் வாங்குதல்:** மேதகு ஆளுநர் அவர்கள் 24–5–2006 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிகழ்த்திய உரையில், கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலையைப் பார்க்கச் செல்வதற்காக படகுப் போக்குவரத்து நவீனப்படுத்தப்படும் என அறிவித்தார்கள். பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும் செல்வதற்குப் படகுப் போக்குவரத்தை இயக்கி வருகிறது. தற்போது பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திடம் இரண்டு படகுகள்தான் இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய இவை போதுமானவையாக இல்லை. எனவே, இத்துறை புதிய படகுகளை வாங்கத் தீர்மானித்துள்ளது.

**(ஈ) பெருந்திட்டம்:** தற்போதுள்ள உற்பத்திப் பொருட்களை அபிவிருத்தி செய்து, புதிய சுற்றுலா உற்பத்திப் பொருட்களை உலகத் தரத்திற்கு இணையாக உயர்த்துவதற்காக மாநிலம் முழுவதற்குமான சுற்றுலாப் பெருந்திட்டம் ஒன்று வடிவமைக்கப்படும்.

**(உ) ஒலி–வழி வழிகாட்டி:** கடந்த முப்பது வருடங்களில சுற்றுலாப் பயணிகளுடனான தொடர்பின்மூலம், சுற்றுலாப்

பயணிகளின் அதிமுக்கியத் தேவை அதிகாரபூர்வ வழிகாட்டிகளின் சேவைதான் என்பதை சுற்றுலாத் துறை உணர்ந்துள்ளது. எனவே, இத்துறை ஒலி-வழி வழிகாட்டியை அறிமுகப்படுத்தத் தீர்மானித்துள்ளது. சுற்றுலாப் பயணி ஒரு சிறிய ஒலி நாடா இயக்கியைத் (audio player) தன்னுடன் எடுத்துச் சென்றால் போதும். ஒலி நாடா இயக்கியில் உள்ள பதிவு செய்யப்பட்ட வழிகாட்டல்களை அவருடைய மொழியிலேயே தெரிந்துகொள்ளலாம்.

ஒலி-வழி வழிகாட்டியில் கீழ்க்கண்ட வசதிகள் இருக்கின்றன:

| | | |
|---|---|---|
| 1. | அது தொந்தரவில்லாதது | வழிகாட்டிகளைத் தேடி அலைய வேண்டியதில்லை. |
| 2. | அதிகாரபூர்வமானது | வழிகாட்டிகள், குறிப்பாக அதிகாரபூர்வமற்ற வழிகாட்டிகள் தவறான செய்திகளைக் கூறலாம். |
| 3. | பல்மொழி வாய்ப்பு உள்ளது | சுற்றுலாப் பயணி புரிந்துகொள்ளும் எந்த மொழியிலும் விவரங்களை அறிந்துகொள்ளலாம். |
| 4. | வெளிநாட்டில் வியாபார முயற்சிகளுக்கு உதவி செய்யும் | விவரங்கள் அனைத்து மொழிகளிலும் கொடுக்கப்படுவதால், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுப்பது எளிது. |

ஆரம்பக் கட்டமாக மாமல்லபுரம், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், ஐராவதீஸ்வரர் கோயில் (தாராசுரம்), பிரகதீஸ்வரர் கோயில் (கங்கைகொண்ட சோழபுரம்) ஆகிய இடங்களில் ஒலி-வழி வழிகாட்டி முறையை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

***(ஊ) மின்னணு ஆளுமை:*** தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனை அதிக அளவில் துய்த்துக்கொள்ளும் வகையில் ஒரு ஒட்டுமொத்த மின்னணு ஆட்சித் திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலாவில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலகத்தின் எந்த ஒரு பகுதியிலிருந்தும், எந்த ஒரு நேரத்திலும் தொடர்புகொள்ளும் வகையில் ஒரு அழைப்பு மையத்தை ஏற்படுத்தி அதன்மூலம் சுற்றுலாச் செய்திகளைப் பரப்புவதே இந்த மின்னணு ஆளுமையின் முக்கிய நோக்கம்.

## 19. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி சுற்றுலாவை வணிக அடிப்படையில்





மேம்படுத்தும் முக்கிய நோக்கத்தோடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தமிழக அரசிடமிருந்து ஐந்து சுற்றுலா மாளிகைகளைப் பெற்று இரு பேருந்துகளுடன் இக்கழகம் சிறிய அளவில் செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விரைவாக முன்னேறி இன்றைக்கு மிக அதிகமாக 55 ஓட்டல்களுடன் இந்தியாவிலேயே நல்ல பெயரை ஈட்டியுள்ளது. சுற்றுலாப் பேருந்துகளின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது. இம்மாநிலத்திலுள்ள முக்கியச் சுற்றுலாப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காகக் கீழ்க்காணும் வசதிகளை இக்கழகம் செய்துள்ளது.

(1) ஓட்டல்கள்

(2) இளைஞர் விடுதிகள்

(3) உணவகங்கள்

(4) படகு இல்லங்கள்

(5) தொலைநோக்கி இல்லங்கள்

(6) ஏரிப் பூங்கா

(7) பெட்ரோல் பங்க்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் இளைஞர் விடுதிகளில் சிக்கன சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரே இடத்தில் பலர் தங்குவதற்கு பெரிய அறைகள் (DORMITORY) கொண்ட இட வசதிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு போன்ற இடங்களில் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான சுற்றுலா பருவ காலங்களிலும் குறைந்த செலவில் இட வசதியைப் பெறுவதற்கு சுற்றுலாப் பயணிகளுக்கு இவ்வசதி பயனுள்ளதாய் உள்ளது.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதி வகையிலான சாதனை :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2005–2006 ஆம ஆண்டில் (திருத்திய மதிப்பீடு) ரூ. 4,342.00 இலட்சம் மொத்த வியாபாரத் தொகையை ஈட்டியுள்ளது. ஆனால், 2004–2005 ஆம் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை ரூ. 4,056.00 இலட்சமாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2005–2006 ஆம் ஆண்டுக்கு வரி விதிப்பிற்கு முன் ரூ. 283.00 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 320.00 இலட்சமாகும்.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :**

2005–2006 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கும் பருவ காலமான நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் பெய்த தொடர் மழையின் காரணமாகவும், இயற்கைச் சீற்றமான சுனாமியின் தாக்கத்தால் கன்னியாகுமரி, இராமேசுவரம் மற்றும் திருச்செந்தூர், மாமல்லபுரம் குடில்கள் ஆகிய இடங்கள் மிகவும் மோசமாகச் சேதமடைந்தன. அதிலிருந்து மேற்படி தலங்களைப் புனரமைத்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மீண்டும் தனது மேம்பாட்டுப் பணிகளால் சேவையைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களைத் தனியாருக்குக் குத்தகைக்கு விடுதல் :**

அரசு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் 31 ஓட்டல்களையும், 10 உணவகங்களையும் தனியாருக்குக் குத்தகைக்கு விட அனுமதியளித்துள்ளது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 14 ஓட்டல்களையும், 5 உணவகங்களையும் பகிரங்க ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியாருக்குக் குத்தகைக்கு விட்டுள்ளது. இது தவிர, திருச்சி (பிரிவு–2), தஞ்சை (பிரிவு–2) ஆகிய இரண்டு ஓட்டல்களும் தனியாருக்கு ஏற்கெனவே 30 வருட காலத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

**போக்குவரத்துப் பிரிவு:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ½ நாள் முதல் 14 நாட்கள் வரையிலான திட்டமிட்ட 37 வகை சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்துகிறது. இச்சுற்றுலாத் திட்டத்தில், தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மட்டுமல்லாமல், தென்னக மாநிலங்கள் (அனைத்தும்), மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களும் உள்ளடங்கியுள்ளன. மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறப்புச் சுற்றுலா ஏற்பாடு செய்து வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகிறது:

1. ½ நாள் : சென்னை சுற்றுலா



2. 1 நாள் : மாமல்லபுரம் சுற்றுலா (நாள் முழுவதும்)
3. 1 நாள் : புதுச்சேரி சுற்றுலா
4. 1 நாள் (பகல் சுற்றுலா) : திருப்பதி சுற்றுலா
5. 1 நாள் சுற்றுலா : திருவண்ணாமலை கிரிவலம்
6. 1 நாள் : சுருட்டப்பள்ளி சுற்றுலா
7. 1 நாள் : சக்தி சுற்றுலா (தேவியர்கள் தரிசனம்)
8. 1 நாள் சுற்றுலா : திருமலை தரிசனம் (ஒன்பது வைணவத் திருக்கோயில்)
9. 1 நாள் : கொளவாய் ஏரி, வண்டலூர் உயிரியல் பூங்கா மற்றும் கிஷ்கிந்தா சுற்றுலா
10. 1 நாள் : கேளிக்கைச் சுற்றுலா
11. 1 நாள் நவகிரக : (சென்னையைச் சுற்றி) சுற்றுலா
12. 3 நாள் நவகிரக : (தஞ்சாவூரைச் சுற்றி) சுற்றுலா
13. 3 நாள் நவ திருப்பதிகள் : (திருநெல்வேலி) சுற்றுலா
14. 3 நாள் : பஞ்ச பூதத் தலங்கள்
15. 4 நாள் : அறுபடை வீடு சுற்றுலா (முருகக் கடவுள் சுற்றுலா)
16. 6 நாள் : தென்னிந்தியச் சுற்றுலா
17. 7 நாள் : மூகாம்பிகை சுற்றுலா
18. 7 நாள் : கோவா–மந்திராலயம் சுற்றுலா
19. 7 நாள் : ஆந்திரா சுற்றுலா
20. 8 நாள் : கிழக்கு–மேற்குக் கடற்கரைச் சுற்றுலா
21. 8 நாள் : தமிழ்நாடு சுற்றுலா
22. 14 நாள் : மும்பை–அஜந்தா–எல்லோரா சுற்றுலா
23. 14 நாள் : சன்னி சௌத் சுற்றுலா
24. 14 நாள் : பூரி–கயா–காசி–அலகாபாத் சுற்றுலா

**சிறப்பு சுற்றுலாக்கள்:**

25. ஊட்டி சுற்றுலா
26. கொடைக்கானல் சுற்றுலா
27. ஏற்காடு ஒகேனக்கல் சுற்றுலா
28. மைசூர் சுற்றுலா
29. ஏலகிரி சுற்றுலா
30. குற்றாலம் சுற்றுலா
31. 3 நாள் மூணாறு சுற்றுலா
32. 1 நாள் திருத்தணி–காளஹஸ்தி–நல்லாத்தூர்–மத்தூர் சுற்றுலா
33. தொண்டைநாட்டு திருப்பதிகள் சுற்றுலா
34. 1 நாள் தென்னாங்கூர்–உத்திரமேரூர்–மதுராந்தகம் சுற்றுலா
35. 1 நாள் வல்லக்கோட்டை–திருத்தணி சுற்றுலா
36. 4 நாள் சோழநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா
37. 5 நாள் பாண்டியநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா
38. 5 நாள் ஐதராபாத்–விஜயவாடா சுற்றுலா

**அதிமுக்கியச் சுற்றுலாக்கள்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதிமுக்கியச் சுற்றுலாக்கள், ரயில்–சாலை வழி சுற்றுலா கீழ்க்காணும் நகரங்களை இணைக்கும் வகையில் 2002–ல் அறிமுகப்படுத்தப்பட்டன. அவையாவன: புது தில்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் அகமதாபாத். இந்தச் சுற்றுலாவுக்கான சுற்றுலாப் பயணிகள் சென்னை இரயில்வே நிலையத்தில் வரவேற்கப்பட்டு, அதிநவீன வசதிப் பேருந்தில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டு, மீண்டும் சென்னை இரயில் நிலையத்தில் அவர்களுக்கு சிறப்பு வழியனுப்புதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் செய்யப்பட்டு வருகிறது. இச்சுற்றுலாக்களில் உறுதி செய்யப்பட்ட இரயில்வே பயணச் சீட்டு வழங்கப்படுகின்றது.

**பொருட்காட்சிப் பிரிவு:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டு முதல் சென்னை தீவுத் திடலில் இந்திய சுற்றுலா மற்றும் தொழில்



பொருட்காட்சியினை நடத்தி வருகிறது. இப்பொருட்காட்சி 2006 ஆம் ஆண்டு 4–1–2006–ல் தொடங்கப்பட்டு, 76 நாட்கள் நடத்தப்பெற்றது.

2006–ல் நடந்த பொருட்காட்சி அதிக அளவில் பார்வையாளர்களைக் கவரும் பொருட்காட்சி என நிரூபித்துள்ளது. 2005 ஆம் ஆண்டு 8.93 இலட்சம் பார்வையாளர்களை கவர்ந்த பொருட்காட்சி, 2006–ல் 10.49 இலட்சம் பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது. இது விழுக்காட்டில் 17 சதவீதம் உயர்ந்துள்ளது. 18 வருடங்களுக்குப் பிறகு இந்தச் சாதனையை அடைய முடிந்தது. இதனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய் ரூ. 234.00 இலட்சம், இதில் நிகர இலாபம் ரூ.127.00 இலட்சம். ஆனால், சென்ற ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வருவாய் மற்றும் நிகர இலாபம் முறையே ரூ.206.00 இலட்சம் மற்றும் ரூ.80.00 இலட்சம் ஆகும்.

பொருட்காட்சி அல்லாத காலங்களில் ஏராளமான தனியார் கண்காட்சிகள் (நுகர்வோர்) தீவுத் திடலில், தீவுத் திடலின் பயன்பாடு வெளிக் கொணர ஏப்ரல்–நவம்பர் மாதங்களில் நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**விற்பனை மேம்பாடு மற்றும் வர்த்தகம்:**

1. 2005–2006 ஆம் ஆண்டில் சிறப்பு சுற்றுலாக்கள் பல்வகைத் தனியார் வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. இந்நடவடிக்கையால் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.30.00 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. முதன்மை வாய்ந்த பொது நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு அவர்களின் நிறுவனத்தின் பணியாளர்கள் முக்கியச் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்க வைக்கப்பட்டார்கள். (உதாரணமாக பாரத் பெட்ரோலியம் மற்றும் தேசிய விமானப் போக்குவரத்து அமைப்பு)

2. சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் ஒருங்கிணைந்து, இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு திருப்பதி சுற்றுலா நடத்துவதற்கு வாடகையின் அடிப்படையில் பேருந்துகள் வழங்கியது. இதனால் 2005–2006 ஆம் ஆண்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கூடுதல் வருவாய் ரூ. 30.00 இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது.

3. அரசுத் துறை மற்றும் மாநிலப் பொது நிறுவனங்களுக்கு சிறப்பு விடுப்புக் காலச் சலுகை சுற்றுலாக்கள் அந்நிறுவனப் பணியாளர்களுக்கு நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் மற்றும் திட்டமிட்ட சுற்றுலாக்களுக்குக் கணினிமூலம் பதிவு செய்தல்:**

2–7–2004–ல் கணினி வழியில் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் மற்றும் திட்டமிட்ட சுற்றுலாக்களுக்குப் பதிவு செய்தல்மூலம் மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முதலிடம் பெற்றுள்ளது. கணினி வழிப் பதிவு முறை (Website) http://www.ttdc.online புதிய இணையதள முகவரியில் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஏதேனும் ஓட்டலில் இட வசதிக்கும், உலகத்தில் எங்கிருந்தேனும் திட்டமிட்ட சுற்றுலாவுக்கும் பதிவு செய்ய இயலும். கடன் வசதி அட்டைகளைப் பயன்படுத்தி தொகை செலுத்தவும், பதிவை உறுதி செய்யவும் இயலும். இந்த உத்திமூலம் சுற்றுலாப் பயணிகள் இரத்தும் செய்து கொள்ளலாம். இம்முறையினால் சுற்றுலாப் பயணிகள் தங்களது சுற்றுலாத் திட்டங்களைத் தங்களது இல்லத்திலிருந்தே திட்டமிட உதவுகிறது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.47.85 இலட்சங்கள் கடந்த 2006 மார்ச் மாதம் வரை கணினிமூலம் வருவாய் ஈட்டியுள்ளது. கீழ்க்கண்ட உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலாப் பயணிகள் கணினிமூலம் அவர்களுடைய சுற்றுலா மற்றும் தங்கும் வசதிகள் பதிவு செய்துள்ளனர்.

| வெளிநாட்டினர் | இந்திய மாநிலங்கள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் |
|---|---|
| ஸ்பெயின் | கேரளா |
| அமெரிக்கா | மகாராஷ்டிரம் |
| ஆஸ்திரேலியா | கர்நாடகா |
| பின்லாந்து | உத்தரப் பிரதேசம் |
| நார்வே | ஆந்திரப் பிரதேசம் |
| கனடா | மேற்கு வங்காளம் |
| இத்தாலி | குஜராத் |
| ஜப்பான் | புது தில்லி |
| நெதர்லாந்து | புதுச்சேரி, கோவா |



**கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலைப் பராமரிப்பு**

கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையைப் பராமரிக்கும் பணி 2002–ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ரூ.20.00 இலட்சத்தில் பல மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்த சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. ரூ.40.00 இலட்சத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள பொதுப் பணித் துறைக்கு வைப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தும் நடவடிக்கை எடுத்தல் :**

1. தமிழகத்தின் முக்கியப் பகுதிகளில் கண்ணைக் கவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கு விடுதியில் விளம்பரப் பலகைகள் அமைக்கப்பட்டன.
2. ஓட்டல்களில் அமைக்கப்பட்டுள்ள குளிர்சாதனப் பெட்டிகள் மாற்றப்பட்டன.
3. படகுக் குழாம்களுக்குப் புதிதாக 120 படகுகள் கூடுதலாக வழங்கப்பட்டு, படகுக் குழாம்களில் வருவாய் உயர்த்தப்பட்டது.
4. மாமல்லபுரத்தில் தங்கும் குடில்கள் புனரமைக்கப்பட்டன.

**2006–2007 ஆம் ஆண்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேன்மேலும் மேம்பாடு அடைய உத்தேசிக்கப்பட்ட திட்டங்கள் :**

1. உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, இராமேசுவரம், மதுரை, ஏற்காடு, மாமல்லபுரம் போன்ற பெரிய ஓட்டல்களின் தரத்தை உயர்த்தல்.
2. மேற்கூறப்பட்ட பெரிய ஓட்டல்களில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் படுக்கை, தலையணைகள் புதியதாக வாங்குதல்.
3. புதிய குளிர்சாதனப் பெட்டிகள் பெரிய ஓட்டலுக்கு வாங்குதல்.
4. பெரிய ஓட்டல்களுக்குக் கடைநிலைப் பணியாளர்களை வெளிச் சந்தையின்மூலம் பயன்படுத்துதல்.
5. ரூ.185.00 இலட்சம் மதிப்பீட்டில் பழையனவற்றைக் களைந்து, புதியதாக சுற்றுலாப் பேருந்துகள் வாங்குதல்.

[2006 ஆகஸ்ட் 28

6. தமிழகத்தில் நட்சத்திர அந்தஸ்து மற்றும் நடுத்தர வருவாயில் தங்கும் விடுதிகளுடன் ஒருங்கிணைப்பு வைத்து, பகிரங்கக் குத்தகைமூலம் மேம்பாடு செய்தல்.

7. 12 ஓட்டல்களுக்குக் கணினிமூலம் முன் பதிவு செய்தலை, ஒரே இடத்திலிருந்து செய்துகொள்ள வசதிகள் செய்தல்.

8. மொத்த ஓட்டல்கள் முன் பதிவு வசதிக்கும், சிறப்பு சுற்றுலாக்கள்மூலம் வருவாய் ஈட்டவும், வர்த்தகப் பிரிவு முடுக்கிவிடப்பட்டிருக்கிறது.

9. உதகமண்டலத்தில் டி.ஆர். பஜாரில் படகுக் குழாம் வசதி புதியதாக அமைத்தல்.

10. ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கொடைக்கானலில் இளைஞர் விடுதியைப் புனரமைத்தல்.

11. ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கொடைக்கானலில் படகுக் குழாம் வசதிகளைப் புனரமைத்தல்.

12. ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்காடு படகுக் குழாம் வசதியைத் தரம் உயர்த்துதல்.

13. ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்காடு படகுக் குழாம் வசதியைத் தரம் உயர்த்துதல்.

14. ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் முட்டுக்காடு படகுக் குழாம் வசதியைத் தரம் உயர்த்துதல்.

15. ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் முட்டுக்காட்டில் கருத்தரங்குக் கூடம் நிறுவுதல்.

**வருங்காலத்திற்கான எதிர்பார்ப்பு (நோக்கம்):**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் விருப்ப ஓய்வுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதால், 304 பணியாளர்கள் ஓய்வு பெற்றனர். அதனால் பணியாளரமைப்புச் செலவில் கணிசமான சேமிப்பும், குத்தகை வருமானத்தில் உயர்வும் ஏற்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிறைய ஓட்டல்களைக் குத்தகைமூலம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கெனவே, 14 ஓட்டல்கள் மற்றும் 5 உணவகங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. 17 ஓட்டல்கள் மற்றும் 5 உணவகங்கள் குத்தகைமூலம் நடத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு



2006 ஆகஸ்ட் 28]

வருகின்றன. இதன்மூலம் பெறப்படும் வருவாய்மூலம் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய ஓட்டல்களின் தரத்தை மேம்படுத்தவும், வாடிக்கையாளர்களின் சேவையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இச்செயல்பாடுகளினால், ஓட்டல்களில் தங்குவோரின் எண்ணிக்கையும், வருவாயும் அதிகரிக்கும். சுற்றுலாப் பேருந்துகள் நவீன முறையில் மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

உத்தேசிக்கப்பட்ட கம்பிவழிப் பயணத் திட்டத்தை உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஆகிய சுற்றுலாத் தலங்களில் செயல்படுத்துவதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கணிசமான வருவாய் கிட்டும்.

தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொழிலில் தனியார் முதலீட்டை ஊக்குவித்து மேன்மேலும் உயர்த்திடவும், வறுமையை அகற்றி, தமிழகத்தை வளமான பாதையில் கொண்டு செல்லவும், பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களைத் தெரிவு செய்து, அங்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, அதனை மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக மாற்றவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீர்மிகு வழிகாட்டுதலின்பேரில் சுற்றுலாத் துறை தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செயல்படும்.

## இணைப்பு II

*(95 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### முகவுரை

அரசின் புதிய திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் ஆகியவற்றை உரிய முறையில் அறியச் செய்வது என்பது மக்களாட்சி அரசின் தலையாய கடமையாகும்.

புதிய திட்டங்கள் குறித்த தெளிவினையும், அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதற்கான நெறிமுறைகளையும் உரிய பயனாளிகளுக்கு அவை குறித்த விழிப்புணர்வினையும் ஏற்படுத்தியாக வேண்டிய மிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பு செய்தித் துறையைச் சார்ந்ததாகும்.

இன்றைய அதிவேக அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தால் மின்னணு வழித் தகவல் தொடர்பும், வான் வழித் தகவல் தொடர்பும், அச்சு ஊடகத் தகவல் தொடர்பும் மிக உச்சக் கட்ட நிலையை எய்தியுள்ளன.

எனவே, பொது மக்களுக்கு அரசு சார் செய்திகளை விரைந்து வெளியிட வேண்டிய தவிர்க்க இயலா மிக முக்கியக் கடமையை செய்தித் துறை விரைந்து செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில்,

செய்தியாளர் தொடர்பினை வலுப்படுத்தி வரும் செய்தி வெளியீட்டுப் பிரிவு,

அரசின் அதிகாரபூர்வ ஏடான "தமிழரசு",

அனைத்துத் துறைகளின் ஒப்பந்தப்புள்ளிகள், விளம்பரங்களை ஒருங்கிணைத்து வெளியிட்டு வரும் விளம்பரப் பிரிவு,

அரசுப் பொருட்காட்சிகளை நடத்தி வருவதோடு, தனியார் பொருட்காட்சிகளை ஒழுங்குபடுத்தி அனுமதியளித்து வரும் பொருட்காட்சிப் பிரிவு,

[2006 ஆகஸ்ட் 28

தமிழ்ச் சான்றோர், நாட்டுக்கு உழைத்த தியாக சீலர்கள் ஆகியோரின் நினைவினைப் போற்றி நினைவுச் சின்னங்கள் எழுப்பி, புகழ் பரப்பிடும் நினைவகப் பிரிவு,

பத்திரிகைகளைப் பாதுகாத்து, கேட்டவுடன் செய்தி நறுக்குகளை உடனுக்குடன் வழங்கி வரும் மேற்கோள் பிரிவு,

மாநிலத் தகவல் களஞ்சியமாகச் செயல்படும் மாநிலத் தகவல் மையம்,

நவீன அறிவியல் வளர்ச்சிக்கொப்ப திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தைப் பயிற்றுவித்து திறமைமிகு மாணவர்களைத் தயார்படுத்தி வரும் எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்,

அரசின் நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகளைத் திரைவடிவமாகவும், வீடியோ செய்தி மலர்களாகவும் தயாரித்து வழங்கிடும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு,

அரசின் செய்திகளை மக்களுக்கும், திட்டங்கள் குறித்த பொது மக்களின் பிரதிபலிப்புகளை அரசுக்கும் அளித்து வரும் பணிகளைச் செம்மையாகச் செய்து வரும் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

ஆகிய பல்வேறு தகவல் பணி மையங்களை உள்ளடக்கியதாக செய்தி-மக்கள் தொடர்புத் துறை செயல்பட்டு வருகிறது.

பொது மக்களின், குறிப்பாக, வறிய நிலையிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் இத்துறை பன்முகத்தானும் நவீனம் பெற்று வருகிறது.



2006 ஆகஸ்ட் 28]

## அத்தியாயம் – 1

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

மக்களாட்சி அமைப்பில், 'நான்காவது தூணாக' விளங்கி வருகின்ற செய்தி ஊடகங்களின் பணிகள் என்பது ஒரு முக்கிய அங்கமாகப் பிரதிநிதித்துவம் பெற்றுத் திகழ்ந்து வருகின்றது. அதிலும், குறிப்பாக உலகமயமான 'அறிவு சார்' நிலையை எய்தி வருகின்ற இன்றைய நவீனச் சூழலில், வளர்ந்து வரும் மின்னணுத் தொடர்பு, வான் தொடர்பு ஆகியவற்றின் அன்றாடப் பயன்பாட்டுத் தாக்கத்தின் விளைவாக செய்திப் பரிமாற்றம் என்பது ஒரு 'மின்னல் வேக' நிலையினை எய்தியுள்ளது. அரசின் புதிய அறிவிப்புகள், செய்திகள், செயல்பாடுகள் ஆகியவற்றை, தொடர்புடைய வண்ணப் புகைப்படங்களுடன், செய்தி இதழ்களுக்கு மின்னணு அஞ்சல் வழியில் உடனுக்குடன் அனுப்பிடும் பணி மற்றும் ஒளிநாடாக்களாகத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கும் பணி ஆகியவை அரசின் அன்றாடப் பணிகளில் அவசர, அவசியமான பணியாகப் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. அந்த வகையில், தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவானது, அரசின் செய்திகளைப் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு உடனுக்குடன் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் செய்தி வெளியீடுகள், அரசின் அனைத்துத் துறைகளின் செயல்பாடுகள், அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள், ஆக்கப் பணிகள் குறித்த செய்திகள், அவற்றோடு தொடர்புடைய புகைப்படங்கள் ஆகியவை இப்பிரிவின்மூலம் நாளிதழ்கள், செய்தி நிறுவனங்கள், தொலைக்காட்சிகள், வானொலி, இணையதளங்கள் என ஏறத்தாழ 100 நிறுவனங்களுக்கும் மேலாக, நேரடியாகவும், நிகரி மற்றும் மின்னணு அஞ்சல் வழியாகவும் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் செய்தியாளர் கூட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான ஏற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. அரசின் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளை மாவட்டங்களில் உள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்து, மாவட்டங்களில் வெளியிடப்படும் ஏடுகளிலும் அச்செய்திகள் இடம் பெறும்

[2006 ஆகஸ்ட் 28

வகையிலும், மாவட்டங்களிலிருந்து பெறப்படும் முக்கியச் செய்திகள் தலைமையகத்திலிருந்து வெளி வரும் ஏடுகளில் இடம் பெறும் வகையிலும் இப்பிரிவின்மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், துறைச் செயலாளர்கள் கலந்துகொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள், ஆய்வுக் கூட்டங்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை போன்ற நிகழ்வுகளைப் புகைப்படம் எடுத்து அனைத்து நாளிதழ்களுக்கும் வழங்கும் பணியினை மேற்கொள்வதுடன், இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் படம் எடுப்பதற்குத் தேவையான உதவிகளைத் தொலைக்காட்சிகளின் ஒளிப்பதிவாளர்கள் மற்றும் நாளிதழ்களின் புகைப்படக்காரர்களுக்கும் இப்பிரிவு வழங்கி வருகின்றது.

**செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை (Accreditation Card)**

சென்னை மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வெளி வரும் நாளிதழ்களின் பத்திரிகையாளர்கள், அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு செய்தியாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, இந்த அட்டைகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், சென்னையில் 608 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் 82 பத்திரிகையாளர்களுக்கும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

செய்தியாளர் அங்கீகார அட்டைகள் பெறும் பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகப் பயணம் செய்யும் வகையில், இலவசப் பேருந்துப் பயண அட்டையும், இரயில் பயணத்தில் 50 சதவிகிதக் கட்டணச் சலுகையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளில் வீடு சிறப்பு ஒதுக்கீட்டில் பெறுவதற்கு முன்னுரிமையும் வழங்கப்பட்டு வருகின்றன.

**பருவ இதழ்களின் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டை (Press Pass)**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, 1996 ஆம் ஆண்டு, பருவ இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள்/ புகைப்படக்காரர்களுக்கு "செய்தியாளர் அட்டைகள்" வழங்கப்பட்டு



2006 ஆகஸ்ட் 28]

வருகின்றன. அதன்படி, வார இதழ்கள், மாத இதழ்கள் போன்ற பருவ இதழ்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்களுக்கு 'செய்தியாளர் அட்டைகள்' வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில், மொத்தம் 159 செய்தியாளர் அட்டைகள் சென்னையில் வழங்கப்பட்டுள்ளன. அரசு நிகழ்ச்சிகளில் பருவ இதழ்களின் செய்தியாளர்கள் கலந்துகொள்வதற்கு ஏதுவாக இந்த அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாவட்டங்களிலுள்ள செய்தியாளர்களுக்கு அடையாள அட்டை**

மாவட்டங்களிலுள்ள செய்தியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக செய்தியாளர் அடையாள அட்டைகள் மற்றும் இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும் அடையாள அட்டை பெற்ற செய்தியாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் வாடகைக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன.

**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்**

20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பத்திரிகை ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்கள் - இவர்களில் எவரேனும் பணியிலிருக்கும்போதே இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்திற்குப் 'பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்' மூலம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1997 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, செய்தி வெளியீட்டுப் பிரிவுமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது ரூ.25,000/- நிதியுதவியாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்பொழுது ரூ.2 இலட்சம் "பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக" வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, 25 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்மூலம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று, வறுமை நிலையில் உள்ள மூத்த பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, மாதந்தோறும் ரூ.250/- மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. இத்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்பொழுது

ரூ.3,000/- மாத ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது ஓய்வூதியம் பெற்று வரும் 64 பத்திரிகையாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000/- ஓய்வூதியமாக வழங்கப்படுகின்றது.

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்று வந்த மூத்த பத்திரிகையாளர் இயற்கை எய்தினால், அவரின் துணைவியாருக்கு, அவரது வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, மாதந்தோறும் ரூ.500/- குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியமாகத் தற்பொழுது மாதந்தோறும் ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**பத்திரிகையாளர்களுக்கு எளிய தவணையில் குடியிருப்புகள்/வீடுகள்**

தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட (Accredited) பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் எளிய தவணையில் வீடு வாங்குவதற்கு ஏதுவாக ஒரு சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும், பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து செயல்படுத்துகின்றன.

**பத்திரிகையாளர்களுக்கு வீட்டு வசதி**

சென்னையில் உள்ள 136 பத்திரிகையாளர்களுக்கு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம் வீட்டுமனைகள் வாங்குவதற்கு அரசு மானியமாகத் தமிழக அரசு ரூ.20 இலட்சத்தினை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு வழங்கியுள்ளது. அம்மனைகளில் 112 எண்ணிக்கையில் தனி வீடுகளும், 24 எண்ணிக்கையில் அடுக்கு மாடி வீடுகளும் கட்டுவதற்கு மானியமாக ரூ.51.82 இலட்சத்தினை சென்னை பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திற்கு வழங்கியுள்ளது. ஆக மொத்தம் ரூ.71.82 இலட்சம் தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது.

மேலூர் மதுரை, இராமநாதபுரம், காஞ்சிபுரம், தருமபுரி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் வேலூர் ஆகிய 9 மாவட்டங்களிலுள்ள 263 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் சலுகை விலையில் வழங்கப்பட்டுள்ளன.



**புகைப்படப் பிரிவு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், திட்டப் பணிகள் ஆகியவற்றைப் புகைப்படப் பிரிவிற்கென வாங்கப்பட்டுள்ள டிஜிட்டல் கேமராக்கள் மூலம் புகைப்படம் எடுத்து உடனுக்குடன் மின்னஞ்சல் வழியாக அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பும் பணியினை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக, நாளிதழ்களுக்கு உடனுக்குடன் வண்ணப் புகைப்படங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இதேபோன்று, புகைப்படங்களை நவீன முறையில் எளிதாக் காலதாமதமும் இல்லாமல், உடனுக்குடன் அனுப்பும் வகையில், அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் டிஜிட்டல் கேமராக்கள் துறையின் சார்பில் வழங்கப்பட்டுள்ளன.

[2006 ஆகஸ்ட் 28

## அத்தியாயம் – 2

### மேற்கோள் பிரிவு

இப்பிரிவில், 1970 ஆம் ஆண்டு முதல், பிரபல ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு, பத்திரப்படுத்தப்பட்டு வருகின்றன. அரசுக்கு அவ்வப்போது தேவைப்படும் செய்திக் குறிப்புகளை வழங்குவதே இப்பிரிவின் தலையாய கடமையாகும். அன்றாடம் காலை, மாலை தமிழகத்திலும், வெளிமாநிலங்களிலும் வெளியாகும் செய்தித் தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் முக்கியச் செய்திகளின் நறுக்குகளை அனைத்து நாட்களிலும் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்கள் ஆகியோருக்கு வழங்குவது இப்பிரிவின் அன்றாடப் பணியாகும்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், புத்தகப் பதிவாளராகவும் (Registrar of Books) செயல்படுகிறார். இப்பிரிவு, தமிழகத்தில் வெளியிடப்படும் புத்தகங்களுடைய தலா இரண்டு பிரதிகளைப் பெற்று அதற்கான அத்தாட்சியை வழங்கி வருகிறது.



2006 ஆகஸ்ட் 28]

## அத்தியாயம் – 3

### விளம்பரம்

தமிழ்நாடு அரசின் அனைத்து விளம்பரங்களும், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியிடுதல் மையப்படுத்தப்பட்டு செய்தி–மக்கள் தொடர்புத் துறை வழியாக வெளியிடப்பட்டு வருகின்றன. அரசின் அனைத்துத் துறைகள், பல்வேறு கழகங்கள், அனைத்து வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் அனைத்தும் செய்தி – மக்கள் தொடர்புத் துறை வழியாக வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரத்தின் தன்மை, அவை சென்றடைய வேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

2001 முதல் 2006 வரை நாளிதழ்களுக்கு அரசு விளம்பரக் கட்டணத்தை உயர்த்தி வழங்குவதில் ஒரே சீரான முறை கடைப்பிடிக்கப்படவில்லை. இவ்வரசால் நாளிதழ்களுக்கான அரசு விளம்பரக் கட்டணம், ஒரே சீராக, அவற்றின் வர்த்தகக் கட்டணத்தில் (1–4–2006 அன்று) 75% அரசு விளம்பரக் கட்டணமாக வழங்க முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, நாளிதழ்களின் வெளியீட்டாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பரந்த கொள்கை அடிப்படையில், ஒரே சீராக, முந்தைய அரசால் விளம்பரக் கட்டணம் உயர்த்தப்பட்ட நாளிதழ்கள் தவிர, அரசின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள ஏனைய நாளிதழ்களுக்கு, அவற்றின் வர்த்தகக் கட்டணத்தில் 75% அரசு விளம்பரக் கட்டணமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

நவீனத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் மத்திய அரசின் தேசிய தகவல் மையத்தின் வழியாகத் தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுகின்றன.

அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன் இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்திற்குட்பட்டு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000 இயற்றப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியன பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள்மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம் – 4

## பொருட்காட்சி

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், அரசின் கொள்கைகள், நலத் திட்டங்கள், சமூக விழிப்புணர்வு மற்றும் சாதனைகள் குறித்த உரிய விளக்கங்களைப் பொது மக்கள் எளிதில் அறிந்திடும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றன. அரசுப் பொருட்காட்சி முதன்முதலாக 1978 ஆம் ஆண்டு சேலம் நகரில் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஆண்டுதோறும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் ஏப்ரல் - ஜூன் மாதங்களிலும், சேலம் மாநகரில் ஜூலை - செப்டம்பர் மாதங்களிலும் அரசுப் பொருட்காட்சிகளை நடத்திடவும், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை திருநெல்வேலி அல்லது வேலூர் நகரில் நடத்திடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இப்பொருட்காட்சிகளில், அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், மைய அரசுத் துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை கலந்துகொள்கின்றன. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு, பலருக்கு வேலைவாய்ப்பையும் அளித்து வருகின்றன. மேலும் இப்பொருட்காட்சிகளில் பல்சுவைக் கலை நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு அரசுப் பொருட்காட்சிகளிலும் மகளிர்



சுய உதவிக் குழுக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நன்முறையில் விற்பனை செய்யும் பொருட்டு, கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அரசுப் பொருட்காட்சியிலும் ஒரு நடுவர் குழு அமைக்கப்பட்டு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் சிறு கண்காட்சிகள், மாவட்டங்களில் ஆண்டுதோறும் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடங்களில் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள்மூலம் நடத்தப்படுகின்றன. இதற்கென ஆண்டுதோறும் ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புது டெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப் போணி விழாவில் (Phool Walon Ki Saire) பங்கேற்று, தமிழகம் கடந்த 9 ஆண்டுகளாகத் தொடர்ந்து முதல் பரிசைப் பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னை மற்றும் புது டெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியாசு தின விழாவில் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்துகொள்வதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடத்திட ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும்.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்று அரங்கு அமைத்து வருகிறது. புது டெல்லியில் அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழகத்தின் சார்பில் இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று வருகிறது.

இதுவரை நடத்தப்பட்ட 116 அரசுப் பொருட்காட்சிகளின்மூலம் ரூ. 18.38 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

2006–2007 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் அரசுப் பொருட்காட்சி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 28

## அத்தியாயம் – 5

## நினைவகங்கள்

தன்னலமற்ற பணிகளால் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பிடித்த தலைவர்கள், தமிழ்ச் சான்றோர்கள், தியாகச் செம்மல்கள் ஆகியோரின் சிறப்புக்களையும், பெருமைகளையும் என்றென்றும் நினைவில் நிறுத்திப் போற்றிப் புகழ்ந்திடும் வகையில் அவர்களுக்கு திருவுருவச் சிலைகள், நினைவகங்கள் நிறுவிப் பராமரித்து வரும் பணிகள் இத்துறையின் வாயிலாகச் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் சார்பில், 42 நினைவகங்கள், 3 அரங்கங்கள், 4 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுப் பூங்கா ஆகியவை உருவாக்கப்பட்டு பேணிக் காக்கப்பட்டு வருகின்றன.

**கோயம்புத்தூர் மாவட்டம்**

1. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர்.
2. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணி மண்டபம், உடுமலைப்பேட்டை.
3. தந்தை பெரியார் நினைவகம், வைக்கம், கேரள மாநிலம்.

**ஈரோடு மாவட்டம்**

4. பெரியார்–அண்ணா நினைவகம், ஈரோடு.
5. தீரன் சின்னமலை மணிமண்டபம், ஈரோடு.

**கிருஷ்ணகிரி மாவட்டம்**

6. மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம், தொரப்பள்ளி.

**நாமக்கல் மாவட்டம்**

7. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**

8. வ.வே.சுப்பிரமணியம் நினைவகம், வரகனேரி அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி.

**தஞ்சாவூர் மாவட்டம்**

9. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், பட்டுக்கோட்டை.
10. மகாமகம் கலையரங்கம், கும்பகோணம்.



2006 ஆகஸ்ட் 28]

**நாகப்பட்டினம் மாவட்டம்**

11. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி.

**சிவகங்கை மாவட்டம்**

12. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி.
13. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், குன்றக்குடி.
14. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், திருப்பத்தூர்.

**மதுரை மாவட்டம்**

15. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், திருமங்கலம்.
16. தியாக சீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப்பட்டி, மேலூர் வட்டம்.

**விருதுநகர் மாவட்டம்**

17. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம், விருதுநகர்.
18. பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு மணிமண்டபம் மற்றும் நினைவுத்தூண், விருதுநகர்.

**தூத்துக்குடி மாவட்டம்**

19. மகாகவி பாரதியார் மணிமண்டபம், எட்டயபுரம்.
20. மகாகவி பாரதியார் இல்லம், எட்டயபுரம்.
21. வ.உ.சிதம்பரனார் இல்லம், ஒட்டப்பிடாரம்.
22. வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம், கட்டாரங்குளம்.
23. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நினைவுப் பூங்கா, கயத்தாறு.

**திருநெல்வேலி மாவட்டம்**

24. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம், திருநெல்வேலி.
25. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெற்கட்டும்செவல் கிராமம், சிவகிரி வட்டம்.

**கன்னியாகுமரி மாவட்டம்**

26. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம், நாகர்கோவில்.
27. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி.

28. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், கன்னியாகுமரி.
29. சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம், இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.

**சென்னை மாவட்டம்**

30. பேறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை.
31. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை.
32. கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை.
33. இராஜாஜி மண்டபம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை.
34. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி.
35. சுதந்திரப் பொன் விழா நினைவுத் தூண் (போர் நினைவுச் சின்னம் அருகில்), காமராஜர் சாலை.
36. பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம், திருமலைச் சாலை, தியாகராயநகர்.
37. வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம்.
38. காந்தி மண்டபம், சர்தார் வல்லபாய் படேல் சாலை, கிண்டி.
39. மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், சர்தார் வல்லபாய் படேல் சாலை, கிண்டி.
40. "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன் விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் படேல் சாலை, கிண்டி.
41. மொழிப் போர்த் தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் படேல் சாலை, கிண்டி.
42. தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் படேல் சாலை, கிண்டி.
43. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சர்தார் வல்லபாய் படேல் சாலை, கிண்டி.
44. குடியரசுப் பொன் விழா நினைவுத் தூண் (காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை.





45. பெருந்தலைவர் காமராஜர் நினைவகம், சர்தார் வல்லபாய் படேல் சாலை, கிண்டி.
46. கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் மணிமண்டபம், காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி அருகில்.

**காஞ்சிபுரம் மாவட்டம்**

47. பேறிஞர் அண்ணா நினைவு இல்லம், சின்னக் காஞ்சிபுரம்.

**வேலூர் மாவட்டம்**

48. முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜசிங்கன் நினைவகம்), வேலூர்.
49. அண்ணா கலை அரங்கம், வேலூர்.
50. சிப்பாய்க் கலகம் நினைவுத் தூண், வேலூர்.

மதுரை திருநகரில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு நினைவில்லம் அமைக்க, அவர் வாழ்ந்த இடத்தை ரூ. 14,25,125/- இழப்பீடு வழங்கிக் கையகப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ. 34 இலட்சம் மதிப்பீட்டில் நினைவில்லம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் அவர்களுக்கு நினைவகம் அமைக்க ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க ரூ. 19.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படவுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், கவர்ணகிரி கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் திரு. சுந்தரலிங்கம் அவர்களுக்கு நினைவகம் அமைக்க ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

மதுரை மாவட்டம், சாத்தமங்கலம் என்ற இடத்தில் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க ரூ. 39.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 28

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் கிராமத்தில் தமிழகச் சட்டமன்ற முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை அரசு நினைவில்லமாக உருவாக்க ரூ. 7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பழுது பார்க்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் உமறுப்புலவர் அவர்கள் வாழ்ந்த இல்லத்தைக் கையகப்படுத்தி நினைவகம் அமைக்க ரூ. 22.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதுப்பிக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டையில் அதியமான் கோட்டம் மற்றும் 400 நபர்கள் அமரக்கூடிய பார்வையாளர்கள் மண்டபம் அமைத்திடும் வகையில் 0.81.0 எக்டேர் நிலம் ரூ. 1,28,253/- செலவில் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ.115/- இலட்சம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அருங்காட்சியகம் ரூ.38.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், தந்தை பெரியார் ஆகியோரின் 9 அடி உயர வெண்கலச் சிலைகள், ஒவ்வொன்றும் தலா ரூ. 2.50 இலட்சம் செலவில் உருவாக்கிடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. புது டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் இச்சிலைகள் விரைவில் நிறுவப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செஞ்சிக்கோட்டை அரசன் தேசிங்குராஜன் உயிர் நீத்த இடமான விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்திலுள்ள கடலி கிராமத்தில் நினைவகம் கட்டி, சிலை நிறுவும் பணிகளுக்காக ரூ. 36.80 இலட்சம் மதிப்பீடு பொதுப் பணித் துறையினரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. வருவாய்த் துறையின்மூலம் கட்டுமான இடம் கையகப்படுத்தப்பட்ட பின்னர், நினைவகம் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள காந்தி மண்டபம், காமராஜர் நினைவிடம், பக்தவத்சலம் நினைவிடம்



2006 ஆகஸ்ட் 28]

ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகள் ரூ.29.00 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் ஆகியவற்றை ரூ. 109.50 இலட்சம் செலவில் புதுப்பிக்கும் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

புராதனச் சின்னங்கள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இராஜாஜி மண்டபத்தினைப் புதுப்பிக்க ரூபாய் ஒரு கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டு, 11-வது நிதிக் குழுமூலம் முதல் கட்டமாக ரூ.34.00 இலட்சத்தில் பணிகள் முடிவுற்றுள்ளன. 12-வது நிதிக் குழு மூலம் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டமாக முறையே ரூ.30.00 இலட்சம் மற்றும் ரூ.36.00 இலட்சத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சென்னை மெரினா கடற்கரையில் அகற்றப்பட்ட கண்ணகி சிலை மீண்டும் அதே இடத்தில் ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3-6-2006 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னை காமராசர் சாலையில் காவல் துறைத் தலைமை அலுவலகத்திற்கு அருகில் போக்குவரத்து சமிக்ஞைக் கம்பத்திற்கு அருகில் ரூ. 8.95 இலட்சம் மதிப்பீட்டில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்பட்டு, அவரது நினைவு நாளான 21-7-2006 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

[2006 ஆகஸ்ட் 28

## அத்தியாயம் – 6

### அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழ் மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது தியாகங்களையும், அருமை பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் நோக்கோடும், அவர்களது பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன. அன்று அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு அவர்களின் பிறந்த நாளின்போது அரசின் சார்பில் மாலைகள் அணிவித்து மரியாதை செய்யப்படுகின்றது :

| | | |
|---|---|---|
| 1. | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் |
| 2. | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாள் |
| 3. | ஜனவரி 30 | மகாத்மா காந்தியடிகள் நினைவு நாள் |
| 4. | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் |
| 5. | ஏப்ரல் 27 | சர்.பிட்டி. தியாகராயர் பிறந்த நாள் |
| 6. | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் |
| 7. | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் பிறந்த நாள் |
| 8. | ஜூன் 24 | கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாள் |
| 9. | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் |
| 10. | ஜூலை 17 | தியாகிகள் தினம் – தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம் |
| 11. | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பிறந்த நாள் |
| 12. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் |



2006 ஆகஸ்ட் 28]

| | | |
|---|---|---|
| 13. | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் |
| 14. | செப்டம்பர் 29 | முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள் |
| 15. | அக்டோபர் 2 | மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் |
| 16. | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் |
| 17. | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் |
| 18. | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் |
| 19. | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் |

ஒவ்வொரு ஆண்டும் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழாவும், ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழாவும், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழாவும், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழாவும், எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவும், இராமநாதபுரத்தில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழாவும், ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழாவும், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் வல்வில் ஓரி விழாவும், சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழாவும், மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழாவும், கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

**பல்துறைப் பணி விளக்க முகாம்கள்:**

அரசின் பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து, அரசுத் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைத்து, அரசின் திட்டங்களையும், சாதனைகளையும், கொள்கை விளக்கங்களையும், பொது மக்களுக்குப் பயன் தரும் வகையில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் மற்றும் சிறு புகைப்படக் கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடைபெறும்போது, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் விளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், மாவட்ட அளவில் கிராமங்களில், பொது மக்கள் குறைகள் கேட்கும் மனுநீதி நாள் நிகழ்ச்சிகளின்போது பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு:**

ஏழை, எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும், நலத் திட்ட உதவிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது. இத்திட்டங்களை முழுமையாகப் பொது மக்கள் அறிந்து பயன் பெறும் வகையில், பல்வேறு அரசுத் துறைகளின்மூலம் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பணிகளை விரைவுபடுத்தி, செம்மையாகச் செயல்படுத்தும் நோக்கில், அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் "மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில், இக்குழுக் கூட்டம், திங்கள்தோறும் ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் நடைபெற்று வருகின்றது. பல்வேறு அரசு நல்வாழ்வுத் திட்டங்களைப் பொது மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், விளம்பரப்படுத்தும் வழிமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசித்து முடிவுகள் மேற்கொண்டு, விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன





## அத்தியாயம் – 7

## தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும்பொருட்டு, 1963 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது.

இக்குழுவால் தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் பின்வரும் விருதுகள் வழங்கப்படுகின்றன:-

| | | |
|---|---|---|
| 1. முதல் பரிசு | ... | ரூ.2 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு |
| 2. இரண்டாம் பரிசு | ... | ரூ.1 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு |
| 3. மூன்றாம் பரிசு | ... | ரூ.75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு |
| 4. சிறப்புப் பரிசு | ... | ரூ.75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு |

பெண்களின் முன்னேற்றம் மற்றும் பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.

தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்படும் சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 2000 ஆம் ஆண்டிற்கான விருது பெறும் கலைஞர்களில் ஆண் மற்றும் பெண் குரல்வளக் (Dubbing) கலைஞர்களும் சேர்க்கப்பட்டனர். சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகை ஆகியோருக்கான விருதுகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. அளவான குடும்பம் மற்றும் திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படங்களுக்கு முதல் பரிசு ரூ.50,000, இரண்டாம் பரிசு ரூ.25,000, மூன்றாம் பரிசு ரூ.10,000 வீதம் வழங்கப்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 28

**கலைத் துறை வித்தகர் விருதுகள்:**

தமிழ்த் திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜா சாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

**அரசு மானியம்:**

சமூக நீதியை வலியுறுத்தி, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இவ்வகையான படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டத்தின்கீழ் படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.7 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**கேளிக்கை வரி விலக்கு அளிக்கும் திட்டம்:**

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், தகுதியுடைய திரைப்படங்களுக்கு, அத்திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

**திரைப்படத் துறையினருக்கு வழங்கப்படும் அரசின் சலுகைகள்:**

1. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ.7 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.
2. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு, முதல் நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.
3. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, தங்கப் பதக்கம், சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.
4. திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க சீரிய சாதனை புரிந்தவர்களுக்குக் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.



2006 ஆகஸ்ட் 28]

5. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கப்படுகிறது.
6. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
7. சண்டைக் காட்சியில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.
8. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
9. 22-7-2006 ஆம் நாள் முதல் திரைப்படத் துறைக்கும், தமிழ் மொழி ஆர்வத்திற்கும் மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில் புதிய திரைப்படங்களுக்குத் தமிழிலேயே பெயர் சூட்டப்படுமானால், அந்தத் திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – 8

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, கருத்து விளக்கப் படங்கள் மற்றும் வீடியோ செய்தி மலர்கள் போன்றவற்றைத் தயாரித்து வருகிறது. அரசின் முக்கிய நிகழ்ச்சிகளையும், அரசின் பல்வேறு நலத் திட்டங்களையும் இத்தயாரிப்புகள் உள்ளடக்கி உள்ளன.

ஒவ்வொன்றும் 20 நிமிட கால அளவிலான 12 வீடியோ செய்தி மலர்கள் மற்றும் 10 நிமிட கால அளவிலான 6 கருத்து விளக்கப் படங்கள், 35 மி.மீ. வண்ணப் படச் சுருளில் ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு வந்தன. 2004–2005 ஆம் ஆண்டு முதல் 12 வீடியோ செய்தி மலர்களும், 35 மி.மீ. வண்ணப் படச் சுருளில் 12 செய்தி மலர்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

வீடியோ செய்தி மலர்கள், 60 குறுந்தகடுகளாக மாற்றப்பட்டு மாவட்டச் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, கள விளம்பரப் பணிகளில் பயன்படுத்தப்படுகின்றன. 60 குறுந்தகடுகள் மாவட்டங்களுக்குக் கள விளம்பரத்திற்குப் போதவில்லை என்பதால், இந்த நிதியாண்டிலிருந்து 350 எண்ணிக்கையில் குறுந்தகடுகளில் பிரதிகள் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்குரிய விசிடி மல்டி காப்பியர் சிஸ்டம் ரூ. 5 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

35 மி.மீ. வண்ணப் படச் சுருளில் தயாரிக்கப்படும் கருத்து விளக்கப் படங்கள் 75 பிரதிகள் வீதம் எடுக்கப்பட்டு, மத்திய அரசின் திரைப்படப் பிரிவுமூலம் தமிழ்நாட்டில் அனைத்துத் திரையரங்குகளிலும் திரையிடப்பட்டு வருகின்றன.

மேலும், பல்வேறு அரசுத் துறைகளுக்கும், அரசு சார்பு நிறுவனங்களுக்கும், 35 மி.மீ. வண்ணப் படச் சுருளிலும், வீடியோவிலும் விளக்கப் படங்கள் / விளம்பரப் படங்கள் அந்தந்தத் துறைகள் மற்றும் நிறுவனங்களின் தேவைக்கேற்ப அரசு நிர்ணயித்த தொகையில் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.



## அத்தியாயம் – 9

## எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

இந்தியாவிலேயே திரைப்படம் தயாரிக்கத் தேவைப்படும் பல்வேறு தொழில்நுட்பங்களையும், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு நுணுக்கங்களையும் கற்றுத் தருகின்ற மூன்று முக்கியமான திரைப்படக் கல்லூரிகளில், தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும்; மற்ற இரண்டு கல்வி நிறுவனங்கள் பூனா மற்றும் கொல்கத்தாவில் மைய அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் தற்போது, 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.

எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பின்வரும் பட்டயப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன:-

| வ. எண். | பட்டயப் படிப்பு | காலம் | கல்வித் தகுதி | இருக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | இயக்குதல் & திரைக்கதை அமைத்து வசனம் எழுதுதல் | 3 ஆண்டுகள் | ஏதாவது ஒரு பட்டப் படிப்பு | 14 |
| 2. | ஒளிப்பதிவு | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்பு | 14 |
| 3. | ஒலிப்பதிவு & ஒலிப் பொறியியல் | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்பு | 14 |
| 4. | படப் பதனிடுதல் | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்பு | 14 |
| 5. | படத் தொகுப்பு | 3 ஆண்டுகள் | மேல்நிலை வகுப்பு | 14 |

இந்நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்படும் ஐந்து பட்டயப் படிப்புகளுக்கும் தேர்வு செய்யப்பட்ட மாணவ / மாணவியர்கள் சேர்க்கைக்குத் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் தொழில்நுட்பக் கல்வி

[2006 ஆகஸ்ட் 28

இயக்ககத்தால் பட்டயத் தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்களுக்குத் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் மூலம் பட்டயம் வழங்கப்படுகிறது.

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் ஐந்து பட்டயப் படிப்புகளுக்கும் புது டெல்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது.

பல்வேறு துறைகளின் மாணவர்கள் சேர்ந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிலும், ஒவ்வொரு பிரிவு மாணவர்கள் ஒருவர் வீதம் கூடி, ஒரு முழுமையான திரைப்படம் தயார் செய்வது குறித்து விவரமான பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இறுதியாண்டு மாணவர்கள் குழு தனியே ஒரு குறும்படம் தயாரிக்கவும் பாடத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்புத் தயாரிப்புச் செலவிற்காக ஆண்டுதோறும் ரூ.15 இலட்சம் செலவிடப்படுகிறது.

இந்நிறுவனத்தின் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சில குறும்படங்கள் சர்வதேச மற்றும் தேசிய விருதுகள் பெற்றுள்ளன.

மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்களை சர்வதேச மற்றும் தேசிய திரைப்பட விழாக்களில் பங்கேற்க வகை செய்யும்பொருட்டு ஆண்டுதோறும் அரசால் ரூ. 75,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த படச் சுருள் பதனிடுபவர் ஆகியோருக்கு தலா ஒரு பவுன் தங்கப் பதக்கமும் ரூ. 5,000 ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தில் பயின்று பட்டயம் பெற்றுச் சென்ற மாணவர்களில் சிலர் திரைப்பட உலகிலும், இந்தியத் தொலைக்காட்சி நிறுவனங்களிலும், தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களிலும் சிறப்பாகப் பணிபுரிகின்றனர்.



2006 ஆகஸ்ட் 28]

## அத்தியாயம் – 10

## தமிழரசு

தமிழக அரசின் திட்டங்கள், செயல்பாடுகள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே சேர்க்கும் அரசின் அச்சு ஊடகம் செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் வெளியிடப்படும் 'தமிழரசு' இதழ் ஆகும்.

'தமிழரசு' இதழில், அரசின் சாதனைகள், மேதகு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரைகள், அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், அறிவிப்புகள், மக்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள், திட்டங்கள், அவற்றின் செயல்பாடுகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றிய கட்டுரைகள் ஆகியவை வெளியிடப்பட்டு வருகின்றன. அது மட்டுமின்றி, மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், இலக்கியம், மருத்துவம் போன்ற பொருண்மை தொடர்பான கட்டுரைகள், சிறுகதைகள், சிறு கவிதைகள் ஆகியனவும் வெளியிடப்பட்டு வருகின்றன.

'தமிழரசு' இதழ் அச்சிடுவதற்கென இத்துறையின்கீழ், தமிழரசு அச்சகம் சிறந்த தொழில்நுட்பப் பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. சிறப்பான முறையில் இதழ்களை அச்சிடுவதற்கு ஏற்ற வகையில், தமிழரசு அச்சகத்தின் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், நவீன வண்ணக் கணினிமூலம் 'தமிழரசு' இதழ்கள் மட்டுமல்லாமல் சிறப்பு வெளியீடுகள், சிறப்புக் கையேடுகள், அரசு விழா அழைப்பிதழ்கள் ஆகியவை சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

'தமிழரசு' தமிழ் இதழ், மாத இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழரசு தமிழ் இதழின் விலை ரூ. 10 ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ. 120 ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ. 1,000 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

'தமிழரசு' ஆங்கில இதழின் விலை ரூ.15 ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ. 60 ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ. 500 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் வரையில், 'தமிழரசு' தமிழ் இதழின் சந்தாக்கள் 68,965 ஆகும். இதில் 44,473 ஆயுள் சந்தாவாகும்.

'தமிழரசு' இதழ் தற்போது அரசின் இணையதளத்திலும் உடனுக்குடன் வெளியிடப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் – 11

### ...வட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

...ாதார அடிப்படையில் நலிவுற்ற நிலையில் உள்ளவர்களின் ...ாத்திடப் பல்வேறு நலத் திட்டங்கள் மாண்புமிகு ... அவர்களால் அறிவிக்கப்பட்டு, அவை உடனுக்குடன் ... பெற்று வருகின்றன.

... புதிய திட்டங்களையும், செயலாக்கங்களையும், ...களையும் தொலைதூரங்களில் உள்ள குக்கிராமங்களில் ... மக்களுக்கு உடனுக்குடன் சென்றடையச் செய்து, ...களுக்கு விழிப்புணர்வை உருவாக்கிடும் பெரும் பணியினை ...டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களும் விரைந்து ...தி வருகின்றன.

...தோறும் வளர்ந்து வரும் பல்வேறு ஊடகங்களின் அறிவியல் ...நுட்ப மற்றும் மின்னணுவியல் வளர்ச்சிக்கொப்ப, ...க்கள் தொடர்புத் துறையின் அடித்தளமாக விளங்கும் மாவட்டச் ...க்கள் தொடர்பு அலுவலகங்களை நவீனப்படுத்தி மேம்படுத்திடும் ...அரசின் சார்பில் புதிய கணினிகள், வண்ணத் தொலைக்காட்சிப் ...கள், டிஜிட்டல் புகைப்படக் கருவிகள் ஆகியவை ...ட்டுள்ளன.

...ல் தொழில்நுட்பச் சாதனங்களை உரிய முறையில் பயன்படுத்திட ...த் தொடர்புடைய அலுவலர்களுக்கு தேசிய தகவல் மையம் ...ாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



## அத்தியாயம் – 12

### செய்தி நிலையங்கள்

செய்தி–மக்கள் தொடர்புத் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், புது டெல்லி ஆகிய ஆறு இடங்களில் செய்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

### மாநிலச் செய்தி நிலையம்

மாநிலச் செய்தி நிலையம், சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வருகிறது. செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் ஓர் அங்கமாக இயங்கி வரும் இந்நிலையம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சுமார் 17,500 புத்தகங்களை உள்ளடக்கி, பொது மக்கள் தொடர்பு ஊடகமாகச் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. தினமும் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5-45 மணி வரை இதில் அமைந்துள்ள நூலகம் இயங்கி வருகிறது. பொது மக்கள், மாணவர்கள், போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்திக்கொள்பவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களது அலுவலகங்கள், அரசின் உயர் அலுவலர்கள், தமிழரசு அச்சகம் ஆகிய பல்வேறு பிரிவினரும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இந்த நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பேருதவியாக உள்ளன. வாழ்க்கை வரலாற்று நூல்கள், அறிவியல், சரித்திரம், தத்துவம், மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம், வணிகவியல், கணக்கு, கணினி ஆகிய புத்தகங்கள் இங்கு உள்ளன. புதினங்கள், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் போன்ற பல்வேறு வகைப்படும் புத்தகங்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள், கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரது மேற்கோளுக்குப் பயன்படும் புத்தகங்களும், நாளிதழ்கள், வார, மாத இதழ்களும் வைக்கப்பட்டுள்ள இந்நூலகத்தினை தினசரி சுமார் 100 வாசகர்களுக்கும் குறையாமல் நன்முறையில் பயன்படுத்தி வருகின்றனர். வேலை தேடும் இளைஞர்களது நலனுக்காக வேலைவாய்ப்புச் செய்தி, போட்டித் தேர்வுகளுக்காகத் தயார் செய்ய உதவும் மேற்கோள் புத்தகங்கள் மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளின் முடிவுகளும் இங்கு மேற்கோளுக்காக வைக்கப்பட்டுள்ளன.

அரசின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இதழ்களும் கால முறை வெளியீடுகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன

[2006 ஆகஸ்ட் 28

ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு பதிப்பகங்களிலிருந்து புத்தகங்கள் புதிதாகக் கொள்முதல் செய்யப்பட்டு, நூலகம் இன்னும் பயனுள்ளதாகப் பயன்பட அவ்வப்போது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த கையேடுகளும், வெளியீடுகளும் இங்கு தகவலுக்காக வைக்கப்படுகின்றன. இந்நிலையம் மேலும் சிறப்புடன் செயல்படும் வகையில், பல்வேறு தலைப்புகளிலுள்ள புத்தகங்கள், மேற்கோள் நூல்கள் மற்றும் கணினி வசதி ஆகியவற்றை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

### மகாகவி பாரதியார் நினைவு இல்லம்

சென்னை, திருவல்லிக்கேணியில், கதவு எண் 83, துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் தேசியக் கவி மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தைத் தனியாரிடமிருந்து அரசு கையகப்படுத்தி, பொது மக்கள் பார்வைக்காகப் ப்யன்பட்டு வருகிறது.

பாரதியார் நினைவு இல்லத்தில், பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கும் 187 புகைப்படங்கள், 30 கண்ணாடிக் காட்சிப் பெட்டிகளில் நேர்த்தியாகப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பாரதியார் நினைவு இல்லத்தைப் பார்வையிட நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான பொது மக்கள் தினமும் வந்து செல்கின்றனர்.

பாரதியார் நினைவு இல்லத்தில் கருத்தரங்கங்கள், இலக்கியச் சொற்பொழிவுகள், பேச்சுப் போட்டிகள், நூல்கள் வெளியிடுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட வசதியாக பாரதியார் இல்லத்தின் பின்பகுதியில் 300 பேர் அமரக்கூடிய ஒரு சிறிய கூட்டரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. நாற்காலிகள், ஒளி மற்றும் ஒலிபெருக்கி போன்ற வசதிகள் செய்து கொடுத்திடும் வகையில் அரங்கத்தின் வாடகையாக நிகழ்ச்சிகள் நடத்துபவர்களிடமிருந்து ரூ.500 (ரூபாய் ஐநூறு மட்டும்) வசூலிக்கப்படுகிறது. 2004–2005 ஆம் நிதியாண்டில், மேம்பாட்டுப் பணிகளுக்காக, ரூ.7.50 இலட்சமும், மின் பணிகளுக்கென ரூ.2.16 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு நினைவு இல்லம் புதுப் பொலிவு பெற்றுள்ளது. பாரதியாரின் பெருமைகளையும், சிறப்புகளையும் போற்றிடும் வகையில், நினைவு இல்லம் தொடர்ந்து புதுமையாகப் பராமரிக்கப்படுவதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது, தமிழ் மணம் கமழும் வகையில் பாரதியாரின் பாடல்கள் ஒலிப்பேழை மூலம் நாள்தோறும் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.



2006 ஆகஸ்ட் 28]

## அத்தியாயம் – 13

### திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டில் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழிலும் ஒன்றாகும். மேலும் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும இந்தி மொழிப் படங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். திரைப்படத் தொழில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் குறிப்பிடத்தக்க அளவு வருவாயை அளிக்கிறது. கீழ் மட்ட மற்றும் நடுத்தர வருமானமுள்ள பிரிவினருக்கு, திரையரங்குகளில் படம் பார்ப்பது என்பது ஒரு முக்கியமான பொழுதுபோக்காகும். எனவே, திரைப்படத் துறையில் பல வகையான படங்கள் வெளி வரவும், மற்றும் தாத்தின் வளர்ச்சிக்காகவும் அரசு ஆவன செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வகையிலான மொத்தம் 1,633 திரையாங்குகள் இயங்கி வருகின்றன:–

| | |
|---|---|
| நிரந்தரத் திரையரங்குகள் | 1,293 |
| பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 109 |
| நடமாடும் திரையரங்குகள் | 221 |
| திறந்தவெளித் திரையரங்குகள் | 10 |
| **ஆக மொத்தம்** | **1,633** ஆகும். |

அடிப்படை வசதிகள், கட்டட உறுதித் தன்மை உட்பட திரையரங்குகள் முறையாகப் பராமரிக்கப்பட 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட 1957 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

திரைப்படம் பார்ப்பவர்கள் சுகாதாரமான சூழ்நிலையில் வசதியாக அமர்ந்து திரைப்படங்களை இரசித்து மகிழ வேண்டும் என்பதே அரசின் குறிக்கோளாகும். எனவே, திரையரங்குகளைக் கூட்டாக இணைந்து, கூர்ந்து மேற்பார்வையிடவும், திரையரங்குகளை நல்ல முறையில் பராமரிக்காத திரையரங்கு உரிமதாரர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அனைத்து உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. திரைப்படம் முக்கியமான பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாகும் என்பதாலும்,

இதற்குப் பார்வையாளர்கள் அதிகமான கட்டணம் செலுத்துவதாலும் திரையரங்க உரிமதாரர்கள் தேவையான வசதிகள் செய்து சுகாதாரத்துடனும், முறையாகவும் திரையரங்குகளைப் பராமரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அறிவுக்குப் பொருந்தாததல்ல. திரையரங்குகளில் கழிப்பறைகளை சரியாகப் பராமரிக்காமை, காற்று வசதியின்மை, குளிர்சாதனம் இயங்காமை போன்ற புகார்கள் பெருமளவில் வந்தவண்ணம் இருப்பதால், திரையரங்குகளைக் கூட்டுத் தணிக்கைசெய்து சுகாதார முறையில் பராமரிக்கப்படாத திரையரங்குகளின்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு க.எண் 35964/சினிமா-1, 2002-1, உள் துறை, நாள் 16-4-2002-ன்மூலம் அனைத்து உரிமம் வழங்கும் அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

திரையரங்கினுள் வரும் பொது மக்களின் பாதுகாப்புக் கருதி திரையாங்கினுள் தீ விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு அரசு கடித (டி) எண் 664, உள் துறை, நாள் 22-9-1997 மற்றும் அரசு நிலை ஆணை எண் 922, உள் துறை, நாள் 24-8-2000-ல் பிறப்பித்த நெறிமுறைகளைப் பின்பற்றுமாறு அனைத்து உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கும் அரசு அறிவுறுத்தியுள்ளது. மேலும், புதிய திரைப்படங்கள் திரையிடும்போது, அனுமதிக்கப்பட்ட இருக்கைகளுக்கும் மேலும் கூடுதலாகத் தற்காலிகமாக இருக்கைகள் ஏதும் போடப்பட்டு உள்ளனவா என்பதைக் கண்டறிந்து, விதி மீறல்களுக்கு எதிராக அங்கேயே, அப்போதே நடவடிக்கைகளை எடுக்கத் திடீர் ஆய்வு மேற்கொள்ளுமாறு அனைத்து உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கும், காவல் துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பராமரிப்புக் கட்டணமாக, குளிர்சாதன வசதி கொண்ட திரையரங்கிற்கு ரூ.1/-ம், குளிர்சாதன வசதியற்ற திரையரங்கிற்கு 0.50 பைசாவும் வசூலிக்கும் திட்டத்தை அரசு மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது.

## வீடியோ சட்டமும், விதிகளும்

தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புவதை முறைப்படுத்துவதற்காகவும், இதன் இடைநிகழ்வான அல்லது தொடர்புடைய பொருள்களுக்காகவும் தமிழ்நாடு அரசு 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப்பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும்



கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவுமூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தை அரசு இயற்றியுள்ளது. இந்தச் சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள்மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில் காவல் துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாகச் செயல்படுகின்றனர். வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வீடியோ கேசட் பதிவுக் கருவிகள்மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு உரிமம் எதுவும் அவசியம் இல்லை.

## திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

(அ) 17-2-1995 நாளிட்ட உள் துறை அரசாணை எண் [illegible] 16-ன்படி தமிழ்நாடு புலனாய்வுத் துறை குற்றப் பிரிவில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அது தற்போது சென்னை காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றப்) நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும் இப்பிரிவினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது. தற்போது பன்னிரண்டு வீடியோ தடுப்புப் பிரிவுகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இந்த 12 திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகளின் தலைமையிடங்கள் மற்றும் அதிகார வரம்புப் பகுதிகள் பின்வருமாறு:

| வ. எண். (1) | சிறு பிரிவுகள் (2) | அதிகார வரம்புப் பகுதிகள் (3) |
|---|---|---|
| 1 | சென்னை 1 | சென்னை மாநகர வடக்கு சரகம் |
| 2 | சென்னை 2 | சென்னை மாநகர மத்திய மற்றும் தெற்கு சரகங்கள் |
| 3 | பரங்கிமலை | திருவள்ளூர், செங்கற்பட்டு கிழக்கு, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 4 | வேலூர் | வேலூர், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 5 | சேலம் | சேலம் நகரம், சேலம் மாவட்டம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்கள் |
| 6 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகரம், கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |

| வ. எண். (1) | சிறு பிரிவுகள் (2) | அதிகார வரம்புப் பகுதிகள் (3) |
|---|---|---|
| 7 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி நகரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் |
| 8 | கடலூர் | கடலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் |
| 9 | மதுரை | மதுரை நகரம் மற்றும் மதுரை ஊரக மாவட்டம் |
| 10 | திண்டுக்கல் | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் |
| 11 | விருதுநகர் | விருதுநகர், ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் |
| 12 | திருநெல்வேலி | திருநெல்வேலி நகரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |

(ஆ) வீடியோ திருட்டைக் கட்டுப்படுத்துவதற்கு, 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம், 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப்பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவுமூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டம் முதலிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

(இ) திருட்டு வீடியோ குற்றங்களைத் தடுக்கும் தனிப் பிரிவின் செயல்பாடுகளாவன:

1. திருட்டு வீடியோ குறுந்தகடுகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்,
2. திரைப்படத் தயாரிப்பாளர்கள் அளிக்கும் தகவல்களைச் சரி பார்த்தல்,
3. திடீர் சோதனை நடத்தி, குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்தல்,
4. குற்றத்திற்கு உட்படுத்தும் பொருட்களைக் கைப்பற்றுதல்.
5. தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல், குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணைக் காவலில் வைத்தல், புலனாய்வை முடித்த பின்னர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தல்,
6. நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளில் கலந்துகொண்டு உதவி செய்தல்.

(ஈ) மாநிலத்தில் உள்ள பன்னாட்டு விமானதளங்களில் சுங்க இலாகாவினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு டிவிடி-கள் மற்றும்





விசிடி-கள் வெளிநாடுகளிலிருந்து கடத்தி வரும் செயலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ) மாநிலத்தில் இயங்கி வரும் ஒரு சில தொலைதூரப் பேருந்துகளில் புதிய திரைப்படங்கள், திருட்டு கேசட்டுகளையும், விசிடிகளையும் உபயோகித்து காண்பிக்கப்படுகின்றன. இதுபோன்ற தொலைதூரப் பேருந்துகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அடிக்கடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, இத்தகைய செயல்கள் தடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய செயல்கள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நடைபெறக்கூடாதென அரசுப் போக்குவாத்துக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டிலிருந்து பேருந்து இயக்குபவர்களுக்கு எதிராக அவ்வாறு திருட்டு விசிடிகளைக் கொண்டு பேருந்துகளில் புதிய திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டதற்காகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளன:

**2004 ஆம் ஆண்டிலிருந்து திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவினரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்**

| வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை. | கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாயில்). | கம்பிவடத் தொலைக்காட்சி நடத்துபவர்கள்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 2004 | 1,180 | 1,206 | 12,06,43,647 | 53 |
| 2005 | 826 | 950 | 9,44,55,557 | 13 |
| 2006 (30–04–2006 வரை) | 322 | 355 | 6,48,41,925 | 3 |

## கேபிள் தொலைக்காட்சிக் கூட்டமைப்பு

1995 ஆம் ஆண்டு மத்திய கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டு விதிகளை மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொருந்தும். இதன்படி, தலைமை அஞ்சல் நிலைய அலுவலர் பதிவு செய்யும் அலுவலர் ஆவார். 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் (36/2000) படி, மாவட்ட மாஜிஸ்டிரேட்டு, உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு மற்றும் சென்னை

காவல் துறை ஆணையாளர் ஆகியோர் இச்சட்டத்தின் 3,5,6 அல்லது 8 ஆகிய பிரிவுகளை மீறும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கண்டிஷனல் அக்ஸஸ் சிஸ்டம் (சி.ஏ.எஸ்)

இது சந்தாதாரர்கள் தாங்கள் காண விரும்பும் கட்டண அலைவரிசைகளைக் கண்டுகளிக்க ஏதுவாக உருவாக்கப்பட்ட ஒரு வழிமுறையாகும். பார்வையாளர்கள் அவர்கள் காண விரும்பும் அலைவரிசையை மட்டும் காண இது வகை செய்கிறது. கட்டண அலைவரிசை ஒளிபரப்புகளைக் காண 'செட் டாப் பாக்ஸ்' என்னும் கருவியைப் பயன்படுத்த வேண்டும். இதர கட்டணமில்லா அலைவரிசை ஒளிபரப்புகளைக் காண இக்கருவி தேவையில்லை. இதன்படி, 30 கட்டணமில்லா சானல்களை ரூ.72/- (மற்றும் வரி) க்குக் காணலாம்.

"கம்பிவடத் தொலைக்காட்சி_"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு (பன்முகச் சேவைச் செய்திப் பரிமாற்றம் உள்ளடங்கலாக) அதன் மேலாண்மையைக் கையகப்படுத்துதல், உரிமை மாற்றம் செய்து அதனை ஏற்றுக் கொள்வதான சட்டமுன்வடிவைத் திரும்பப்பெறுவது".

மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமுன்வடிவை 21-1-2006 அன்று திருப்பி அனுப்பினார். இந்தச் சட்டமுன்வடிவானது 1995 ஆம் ஆண்டு கம்பிவடத் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தின் எல்லைக்குள் வருவதாலும், இந்திய அரசியலமைப்பின் ஏழாவது இணைப்புப் பட்டியலில் உள்ள 31 வது பதிவு, ஒன்றாவது பட்டியலில் வருவதால் மாநிலச் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவானது மத்திய அரசின் சட்டவரம்பிற்குட்பட்டது. எனவே, மாநில அரசு இந்தப் பொருள்மீது சட்டம் இயற்ற இயலாது. மேற்கூறும் சட்டவரம்பினையும், 2000 ஆம் ஆண்டின் ஆறுமுகம் மற்றும் சுரேஷ் புதுநிலை, அந்தவகை மேலாளரிடையிலான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணையையும், 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலிப் பதிவுப் பேழைக் கருவி, கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின்வழியாக தொலைக்காட்சித் திரையில் படக் காட்சிகள் காட்டுதல் சட்டமுன்வடிவின் நிலையையும் கருத்திற்கொண்டு, மேற்கூறிய சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.



## முடிவுரை

அரசின் விழிகளாகவும், செவிகளாகவும் செயல்படுகின்ற இந்துறை ஒவ்வொரு விதத்திலும் புதுமைகளை இணைத்துப் பொலிவோடு இந்த அரசின் கொள்கைகளுக்கேற்ப மக்களுக்கு நலத் திட்டங்களை உடனுக்குடன் கொண்டு சேர்த்தும், ஒப்பந்தப்புள்ளிகள் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை, பெருவாரியான மக்கள் அறிந்துகொள்ளும்பொருட்டு செய்தித்தாள்களிலும் இணையதளத்திலும் வெளியிட்டு, அவற்றின் உண்மையான நோக்கத்தை அடைய அயராது பாடுபடும் நிறுவனங்களை மேம்படுத்தியும், அவற்றின் பயன்களை அனைவரும் பயன்படுத்தும்படி, மற்ற துறைகளின் செயல்பாடுகளோடு ஒருங்கிணைந்து தகவல் மையங்களை மக்கள் அதிகம் பயன்படுத்தத் திட்டங்கள் தீட்டப்படும். மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மக்களின் எண்ணங்களையும் அறிந்து, அரசிற்குத் தெரிவிக்கும்படிச் செயல்பட நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும். மொத்தத்தில் கடைநிலையில் வாழ்பவர்கள் வாழ்விலும் புன்னகையைப் பொருத்த எல்லா நிலைகளிலும் பாடுபட்டு இவ்வரசின் உயரிய நோக்கத்தை நிறைவேற்றும்.

## இணைப்பு III

*(95ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 30– செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் ஆணையரகம், 110, அண்ணா சாலை, சென்னை-2-ல் செயல்பட்டு வருகிறது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன:

1. அரசு மைய அச்சகம், சென்னை-79
2. எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1
3. அரசு கிளை அச்சகங்கள் உயர் நீதிமன்ற வளாகம், சென்னை மற்றும் மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம்.

இதுவரை அரசு மைய அச்சகம், சென்னை-79, உயர் நீதிமன்றக் கிளை அச்சகம், சென்னை, அரசு கிளை அச்சகங்கள், மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகியவை நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

திருச்சி மற்றும் விருத்தாசலம் கிளை அச்சகங்கள் மட்டுமே நவீனமயமாக்கப்பட வேண்டியுள்ளன.

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பணியாளர்கள் விவரம்:

| | | |
|---|---|---|
| மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை | — | 2,382 |
| இவற்றில், பெண்கள் | — | 473 |
| கண்பார்வையற்றவர்கள் (ஆண்கள் 27 மற்றும் பெண்கள் 10) | — | 37 |
| உடல் ஊனமுற்றவர்கள் (ஆண்கள் 68 மற்றும் பெண்கள் 16) | — | 84 |
| காதுகேளாதவர்கள் / வாய்பேசாதவர்கள் (ஆண்கள் 7 மற்றும் பெண்கள் 2) | | 9 |



### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், சென்னை-2:

இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரின் தலைமையின்கீழ் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம் 198 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் அரசு அச்சகங்களும், விற்பனை நிலையங்களும், எழுதுபொருள் கிடங்கு அலுவலகமும் இயங்கி வருகின்றன.

### அரசு மைய அச்சகம், சென்னை-79:

அரசு மைய அச்சகம், தற்போது இரண்டு பணி மேலாளர்களின்கீழ் 1,371 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றங்களில் இயங்கி வருகிறது. ஓரளவு நவீன இயந்திரங்களைக் கொண்டு அரசு மைய அச்சகம் நவீனப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### செயலாக்கப்படும் அதிமுக்கியப் பணிகள்:

வரவு-செலவுத் திட்ட அறிக்கைகள், அரசிதழ்கள், சட்டமன்றப் பேரவைக்கான பணிகள், பல்வேறு குழுக்களுக்கான அறிக்கைகள், மிக கமுக்கத் தன்மை கொண்ட பணிகள், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள், தேர்தல் தொடர்பான பணிகள், வாக்குச் சீட்டுகள் மற்றும் மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அவர்களின் அறிவிக்கைகள், வணிக வரித் துறை கமுக்கத் தன்மை கொண்ட படிவங்கள், காவல் துறை கையாளும் படிவங்கள் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து மிகுந்த கவனத்துடன் அச்சிடப்படுகின்றன.

மேதகு ஆளுநர் அவர்களின் செயலகம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மாண்புமிகு தலைமை நீதியரசர், நீதியரசர்கள் மற்றும் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் (ம) உறுப்பினர்களுக்கான லெட்டர் பேடுகள் மற்றும் உறைகள் போன்றவையும் அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

### எழுதுபொருள் கிடங்கு, சென்னை-1:

எழுதுபொருள் கிடங்கு, ஒரு உதவி இயக்குநரின்கீழ், 133 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தமிழ் மற்றும் ஆங்கிலத் தட்டச்சுப

பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் அச்சுப் பொருட்கள் ஆகியவை ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி, ஆண்டுதோறும் ஒட்டுமொத்தமாகக் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவை தலைமை இயக்குநர் (விநியோகம் மற்றும் ஒதுக்கீடு) அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் கொள்முதல் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு முழுவதுமுள்ள 3,474 கேட்பு அலுவலகங்களுக்கு, அவர்களது கோரிக்கை மற்றும் தேவைகளின் அடிப்படையில் (இலவசமாக 3,342 அலுவலகங்கள் மற்றும் முன்கூட்டியே பணம் செலுத்தும் 132 அலுவலகங்கள்) ஆண்டுதோறும் எழுதுபொருட்கள் இத்துறைமூலம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (T.N.P.L.) உற்பத்தி செய்யும் அனைத்து வகைக் காகிதங்களும், இத்துறையின் தேவைக்கேற்ப அந்நிறுவனத்திடமிருந்தே முழுமையாகக் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. சிறப்பு வகைக் காகிதம், கார்பன் காகிதம் மற்றும் படிப்பெருக்கியின் மை போன்ற எழுதுபொருட்கள் தமிழ்நாடு அரசின் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளைப் பின்பற்றி, தனியாரிடமிருந்து கொள்முதல் செய்து, இத்துறையால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

### அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை–104:

அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், ஒரு துணைப் பணி மேலாளரின்கீழ் 156 பணியாளர்களுடன் மூன்று முறை மாற்றங்களில் இயங்கி வருகிறது.

### செயலாக்கப்படும் அதிமுக்கியப் பணிகள்:

தினசரி வழக்குப் பட்டியல்கள், உயர் நீதிமன்றத்திற்குத் தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இக்கிளை அச்சகத்தில் நேர்த்தியாக அச்சிடப்படுகின்றன.

### அரசு கிளை அச்சகம், மதுரை:

அரசு கிளை அச்சகம், மதுரை, ஒரு துணைப் பணி மேலாளரின்கீழ் 172 பணியாளர்களைக் கொண்டு இரு முறை மாற்றங்களில் செயல்பட்டு வருகிறது.



### செயலாக்கப்படும் அதிமுக்கியப் பணிகள்:

(அ) வருவாய், காவல், பதிவுத் துறை, மருத்துவம் மற்றும் வணிக வரி ஆகிய துறைகளின் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன.

(ஆ) மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் குறித்த நேரத்தில் அச்சிடப்பட்டு வருகின்றன.

### அரசு கிளை அச்சகம், சேலம்:

அரசு கிளை அச்சகம், சேலம், ஒரு கிளை மேலாளரின்கீழ் 89 பணியாளர்களுடன் இரு முறை மாற்றங்களில் இயங்கி வருகின்றது.

### செயலாக்கப்படும் அதிமுக்கியப் பணிகள்:

(அ) தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்புப் படிவங்கள், மருத்துவத் துறைப் படிவங்கள், அரசுத் தேர்வுப் பணிகளுக்கானப் படிவங்கள் ஆகியவை இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

(ஆ) சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல், நீலகிரி மற்றும் தருமபுரி ஆகிய ஆறு மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

### அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை:

அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை, ஒரு கிளை மேலாளரின்கீழ் 97 பணியாளர்களைக் கொண்டு இரு முறை மாற்றங்களில் செயல்பட்டு வருகிறது.

### செயலாக்கப்படும் அதிமுக்கியப் பணிகள்:

(அ) ஆதி திராவிடர் நலம், பிற்படுத்தப்பட்டோர் நலம், காவல், மருத்துவம், ஓய்வூதியம், சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள் ஆகியன இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) பின்வரும் 12 மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன:-

1. இராமநாதபுரம் 2. கன்னியாகுமரி

| | |
|---|---|
| 3. சென்னை | 4. காஞ்சிபுரம் |
| 5. திருவள்ளூர் | 6. திருவண்ணாமலை |
| 7. தஞ்சாவூர் | 8. புதுக்கோட்டை |
| 9. தூத்துக்குடி | 10. திருவாரூர் |
| 11. நாகப்பட்டினம் | 12. சிவகங்கை |

**அரசு கிளை அச்சகம், திருச்சி:**

அரசு கிளை அச்சகம், திருச்சி, ஒரு கிளை மேலாளரின்கீழ் 93 பணியாளர்களைக் கொண்டு இரு முறை மாற்றங்களில் இயங்கி வருகிறது.

**செயலாக்கப்படும் அதிமுக்கியப் பணிகள்:**

(அ) பொதுப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள், தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் அளவைப் பதிவேடுகள் ஆகியன இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

(ஆ) திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

**அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்:**

அரசு கிளை அச்சகம், விருத்தாசலம், ஒரு துணைப் பணி மேலாளர் அவர்களின்கீழ் 73 பணியாளர்களுடன் இரு முறை மாற்றங்களில் இயங்கி வருகிறது.

**செயலாக்கப்படும் அதிமுக்கியப் பணிகள்:**

(அ) வேளாண்மை, பொதுப் பணி, காவல், தீயணைப்பு, தேசிய மாணவர் படை, வனம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, கால்நடை பராமரிப்பு, மருத்துவம், கூட்டுறவு, புள்ளியியல், தொழில் மற்றும் வணிகம் ஆகிய துறைகளுக்கான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

(ஆ) இக்கிளை அச்சகத்தில் விழுப்புரம், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்படுகின்றன.





**2005–2006 ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட அதிமுக்கியப் பணிகள்:**

பின்வரும் முக்கிய அச்சுப் பணிகள் 2005–2006 ஆம் ஆண்டில் இத்துறையால் குறித்த காலத்தில், செவ்வனே அச்சிட்டு வழங்கப்பட்டன:

(1) ஆயத் தேர்வுத் துறைக்கான சுமார் 5 கோடி விடைத்தாட்கள் மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள்/ பதிவேடுகள்,

(2) 10 இலட்சம் சாதிச் சான்றிதழ்கள் (பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காக),

(3) சென்னை உயர் நீதிமன்றத்திற்கான சுமார் 18 இலட்சம் தினசரி வழக்குப் பட்டியல் மற்றும் வழக்கு அட்டைகள்,

(4) 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான சுவரொட்டிகள், கையேடுகள், சின்னங்களின் புத்தகம், வாக்காளர் சேர்க்கைக்கான படிவம், தேர்தல் படிவங்கள் போன்ற 2 கோடி பிரதிகள் மற்றும் மின்னணு வாக்குச் சீட்டுகள்,

(5) வணிக வரித் துறைக்கான 'சி' படிவம், மற்றும்

(6) மூன்று மாத நாட்காட்டிகள் மற்றும் மாத நாட்காட்டிகள் – 2006.

**அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை–2:**

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை, அண்ணா சாலையில் ஆணையரக வளாகத்திலும், இதன் கிளை விற்பனை நிலையம் ஒன்று உயர் நீதிமன்ற வளாகத்திலும் இயங்கி வருகின்றன. இவ்விற்பனை நிலையங்கள்மூலம் அரசு வெளியீடுகளான சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இவ்விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அனுமதி பெற்ற 32 முகவர்கள்மூலமாகவும் அரசு வெளியீடுகள் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

2005-2006 ஆம் நிதியாண்டில் பெயர் மாற்றம், மத மாற்றம், நொடிப்பு மனு அறிவிக்கைகள், மத்திய மற்றும் மாநில அரசின்கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களின் அறிவிக்கைகள் பிரசுரக் கட்டணமாக ரூ. 98,40,002 அரசிதழ்கள், அரசு வெளியீடுகள் விற்பனைமூலமாக ரூ. 10,07,468 ஆக மொத்தம் ரூ. 1,08,47,470 வருவாயாக 31-3-2006 வரை ஈட்டப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்:**

சென்னையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைக் கவனிப்பதற்காகத் தொழிலாளர் நல அலுவலர், உதவித் தொழிலாளர் நல அலுவலர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர் இத்துறையில் பணிபுரிகின்றனர்.

அரசு மைய அச்சகத்தில் மருந்தகம் ஒன்று இயங்கி வருகின்றது. இதில் பணிபுரியும் மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரிலுள்ள ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து அனைத்துத் தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்.

**அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் கிளை அச்சகங்கள் ஆகியவற்றின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்புப் படிகள் குறித்த விவரங்கள்:**

அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் கிளை அச்சகங்கள் ஆகியவற்றின் பணியாளர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் கீழ்க்கண்ட சிறப்புப் படிகள் அரசால் அளிக்கப்பட்டு வருகின்றன:

(அ) சிற்றுண்டிப் படியாக ஒவ்வொரு மாதமும் ரூ. 150 வழங்கப்படுகின்றது.

(ஆ) பால் படியாக நாளொன்றுக்கு ரூ. 5 வழங்கப்படுகின்றது.

(இ) ஆண் தொழிலாளர்களுக்குச் சீருடைகள் தையற்கூலியாக மூன்று ஜோடிக்கு ரூ. 300 மற்றும் பெண் தொழிலாளர்களுக்குச் சீருடை ரவிக்கை தைப்பதற்குத் தையற்கூலியாக மூன்று ரவிக்கைகளுக்கு ரூ. 60 வழங்கப்படுகின்றது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் அரசு கிளை அச்சகம், மதுரை ஆகிய அலகுகளில் பணியாளர்களுக்காக சிற்றுண்டிச் சாலை நடத்தப்படுகிறது.





அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 1,50,000 வரையில் கடனுதவி வழங்கி வருகின்றன.

அரசு அச்சகங்களில் விளையாட்டினையும், உடல் ஆரோக்கியத்தினையும் ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் பொருட்களை ஆண்டுதோறும் கொள்முதல் செய்யவும், விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் ரூ. 45,000 அரசால் ஒதுக்கப்படுகின்றது.

**அச்சக மேம்பாட்டுத் திட்டம்:**

அரசு அச்சகங்கள் அனைத்தும் தொலைநோக்குப் பார்வையுடன் படிப்படியாக முற்றிலும் நவீனமயமாக்கப்பட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.


எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகத்தின் நிர்வாக அமைப்பு மற்றும் பணியாளர்கள் விவரம் 1-4-2006-ல் உள்ளவாறு அட்டவணைப்படுத்தப்பட்டு பிற்சேர்க்கைகள் (அ) மற்றும் (ஆ)-வில் கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டுகளில் மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய கிளை அச்சகங்கள் நவீனமயமாக்கப்பட்டதன் பயனாக, பணியாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் 50 விழுக்காட்டிற்குக் குறைந்தபோதிலும், இத்துறையின் உற்பத்தி தற்போது இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அச்சுப் பணியின் தரமும் மேம்பாடு அடைந்துள்ளது.

அரசு அச்சகங்கள் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டதன் தொடர்ச்சியாக அரசிடமிருந்து பெறப்படும் அனைத்து அச்சுப் பணிகளும் பலரும் பாராட்டும் வகையில் குறித்த காலக்கெடுவிற்குள் மிகுந்த தரத்துடன் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. அச்சமுக்க வேலைத் திறனை மேம்படுத்தியும், அரசின் முக்கியமான ஆவணங்கள் மற்றும் கமுக்கத் தன்மை வாய்ந்த ஆவணங்களின் ரகசியங்களைக் காப்பாற்றியும், இத்துறை தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

## அட்டவணை—அ

### நிர்வாக அமைப்பு






## அட்டவணை–ஆ

### 1-4-2006-ல் பணியாளர்களின் எண்ணிக்கை

| வ. எண் | அலகு | 1 4 2006 இல் மொத்தப் பணியாளர்கள் | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | இதர பிரிவு பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆணையரகம், (அரசு வெளியீடுகள், விற்பனை நிலையம் உட்பட) | 198 | 14 | 98 | 86 |
| 2. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1 | 133 | 01 | 36 | 96 |
| 3. | அரசு மைய அச்சகம், சென்னை 79 (ஆணைக்காரத் தோட்டம் அச்சகம் உட்பட) | 1,371 | 23 | 103 | 1,245 |
| 4. | அரசு கிளை அச்சகம், (உயர் நீதிமன்ற வளாகம்) சென்னை-104 | 156 | 04 | 10 | 142 |
| 5. | அரசு கிளை அச்சகம், மதுரை | 172 | 03 | 13 | 156 |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம் | 89 | 02 | 09 | 78 |
| 7. | அரசு கிளை அச்சகம், திருச்சி | 93 | 02 | 08 | 83 |
| 8. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 97 | 02 | 08 | 87 |
| 9. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 73 | 02 | 05 | 66 |
| | மொத்தம் | 2,382 | 53 | 290 | 2,039 |

227433
சென்னை-600 008